மாற்கு - முன்னுரை

காலம்

கி.பி. 57-63 எழுதப்பட்ட இடம் சரியாகத் தெரியவில்லை.

ஆசிரியர்

யோவான் மாற்கு

மையக்கருத்து

இயேசு கிறிஸ்து கர்த்தருடைய ஊழியக்காரர். (ஏசா 42:1-21; ஏசா 50:4-11; ஏசா 52:13-53:12; சக 3:8; மாற்கு 10:45; பிலி 2:5-8). மாற்கு எழுதின சுவிசேஷம் முழுவதிலுமே கர்த்தருடைய ஊழியக்காரரின் சுபாவம் இயேசு கிறிஸ்துவிடம் வெளிப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு இந்த சுவிசேஷத்தில் கூறப்படவில்லை. ஊழியக்காரருக்கு வம்ச வரலாறு தேவையில்லை. என்று நினைத்திருக்கலாம். இந்தச் சுவிசேஷம் வார்த்தைகளின் சுவிசேஷம் அல்ல. கிரியைகளின் சுவிசேஷம். தெய்வீக ஏவுதலினால் மாற்கு இந்த சுவிசேஷ நூலை எழுதியிருக்கிறார். (லூக்கா 1:3; கலா 1:12-16; கலா 2:2)

இயேசு கிறிஸ்து கர்த்தருடைய ஊழியக்காரர்

இந்த சுவிசேஷத்தில் ஒரு ஊழியக்காரருடைய சுபாவங்கள் அதிகமாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அவையாவன:

1. கிறிஸ்துவின் களைப்பு (மாற்கு 4:38; மாற்கு 11:12; மாற்கு 14:36)
2. இரக்கங்கள் (மாற்கு 6:34; மாற்கு 8:2)
3. அன்பு (மாற்கு 10:21)
4. தன்னிறைவு (மாற்கு 4:38-40; மாற்கு 15:5)
5. தனிமை (மாற்கு 1:35; மாற்கு 6:3-32)
6. ஆச்சரியம் (மாற்கு 6:6)
7. துக்கம் (மாற்கு 3:5)
8. பெருமூச்சு (மாற்கு 7:34; மாற்கு 8:12)
9. கோபம் (மாற்கு 3:5; மாற்கு 10:14)
10. ஊழியக்காரரின் இதர சுபாவங்கள் (மாற்கு 1:35; மாற்கு 3:7; மாற்கு 4:1,38; மாற்கு 6:7, 40; மாற்கு 12:41; மாற்கு 13:3; மாற்கு 15:39)

புள்ளி விவரங்கள்

அதிகாரங்கள் - 16

வசனங்கள் - 678

கேள்விகள் - 121

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் - 11

புதிய தீர்க்கதரிசனங்கள் - 30

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 582

பொருளடக்கம்

I. யோவான் ஸ்நானனின் ஊழியம் - (1:1-8)

II. தமது ஊழியத்திற்காக இயேசுவின் இறுதி ஆயத்தம் - (1:9-13)

III. இயேசுவின் ஊழியமும் உபதேசமும்

1. இயேசு தமது ஊழியத்தை கலிலேயாவில் ஆரம்பிக்கிறார் - (1:14-15)
2. பேதுரு, அந்திரேயா ஆகியோரின் அழைப்பு - (1:16-18)
3. யாக்கோபு, யோவான் ஆகியோரின் அழைப்பு - (1:19-20)
4. இயேசு கப்பர்நகூமை தமது ஊழிய ஸ்தலமாக ஆக்குகிறார் - (1:21-22)
5. இயேசு அசுத்த ஆவியை துரத்துகிறார் - (1:23-28)

மாற்கு - முன்னுரை

6. பேதுருவின் மாமியை சொஸ்தமாக்குகிறார் - (1:29-31)

7. பிசாசுகளைத் துரத்துகிறார் - அநேகரை சொஸ்தமாக்குகிறார் - (1:32-34)

8. இயேசு கிறிஸ்துவின் அதிகாலை ஜெபம் - (1:35-37)

9. கலிலேயாவிற்கு இயேசுவின் முதலாவது பிரயாணம் - (1:38-39)

10. இயேசு குஷ்டரோகியைச் சுத்தமாக்குகிறார் - (1:40-45)

11. கப்பர்நகூமிற்குத் திரும்பி வருகிறார் - திமிர்வாதக்காரனை குணமாக்குகிறார் - (2:1-12)

12. லேவி என்னும் மத்தேயுவை அழைக்கிறார் - (2:13-14)

13. பரிசேயருக்கு பதிலுரை - (2:15-17)

14. யோவான் ஸ்நானனின் சீஷர்களுக்கு பதிலுரை - (2:18-20)

15. வஸ்திரம், துருத்திகள் ஆகியவற்றின் உவமை - (2:21-22)

16. இயேசு ஓய்வுநாளுக்கும் ஆண்டவராக இருக்கிறார் - (2:23-28)

17. ஓய்வுநாளில் சூம்பின கையையுடைய ஒரு மனுஷனைச் சொஸ்தமாக்குகிறார் - (3:1-5)

18. இயேசுவை கொலைசெய்வதற்கு சதியாலோசனை - (3:6)

19. திரளான ஜனங்களை சொஸ்தமாக்குகிறார் - (3:7-12)

20. பன்னிரெண்டு பேரை பிரதிஷ்டை பண்ணுகிறார் - (3:13-15)

21. அப்போஸ்தலர்களின் பெயர்கள் - (3:16-19)

22. இயேசு மதிமயங்கியிருக்கிறார் என்று அவர்மீது குற்றச்சாட்டு - (3:20-21)

23. பரிசேயர்கள் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக தேவதூஷணம் கூறுகிறார்கள் - பிரிந்திருக்கும் இராஜ்ஜியம் - (3:22-27)

24. மன்னிக்கப்படாத பாவம் - (3:28-30)

25. இயேசுவின் புதிய உறவினர்கள் - (3:31-35)

26. விதைக்கிறவனைப் பற்றிய உவமை - (4:1-9)

27. உவமைகளாக பேசுவதற்கு காரணம் - (4:10-13)

28. விதைக்கிறவனைப் பற்றிய உவமையின் விளக்கம் - (4:14-20)

29. விளக்கைப் பற்றிய உவமை - (4:21-25)

30. விதையைப் பற்றிய உவமை - (4:26-29)

31. கடுகு விதையைப் பற்றிய உவமை - (4:30-34)

32. இயேசு புயல்காற்றை அமைதிப்படுத்துகிறார் - (4:35-41)

33. கதரேனருடைய நாட்டில் இருந்த அசுத்த ஆவியுள்ள மனுஷன் - (5:1-20)

34. பன்னிரெண்டு வருஷமாக பெரும்பாடுள்ள ஸ்திரீ குணமடைகிறாள் - யவீருவின் மகளை இயேசு உயிருடன் எழுப்புகிறார் - (5:21-43)

35. நாசரேத்தில் இயேசு - ஜனங்கள் இயேசுவை மறுபடியும் ஏற்றுக் கொள்ளவில்லை - (6:1-5)

36. இயேசு மறுபடியும் கலிலேயாவிற்கு பிரயாணம் பண்ணுகிறார் - (6:6)

37. இயேசு பன்னிரெண்டு சீஷர்களை ஊழியம் செய்வதற்கு வெளியே அனுப்புகிறார் - (6:7-13)

மாற்கு - முன்னுரை

38. ஏரோதுவின் கலங்கிய மனச்சாட்சி - யோவான் ஸ்நானனை சிரச்சேதம் பண்ணுகிறான் - (6:14-29)

39. பன்னிரெண்டு சீஷர்களும் திரும்பி வருகிறார்கள் - (6:30-31)

40. இயேசு ஐயாயிரம் பேருக்கு அற்புதமாக போஜனம் கொடுக்கிறார் - (6:32-44)

41. இயேசு தண்ணீரின்மீது நடக்கிறார் - (6:45-52)

42. கெனேசரேத்து நாட்டில் வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்குகிறார் - (6:53-56)

43. வேதபாரகரையும் பரிசேயரையும் இயேசு கடிந்து கொள்கிறார் - (7:1-13)

44. மனுஷனை தீட்டுப்படுத்தும் காரியம் - பாவங்கள் ஆத்துமாவை அழிக்கும் - (7:14-23)

45. சீரோபேனிக்கேய ஸ்திரீயின் மகளை இயேசு குணப்படுத்துகிறார் - (7:24-30)

46. கொன்னை வாயுடைய செவிடனை சொஸ்தமாக்குகிறார் - (7:31-37)

47. நான்காயிரம் பேருக்கு இயேசு அற்புதமாக போஜனம் கொடுக்கிறார் - (8:1-9)

48. பரிசேயரை இயேசு மறுபடியும் கடிந்து கொள்கிறார் - (8:10-13)

49. பரிசேயர், சதுசேயர் ஆகியோரின் புளித்தமாவைப் பற்றிய விளக்கம் - (8:14-21)

50. இயேசு குருடனை சொஸ்தப்படுத்துகிறார் - (8:22-26)

51. பேதுருவின் அறிக்கை - (8:27-30)

52. தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (8:31)

53. இயேசுவும் பேதுருவும் ஒருவரையொருவர் கடிந்து கொள்கிறார்கள் - (8:32-33)

54. சீஷத்துவத்திற்குச் சோதனை - ஆத்துமாவின் மதிப்பு - (8:34-38)

55. மறுரூபமாதல் - வரப்போகும் இராஜ்ஜியத்திற்கு ஒரு முன்னோட்டம் - (9:1-10)

56. யோவான் ஸ்நானனும், எலியாவும் - (9:11-13)

57. வல்லமையில்லாத சீஷர்களும் சர்வ வல்ல கிறிஸ்துவும் - (9:14-27)

58. ஜெபமும் உபவாசமும் - (9:28-29)

59. தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலைக் குறித்து இயேசு மறுபடியும் முன்குறித்துக் கூறுகிறார் - (9:30-32)

60. தாழ்மையைப் பற்றிய உபதேசம் - (9:32-37)

61. இயேசு பிரிவினையைக் கடிந்து கொள்கிறார் - (9:38-41)

62. விசுவாசிகளுக்கு இடறல் உண்டாக்குகிறவன் - (9:42)

63. இடறல் உண்டாக்கும் சரீரத்தின் அவயவங்கள் - (9:43-50)

64. மனைவியைத் தள்ளிவிடுதல் சம்பந்தமான பிரமாணம் - (10:1-9)

65. மனைவியைத் தள்ளிவிடுவதினால் ஏற்படும் விளைவுகள் - (10:10-12)

66. இயேசு சிறுபிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார் - (10:13-16)

67. மிகுந்த ஆஸ்தியுள்ள வாலிபன் - (10:17-22)

68. ஐசுவரியவான்களுக்கு எச்சரிப்பு - (10:23-27)

69. முழுமையான அர்ப்பணிப்பிற்கு வெகுமதிகள் - (10:28-31)

மாற்கு - முன்னுரை

70. இயேசு தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் மறுபடியும் முன்குறித்துக் கூறுகிறார் - (10:32-34)

71. யாக்கோபு, யோவான் ஆகியோரின் மாம்ச சுபாவம் - (10:35-40)

72. மற்ற பத்து பேரின் மாம்ச சுபாவம் - (10:41-45)

73. இயேசு குருடனைக் குணப்படுத்துகிறார் - (10:46-52)

74. வெற்றிப்பவனி - (11:1-11)

75. கனிதராத அத்தி மரத்தை சபிக்கிறார் - (11:12-14)

76. தேவாலயத்தின் இரண்டாம் சுத்திகரிப்பு - (11:15-19)

77. ஜெபிக்கும்போது விசுவாசம் தேவை - (11:20-24)

78. ஜெபத்திற்கு பதில் கிடைப்பதற்கு நிபந்தனை - (11:25-26)

79. இயேசுவின் அதிகாரத்தை கேள்வி கேட்கிறார்கள் - (11:27-33)

80. திராட்சைத் தோட்டத்திற்கு எஜமானைப் பற்றிய உவமை - (12:1-12)

81. வரிப்பணத்தைப் பற்றிய உவமை - (12:13-17)

82. உயிர்த்தெழுதலைப் பற்றிய கேள்வி - (12:18-27)

83. பிரதான கற்பனை - (12:28-34)

84. இயேசு பரிசேயரிடம் கேட்ட கேள்விகள் - (12:35-37)

85. வேதபாரகரின் ஆறு பாவங்கள் - (12:38-40)

86. விதவை காணிக்கையாக போட்ட ஒரு துட்டு - (12:41-44)

87. ஒலிவமலையின்மேல் இயேசு கூறிய தீர்க்கதரிசனம் - (மத் 24-25; மாற்கு 13; லூக் 21)

(1) எருசலேமின் அழிவை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (13:1-2)

(2) இரண்டு பெரிய கேள்விகள் - (13:3-4)

(3) அடையாளங்கள் - இயேசுவின் இரண்டாம் வருகை -

(அ) யூதர்களுடைய வருத்தங்களின் ஆரம்பத்தில் எட்டு அடையாளங்கள் - (13:5-8)

(ஆ) இஸ்ரவேலின் வருத்தங்களின் போது எட்டு அடையாளங்கள் - (13:9-13)

(இ) பாழாக்குகிற அருவருப்பு - (13:14)

(ஈ) இஸ்ரவேல் அந்திக் கிறிஸ்துவிடம் தோற்று போகிறார்கள் - (13:15-18)

(உ) மகா உபத்திரவம் - (13:19-20)

(ஊ) மகா உபத்திரவத்தின் ஆறு அடையாளங்கள் - (13:21-23)

(4) இரண்டாம் வருகையின் விதமும் காலமும் - (13:24-27)

(5) அத்தி மரத்தைப் பற்றிய உவமை - (13:28-29)

(6) இந்த தீர்க்கதரிசனத்தின் எல்லா அடையாளங்களும் ஒரே சந்ததியில் நடைபெறும் - (13:30-31)

(7) இயேசு கிறிஸ்து மறுபடியும் வரும் நேரம் யாருக்கும் அறிவிக்கப்படவில்லை - (13:32-36)

88. இயேசுவை கொலைசெய்ய முயற்சி - (14:1-2)

89. இயேசுவின் அபிஷேகம் - (14:3-9)

90. இயேசுவைக் காட்டிக்கொடுக்க யூதாஸ் ஒப்புக்கொள்கிறான் - (14:10-11)

மாற்கு - முன்னுரை

91. பஸ்காவின் ஆயத்தம் - (14:12-16)

92. கடைசி பஸ்கா

(1) தாம் காட்டிக் கொடுக்கப்படப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (14:17-21)

(2) கர்த்தருடைய பந்தி - (14:22-26)

(3) பேதுரு தம்மை மறுதலிக்கப்போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (14:27-31)

IV. கிறிஸ்துவின் பாடுகள்

1. கெத்செமனே தோட்டத்தில் இயேசுவின் துக்கமும் வியாகுலமும் - (14:32-42)
2. இயேசுவை கொல்வதற்கு முயற்சி - காட்டிக் கொடுக்கப்படுவதும் கைதுபண்ணப்படுவதும் - (14:43-52)
3. இயேசுவின் வழக்கு விசாரணையும் பரியாசமும் - (14:53-65)
4. பேதுரு மறுதலிக்கிறான் - (14:66-72)
5. பிலாத்துவிற்கு முன்பாக இயேசு - (15:1-6)
6. இயேசுவிற்கு தண்டனையும் பரபாசிற்கு விடுதலையும் - (15:7-15)
7. இயேசுவின் சிரசின்மீது முள்முடி - (15:16-21)
8. இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள் - (15:22-32)
9. இயேசுவின் மரணம் - (15:33-41)
10. இயேசுவின் சரீரத்தை அடக்கம் பண்ணுகிறார்கள் - (15:42-47)

V. உயிர்த்தெழுந்த பின்பு இயேசுவின் ஊழியம்

1. உயிர்த்தெழுதலுக்கு கர்த்தருடைய தூதனின் சாட்சி - (16:1-7)
2. உயிர்த்தெழுதலுக்கு ஸ்திரீகளின் சாட்சி - (16:8-11)
3. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு சீஷர்களின் சாட்சி - (16:12-14)
4. பிரதான கட்டளை - (16:15-18)
5. இயேசு பரமேறுகிறார் - (16:19)
6. அப்போஸ்தலருடைய நடபடிகளும் ஆதிகால விசுவாசிகளும் - (16:20)

1 அதிகாரம்

I. யோவான் ஸ்நானனின் ஊழியம் - (ஏசா 40:3; மல் 3:1; மத் 3; லூக் 3; யோவான் 1:6-34; 3:23)

மாற்கு 1:1 தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம்.

மாற்கு 1:2 இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன், அவன் உமக்கு முன்னே போய், உமக்கு வழியை ஆயத்தம்பண்ணுவான் என்றும்;

மாற்கு 1:3 கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டாகும் என்றும், தீர்க்கதரிசன ஆகமங்களில் எழுதியிருக்கிற பிரகாரமாய்;

மாற்கு 1:4 யோவான் வனாந்தரத்தில் ஞானஸ்நானங் கொடுத்து, பாவ மன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக் கேற்ற ஞானஸ்நானத்தைக்குறித்துப் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தான்.

மாற்கு 1:5 அப்பொழுது யூதேயா தேசத்தார் அனைவரும் எருசலேம் நகரத்தார் யாவரும், அவனிடத்திற்குப் போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

மாற்கு 1:6 யோவான் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக் கொண்டவனாயும், வெட்டுக் கிளியையும் காட்டுத்தேனையும் புசிக்கிறவனாயும் இருந்தான்.

மாற்கு 1:7 அவன்: என்னிலும் வல்லவர் ஒருவர் எனக்குப்பின் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல.

மாற்கு 1:8 நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன்; அவரோ பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என்று பிரசங்கித்தான்.

"சுவிசேஷத்தின் ஆரம்பம்" - யோவானுடைய பிரசங்கம் சுவிசேஷத்தின் ஆரம்பம். " " 11:12-13 (மத் 11:12-13; லூக்கா 16:16) யோவான் பிரசங்கித்த சுவிசேஷச் செய்தியை நாமும் பிரசங்கிக்க வேண்டும். (மத் 3:1).

"சுவிசேஷம்" - நற்செய்தி. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது அது கூறும் நற்செய்திக்கு மட்டுமே நாம் முக்கியத்துவம் தரவேண்டும். மாற்கு சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாறு எழுதப்படவில்லை. யோவானைப் பற்றியும், இயேசுவைப் பற்றியும் பல காரியங்களை மாற்கு எழுதவில்லை. மத்தேயு, லூக்கா ஆகிய சுவிசேஷங்களில் நாம் வாசிக்கும் பல விஷயங்கள் மாற்கு எழுதின சுவிசேஷத்தில் இல்லை. (மத் 1-3; லூக்கா 1-3) இயேசு கிறிஸ்து கர்த்தருடைய ஊழியக்காரராக இந்த சுவிசேஷத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறார். ஊழியக்காரரின் வம்சவரலாற்றை யாருமே கூறுவதில்லை.

"தேவனுடைய குமாரன்" - (மத் 16:16; யோவான் 1:14)

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 1

"இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன், அவன் உமக்கு முன்னே போய், உமக்கு வழியை ஆயத்தம்பண்ணுவான்" (மாற்கு 1:2; மல் 3:1)

தூதன் (messenger) - αγγελος - angelos - 32

ஆண்பால் பெயர்ச்சொல் - தூதன், தூதர் - தேவதூதரையும், மனுஷரையும் குறிக்கும்.

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 2

"கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்குப் பாதைகளைச் செவ்வை பண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டாகும்" (ஏசா 40:3; மாற்கு 1:3).

மாற்கு – தொகுப்புரை

1 அதிகாரம்

"யோவான் வனாந்தரத்தில் ஞானஸ்நானங் கொடுத்தான்" - (மத் 3:6)

"மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தான்" - (மத் 3:1)

"பாவமன்னிப்புக்கென்று" - (மத் 3:11)

"தேசத்தார் அனைவரும்" - எபிரெய வழக்குச்சொல். யூதேயா தேசத்தார் என்பது யூதேயா தேசத்திலுள்ள பெரும்பான்மையான ஜனங்கள் என்று பொருள்படும். (ஆதி 41:56)

"தங்கள் பாவங்களை அறிக்கையிட்டார்கள்" - பாவமன்னிப்பு பெறவேண்டுமென்றால் தேவனுக்கு முன்பாக நமது பாவங்களை அறிக்கையிட வேண்டும். (லூக்கா 13:1-5; ரோமர் 10:9-10; 1யோவான் 1:9) இயேசு கிறிஸ்துவின் திருஇரத்தத்தில் விசுவாசம் வைத்து, நமது பாவங்களை இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கையிடும்போது அவர் நமது பாவங்களை மன்னிக்கிறார். (ரோமர் 3:24-25; எபே 1:7). மனுஷர் மனந்திரும்ப வேண்டும். பின்பு ஞானஸ்நானம் பெறவேண்டும். மனந்திரும்புதல் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு ஆத்துமாவை ஆயத்தப்படுத்துகிறது. தண்ணீர் ஞானஸ்நானம் கர்த்தரிடத்தில் பொருத்தனை பண்ணுவதும், இரட்சிப்பின் அடையாளமும் ஆகும். (1பேதுரு 3:21)

"யோவான்" - எபிரெய மொழியில் யோவான் என்னும் பெயருக்கு "கர்த்தருடைய கிருபை அல்லது கர்த்தருடைய இரக்கம்" என்று பொருள். இயேசு கிறிஸ்து கிருபையின் பரிபூரணத்தைத் தம்மோடு சுமந்து வந்தார். அவருடைய வழியை ஆயத்தம்பண்ணும் யோவானுடைய பெயரின் பொருளும் கர்த்தருடைய கிருபை என்பதே. (யோவான் 1:16-17)

"வெட்டுக்கிளியையும் காட்டுத்தேனையும் புசிக்கிறவனாயும் இருந்தான்" - (மத் 3:4)

தீர்க்கதரிசன எண் - 1

"என்னிலும் வல்லவர் ஒருவர் எனக்குப்பின் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல. நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன்; அவரோ பரிசுத்தஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" (மாற்கு 1:7-8) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. நிறைவேறிக்கொண்டிருக்கிறது.

"அவருடைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல" - பழங்காலத்தில் பாதரட்சை என்பது பாதத்தின்கீழ் இருக்கும் தோலும், அதைப் பாதத்தோடு கட்டியிருக்கும் வாருமேயாகும். பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்ப்பது என்பது ஒரு மாணவன் தன் ஆசிரியருக்குக் காண்பிக்கும் மரியாதை.

ஆல் (with) - ἐν - en - 1722

முன் இடைச்சொல் - ஆல், இல், உடன் - யோவான் தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுத்தான். இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியில் தமது சீஷர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறார்.

II. தமது ஊழியத்திற்காக இயேசுவின் இறுதி ஆயத்தம் - (மத் 3:13; லூக் 3:21; 2:38)

மாற்கு 1:9 அந்த நாட்களில், இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்தூரிலிருந்து வந்து, யோர்தான் நதியில் யோவானால் ஞானஸ்நானம் பெற்றார்.

மாற்கு 1:10 அவர் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, வானம் திறக்கப் பட்டதையும், ஆவியானவர் புறாவைப்போல் தம்மேல் இறங்குகிறதையும் கண்டார்.

மாற்கு 1:11 அன்றியும், நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.

மாற்கு 1:12 உடனே ஆவியானவர் அவரை வனாந்தரத்திற்குப் போகும்படி ஏவினார்.

1 அதிகாரம்

மாற்கு 1:13 அவர் வனாந்தரத்திலே நாற்பதுநாள் இருந்து, சாத்தானால் சோதிக்கப்பட்டு, அங்கே காட்டு மிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தார். தேவதூதர்கள் அவருக்கு ஊழியஞ்செய்தார்கள்.

"அவர் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே" - (மாற்கு 3:6) - ஒருவர் ஜலத்திற்குள் இறங்காமல், அதிலிருந்து கரையேற முடியாது. ஆகையினால் இயேசு கிறிஸ்து தெளிப்பு ஞானஸ்நானம் எடுத்தார் என்று கூறுவதற்கு வாய்ப்பில்லை.

வானம் திறக்கப்பட்டதைக் கண்டவர்கள்

1. எசேக்கியேல் (எசே 1:1)
2. இயேசு (மாற்கு 1:10)
3. நாத்தான்வேல் (யோவான் 1:51)
4. ஸ்தேவான் (அப் 7:56)
5. பேதுரு (அப் 10:11)
6. யோவான் (வெளி 4:1; வெளி 11:19; வெளி 19:11)

"ஆவியானவர் புறாவைப்போல் அவர்மேல் இறங்கினார்" - (மத் 3:16; லூக்கா 3:21)

"நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன்" - (மத் 3:17; மத் 17:5; யோவான் 12:28; எபி 1)

"உடனே ஆவியானவர் அவரை வனாந்தரத்திற்குப் போகும்படி ஏவினார்" - இயேசு கிறிஸ்துவை ஆவியானவர் வழிநடத்தினார். மத் 4:1; லூக்கா 4:1 ஆகிய வசனங்களில் வழிநடத்துதலைக் குறித்து நாம் வாசிக்கிறோம்.

"காட்டுமிருகங்கள்" - மற்ற சுவிசேஷங்களில் காட்டுமிருகங்களைப் பற்றிக் கூறப்படவில்லை. இயேசு கிறிஸ்து சாத்தான்மீதும், பிசாசுகள்மீதும் அவனுடைய அந்தகார சக்திகளின்மீதும் அதிகாரம் உள்ளவர். அதேசமயத்தில் காட்டுமிருகங்கள்மீதும் அவற்றின் விஷங்கள் மீதும் அவருக்கு அதிகாரமுள்ளது. விசுவாசிகளுக்கும் இவை வாக்குத்தத்தமாகக் கூறப்பட்டிருக்கிறது. (சங் 91; மாற்கு 16:17-18; லூக்கா 10:19)

"தேவதூதர்கள் அவருக்கு ஊழியஞ் செய்தார்கள்" - (மத் 4:11; லூக்கா 22:43)

III. இயேசுவின் ஊழியமும் உபதேசமும் - (மத் 4:12; லூக் 4:14; யோவான் 1:35)

1. இயேசு தமது ஊழியத்தை கலிலேயாவில் ஆரம்பிக்கிறார் - (மத் 4:12; லூக் 4:14)

மாற்கு 1:14 யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து:

மாற்கு 1:15 காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்.

"யோவான் காவலில் வைக்கப்பட்டான்" - (மத் 11:2; மத் 14:1-12; யோவான் 3:24)

"இயேசு தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்" - மத்தேயு பிரசங்கித்தார், உபதேசம்பண்ணினார், வியாதியஸ்தரை சொஸ்தமாக்கினார் என்று எழுதுகிறார். (மத் 4:23; §மத் 9:35)

"தேவனுடைய ராஜ்யம்" - இந்த உலகத்தில் தேவனுடைய ராஜ்யம். மத் 4:17; மத் 19:24)

காலம் நிறைவேறிற்று

1. மேசியாவின் வருகை (ஆதி 3:15; தானி 9:24-26; ஏசா 9:6-7)

மாற்கு – தொகுப்புரை

1 அதிகாரம்

2. காலத்தின் பரிபூரணம் (கலா 4:4-6)

3. கடைசிகாலம் - இந்த உலகத்தின் ராஜ்யங்களைத் தேவன் எடுத்துக் கொள்வதற்கு முன்பாக. (மத் 13; மத் 24-25; வெளி 11:15; வெளி 19:11-21; வெளி 20:1-10)

4. தேவனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்பதை நிரூபிப்பதற்கு இஸ்ரவேலருக்கு கடைசி வாய்ப்பு (மத் 21:43; ரோமர் 9-11)

5. கிருபை, சத்தியம், ஆகியவற்றின் முழுமை (யோவான் 1:16-17; 1பேதுரு 1:10-12)

6. தேவனைப் பற்றிய அறியாமை அகன்றுபோகும் காலம். (அப் 17:30)

7. பரலோக ராஜ்யம் அறிவிக்கப்படும் காலம் (மத் 3:2; மத் 4:17)

8. மனுஷர் மத்தியிலே தேவனுடைய ராஜ்யம் முழுமையாக நிரூபிக்கப்படும் காலம் (மத் 12:28; அப் 10:38; யோவான் 10:10; 2கொரி 4:20)

9. கர்த்தருடைய அனுக்கிரக வருஷம் (ஏசா 61:1-2; லூக்கா 4:16-21; யோவான் 10:10)

10. யூதரும் புறஜாதியாரும் சேர்ந்து, ஆலயத்தைக் கட்டுவது (1கொரி 12:13; எபே 2:14-15; எபே 3:1-6)

11. உலகத்தின் சுவிசேஷ ஊழியம் (மத் 28:19-20; மாற்கு 16:15-20; லூக்கா 24:47; அப் 1:4-8; அப் 10:43)

12. பழைய உடன்படிக்கை அகற்றிப்போடப் படும் காலம். (யோவான் 19:30, கொலோ 2:14-17)

“மனந்திரும்புங்கள்” - இந்த செய்தியை பிரசங்கம் பண்ணியவர்கள். யோவான், (மத் 3:2), இயேசு (மத் 4:17), அப்போஸ்தலர் (மத் 10:7-10; மாற்கு 6:7-13) இவர்களைத் தொடர்ந்து இன்று வரையிலும் சுவிசேஷ செய்தியைப் பிரசங்கம் பண்ணுகிறவர்கள். மனந்திரும்புங்கள் என்னும் செய்தி யூதருக்கு மட்டும் என்றோ ஆதித்திருச்சபையாருக்கு மட்டும் என்றோ பொருள்கூறக்கூடாது. இந்தச் செய்தி எல்லாருக்கும் எக்காலத்திற்கும் உரியது. (லூக்கா 13:1-5; அப் 2:38-39; அப் 3:19; அப் 17:20; அப் 19:8; அப் 20:25; அப் 28:23,31; 1கொரி 4:20)

“சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்” - இரட்சிக்கப்படுவதற்கு இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும். அவையாவன:

1. மனந்திரும்பவேண்டும். (மத் 4:17; லூக்கா 13:1-5; ரோமர் 10:9-10; 1யோவான் 1:9)

2. சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டும். (கீழ்ப்படியவேண்டும்) (மாற்கு 16:15-16; ரோமர் 1:16; ரோமர் 8:12-13; கொலோ 3:6)

2. பேதுரு, அந்திரேயா ஆகியோரின் அழைப்பு - (மத் 4:18; லூக் 5:8)

மாற்கு 1:16 அவர் கலிலேயாக் கடலோரமாய் நடந்துபோகையில், மீன் பிடிக்கிறவர்களாயிருந்த சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும் கடலில் வலைபோட்டுக் கொண்டிருக்கிற போது அவர்களைக் கண்டார்.

மாற்கு 1:17 இயேசு அவர்களை நோக்கி: என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்.

மாற்கு 1:18 உடனே அவர்கள் தங்கள் வலைகளைவிட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்.

“அவர் கலிலேயாக் கடலோரமாய் நடந்து போகையில், மீன்பிடிக்கிறவர்களாயிருந்த சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும் கடலில் வலைபோட்டுக் கொண்டிருக்கிறபோது அவர்களைக் கண்டார்” - (மத் 4:18-22)

1 அதிகாரம்

"உடனே அவர்கள் தங்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்" - (மாற்கு 3:6)

3. யாக்கோபு, யோவான் ஆகியோரின் அழைப்பு - (மத் 4:21; லூக் 5:10)

மாற்கு 1:19 அவர் அவ்விடம் விட்டுச் சற்று அப்புறம் போனபோது, செபெதேயுவின் குமாரன் யாக்கோபும் அவன் சகோதரன் யோவானும் படவிலே வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கிறதைக் கண்டு,

மாற்கு 1:20 உடனே அவர்களையும் அழைத்தார்; அப்பொழுது அவர்கள் தங்கள் தகப்பனாகிய செபெதேயுவைக் கூலியாட்களோடு படவிலே விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்.

"கூலியாட்கள்" - அவர்களுடைய மீன்பிடிக்கும் தொழில் எவ்வளவு பெரியது என்று இங்கு கூறப்படவில்லை. எத்தனை கூலியாட்கள் அவர்களுக்கு வேலை செய்தார்கள் என்பதும் தெரியவில்லை. இயேசு கிறிஸ்து அவர்களை அழைத்தவுடன் அவருடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து, அவரைப் பின்பற்றிச்சென்றார்கள். அவர்களுடைய கீழ்ப்படிதல் மூலமாக சுவிசேஷ ஊழியம் வளர்ந்து பெருகிற்று. (எபே 2:20-23)

4. இயேசு கப்பர்நகூமை தமது ஊழிய ஸ்தலமாக ஆக்குகிறார் - (மத் 4:13; லூக் 4:31)

மாற்கு 1:21 பின்பு கப்பர்நகூமுக்குப் போனார்கள். உடனே அவர் ஓய்வுநாளில் ஜெப ஆலயத்திலே பிரவேசித்து, போதகம் பண்ணினார்.

மாற்கு 1:22 அவர் வேதபாரகரைப்போலப் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியினால், அவருடைய போதகத்தைக்குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

"கப்பர்நகூம்" - (மத் 11:23)

"ஜெபஆலயம்" (synagogue) - இந்தச் சொல்லுக்கு பல்வேறு பொருள் உண்டு. ஒன்றுசேருதல், கூட்டிச்சேர்த்தல், ஜனங்களுடைய கூடுகை, ஜனங்கள் கூடும் இடம் என்று இதற்குப் பொருள் கூறலாம். (யாக் 2:2) பாபிலோனியச் சிறையிருப்பிற்குப் பின்பு ஜெபாலயங்களின் எண்ணிக்கை பெருகிற்று. பட்டணங்களிலும், நகரங்களிலும், கிராமங்களிலும், எல்லாச் சிற்றூர்களிலும் ஜெபாலயங்களை உண்டாக்கினார்கள். இவை பொதுவாக ஆறுகளின் அருகிலேயே இருக்கும். யூதர்கள் பல்வேறு விதமான சுத்திகரிப்புக்களைக் கைக்கொள்வார்கள். ஏராளமான தண்ணீர் இவர்களுக்குத் தேவைப்படும். ஆகையினால் ஆறுகளின் அருகில் ஜெபாலயங்களைக் கட்டுவது இவர்களுடைய வழக்கம்.

ஒரு ஜெபாலயத்தில் குறைந்தது 10 யூதர்கள் இருக்க வேண்டும். அதாவது 10 யூதர்கள் சேர்ந்து ஒரு ஜெபாலயத்தை ஆரம்பிக்கலாம். அவர்கள் ஜெபாலத்தைப் பராமரித்து, ஆராதனை ஒழுங்குகளைக் கையாளவேண்டும். ஒவ்வொரு யூதரும் ஓய்வுநாளின்போது ஜெபாலயத்திற்குக் கட்டாயம் செல்ல வேண்டும்.

எருசலேம் நகரத்தில் மட்டும் 480 ஜெபாலயங்கள் இருந்தன. ஜெபாலயங்களில் யூதர்கள் கர்த்தரை ஆராதித்தார்கள். அவர்களுக்கும் பழைய ஏற்பாட்டுப் பிரமாணங்களை உபதேசம் பண்ணினார்கள். மார்க்கச் சடங்குகளோடு யூதருடைய வழக்குகளையும் ஜெபாலயங்களிலேயே விசாரித்தார்கள். (லூக்கா 12:11; அப் 9:2)

ஜெபாலயத்திற்கு மூப்பர்களையும், தலைவர்களையும் ஜனங்கள் தேர்ந்தெடுத்தார்கள். வேதவாக்கியங்களை உபதேசம் பண்ணுவதும், ஜனங்களுடைய வழக்குகளை விசாரிப்பதும் இவர்களுடைய பொறுப்பு. (மத் 10:17; மத் 23:34; யோவான் 9:22,34; யோவான் 12:42; யோவான் 16:2; அப் 22:19; அப் 26:11)

ஜெபாலயங்களில் ஆசாரியருக்கு அதிகமரியாதை கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. ஆலோசனைச் சங்கத்தில் அங்கத்தினர்களாக இருப்பவர்களுக்கு மட்டுமே ஜெபாலயத்தில் அதிகாரம் உண்டு. ஜெபாலயத்தின் தலைவர் யாரை வேண்டுமானாலும் அழைத்து, வேதவசனங்களை வாசிக்குமாறோ,

1 அதிகாரம்

உபதேசம்பண்ணுமாறோ கூறலாம். இயேசு பலமுறை ஜெபாலயங்களில் உபதேசம் பண்ணியிருக்கிறார். (மத் 4:23; மத் 13:54; மாற்கு 6:2; லூக்கா 4:15-22; யோவான் 18:20) அப்போஸ்தலர்களும் ஜெபாலயங்களில் பிரசங்கம் பண்ணியிருக்கிறார்கள். (அப் 13:5,15; அப் 14:1; அப் 17:10-17; அப் 18:19)

ஒய்வுநாளில் ஜெபாலயங்களில் மூன்று முறை ஆராதனை நடைபெறும். வேதபாரகரும், நியாயசாஸ்திரிகளும் ஜெபாலயங்களில் மிகவும் முக்கியமானவர்கள். இவர்கள் பள்ளி ஆசிரியர்கள். நியாயப்பிரமாணத்தை வியாக்கியானம் செய்து உபதேசம் பண்ணுகிறவர்கள். இவர்கள் ஜெபாலயங்களை அனுதினமும் பயன்படுத்தி, ஜனங்களுக்கு அவ்விடங்களில் உபதேசம் பண்ணி வந்தார்கள். ஜெபாலயங்கள் பொதுவாக உயரமான இடங்களில் கட்டப்பட்டிருக்கும். ஜெபாலயங்களுக்கு பொதுவாக மேற் கூரையிராது. இதனால் ஜெபாலயத்திற்குள் வரும் ஜனங்கள் எருசலேமை நோக்கி அண்ணார்ந்துபார்த்து, ஜெபம் பண்ண முடியும். (தானி 6:10)

ஜெபஆலயம் (synagogue) - συναγωγή - synagoogee - 4864

பெண்பால் பெயர்ச்சொல் - ஜெபஆலயம், ஆலயம், கூட்டம்

ஒவ்வொரு ஜெபாலயத்திலும் காணப்படும் காரியங்கள்

1. பெட்டி - நியாயப்பிரமாணம் வைக்கப் பட்டிருக்கும்.
2. உயர்ந்த பிரசங்க மேடை - நியாயப் பிரமாணத்தை இந்த இடத்திலிருந்து வாசித்து, அதற்கு அர்த்தம் சொல்வார்கள்.
3. ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக இருக்கைகள் இருக்கும். பொதுவாக ஸ்திரீகள் மாடங்களிலும், புருஷர்கள் மண்டபங்களிலும் அமர்ந்திருப்பார்கள்.
4. ஜெபாலயத்து மூப்பர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஜனங்களைப் பார்க்கும் பிரகாரம் முன்புறத்தில் ஆசனங்கள் இருக்கும்.
5. மாலை ஆராதனைகளிலும், பண்டிகைகளிலும் வெளிச்சம் தருவதற்காக விளக்குகள் ஏற்றப் பட்டிருக்கும்.
6. ஜெபாலயத்தின் பணிமுட்டுப் பொருட்களையும், இதர முக்கியமான பொருட்களையும் பாதுகாப்பாக வைப்பதற்காகத் தனி அறைகள் இருக்கும்.

அதிகாரம் (authority) - ἐξουσία - exousia - 1849

பெண்பால் பெயர்ச்சொல் - அதிகாரம், வல்லமை, ஆதீனம் (மத் 9:8)

"வேதபாரகர்" - (மத் 2:4)

5. இயேசு அசுத்த ஆவியை துரத்துகிறார் - (லூக் 4:33)

மாற்கு 1:23 அவர்களுடைய ஜெப ஆலயத்திலே அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் இருந்தான்.

மாற்கு 1:24 அவன்: ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று சத்தமிட்டான்.

மாற்கு 1:25 அதற்கு இயேசு: நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுப்போ என்று அதை அதட்டினார்.

மாற்கு 1:26 உடனே அந்த அசுத்த ஆவி அவனை அலைக்கழித்து, மிகுந்த சத்தமிட்டு, அவனைவிட்டுப் போய்விட்டது.

மாற்கு 1:27 எல்லோரும் ஆச்சரியப்பட்டு: இது என்ன? இந்தப் புதிய உபதேசம் எப்படிப்பட்டது? இவர் அதிகாரத்தோடே அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகள் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று தங்களுக்குள்ளே ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்.

1 அதிகாரம்

மாற்கு 1:28 அதுமுதல் அவருடைய கீர்த்தி கலிலேயா நாடெங்கும் பிரசித்தமாயிற்று.

"அசுத்தஆவி" - பிசாசுகளைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் பொதுவான சொல். மாற்கு 10 தடவைகள் இந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். (மாற்கு 1:23-27; மாற்கு 3:11,30; மாற்கு 5:2-13; மாற்கு 6:7; மாற்கு 7:25)

"உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர்" - பிசாசுகளுக்கு இயேசு கிறிஸ்துவையும், அவருடைய அதிகாரத்தையும் நன்றாகத் தெரியும். (அப் 19:15) பிசாசுகள் தாங்கள் இயேசுவோடு நெருங்கி இருப்பதாகவும், இயேசுவோடு இணைந்து ஊழியம் செய்வதாகவும், ஒரு மாயமான தோற்றத்தை கொடுக்கும். ஆகையினால்தான் இயேசு கிறிஸ்து பிசாசுகளைத் தம்மிடத்தில் வரவிடாமல் விரட்டுகிறார். பிசாசுகள் தமக்குச் சத்துரு என்றும், அவைகள்மீது தமக்கு அதிகாரம் உள்ளது என்பதையும் வெளிப்படுத்துகிறார்.

"உடனே அந்த அசுத்த ஆவி அவனை அலைக்கழித்து, மிகுந்த சத்தமிட்டு, அவனைவிட்டுப் போய்விட்டது" - பிசாசு அவனைப் பாடாய்ப்படுத்துகிறது. மிகுந்த சத்தமிடுகிறது. அவனுக்கு அதிகமான வேதனையைக் கொடுக்கிறது.

"அவைகள் இவருக்குக் கீழ்ப்படிகிறதே" - தங்கள்மீது அதிகாரம் உள்ளவர்களுக்கு ஜனங்கள் கீழ்ப்படிவது வழக்கம். இயேசுவிற்கு பிசாசுகளின்மீது அதிகாரம் இருக்கிறது. ஆகையினால் பிசாசுகள் இயேசுவிற்குக் கீழ்ப்படிகிறது. ஆண்டவர் இதே அதிகாரத்தை நமக்கும் கொடுத்திருக்கிறார். தங்கள் இடத்தில் தெய்வீக வல்லமை இருப்பதாக கூறிக் கொள்கிறவர்கள் பிசாசுகளைத் துரத்த வேண்டும். இவர்களுக்குப் பிசாசுகள் கீழ்ப்படியவில்லையென்றால் இவர்களுக்குத் தேவனுடைய அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்றுதான் பொருள். (அப் 19:13-18) தேவனுடைய வல்லமை வெளிப்பட வேண்டுமென்றால் அங்கு அவிசுவாசிகளே இருக்கக்கூடாது என்று நாம் வாதாடக்கூடாது. நம்முடைய பலவீனத்தை மறைப்பதற்காக நாம் கூறும் சாக்குப்போக்குகள்தான் இவை.

6. பேதுருவின் மாமியை சொஸ்தமாக்குகிறார் - (மத் 8:14; லூக் 4:38)

மாற்கு 1:29 உடனே அவர்கள் ஜெபஆலயத்தை விட்டுப் புறப்பட்டு, யாக்கோபோடும் யோவானோடுங்கூட, சீமோன் அந்திரேயா என்பவர்களுடைய வீட்டில் பிரவேசித்தார்கள்.

மாற்கு 1:30 அங்கே சீமோனுடைய மாமி ஜுரமாய்க் கிடந்தாள்; உடனே அவர்கள் அவளைக்குறித்து அவருக்குச் சொன்னார்கள்.

மாற்கு 1:31 அவர் கிட்டப்போய், அவள் கையைப் பிடித்து, அவளைத் தூக்கிவிட்டார்; உடனே ஜுரம் அவளை விட்டு நீங்கிற்று; அப்பொழுது அவள் அவர்களுக்குப் பணிவிடைசெய்தாள்.

"சீமோன் அந்திரேயா என்பவர்களுடைய வீடு" - அவர்கள் ஒரே வீட்டிலேயே குடியிருந்தார்கள்.

"உடனே" - (மாற்கு 3:6, மத் 8:14-15)

7. பிசாசுகளைத் துரத்துகிறார் - அநேகரை சொஸ்தமாக்குகிறார் - (மத் 8:16; லூக் 4:40)

மாற்கு 1:32 சாயங்காலமாகிச் சூரியன் அஸ்தமித்தபோது, சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும், அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்.

மாற்கு 1:33 பட்டணத்தார் எல்லாரும் வீட்டுவாசலுக்கு முன்பாகக் கூடிவந்தார்கள்.

மாற்கு 1:34 பலவிதமான வியாதிகளினால் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை அவர் சொஸ்தமாக்கி, அநேகம் பிசாசுகளையும் துரத்திவிட்டார்; அந்தப் பிசாசுகள் தம்மை அறிந்திருந்தபடியால், அவைகள் பேசுகிறதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை.

1 அதிகாரம்

"சாயங்காலமாகிச் சூரியன் அஸ்தமித்த போது, சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும், அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்" - மத் 8:16 ஆகிய வசனத்தோடு கூடுதலாகக் கூறப்பட்டிருக்கும் செய்தி. ஓய்வுநாள் முடிந்துவிட்டது. ஓய்வுநாளில் சொஸ்தமாக்குவது பாவம் என்று ஜனங்கள் நினைத்தார்கள். (மாற்கு 3:2; லூக்கா 6:7; லூக்கா 13:10-16; யோவான் 5:9-18; யோவான் 9:14,16) ஆகையினால் சாயங்காலமானபோது இயேசுவிடம் வியாதியஸ்தர்களைக் கூட்டிக் கொண்டு வருகிறார்கள்.

"பலவிதமான வியாதிகளினால் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை அவர் சொஸ்தமாக்கி, அநேகம் பிசாசுகளையும் துரத்திவிட்டார்" - இயேசு கிறிஸ்துவிடம் வந்தவர்கள் யாரும் வெறுமையாகத் திரும்பிப் போவதில்லை. இயேசுவால் குணப்படுத்த முடியாத வியாதியும் ஒன்றுமில்லை. (மத் 8:16, மத் 13:58) இந்த வசனத்தில் நாம் வாசிக்கிற பிரகாரம் சிலருக்கு எந்த வியாதியும் இல்லாமல் இருக்கலாம். ஆயினும் அவர்களைப் பிசாசுகள் பிடித்திருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது.

"அந்தப் பிசாசுகள் தம்மை அறிந்திருந்தபடியால், அவைகள் பேசுகிறதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை" - (மாற்கு 1:24)

8. இயேசு கிறிஸ்துவின் அதிகாலை ஜெபம்

மாற்கு 1:35 அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார்.

மாற்கு 1:36 சீமோனும் அவனோடே இருந்தவர்களும் அவரைப் பின்தொடர்ந்து போய்,

மாற்கு 1:37 அவரைக் கண்டபோது: உம்மை எல்லாரும் தேடுகிறார்கள் என்று சொன்னார்கள்.

"அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார்" - மத் 8:17-இல் கூறப்பட்டிருக்கிற அவருடைய தெய்வத்துவத்தை விளக்கும் கூடுதல் சுபாவம். ஜெபம் பண்ணுவது இயேசு கிறிஸ்துவின் வழக்கம். (மத் 14:23; மாற்கு 1:35; மாற்கு 6:46; லூக்கா 6:12; லூக்கா 9:28; லூக்கா 11:1)

"உம்மை எல்லாரும் தேடுகிறார்கள்" - இயேசு கிறிஸ்துவின் ஊழியத்திற்கும், தற்காலத்து மிஷினெரிகளுடைய ஊழியத்திற்கும் வித்தியாசம் தெரிகிறது. இயேசு கிறிஸ்துவை எல்லோரும் தேடிச்சென்றார்கள். நாம் தேவனுக்கு உண்மையாக ஊழியம்செய்யும்போது ஜனங்கள் நம்மையும் தேடிவருவார்கள்.

9. கலிலேயாவிற்கு இயேசுவின் முதலாவது பிரயாணம் - (மத் 4:23; மத் 9:35; லூக் 4:42)

மாற்கு 1:38 அவர்களை அவர் நோக்கி: அடுத்த ஊர்களிலும் நான் பிரசங்கம் பண்ண வேண்டுமாதலால், அவ்விடங்களுக்குப் போவோம் வாருங்கள்; இதற்காகவே புறப்பட்டு வந்தேன் என்று சொல்லி;

மாற்கு 1:39 கலிலேயா நாடெங்கும் அவர்களுடைய ஜெபஆலயங்களில் அவர் பிரசங்கம் பண்ணிக்கொண்டும், பிசாசுகளைத் துரத்திக்கொண்டும் இருந்தார்.

"இதற்காகவே புறப்பட்டுவந்தேன்" - (லூக்கா 5:32)

10. இயேசு குஷ்டரோகியைச் சுத்தமாக்குகிறார் - (மத் 8:1; லூக் 5:12)

மாற்கு 1:40 அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் அவரிடத்தில் வந்து, அவர் முன்பாக முழங்கால்படியிட்டு: உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்று வேண்டிக் கொண்டான்.

1 அதிகாரம்

மாற்கு 1:41 இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார்.

மாற்கு 1:42 இப்படி அவர் சொன்னவுடனே, குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று, அவன் சுத்தமானான்.

மாற்கு 1:43 அப்பொழுது அவர் அவனை நோக்கி: நீ இதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு;

மாற்கு 1:44 ஆயினும் நீ போய், ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து, நீ சுத்தமானதினிமித்தம், மோசே கட்டளை யிட்டிருக்கிறவைகளை அவர்களுக்குச் சாட்சியாகச் செலுத்து என்று கண்டிப்பாய்ச் சொல்லி, உடனே அவனை அனுப்பிவிட்டார்.

மாற்கு 1:45 அவனோ புறப்பட்டுப் போய்; இந்தச் சங்கதி எங்கும் விளங்கும்படியாகப் பிரசித்தம் பண்ணத்தொடங்கினான். அதினால் அவர் வெளியரங்கமாய்ப் பட்டணத்தில் பிரவேசிக்கக் கூடாமல், வெளியே வனாந்தரமான இடங்களில் தங்கியிருந்தார்; எத்திசையிலுமிருந்து ஜனங்கள் அவரிடத்திற்கு வந்தார்கள்.

"உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்" - வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்குவது தேவனுடைய சித்தம். இதில் நமக்கு சந்தேகம் இருக்கக்கூடாது. தேவசித்தத்திற்கு எதிராக இயேசு எதையும் செய்யமாட்டார். அதே வேளையில் தேவசித்தத்தை இயேசு செய்யாமல் இருக்கவும் மாட்டார். (யோவான் 8:28)

"இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டார்" - (மத் 8:3, மத் 9:36)

"எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு" - தம்மிடத்தில் வருகிறவர்கள் எவரையும் இயேசு கிறிஸ்து புறம்பே தள்ளுவதில்லை. இயேசு கிறிஸ்துவிடம் ஜெபம்பண்ணி, அதற்குப் பதில் கிடைக்கவில்லையென்றால், அதற்கு ஏதாவது விசேஷமான காரணம் இருக்கும். தேவன் நீதிபரர். கிருபையுள்ளவர். வியாதி குணமாக வேண்டுமென்னும் சித்தம் உள்ளவர். ஆகையினால் குஷ்டரோகியைப் பார்த்து, எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்று கூறுகிறார்.

"இப்படி அவர் சொன்னவுடனே, குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று, அவன் சுத்தமானான்" - தெய்வீக வல்லமை வெளிப்படாமல் குஷ்டரோகி உடனடியாகச் சொஸ்தமாக முடியாது. யாரோ ஒருவனுக்கு இயேசு தமது வல்லமையை இப்படி வெளிப்படுத்தியிருக்கும்போது, நம்மீது அன்பாய் இருக்கும் நமது ஆண்டவர் நமக்காகத் தமது வல்லமையை நிச்சயம் வெளிப்படுத்தி அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்வார்.

"நீ இதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" - (மத் 8:4) அசுத்தமான நபரைக் தொடக்கூடாது. தொடுவது நியாயப் பிரமாணத்தை மீறும் செயல். அசுத்தமான ஒருவரைத் தொடுகிற நபரும் அசுத்தமானவராக கருதப்படுவார். (லேவி 5:1-14; லேவி 15:5-27) இயேசு கிறிஸ்து ஒவ்வொரு முறையும் குஷ்டரோகியைத் தொட்டபோது, அவர் பாரம்பரிய முறைமையின்படி தம்மைச் சுத்திகரித்துக் கொண்டதற்கு வேத ஆதாரம் எதுவுமில்லை. நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் சுத்திகரிக்கும் சடங்கு ஒருநாள் முழுவதும் நடைபெறும். (லேவி 15:5-27). இயேசு கிறிஸ்து திரளான ஜனங்களை சொஸ்தமாக்கினார். ஆயினும் நியாயப்பிரமாணத்தின்படி அவர் தம்மைச் சுத்திகரித்துக் கொள்ளவில்லை. நியாயப்பிரமாணத்தை அகற்றிவிட்டு, தமது புதிய பிரமாணத்தை மனுக்குலத்திற்கு கொடுப்பதற்காகவே இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். (2கொரி 3:6-15; ரோமர் 10:4; கலா 3:19-25; கலா 4:21-31).

"நீ போய், ஆசாரியனுக்கு உன்னைக் காண்பி" - (லேவி 14:1-32)

"மோசே" - மாற்கு எட்டு தடவை மோசேயின் பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார். (மாற்கு 1:44; மாற்கு 7:10; மாற்கு 9:3-4; மாற்கு 10:3-4; மாற்கு 12:19,26).

மாற்கு – தொகுப்புரை

1 அதிகாரம்

“இந்தச் சங்கதி எங்கும் விளங்கும்படியாகப் பிரசித்தம் பண்ணத்தொடங்கினான்” - இயேசு கிறிஸ்து சுத்தமான குஷ்டரோகியைப் பார்த்து, “நீ இதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு” என்று கூறியிருந்தார். ஆனால் இவனோ எல்லாருக்கும் கூறுகிறான். இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பதும், அவர் நமக்குச் செய்த புண்ணியங்களை விவரிப்பதும் நல்ல காரியம் தான். (மாற்கு 1:4,7,14,38,39) ஆயினும் இதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்று சொன்ன பின்பும் அதற்குக் கீழ்ப்படியாமல் இயேசு செய்த நற்காரியத்தைப் பிரசித்தம்பண்ணுவது கீழ்ப்படியாத செயலே. (1சாமு 15:22-23)

“அதினால் அவர் வெளியரங்கமாகப் பட்டணத்தில் பிரவேசிக்கக் கூடாமல், வெளியே வனாந்தரமான இடங்களில் தங்கியிருந்தார்” - இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்கிறவர்களுக்குச் சாதாரணமாக வரக்கூடிய காரியம்தான். பலவேளைகளில் தேவனுடைய பிள்ளைகளுக்கு பட்டண அனுபவம் போகும். வனாந்தர அனுபவம் வரும். எல்லாச் சூழ்நிலையிலும் நாம் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்ய வேண்டும். (யோவான் 14:12)

“எத்திசையிலுமிருந்து ஜனங்கள் அவரிடத்திற்கு வந்தார்கள்” - ஜனங்கள் சில நாட்களாகத் தொடர்ந்து இயேசு கிறிஸ்துவிடம் வந்துகொண்டு இருக்கிறார்கள். (மாற்கு 2:1)

மாற்கு – தொகுப்புரை

2 அதிகாரம்

11. கப்பர்நகூமிற்குத் திரும்பி வருகிறார் - திமிர்வாதக்காரனை குணமாக்குகிறார் - (மத் 9:1; லூக் 5:17; யோவான் 2:12)

மாற்கு 2:1 சிலநாட்களுக்குப்பின்பு அவர் மறுபடியும் கப்பர்நகூமுக்குப் போனார்; அவர் வீட்டிலிருக்கிறாரென்று ஜனங்கள் கேள்விப்பட்டு;

மாற்கு 2:2 உடனே வாசலுக்கு முன்னும் நிற்க இடம்போதாதபடிக்கு அநேகர் கூடிவந்தார்கள்; அவர்களுக்கு வசனத்தைப் போதித்தார்.

மாற்கு 2:3 அப்பொழுது நாலுபேர் ஒரு திமிர்வாதக்காரனைச் சுமந்துகொண்டு அவரிடத்தில் வந்தார்கள்;

மாற்கு 2:4 ஜனக்கூட்டத்தினிமித்தம் அவருக்குச் சமீபமாய்ச் சேரக்கூடாமல், அவர் இருந்த வீட்டின் மேற்கூரையைப் பிரித்துத் திறப்பாக்கி, திமிர்வாதக்காரன் கிடக்கிற படுக்கையை இறக்கினார்கள்.

மாற்கு 2:5 இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப் பட்டது என்றார்.

மாற்கு 2:6 அங்கே உட்கார்ந்திருந்த வேதபாரகரில் சிலர்:

மாற்கு 2:7 இவன் இப்படி தேவதூஷணம் சொல்லுகிறதென்ன? தேவன் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கத் தக்கவர் யார் என்று தங்கள் இருதயங்களில் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

மாற்கு 2:8 அவர்கள் தங்களுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறார்களென்று இயேசு உடனே தம்முடைய ஆவியில் அறிந்து, அவர்களை நோக்கி: நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படிச் சிந்திக்கிறதென்ன?

மாற்கு 2:9 உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொல்வதோ, எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடவென்று சொல்வதோ, எது எளிது?

மாற்கு 2:10 பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி:

மாற்கு 2:11 நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மாற்கு 2:12 உடனே, அவன் எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்கு முன்பாகப் போனான். அப்பொழுது எல்லாரும் ஆச்சரியப்பட்டு: நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லையென்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

"சிலநாட்களுக்குப்பின்பு அவர் மறுபடியும் கப்பர்நகூமுக்குப் போனார்" - சில நாட்களாக இயேசுகிறிஸ்து வெளியரங்கமாய்ப் பட்டணத்தில் பிரவேசிக்கவில்லை. திரளான ஜனங்கள் எத்திசையிலும் இருந்தும் அவரிடத்திற்கு வந்தார்கள். (மாற்கு 1:45) வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்குமாறு அவரிடத்தில் கூட்டிக் கொண்டு வந்தார்கள். சில நாட்களுக்குப் பின்பு அவர் ஒய்வு எடுப்பதற்காக ஒரு வீட்டிற்குப் போனார். ஆனால் அங்கும் அவரால் ஒய்வு எடுக்கமுடியவில்லை. அவர் வீட்டிலிருக்கிறார் என்று ஜனங்கள் கேள்விப்பட்டு, அந்த வீட்டிற்கும் கூட்டமாக வந்துவிட்டார்கள். (மாற்கு 2:1-12)

"வீடு" - பேதுருவின் வீடாக இருக்கலாம். இயேசு கிறிஸ்து கப்பர்நகூமில் இருந்தபோது பேதுருவின் வீட்டிலிருந்து ஊழியம் செய்வது வழக்கம். (மத் 4:13; மத் 8:13; மாற்கு 1:29)

கிறிஸ்துவின் ஊழியத்தில் ஏராளமான ஆசீர்வாதங்கள்

1. பல பிசாசுகளைத் துரத்தினார் (மத் 8:16; மாற்கு 1:34)
2. பல அற்புதக்கிரியைகளை நடப்பித்தார் (மத் 13:58)

2 அதிகாரம்

3. இயேசு கிறிஸ்துவைத் தொட்டவர்கள் அனைவரும் சொஸ்தமானார்கள் (மத் 14:36; மாற்கு 3:10; மாற்கு 6:56)

4. பலரைச் சொஸ்தமாக்கினார். (மாற்கு 1:34; மாற்கு 3:10)

5. பலவீனங்களைக் குணமாக்கினார் (லூக்கா 7:21)

6. பலருக்குப் பார்வையைக் கொடுத்தார் (லூக்கா 7:21)

7. அவருடைய நாமத்தில் பலர் விசுவாசம் வைத்தார்கள். (யோவான் 2:23; யோவான் 4:39-41; யோவான் 7:31; யோவான் 8:30; யோவான் 10:42)

8. பல அற்புதங்களைச் செய்தார் (யோவான் 11:47; யோவான் 12:37)

9. அதிகாரிகள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தார்கள் (யோவான் 12:42)

10. பல அடையாளங்களைக் காண்பித்தார். (யோவான் 20:30; யோவான் 21:25)

11. பல காரியங்களை உபதேசம் பண்ணினார் (மத் 13:3; மாற்கு 6:34)

12. தம்முடைய ஜீவனை ஏராளமான ஜனங்களுக்குப் பாவநிவாரண கிரயமாக கொடுத்தார். (மத் 20:28; மாற்கு 10:45)

13. பலருடைய பாவங்களை மன்னிப்பதற்காகத் தமது இரத்தத்தைச் சிந்தினார். (மத் 26:28)

14. பலருடைய சரீரங்களை உயிர்த்தெழச் செய்தார். (மத் 27:52)

15. நமக்கு முன்மாதிரியாகப் பல பாடுகளை அனுபவித்தார். (மாற்கு 8:31; 1பேதுரு 4:1)

16. திரளான பாவங்களை மன்னித்தார் (லூக்கா 7:47)

17. தேவனுடைய பிள்ளைகளாகும்படி பலருக்கு அதிகாரம் கொடுத்தார். (யோவான் 1:12)

18. ஏராளமான நற்கிரியைகளைச் செய்தார். (யோவான் 10:32)

"அவர்களுக்கு வசனத்தைப் போதித்தார்" - சுவிசேஷ ஊழியர்கள் செய்ய வேண்டிய காரியம் இதுதான். வசனத்தில் கலப்படமும் இருக்கக் கூடாது, வசனத்திற்குப் பதிலாக வேறு எதையும்பிரசிக்கவும் கூடாது. அவ்வாறு மாற்று உபதேசத்தைப் போதிக்கிறவன் கர்த்தர் கொடுத்திருக்கும் ஊழியத்தைத் தவறவிட்டு விடுகிறான்.

"அவர் இருந்த வீட்டின் மேற்கூரையைப் பிரித்துத் திறப்பாக்கினார்கள்" - கிழக்கு தேசங்களில் வீட்டின் மேல்மச்சு தட்டையாக இருக்கும். ஜனங்களுடைய பாதுகாப்பிற்காக அதன்மீது கைப்பிடிச்சுவர் கட்டப்பட்டிருக்கும். (உபா 22:8; நியா 16:27; 2சாமு 11:2) மொட்டைமாடியிலிருந்து வீட்டிற்குள் இறங்குவதற்கு சிறிய கதவு இணைக்கப் பட்டிருக்கும். இந்தக் கதவை இடித்து, அத்துடன் மச்சின் ஒரு பகுதியையும் இடித்து, திமிர்வாதக்காரனை கீழே இறக்கினார்கள். மாடிக்குச் செல்வதற்கு வீட்டின் வெளியிலும், படியிருக்கும். அந்தப்படியின் வழியாக திமிர்வாதக்காரனை எளிதாக மாடிக்கு தூக்கிச்சென்றுவிட்டார்கள். இயேசு கிறிஸ்து வீட்டிற்குள் இருந்தார். அவருக்கு அருகாமையில் திமிர்வாதக்காரனைப் படுக்கையோடு இறக்குவதற்காக வீட்டின் மேற்கூரையைப் பிரித்துத் திறப்பாக்கினார்கள்.

"படுக்கை" - மாற்கு 4:21-இல் கூறப்பட்டிருக்கிற படுக்கை வேறு. இந்தப் படுக்கை வேறு.

"இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டார்" - தேவன் நமது விசுவாசத்தைக் காண விரும்புகிறார். நம்மிடம் விசுவாசம் காணப்படும் போது நமது ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும். (மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; எபி 11:6; யாக் 1:5-8)

"உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" - (மத் 9:2)

2 அதிகாரம்

“தேவன் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார்” - இது சத்தியமான வார்த்தை. இயேசு கிறிஸ்துவைப் பொருத்த வரையில் “உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப் பட்டது” என்று அவர் கூறியது தேவ தூஷணமாகாது. பாவங்களை மன்னிப்பதற்கு அவர் அதிகாரமுடையவர். அவர் இன்னும் நமது பாவங்களை மன்னித்துக் கொண்டிருக்கிறார். (மாற்கு 2:10)

“அவர்கள் தங்களுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறார்களென்று இயேசு உடனே தம்முடைய ஆவியில் அறிந்தார்” - மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். ஆனால் கிறிஸ்துவோ மனுஷருடைய இருதயங்களைப் பார்க்கிறார். ஆவிகளைப் பகுத்தறியும் வரம் அவரிடம் இருந்தது. அந்த ஆவியின் மூலமாக மனுஷர் தங்களுக்குள் சிந்திக்கும் காரியங்களை அறிந்து கொண்டார். (ஏசா 11:2; ஏசா 61:1; யோவான் 3:34)

“பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டு” - இயேசு கிறிஸ்து சர்வ அதிகாரம் உடையவர். பாவங்களை மன்னிப்பதற்கு எந்தச் சடங்குகளும் தேவையில்லை. சான்றாக,

1. திமிர்வாதக்காரன் (மத் 9:2; மாற்கு 2:10)
2. பாவியான ஸ்திரீ (லூக்கா 7:48)
3. சகேயு (லூக்கா 19:1-9)
4. சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன். (லூக்கா 23:43)
5. பல ஆயிரக்கணக்கான புருஷர்களையும், ஸ்திரீகளையும் இயேசு கிறிஸ்து மன்னித்து அவர்களைச் சொஸ்தமாக்கினார். (மத் 9:22; மாற்கு 10:52; லூக்கா 17:19; லூக்கா 18:42; யோவான் 4:53; யோவான் 8:30-31; யோவான் 11:45). இயேசுவின் ஊழியத்தில் பாவமன்னிப்பும், சரீரசுகமாதலும் சேர்ந்தே நடை பெற்றது. (மத் 13:15; மாற்கு 2:5-12) வேத உபதேசமும் இதை வலியுறுத்துகிறது. (யாக் 5:14-16)

“உடனே, அவன் எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்கு முன்பாகப் போனான்” - உண்மையான சுகமாதல் எல்லாருக்கும் முன்பாக நடைபெறுவதில் தவறொன்றும் இல்லை. சுகமான நபரை மனுஷர்கள் சோதித்துப் பார்க்கலாம்.

“அப்பொழுது எல்லாரும் ஆச்சரியப்பட்டு: நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லையென்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்” - தேவன் வியாதியில் மகிமைப்படுவதில்லை. வியாதி சொஸ்தமாகும்போது தேவன் மகிமைப்படுகிறார்.

கர்த்தரை எல்லோரும் துதிக்க வேண்டும். வியாதியஸ்தரும் துதிக்க வேண்டும். நல்ல ஆரோக்கியத்தோடு இருப்பவர்களும் துதிக்க வேண்டும். வியாதியோடு இருப்பதினால் தேவனைத் துதிக்கமாட்டேன் என்று சாக்குப்போக்கு சொல்லக்கூடாது. வியாதியிலிருப்பவர்கள்தான் தேவனைப் பற்றி அதிகமாகச் சிந்திப்பார்கள்.

வியாதியைச் சாத்தான் கொண்டு வருகிறான். (மத் 8:17; லூக்கா 13:16; யோவான் 10:10; அப் 10:38) சாத்தானுடைய கிரியைகளை அழிப்பதற்காக தேவன் இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். (மத் 28:20; மாற்கு 16:17-18; யோவான் 14:12)

வியாதி சாத்தானுடைய கிரியை. வியாதியைச் சொஸ்தமாக்குவது இயேசு கிறிஸ்துவின் கிரியை. வியாதி குணமாகும்போது தேவன்மகிமை அடைகிறார். வியாதியினால் தேவன் மகிமை அடைவதில்லை. ஒருவன் தொடர்ந்து வியாதியில் இருக்கும்பொழுது அவனுக்குள் சாத்தானுடைய கிரியை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வியாதியாக இருக்கிற நபர் கர்த்தரிடத்தில் விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும். தன் நோயிலிருந்து இயேசு கிறிஸ்து பூரண சுகம்தருவார் என்று முழுமனதோடு நம்பவேண்டும்.

12. லேவி என்னும் மத்தேயுவை அழைக்கிறார் - (மத் 9:9; லூக் 5:27)

மாற்கு 2:13 அவர் மறுபடியும் புறப்பட்டுக் கடலருகே போனார்; அப்பொழுது ஜனங்களெல்லாரும் அவரிடத்தில் வந்தார்கள்; அவர்களுக்குப் போதகம் பண்ணினார்.

2 அதிகாரம்

மாற்கு 2:14 அவர் நடந்துபோகையில், அல்பேயுவின் குமாரனாகிய லேவி ஆயத்துறையில் உட்கார்ந்திருக்கிறதைக் கண்டு: எனக்குப் பின்சென்றுவா என்றார்; அவன் எழுந்து அவருக்குப் பின்சென்றான்.

13. பரிசேயருக்கு பதிலுரை - (மத் 9:10; லூக் 5:30)

மாற்கு 2:15 அப்பொழுது அவனுடைய வீட்டிலே அவர் போஜனபந்தியிருக்கையில், அநேக ஆயக்காரரும் பாவிகளும் அவரோடுகூட வந்திருந்தபடியால், அவர்களும் இயேசுவோடும் அவர் சீஷரோடுங்கூடப் பந்தியிருந்தார்கள்.

மாற்கு 2:16 அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறதை வேதபாரகரும் பரிசேயரும் கண்டு, அவருடைய சீஷரை நோக்கி: அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனபானம் பண்ணுகிறதென்னவென்று கேட்டார்கள்.

மாற்கு 2:17 இயேசு அதைக் கேட்டு: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதே யல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்.

“ஆயக்காரர்” - (மத் 5:46)

“பாவிகள்” - (மத் 9:11)

“நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன்” - (லூக்கா 5:32)

14. யோவான் ஸ்நானனின் சீஷர்களுக்கு பதிலுரை - (மத் 9:14; லூக் 5:33)

மாற்கு 2:18 யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் உபவாசம் பண்ணிவந்தார்கள். அவர்கள் அவரிடத்தில் வந்து: யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் உபவாசிக்கிறார்களே, உம்முடைய சீஷர் உபவாசியாமலிருக்கிறதென்னவென்று கேட்டார்கள்.

மாற்கு 2:19 அதற்கு இயேசு: மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் உபவாசிப்பார்களா? மணவாளன் தங்களுடனே இருக்கும்வரைக்கும் உபவாசிக்க மாட்டார்களே.

மாற்கு 2:20 மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அந்த நாட்களிலே உபவாசிப்பார்கள்.

உவமை எண் - 1

“மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் உபவாசிப்பார்களா?” (மாற்கு 2:19-20)

“மணவாளனுடைய தோழர்” - திருமணச் சடங்குகளில் மணவாளனுடைய உறவினர்களும், நண்பர்களும், தோழர் என்று அழைக்கப்படுகிறார்கள். திருமண விருந்துகளைச் சந்தோஷமாக நடத்துவதற்காக மணவாளனுடைய தோழர் திரளாகத் திருமணத்திற்கு வருவார்கள்.

தீர்க்கதரிசன எண் - 2

“மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அந்த நாட்களிலே உபவாசிப்பார்கள்” - (மாற்கு 2:20) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று, நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

“அந்த நாட்களிலே உபவாசிப்பார்கள்” - விசுவாசிகள் இந்தக் காலத்தில் உபவாசித்து ஜெபிக்க வேண்டும்.

2 அதிகாரம்

15. வஸ்திரம், துருத்திகள் ஆகியவற்றின் உவமை - (மத் 9:16; லூக் 5:36)

மாற்கு 2:21 ஒருவனும் கோடித்துண்டைப் பழைய வஸ்திரத்தோடு இணைக்க மாட்டான், இணைத்தால், அதினோடே இணைத்த புதியதுண்டு பழையதை அதிகமாய்க் கிழிக்கும், பீறலும் அதிகமாக்கும்.

மாற்கு 2:22 ஒருவனும் புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைக்கமாட்டான்; வார்த்து வைத்தால், புதுரசம் துருத்திகளைக் கிழித்துப்போடும், இரசமும் சிந்திப்போம்; துருத்திகளும் கெட்டுப்போம்; புதுரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைக்கவேண்டும் என்றார்.

உவமை எண் - 2

"ஒருவனும் கோடித்துண்டைப் பழைய வஸ்திரத்தோடு இணைக்கமாட்டான்" (மாற்கு 2:21-22) ஒருவர் கர்த்தருக்குள் வரும்போது புதிய ஜீவனையும், புதிய அனுபவங்களையும் பெற்றுக் கொள்வதை இந்த உவமை விளக்குகிறது. அத்துடன் அவருடைய பழைய சுபாவங்களையும், அனுபவங்களையும் இந்தப் புதிய ஜீவனின் அனுபவத்தோடு கலக்கக்கூடாது. (மத் 9:16-17) இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை விட்டு எடுத்துக்கொள்ளப்படும் வேளைவந்த போது, அவர் அவர்களை எவ்வாறு பழக்குவித்தார் என்பதையும் இந்த உவமை விளக்குகிறது. (யோவான் 16:22; அப் 1:2)

புதுரசம் (new wine) - νεός - **naos** - 3485

ஆண்பால் பெயர்ச்சொல் - புதியது

புதிதான (renewed) - καινός - **kainos** - 2537

பெயரடை - புது, புதிய, நவமான, புதிதான

16. இயேசு ஓய்வுநாளுக்கும் ஆண்டவராக இருக்கிறார் - (மத் 12:1; லூக் 6:1-5)

மாற்கு 2:23 பின்பு, அவர் ஓய்வுநாளில் பயிர்வழியே போனார்; அவருடைய சீஷர்கள் கூட நடந்துபோகையில், கதிர்களைக் கொய்யத் தொடங்கினார்கள்.

மாற்கு 2:24 பரிசேயர் அவரை நோக்கி: இதோ, ஓய்வுநாளில் செய்யத்தகாததை இவர்கள் ஏன் செய்கிறார்கள் என்றார்கள்.

மாற்கு 2:25 அதற்கு அவர்: தாவீதுக்கு உண்டான ஆபத்தில், தானும் தன்னோடிருந்தவர்களும் பசியாயிருந்த போது,

மாற்கு 2:26 அவன் அபியத்தார் என்னும் பிரதான ஆசாரியன் காலத்தில் செய்ததை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? அவன் தேவனுடைய வீட்டில் பிரவேசித்து, ஆசாரியர் தவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தெய்வ சமுகத்து அப்பங்களைத் தானும் புசித்துத் தன்னோடிருந்தவர்களுக்கும் கொடுத்தானே என்றார்.

மாற்கு 2:27 பின்பு அவர்களை நோக்கி: மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப் படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது;

மாற்கு 2:28 ஆகையால் மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்றார்.

"அவருடைய சீஷர்கள் கூட நடந்து போகையில், கதிர்களைக் கொய்யத் தொடங்கினார்கள்" - பயிர் வழியாக நடந்து போகும்போதும், திராட்சைத் தோட்டத்தின் வழியாக நடந்துசெல்லும்போதும் பயிர்களையோ, திராட்சைப்பழங்களையோ பறித்துப் புசிக்கலாம். இது அக்காலத்து வழக்கத்தின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடியதே. (உபா 23:24-25) சீஷர்கள் ஓய்வுநாளில் கதிர்களைக் கொய்து புசித்தது பரிசேயருக்குக் கேள்விக்குறியாயிற்று. (மாற்கு 2:24)

2 அதிகாரம்

“இதோ, ஓய்வுநாளில் செய்யத்தகாததை இவர்கள் ஏன் செய்கிறார்கள்” - பரிசேயர்கள் புறம்பான காரியங்களுக்கே அதிக முக்கியத்துவம் தருகிறார்கள். பாவிகள் மட்டுமல்லாது நீதிமான்கள்கூட இந்தச் சிறிய காரியங்களில் தவறு செய்து விடுவார்கள்.

புறம்பான காரியங்களைக் குறித்து கேட்கப்பட்ட சில கேள்விகள்

1. ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறதென்ன? (மத் 9:11; மாற்கு 2:16)
2. உம்முடைய சீஷர் உபவாசியாமலிருக்கிறதென்ன? (மத் 9:14; மாற்கு 2:18)
3. ஓய்வுநாளில் செய்யத்தகாததை உம்முடைய சீஷர்கள் செய்கிறார்களே? (மத் 12:2; மாற்கு 2:24)
4. உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்? (மத் 15:2)
5. கைகழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே? (மத் 15:2,20)
6. வானத்திலிருந்து எங்களுக்கு அற்புத அடையாளங்களை ஏன் காண்பிக்கவில்லை? (மத் 16:1-4)
7. உங்கள் போதகர் வரிப்பணம் செலுத்துகிறதில்லையா? (மத் 17:24)
8. புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா? (மத் 19:3,7)
9. நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? (மத் 21:23-27)
10. பெரிய பாவம் எது? (மத் 22:35-40)

“தாவீதுக்கு உண்டான ஆபத்தில், தானும் தன்னோடிருந்தவர்களும் பசியாயிருந்தபோது” - (மத் 12:3; லூக்கா 6:3)

“அபியத்தார்” - அகிமெலேக்கின் மற்றொரு பெயர். (1சாமு 21:1; 1சாமு 22:9,11,20) இவனுக்கு அகியா என்று மற்றொரு பெயரும் உண்டு. (1சாமு 14:3) இவனுடைய குமாரனின் பெயரும் இதுவே. (1சாமு 22:20; 1நாளா 18:16)

அப்பம் (shewbread) - ἄρτος - **artos** - 740

ஆண்பால் பெயர்ச்சொல் - அப்பம், ஆகாரம், போஜனம், சாப்பாடு

சமூகம் (presence) - πρόθεσις - **prothesis** - 4286

பெண்பால் பெயர்ச்சொல் - சமூகம், மனநிர்ணயம், கோருதல், தீர்மானம், தெரிந்து கொள்ளுதல், நோக்கம்

சமூகத்தப்பம் ஆசரிப்புக்கூடார மேஜையின்மீது எப்போதும் வைக்கப்பட்டிருக்கும். கர்த்தரே எல்லாக் காரியங்களையும் நமக்குப் பராமரிப்பாகத் தருகிறவர் என்பதை விளக்கும் விதமாக தேவனுடைய தெய்வீகப் பிரசன்னத்தை இது குறிப்பிடுகிறது. **(bread of face, bread of My presence)** (யாத் 25:30; லேவி 24:5-9)

“ஓய்வுநாள்” - இந்த வசனத்தில் இந்த வார்த்தை ஓய்வைக்குறிக்கும். ஓய்வு எடுப்பதற்காக மனுஷன் உண்டாக்கப்படவில்லை. மனுஷனுக்காக ஓய்வு உண்டாக்கப்பட்டது. ஓய்வு எடுத்து மனுஷன் நன்றாக வேலை செய்ய வேண்டுமென்பதுதான் ஓய்வு எடுப்பதன் நோக்கம். (மாற்கு 3:1-4; லூக்கா 6:9; லூக்கா 13:10-16; யோவான் 7:22-23)

3 அதிகாரம்

17. ஓய்வுநாளில் சூம்பின கையையுடைய ஒரு மனுஷனைச் சொஸ்தமாக்குகிறார் - (மத் 12:9; லூக் 6:6)

மாற்கு 3:1 மறுபடியும் அவர் ஜெப ஆலயத்தில் பிரவேசித்தார். அங்கே சூம்பின கையையுடைய ஒரு மனுஷன் இருந்தான்.

மாற்கு 3:2 அவர் ஓய்வுநாளில் அவனைச் சொஸ்தமாக்கினால் அவர்பேரில் குற்றஞ்சாட்டலாமென்று அவர்மேல் நோக்கமாயிருந்தார்கள்.

மாற்கு 3:3 அப்பொழுது அவர் சூம்பின கையையுடைய மனுஷனை நோக்கி: எழுந்து நடுவே நில் என்று சொல்லி;

மாற்கு 3:4 அவர்களைப் பார்த்து: ஓய்வுநாட்களில் நன்மைசெய்வதோ, தீமைசெய்வதோ, ஜீவனைக் காப்பதோ அழிப்பதோ, எது நியாயம் என்றார். அதற்கு அவர்கள் பேசாமலிருந்தார்கள்.

மாற்கு 3:5 அவர்களுடைய இருதயகடினத்தினிமித்தம் அவர் விசனப்பட்டு, கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து, அந்த மனுஷனை நோக்கி: உன் கையை நீட்டு என்றார்; அவன் நீட்டினான்; அவன் கை மறுகையைப்போலச் சொஸ்தமாயிற்று.

"மறுபடியும் அவர் ஜெபஆலயத்தில் பிரவேசித்தார்" - மற்றொரு ஓய்வுநாளில் ஜெபஆலயத்தில் பிரவேசித்தார்.

"அவர் ஓய்வுநாளில் அவனைச் சொஸ்தமாக்கினால் அவர்பேரில் குற்றஞ் சாட்டலாமென்று அவர்மேல் நோக்கமாயிருந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவிற்கு வியாதியைக் குணமாக்கும் அதிகாரம் உள்ளது என்பதில் பரிசேயருக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஓய்வுநாளில் இயேசு குணமாக்கினால், அவர் நியாயப் பிரமாணத்தை மீறுகிறார் என்று அவர்மீது குற்றம்சுமத்தலாம் என்று நினைத்தார்கள்.

"அவர்களுடைய இருதய கடினத்தினிமித்தம் அவர் விசனப்பட்டு, கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்தார்" - இயேசு கிறிஸ்து கோபப்பட்டார் என்னும் வாக்கியத்தை வாசித்து விட்டு ஒருசிலர் அவர் இன்னும் பரிபூரணப் படவில்லை. அவருக்குள் பழைய மனுஷன் இன்னும் இருக்கிறான் என்று கூறுகிறார்கள். கோபப்படுவதினால் அவர் தேவத்துவத்தை இழந்துவிட்டார் என்று கூறமுடியாது. பாவத்தை மன்னிப்பதற்கும், சாத்தானுடைய அந்தகார சக்திகளை அழிப்பதற்கும் கோபம் தடையாக இராது. மனுஷனுக்குப் பாவத்திற்கு எதிரான கோபத்துடன்கூடிய வைராக்கியம் இல்லையென்றால் அவனால் பாவத்தை எதிர்த்து நிற்கமுடியாது. சாத்தானையும் எதிர்த்து நிற்கமுடியாது. மனுஷனால் கோபப்படாமல் இருக்க முடியாது என்றாலும் தன்னுடைய புலங்களைக் கட்டுப்படுத்த கர்த்தர் உதவிபுரிய வேண்டுமென்று ஜெபம் பண்ண வேண்டும். தேவனுடைய பிரமாணத்திற்கு உட்பட்டு, நம்முடைய ஐம்புலங்களும் செயல்படவேண்டும். (கலா 5:22-23)

கடினம் (hardness) - πώρωσις - peeroosis - 4457

பெண்பால் பெயர்ச்சொல் - கடினம் (ரோமர் 11:25; எபே 4:18)

"அவன் கை மறுகையைப்போலச் சொஸ்தமாயிற்று" - தேவனுடைய சிருஷ்டிக்கும் வல்லமையை இந்த அற்புதம் வெளிப் படுத்துகிறது. சூம்பின கையை மறுகையைப் போலச் சொஸ்தமாக்க வேண்டுமானால் அங்கு சிருஷ்டிக்கும் கிரியை நடைபெற வேண்டும்.

3 அதிகாரம்

இந்த அற்புதத்தை விட ஒரு நொடிப்பொழுதில் மரித்த எல்லோருடைய சரீரங்களையும், கர்த்தர் மறுரூபப்படுத்துவார். (1கொரி 15:51-58) இது மகாப்பெரிய அற்புதமாக இருக்கும். இப்பேர்ப்பட்ட அற்புதங்களைச் செய்யக்கூடியவர் சர்வ வல்லவர் என்றும், நமது ஜெபங்களுக்கு பதில் கொடுக்கிறவர் என்றும் நாம் விசுவாசிக்க வேண்டும். (2கொரி 1:20; 2பேதுரு 1:4)

18. இயேசுவை கொலைசெய்வதற்கு சதியாலோசனை - (மத் 26:3)

மாற்கு 3:6 உடனே பரிசேயர் புறப்பட்டுப் போய், அவரைக் கொலைசெய்யும்படி, அவருக்கு விரோதமாய் ஏரோதியரோடே கூட ஆலோசனை பண்ணினார்கள்.

உடனே **(straightway)** - **εὐθέως** - **eutheoos** - 2112

விளையடை - உடனே, சீக்கிரமாய், முன்னே

புதிய ஏற்பாட்டில் "உடனே" என்னும் வார்த்தை 80 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. மாற்கு மட்டும் இந்த வார்த்தையை 40 தடவைகள் பயன் படுத்தியிருக்கிறார். உடனே **(straightway, immediately, forthwith, as soon as, anon, by and by, and shortly)**

"ஏரோதியர்" - (மத் 22:16)

19. திரளான ஜனங்களை சொஸ்தமாக்குகிறார் - (மத் 12:15; லூக் 6:17)

மாற்கு 3:7 இயேசு தம்முடைய சீஷர்களோடே அவ்விடம்விட்டு, கடலோரத்துக்குப் போனார்.

மாற்கு 3:8 கலிலேயாவிலும், யூதேயாவிலும், எருசலேமிலும், இதுமேயாவிலும், யோர்தானுக்கு அக்கரையிலுமிருந்து திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின்சென்றார்கள். அல்லாமலும் தீரு சீதோன் பட்டணங்களின் திசைகளிலுமிருந்து திரளான ஜனங்கள் அவர் செய்த அற்புதங்களைக் குறித்துக் கேள்விப்பட்டு, அவரிடத்தில் வந்தார்கள்.

மாற்கு 3:9 அவர் அநேகரைச் சொஸ்தமாக்கினார். ரூநாயாளி களெல்லாரும் அதை அறிந்து அவரைத் தொடவேண்டுமென்று அவரிடத்தில் நெருங்கிவந்தார்கள்.

மாற்கு 3:10 ஜனங்கள் திரளாயிருந்த படியால் அவர்கள் தம்மை நெருக்காத படிக்கு, தமக்காக ஒரு படவை ஆயத்தம் பண்ண வேண்டுமென்று, தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னார்.

மாற்கு 3:11 அசுத்த ஆவிகளும் அவரைக் கண்டபோது, அவர் முன்பாக விழுந்து: நீர் தேவனுடைய குமாரன் என்று சத்தமிட்டன.

மாற்கு 3:12 தம்மைப் பிரசித்தம் பண்ணாதபடி அவைகளுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.

"இயேசு தம்முடைய சீஷர்களோடே அவ்விடம்விட்டு, கடலோரத்துக்குப் போனார்" - இயேசு கிறிஸ்து அவர்களுக்குப் பயந்து அவ்விடத்தைவிட்டு புறப்பட்டுச் செல்லவில்லை. இயேசுவிற்குப் பயமில்லை. ஆயினும், பிதா தமக்கு நியமித்த ஊழியத்தைத் தடையில்லாமல் பரிபூரணமாகச் செய்ய வேண்டுமென்று இயேசு கிறிஸ்து சித்தம்கொண்டிருந்தார். இயேசு இவ்வாறு தமது ஊழிய இடத்தை விட்டு, புறப்பட்டுச் சென்றதைக் குறிக்கும் வசனங்கள் - (மாற்கு 6:31,46; மாற்கு 7:24,31; மாற்கு 9:2; மாற்கு 10:1; மாற்கு 14:32)

"இதுமேயா" - சவக்கடலுக்கும், யூதேயாவிற்கும் தெற்குப்பகுதியிலுள்ள பிரதேசம்.

3 அதிகாரம்

"அநேகர்" - இயேசு கிறிஸ்து அநேகரைச் சொஸ்தமாக்கினார். நோயாளிகள் எல்லோரும் அவரைத் தொட்டால் குணமாகலாம் என்று விசுவாசித்து, அவரிடத்தில் நெருங்கி வந்தார்கள். இயேசுவைத் தொட்ட யாவரும் குணமானார்கள். (மத் 8:3, மத் 13:58)

நோய்கள் (plagues) - μάστιξ - mastix - 3148

பெண்பால் பெயர்ச்சொல் - நோய், வேதனை, அடித்தல் - இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல்லுக்கு கொடிய வியாதி, அல்லது ஜனங்களை அழிக்கும் சாத்தானுடைய அடிகள் என்று பொருள்படும். (மாற்கு 5:29,34; லூக்கா 7:21) சில வசனங்களில் இந்தச் சொல் "அடிகள்" என்று மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. (அப் 22:24; எபி 11:36)

"அசுத்த ஆவிகளும் அவரைக் கண்டபோது, அவர் முன்பாக விழுந்து: நீர் தேவனுடைய குமாரன் என்று சத்தமிட்டன" - மாற்கு 1:23. அசுத்த ஆவிகள் இயேசுவைக் கண்டபோது அவர் முன்பாக விழுந்து இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டன. பிசாசுகள் யாரைப் பிடித்திருக்கிறதோ அவர்களைக் கீழே தள்ளும். இயேசு கிறிஸ்து இதை அனுமதிக்கவில்லை. தம்மைப் பிரசித்தம் பண்ணக்கூடாது என்று பிசாசுகளுக்குக் கட்டளையிட்டார். (மாற்கு 1:23-25; மாற்கு 3:12; லூக்கா 4:35).

20. பன்னிரெண்டு பேரை பிரதிஷ்டை பண்ணுகிறார் - (மத் 10; லூக் 6:12; 9:1; மாற்கு 6:7)

மாற்கு 3:13 பின்பு அவர் ஒரு மலையின்மேல் ஏறி, தமக்குச் சித்தமானவர்களைத் தம்மிடத்தில் வரவழைத்தார்; அவர்கள் அவரிடத்திற்கு வந்தார்கள்.

மாற்கு 3:14 அப்பொழுது அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம்பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும்,

மாற்கு 3:15 வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களாயிருக்கவும், அவர்களை ஏற்படுத்தினார்.

ஏற்படுத்தினார் (ordained) - ποιέω - poieoo - 4160

வினைச்சொல் - கட்டளையிடு, செவ்வைப்பண்ணு, கொடு, கைக்கொள், செய்யப்பண்ணு, உண்டாக்கு

பன்னிரெண்டு சீஷர்களுக்கும் இயேசு கிறிஸ்து கொடுத்த கட்டளைகள்

1. தம்மோடிருக்க வேண்டும் (மாற்கு 3:14).
2. பிரசங்கம் பண்ண வேண்டும். (மாற்கு 3:14; மாற்கு 6:12; மாற்கு 16:15-20; மத் 10:7,20; லூக்கா 9:2,6; அப் 1:8)
3. வியாதிகளைக் குணமாக்க வேண்டும். (மாற்கு 3:15; மாற்கு 6:13; மாற்கு 16:15-20; மத் 10:1-8; லூக்கா 9:1,6; அப் 1:8)
4. பிசாசுகளைத் துரத்த வேண்டும். (மாற்கு 3:15; மாற்கு 6:13; மாற்கு 16:15-20; மத் 10:1-8; லூக்கா 9:1-6).

21. அப்போஸ்தலர்களின் பெயர்கள் - (மத் 10:2; லூக் 6:14; அப் 1:26)

மாற்கு 3:16 அவர்கள் யாரெனில், சீமோன், இவனுக்குப் பேதுரு என்கிற பெயரிட்டார்.

மாற்கு 3:17 செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபு, யாக்கோபின் சகோதரனாகிய யோவான், இவ்விருவருக்கும் இடிமுழக்க மக்களென்று அர்த்தங்கொள்ளும் பொவனெர்கேஸ் என்கிற பெயரிட்டார்,

3 அதிகாரம்

மாற்கு 3:18 அந்திரேயா, பிலிப்பு, பர்த்தொலொமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, ததேயு, கானானியனாகிய சீமோன்,

மாற்கு 3:19 அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்து என்பவர்களே.

"செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபு" - (மத் 4:21)

"யாக்கோபும், யாக்கோபின் சகோதரனாகிய யோவானும்" - இவர்கள் இருவருக்கும் இடிமுழக்க மக்களென்று அர்த்தங்கொள்ளும் பொவனெர்கேஸ் என்று பெயரிட்டார். இவர்கள் வல்லமையாகப் பிரசங்கம் பண்ணியதினாலோ, அல்லது ஒரு பட்டணத்தைப் பரலோகத்திலிருந்து மின்னலும், இடியும் வந்து அழிக்க வேண்டும் என்று வைராக்கியமாக இருந்ததினாலோ இவர்களுக்கு இந்தப் பெயர் கொடுக்கப் பட்டிருக்கலாம். (லூக்கா 9:53-54)

"அந்திரேயா" - (மத் 4:18)

"பிலிப்பு" - (லூக்கா 6:14)

"பர்த்தொலொமேயு" - (மத் 10:3)

"அல்பேயுவின் குமாரன் யாக்கோபு" - (லூக்கா 24:10)

"ததேயு" - யாக்கோபின் சகோதரனாகிய யூதா என்றும் இவன் அழைக்கப்பட்டான். (லூக்கா 6:16; யோவான் 14:22; அப் 1:13) இவனுக்கு ததேயு **(Thaddaeus)**, லபேயு **(Lebbaeus)** என்னும் மறுபெயரும் உண்டு. (மத் 10:3).

"கானானியனாகிய சீமோன்" - (லூக்கா 6:15)

"அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்து" - (யோவான் 6:71)

22. இயேசு மதிமயங்கியிருக்கிறார் என்று அவர்மீது குற்றச்சாட்டு - (மத் 12:46; யோவான் 10:20; அப் 12:15; 26:24-25)

மாற்கு 3:20 பின்பு வீட்டுக்குப் போனார்கள்; அங்கே அவர்கள் சாப்பிடுவதற்கும் சமயமில்லாதபடிக்கு அநேக ஜனங்கள் மறுபடியும் கூடி வந்தார்கள்.

மாற்கு 3:21 அவருடைய இனத்தார் இதைக் கேட்டபோது, அவர் மதி மயங்கியிருக்கிறார் என்று சொல்லி, அவரைப் பிடித்துக் கொள்ளும்படி வந்தார்கள்.

"பின்பு வீட்டுக்குப் போனார்கள்; அங்கே அவர்கள் சாப்பிடுவதற்கும் சமயமில்லாதபடிக்கு அநேக ஜனங்கள் மறுபடியும் கூடிவந்தார்கள்" - மாற்கு 3:7-8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற திரளான ஜனங்களே இவர்கள். இயேசு கிறிஸ்துவிடம் திரளான ஜனங்கள் கூடி வந்தார்கள். அவருடைய சத்துருக்களும், நண்பர்களும் அவரிடத்தில் வந்தார்கள். சில சமயங்களில் இயேசு கிறிஸ்துவிற்குச் சாப்பிடுவதற்குக்கூடச் சமயம்வராது. (மாற்கு 3:20) சில சமயங்களில் ஜனங்களின் எண்ணிக்கை அநேக ஆயிரங்களாக இருந்தது. அவர்கள் ஒருவரையொருவர் மிதிக்கத்தக்கதாகக் கூடிவந்தார்கள். (லூக்கா 12:1)

இயேசு கிறிஸ்து பல அற்புதங்களைச் செய்தார். பல வியாதிகளைச் சொஸ்தமாக்கினார். இதனால் அவருடைய கீர்த்தி எல்லா இடங்களுக்கும் வேகமாகப் பரவிற்று. இயேசு கிறிஸ்துவிடம் வந்தவர்கள் சிலர் எப்படியாவது அவரைத் தொடவேண்டும் என்று ஜனக்கூட்டத்தின் நடுவே நுழைந்து கொண்டு வந்தார்கள். (மாற்கு 5:24-34) ஒருசிலர் மேற்கூரையைப் பிரித்து, திறப்பாக்கி, வியாதியஸ்தரை இயேசு கிறிஸ்துவிடம் கொண்டு வந்தார்கள். (மாற்கு 2:4)

இயேசு கிறிஸ்துவிடம் வந்த எல்லா வியாதியஸ்தருமே சொஸ்தமானார்கள். தம்மிடத்தில் வருகிற யாரையும் அவர் புறம்பே தள்ளுவதில்லை. அவர் எல்லோரையுமே சொஸ்தமாக்கினார் என்று வேதத்தில் 23 இடங்களில் நாம் வாசிக்கிறோம். (மத் 13:58)

3 அதிகாரம்

இயேசுவின் கீர்த்தி அந்த அளவிற்குப் பிரபலியமாய் இருந்தது. திரளான ஜனங்கள் அவரிடம் கூடி வந்தார்கள். ஜனங்கள் பொதுவாக வனாந்தரத்திற்குச் செல்ல மாட்டார்கள். இயேசு வனாந்தரத்தில் இருந்தபோதோ ஜனங்கள் அங்கு கூடிவந்து, அவருடைய உபதேசத்தைக் கேட்டார்கள். வியாதியஸ்தரை அங்கு கொண்டுவந்தார்கள். (மத் 14:13-21; மத் 15:29-39) புசிப்பதற்கு ஆகாரம் இல்லாமல் இருந்தார்கள். இரண்டு வேளைகளில் ஜனங்களுடைய சரீரப் பசியைப் பார்த்து, இயேசு அவர்களுக்கு அற்புதமாகப் போஜனம் கொடுத்தார். இயேசு தம்மிடம் கொடுக்கப்பட்ட உணவை அவர் ஆசீர்வதித்து, ஸ்தோத்திரம் பண்ணி, பிட்டு, ஜனங்களுக்கு கொடுக்குமாறு சீஷரிடம் கொடுத்தார். ஆயிரக்கணக்கான ஜனங்கள் திருப்தியாகப் போஜனம் பண்ணினார்கள். (மத் 14:15-21; 15:32-38)

"அவருடைய இனத்தார் இதைக் கேட்டார்கள்" - (மாற்கு 3:31; மத் 12:46-50; யோவான் 7:5)

"அவர் மதிமயங்கியிருக்கிறார் என்று சொல்லி, அவரைப் பிடித்துக் கொள்ளும்படி வந்தார்கள்" -இயேசு கிறிஸ்துவின் சத்துருக்கள் அவர் மதிமயங்கியிருக்கிறார் என்றும், மார்க்கக்காரியங்களுக்கு விரோதமாக உபதேசிக்கிறார் என்றும் இயேசுவின் இனத்தாரிடம் கூறுகிறார்கள். ஆகையினால், அவர்கள் இயேசுவை பிடித்துக் கொண்டு போவதற்காக வந்தார்கள்.

மதிமயங்கு (insane) - ἐξιστάνω - existanoo - 1839

விணைச்சொல் - மதிமயங்கு, ஆச்சரியப்படு, பிரமி **(to be out of one's senses; insane)** (மாற்கு 3:21; 2கொரி 5:13); பிசாசின் பிடியில் அகப்பட்டிருத்தல் **(bewitched)** (அப் 8:9-11); பிரமிப்புள்ளவராக இருத்தல் **(amazed and astonished)** (மாற்கு 2:12; மாற்கு 5:42; மாற்கு 6:51; லூக்கா 2:47; லூக்கா 8:56; லூக்கா 24:22; அப் 2:7,12; அப் 9:21; அப் 10:45; அப் 12:16)

23. பரிசேயர்கள் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக தேவதூஷணம் கூறுகிறார்கள் - பிரிந்திருக்கும் இராஜ்ஜியம் - (மத் 9:34; 12:24; லூக் 11:15)

மாற்கு 3:22 எருசலேமிலிருந்து வந்த வேதபாரகர்: இவன் பெயெல்செபூலைக் கொண்டிருக்கிறான், பிசாசுகளின் தலைவனாலே பிசாசுகளைத் துரத்துகிறான் என்றார்கள்.

மாற்கு 3:23 அவர்களை அவர் அழைத்து, உவமைகளாய் அவர்களுக்குச் சொன்னதாவது: சாத்தானைச் சாத்தான் துரத்துவது எப்படி?

மாற்கு 3:24 ஒரு ராஜ்யம் தனக்குத் தானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த ராஜ்யம் நிலைநிற்கமாட்டாதே.

மாற்கு 3:25 ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த வீடு நிலை நிற்கமாட்டாதே.

மாற்கு 3:26 சாத்தான் தனக்குத்தானே விரோதமாக எழும்பிப் பிரிந்திருந்தால், அவன் நிலைநிற்கமாட்டாமல், அழிந்து போவானே.

மாற்கு 3:27 பலவானை முந்திக் கட்டினாலொழிய, ஒருவனும் பலவானுடைய வீட்டுக்குள் புகுந்து, அவன் உடைமைகளைக் கொள்ளையிடக் கூடாது; கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடுவான்.

"வேதபாரகர்" - (மத் 2:4)

"பெயெல்செபூல்" - (மத் 10:25)

"ஒரு ராஜ்யம் தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த ராஜ்யம் நிலைநிற்கமாட்டாதே" - "இருந்தால்" என்னும் வாக்கியம் ஒரு காரியம் இவ்வாறு நடைபெற்றால் எப்படியிருக்கும் என்பதைக் கற்பனை பண்ணுவதாகும். மாற்கு 3 இடங்களில் "இருந்தால்" என்னும் வாக்கியத்தைப் பயன்படுத்தியிருக்கிறார். (மாற்கு 3:25-27)

3 அதிகாரம்

உவமை எண் - 3

"பலவானை முந்திக் கட்டினாலொழிய, ஒருவனும் பலவானுடைய வீட்டுக்குள் புகுந்து, அவன் உடைமைகளைக் கொள்ளையிடக் கூடாது; கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடுவான்". (மாற்கு 3:27) சாத்தானுடைய அந்தகார சக்திகளை இயேசு கிறிஸ்து கட்டுகிறார். அவனுடைய கிரியைகளை இயேசு அழிக்கிறார். (1யோவான் 3:8; கொலோ 2:14-17; எபி 2:14-15)

24. மன்னிக்கப்படாத பாவம் - (மத் 12:31)

மாற்கு 3:28 மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: மனுஷர்கள் செய்யும் எல்லாப் பாவங்களும், அவர்கள் தூஷிக்கும் எந்தத் தூஷணங்களும், அவர்களுக்கு மன்னிக்கப்படும்;

மாற்கு 3:29 ஒருவன் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகத் தூஷணஞ் சொல்வானாகில், அவன் என்றென்றைக்கும் மன்னிப்படையாமல் நித்திய ஆக்கினைக்குள்ளாயிருப்பான் என்றார்.

மாற்கு 3:30 அசுத்த ஆவியைக் கொண்டிருக்கிறானென்று அவர்கள் சொன்னபடியினாலே அவர் இப்படிச் சொன்னார்.

"மனுஷர்கள் செய்யும் எல்லாப் பாவங்களும், அவர்கள் தூஷிக்கும் எந்தத் தூஷணங்களும், அவர்களுக்கு மன்னிக்கப்படும்" - மனுஷருடைய எல்லாப் பாவங்களையும் இயேசு கிறிஸ்து மன்னிப்பார். ஒருவன் தான் செய்த பாவங்களுக்காக மனம்வருந்தி, மனம்திருந்தி, இயேசு கிறிஸ்துவிடம் மன்னிப்புக்கோரி வரும்போது, அவர் அவனை மன்னிக்கிறார். எப்பேர்ப்பட்ட பாவமாக இருந்தாலும், பாவங்களை மன்னிப்பதற்கு இயேசு கிறிஸ்து இரக்கமும், கிருபையும் உடையவர். ஆயினும் "ஒருவன் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகத் தூஷணஞ் சொல்வானாகில், அவன் என்றென்றைக்கும் மன்னிப்படையாமல் நித்திய ஆக்கினைக் குள்ளாயிருப்பான்" (மாற்கு 3:29; மத் 12:31-32)

"ஒருவன் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகத் தூஷணஞ்சொல்வானாகில், அவன் என்றென்றைக்கும் மன்னிப்படையாமல் நித்திய ஆக்கினைக் குள்ளாயிருப்பான்" - ஒருவன் வேண்டுமென்றே பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாகத் தூஷண வார்த்தை சொல்வான் என்றால், அது அவனுக்கு மன்னிக்கப்படாது. பரிசுத்த ஆவியானவரின் ஆள்தத்துவத்திற்கு எதிராகவும், அவருடைய கிரியைகளுக்கு எதிராகவும் யாரும் தூஷண வார்த்தைகளைக் கூறக்கூடாது. பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளைச் சாத்தானுடைய கிரியைகள் என்று சொல்லக்கூடாது. (மத் 12:31-32; எபி 10:26-29) இது மன்னிக்கக்கூடாத பாவம். வேண்டுமென்றே இயேசு கிறிஸ்துவின் ஒளியைப் புறக் கணிப்பதாகும்.

மனுஷருக்கு இரட்சிப்பு இயேசு கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே வருகிறது. பரிசுத்த ஆவியானவர் மட்டுமே மனுஷனுக்காகப் பரிந்து பேசுகிறவர். அந்தப் பரிசுத்த ஆவியானவருக்கு எதிராக யாராவது ஒருவன் தூஷண வார்த்தை சொல்வான் என்றால் அவன் என்றென்றைக்கும் மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளமாட்டான். நித்திய ஆக்கினைக்கு உள்ளாக இருப்பான். (1தீமோ 1:13)

"நித்திய ஆக்கினை" - நித்திய நரகம். நித்திய தண்டனை. (மத் 25:46)

25. இயேசுவின் புதிய உறவினர்கள் - (மத் 12:46; லூக் 8:19)

மாற்கு 3:31 அப்பொழுது அவருடைய சகோதரரும் தாயாரும் வந்து, வெளியே நின்று, அவரை அழைக்கும்படி அவரிடத்தில் ஆள் அனுப்பினார்கள்.

மாற்கு 3:32 அவரைச் சுற்றிலும் உட்கார்ந்திருந்த ஜனங்கள் அவரை நோக்கி: இதோ, உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் வெளியே நின்று உம்மைத் தேடுகிறார்கள் என்றார்கள்.

மாற்கு 3:33 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி;

மாற்கு 3:34 தம்மைச் சூழ உட்கார்ந்திருந்தவர்களைச் சுற்றிப் பார்த்து: இதோ, என் தாயும், என் சகோதரரும் இவர்களே!

மாற்கு – தொகுப்புரை

3 அதிகாரம்

மாற்கு 3:35 தேவனுடைய சித்தத்தின்படியே செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், எனக்குச் சகோதரியும், எனக்குத் தாயுமாய் இருக்கிறான் என்றான்.

"அவருடைய சகோதரர்" - மாற்கு 3:21 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிற இயேசு கிறிஸ்துவின் நண்பர்களாக இருக்கலாம். (லூக்கா 8:19)

"அவர்கள் வெளியே நின்று, அவரை அழைக்கும்படி அவரிடத்தில் ஆள் அனுப்பினார்கள்" - இயேசு கிறிஸ்து வீட்டிற்கு உள்ளே இருந்தார். (மாற்கு 3:19) அவர் வெளியே வரவேண்டுமென்று அவரிடத்தில் ஆள் அனுப்பினார்கள். அவர் வந்தால் அவரைப் பிடித்துக் கொள்ளலாம் என்று நினைத்தார்கள். (மாற்கு 3:21)

"இயேசு தம்மைச் சூழ உட்கார்ந்திருந்தவர்களைச் சுற்றிப்பார்த்தார்" - மாற்கு 3:5-இல் பார்த்த பார்வைக்கும், இந்தப் பார்வைக்கும் வித்தியாசம் உண்டு. மாற்கு 3:5-இல் ஜனங்களுடைய இருதயக் கடினத்தைக் கண்டு கோபத்துடனே சுற்றிலுமிருந்தவர்களைப் பார்த்தார். ஆனால் இங்கோ தங்களுக்குரிய எல்லாவற்றையும் விட்டுவிட்டுத் தம்மையே பின்பற்றி வந்திருக்கும் தமது சீஷர்களை அன்போடு பார்க்கிறார்.

"தேவனுடைய சித்தத்தின்படியே செய்கிறவன்" - தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறேன் என்று சொல்லுகிறவன் அல்ல. தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனே இயேசு கிறிஸ்துவிற்குச் சகோதரனும், சகோதரியும், தாயுமாய் இருக்கிறார்கள். (மத் 7:21-27; மத் 23:3; யாக் 1:22-27).

4 அதிகாரம்

26. விதைக்கிறவனைப் பற்றிய உவமை - (மத் 13:3, 18; லூக் 8:41)

மாற்கு 4:1 அவர் மறுபடியும் கடலோரத்திலே போதகம்பண்ணத் தொடங்கினார். திரளான ஜனங்கள் அவரிடத்தில் கூடிவந்தபடியால், அவர் கடலிலே நின்ற ஒரு படவில் ஏறி உட்கார்ந்தார்; ஜனங்களெல்லாரும் கடற்கரையில் நின்றார்கள்.

மாற்கு 4:2 அவர் அநேக விசேஷங்களை உவமைகளாக அவர்களுக்குப் போதித்தார்; போதிக்கிறபொழுது அவர்களுக்குச் சொன்னது:

மாற்கு 4:3 கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்.

மாற்கு 4:4 அவன் விதைக்கையில், சிலவிதை வழியருகே விழுந்தது; ஆகாயத்துப் பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது.

மாற்கு 4:5 சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை நிலத்தில் விழுந்தது; அதற்கு ஆழமான மண்ணில்லாததினாலே சீக்கிரத்தில் முளைத்தது;

மாற்கு 4:6 வெயில் ஏறினபோதோ, தீய்ந்து போய், வேரில்லாமையால் உலர்ந்துபோயிற்று.

மாற்கு 4:7 சிலவிதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து, அது பலன் கொடாதபடி, அதை நெருக்கிப்போட்டது.

மாற்கு 4:8 சிலவிதை நல்ல நிலத்தில் விழுந்து, ஓங்கிவளருகிற பயிராகி, ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் தந்தது.

மாற்கு 4:9 கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று அவர்களுக்குச் சொன்னார்.

"அவர் மறுபடியும் கடலோரத்திலே போதகம்பண்ணத் தொடங்கினார்" - இயேசு கிறிஸ்து வீட்டை விட்டுப் புறப்பட்டு, இந்த இடத்தில் ஏற்கெனவே பிரசங்கம் பண்ணியிருக்கிறார். (மாற்கு 4:19,31-32) இயேசு வீட்டில் இருந்தபோது, அவரைப் பிடித்துக் கொண்டு போக அவருடைய தாயாரும், சகோதரரும் வந்திருந்தார்கள். அவரை அவர்கள் பிடித்துக்கொண்டு போனார்களா என்று வேதத்தில் எழுதப்படவில்லை. (மாற்கு 4:21)

"உவமைகள்" - (மத் 13:3,10-17)

உவமை எண் - 4

"விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்" - மாற்கு கூறியிருக்கிற நான்காவது உவமை. (மாற்கு 4:3-9,14-20) இத்துடன் மத் 13:3-9,18-23 ஆகிய வசனங்களுக்குக் கூறப்பட்டிருக்கும் குறிப்புரையையும் வாசிக்கவும். லூக்கா 8:4-8, 11-15 ஆகிய வசனங்களில் இந்த உவமை வேறு சூழ்நிலைகளில் மறுபடியும் கூறப்பட்டிருக்கிறது. மத் 13:3-9,18-23 ஆகிய வசனங்களில் உள்ள வார்த்தைகளிலிருந்து சற்று வித்தியாசமான வார்த்தைகளால் கூறப்பட்டிருக்கிறது.

பாலஸ்தீன தேசத்தில் கோதுமை விதைகளை அதிகமாக விதைத்துப் பயிரிடுவார்கள். வயல் நிலங்களுக்கு வேலியடைத்து, நிலங்களை உழுவார்கள். நன்றாக உழுத நிலத்தில்தான், விதை நன்றாக வளரும். நிலத்தில் கற்கள் இருக்குமானால், அவற்றை அப்புறப் படுத்துவார்கள். இயேசு கிறிஸ்துவும் தமது சத்தியத்தை ஏற்றுக் கொள்வதற்குத் தமது சீஷர்களைப் பக்குவப்படுத்தினார். அவருடைய உள்ளத்திலிருந்த கற்களைப் போன்ற கடினமான பகுதிகளையும் களைகளைப் போன்ற தேவையில்லாத பகுதிகளையும், அப்புறப் படுத்தினார். விதையை ஏற்றுக்கொள்ளும் பக்குவமான நிலமாக மாற்றினார். (மாற்கு 4:4-8)

முன்மாரிக்காலத்தில் நிலத்தை உழுது, பக்குவப்படுத்துவார்கள். பக்குவப்பட்ட நிலத்தில் விதையை விதைப்பார்கள்.

4 அதிகாரம்

"விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்" - மத் 13:18-23 ஆகிய வசனங்களில் விதைக்கிறவனைப் பற்றிய உவமை விளக்கப்பட்டிருக்கிறது. இது கிருபையின் காலத்தை வர்ணிக்கிறது. தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்கிற ஜனங்களுடைய இருதயங்கள் பல்வேறு விதமானவை. இருதயங்களில் வித்தியாசம் இருப்பதுபோலவே, அவர்கள் மூலமாக வெளிவரும் ஆவியின் கனியிலும் வித்தியாசம் இருக்கும். (மத் 13:24-30, 36-43)

"வழியருகே" - வேலியில்லாத தோட்டத்திற்கு அருகேயுள்ள நடைபாதை. எல்லோரும் அதில் நடந்து செல்வதினால் அந்த நிலமே இறுகிப்போய்க் கடினமாக இருக்கும்.

"நல்ல நிலம்" - கற்களும், முட்களும் அகற்றப்பட்ட விளைநிலம். நன்றாக உழுது ஆயத்தம் பண்ணப்பட்ட நிலம். விதை விதைத்தவுடன் அது வளர்வதற்கு அந்த நிலம் பக்குவமாக இருக்கிறது.

"மண்ணில்லாத கற்பாறை நிலம்" - நன்றாகப் பக்குவப்படாத நிலம். இந்த நிலத்திலுள்ள கற்கள் அகற்றப்படவில்லை. இதில் மண் ஆழமாக இல்லை. ஆகையினால் விதை சீக்கிரத்தில் முளைத்தாலும், வேர் சரியாக விடாது. வெயில் ஏறும்போது, தீய்ந்துபோய், உலர்ந்துபோகும்.

"சிலவிதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து, அது பலன் கொடாதபடி, அதை நெருக்கிப்போட்டது" - நன்றாகப் பக்குவப்படாத நிலம். முள் விதைகள் அகற்றப்படவில்லை. ஆகையினால் கோதுமையும், முள்ளும் சேர்ந்து வளர்கிறது. முட்செடி கோதுமைச் செடியை நெருக்கிப் போடுகிறது. கோதுமையால் நன்றாக வளர முடியவில்லை.

"சிலவிதை நல்ல நிலத்தில் விழுந்து, ஓங்கிவளருகிற பயிராகி, ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் தந்தது" - நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதை பலன் தருகிறது. ஆனால் ஒன்றுபோல் தருவதில்லை. ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் தந்தது. பலன் தருவதிலும் வித்தியாசம் உள்ளது.

"கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" - (மத் 11:15)

27. உவமைகளாக பேசுவதற்கு காரணம் - (மத் 13:10,34; லூக் 8:9)

மாற்கு 4:10 அவர் தனித்திருக்கிற போது, பன்னிருவரோடுங்கூட அவரைச் சூழ்ந்திருந்தவர்கள் இந்த உவமையைக் குறித்து அவரிடத்தில் கேட்டார்கள்.

மாற்கு 4:11 அதற்கு அவர்: தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது; புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகிறது.

மாற்கு 4:12 அவர்கள் குணப்படாதபடிக்கும், பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதபடிக்கும், அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி, இப்படிச் சொல்லப்படுகிறது என்றார்.

மாற்கு 4:13 பின்பு அவர் அவர்களை நோக்கி: இந்த உவமையை நீங்கள் அறியவில்லையா? அறியாவிட்டால் மற்ற உவமைகளையெல்லாம் எப்படி அறிவீர்கள்?

"அவர் தனித்திருக்கிறபோது" - இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்றிருந்தார். ஆயினும் அவர் தனித்திருந்தார். (யோவான் 3:34) நாமும் தேவனோடு தனித்திருக்க வேண்டும். இதற்காக நமது நேரத்தை ஒதுக்கிக்கொள்ள வேண்டும்.

"தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியம்" - (மத் 13:11)

"தேவனுடைய ராஜ்யம்" - மத் 13:11-இல் பரலோகராஜ்யம் என்றிருக்கிறது. இது தேவனுடைய ராஜ்யத்தின் ஒரு பகுதி. தேவனுடைய ராஜ்யத்திற்கும், பரலோக ராஜ்யத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை மத் 4:17, மத் 19:24 ஆகிய வசனங்களுக்குக் கூறப்பட்டிருக்கிற குறிப்புகளில் காணலாம்.

4 அதிகாரம்

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 3

"அவர்கள் குணப்படாதபடிக்கும், பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதபடிக்கும், அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி, இப்படிச் சொல்லப்படுகிறது" - (மாற்கு 4:12; ஏசா 6:9-10; மத் 13:14-15)

"குணப்படுதல்" - தேவனோடு புதிய பாதையில் நடத்தல், தான் செல்லும் பாதையை மாற்றுதல், முகத்தைத் திருப்புதல் (சங் 19:7, சங் 51:13; லூக்கா 22:32; அப் 3:19; யாக் 5:19-20))

"பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படும்" - மனந்திரும்பும்போது பாவங்கள் மன்னிக்கப்படும். சீஷர்களுக்கும் இது பொருந்தும். (மாற்கு 4:11) பேதுருவினுடைய மனமாற்றத்தை லூக்கா 22:32-இல் வாசிக்கிறோம். இது மறுபடியும் மனம்மாறுவது ஆகும்.

"இந்த உவமையை நீங்கள் அறியவில்லையா? அறியாவிட்டால் மற்ற உவமைகளையெல்லாம் எப்படி அறிவீர்கள்?" - இந்த உவமையை அறிகிறவர்கள் மற்ற உவமைகளையும் அறிவார்கள். ஏனெனில் எல்லா உவமைகளும் ஒன்றுபோலவே வியாக்கியானம் பண்ணப் படுகிறது.

28. விதைக்கிறவனைப் பற்றிய உவமையின் விளக்கம் - (மத் 13:18; லூக் 8:11)

மாற்கு 4:14 விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்.

மாற்கு 4:15 வசனத்தைக் கேட்டவுடனே சாத்தான் வந்து, அவர்கள் இருதயங்களில் விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துப் போடுகிறான்; இவர்களே வசனம் விதைக்கப்படுகிற வழியருகானவர்கள்.

மாற்கு 4:16 அப்படியே, வசனத்தைக் கேட்டவுடனே அதைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டும்,

மாற்கு 4:17 தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியால், கொஞ்சக் கால மாத்திரம் நிலைத்திருக்கிறார்கள், வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள்; இவர்களே கற்பாறை நிலத்தில் விதைக்கப் பட்டவர்கள்.

மாற்கு 4:18 வசனத்தைக் கேட்டும், உலகக்கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், மற்றவைகளைப்பற்றி உண்டாகிற இச்சைகளும் உட்பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப் போட, அதினால் பலனற்றுப்போகிறார்கள்.

மாற்கு 4:19 இவர்களே முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள்.

மாற்கு 4:20 வசனத்தைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு, ஒன்று முப்பதும் ஒன்று அறுபதும் ஒன்று நூறுமாகப் பலன்கொடுக்கிறார்கள்; இவர்களே நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் என்றார்.

மாற்கு 4:21 பின்னும் அவர் அவர்களை நோக்கி: விளக்கைத் தண்டின்மேல் வைக்கிறதற்கேயன்றி மரக்காலின் கீழாகிலும், கட்டிலின் கீழாகிலும், வைக்கிறதற்குக் கொண்டுவருவார்களா?

"விதைக்கிறவன்" - மனுஷகுமாரனும், (மத் 13:37) அவருடைய ஊழியக்காரர்களும் (மாற்கு 16:15-20; 1கொரி 1:18-21) வசனத்தை விதைக்கிறார்கள்.

"வசனம்" - தேவனுடைய வார்த்தையே விதை. (மத் 13:19; லூக்கா 8:11; ரோமர் 1:16)

"இவர்களே வசனம் விதைக்கப்படுகிற வழியருகானவர்கள்" - தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதற்குக் கீழ்ப்படிய மறுக்கிறவர்கள் அல்லது தேவனுடைய வார்த்தையின் மூலமாக வரும் ஆசீர்வாதங்களை வேண்டாமென்று ஒதுக்கித் தள்ளுகிறவர்கள். (மத் 13:19; லூக்கா 8:12)

4 அதிகாரம்

"வசனத்தைக் கேட்டவுடனே சாத்தான் வந்து, அவர்கள் இருதயங்களில் விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துப்போடுகிறான்" - சாத்தானுடைய முதல் வேலையே தேவனுடைய ஊழியத்திற்குத் தடையாக இருப்பதுதான். தேவனுடைய வசனம் வல்லமையுள்ளது. ஆகையினால் அதை எடுத்துப்போட வேண்டுமென்று சாத்தான் பிரயாசப்படுகிறான். (2கொரி 4:4; மத் 13:19; லூக்கா 8:12).

"அப்படியே, வசனத்தைக் கேட்டவுடனே அதைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டும், தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியால், கொஞ்சக்கால மாத்திரம் நிலைத்திருக்கிறார்கள், வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள்" - ஒருசிலர் வசனத்தைக் கேட்கிறார்கள். சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களுடைய உள்ளத்தில் வசனம் ஆழமாக வேர்க்கொள்ளவில்லை. உபத்திரவங்களும், துன்பங்களும் வந்தவுடன் நிலையில்லாமல் இருக்கிறார்கள். வசனத்தின் நிமித்தம் உபத்திரவமும், துன்பமும் நிச்சயம் வரும். வசனத்தில் வேர்க்கொள்ளாதவர்களால் இவற்றிற்கு எதிர்த்து நிற்கமுடியாது. (மாற்கு 4:16-17; மத் 13:20-21; லூக்கா 8:13)

"வசனத்தைக் கேட்டும், உலகக்கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், மற்றவைகளைப்பற்றி உண்டாகிற இச்சைகளும் உட்பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப்போட, அதினால் பலனற்றுப்போகிறார்கள்" - இவர்களே முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள். இவர்கள் வசனத்தைக் கேட்கிறார்கள். ஆனால் தங்களுடைய ஜீவியத்தில் ஆவிக்குரிய கனி எதையும் தருவதில்லை. சில காரணங்களினால் அவர்களுக்குள் இருக்கும் வசனம் நெருக்கிப் போடப்படுகிறது. அதனால் பலனற்றுப் போகிறார்கள். பொதுவாக மூன்று காரியங்கள் வசனத்தை நெருக்கிப்போடும். அவையாவன:

1. உலகக்கவலைகள் அல்லது மாம்சத்தின் இச்சைகள் (மாற்கு 4:19; மத் 13:22; லூக்கா 8:14; லூக்கா 21:34; கலா 5:19-21; 1யோவான் 2:15-17)

2. ஐசுவரியத்தின் மயக்கம் அல்லது ஜீவனத்தின் பெருமை (மாற்கு 4:19; மத் 13:22; லூக்கா 8:14; 1தீமோ 6:8-10,17; 1யோவான் 2:15-17)

3. மற்றவைகளைப் பற்றி உண்டாகிற இச்சைகள் அல்லது கண்களின் ஆசை. (மாற்கு 4:19; லூக்கா 8:14; லூக்கா 21:34; 1யோவான் 2:15-17)

"நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள்" - இவர்கள் வசனத்தைக் கேட்கிறார்கள். முழு இருதயத்தோடு வசனத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். வசனத்திற்குக் கீழ்ப் படிகிறார்கள். எல்லா காரியங்களிலும் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள். இவர்கள் உலகக் கவலைகளுக்கும், ஐசுவரியத்தின் மயக்கங்களுக்கும் விலகி ஜீவிக்கிறார்கள். தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் கண்ணியமாகவும், உண்மையாகவும், உத்தமமாகவும் நடந்து கொள்கிறார்கள். (மத் 13:23; லூக்கா 8:15; 1யோவான் 1:7)

"வசனத்தைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு, ஒன்று முப்பதும் ஒன்று அறுபதும் ஒன்று நூறுமாகப் பலன்கொடுக்கிறார்கள்" - இந்த வசனத்தில் மூன்று காரியங்கள் வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. அவையாவன:

1. வசனத்தைக் கேட்க வேண்டும்.

2. வசனத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

3. பலன் கொடுக்க வேண்டும்.

பரிசுத்த வேதாகமத்தில் தேவன் தமக்கும், தமது வார்த்தைக்கும் செவி கொடுக்குமாறு 155 தடவைகளுக்கும் மேலாகக் கூறியிருக்கிறார். கர்த்தர் கூறும் வார்த்தைகள் தெளிவானவை, முழுமையானவை. கர்த்தருடைய வார்த்தையைப் புரிந்து கொள்வதற்கு எளிமையாக இருக்கும். அதில் கடினம் எதுவும் இருக்காது. கர்த்தருடைய வார்த்தைக்கு விசேஷித்த வியாக்கியானம் எதுவும் தேவைப்படாது. கர்த்தர் ஒரு காரியத்தைக் கூறும்போது அதை மனுஷர் புரிந்து கொள்ளும் விதத்திலேயே கூறுகிறார். நாம் கர்த்தருடைய வசனத்தைக் கேட்டு, அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

4 அதிகாரம்

கர்த்தருடைய வசனத்தைக் கேட்கும் பலர் அதைத் தங்களுடைய உள்ளத்தில் ஏற்றுக்கொள்வதில்லை. இதற்குச் சில காரணங்கள் உள்ளன. அவையாவன:

1. வசனத்தின் கருத்தைப் புரிந்துகொள்ளும் பொதுவான ஞானம் இல்லை
2. வேதத்தை வாசிக்காமல் சோம்பேறியாக இருக்கிறார்கள்
3. வேதவசனத்தின் சத்தியங்களை ஏற்றுக் கொள்ள முடியாதவாறு அவர்களுக்குள் மாற்று உபதேசங்கள் வேர்க் கொண்டிருக்கும். (மத் 15:7-14; யோவான் 8:43)
4. ஏற்கெனவே துர்உபதேசங்களைக் கேட்டு, அவற்றிற்குக் கீழ்ப்படிந்து விட்டவர்கள்.
5. சாத்தானின் கொள்கைகளை ஏற்கெனவே பின்பற்றி வருபவர்களுக்குத் தேவனுடைய உபதேசம் புரிந்து கொள்வதற்குக் கடினமாக இருக்கும்.
6. உலக ஐசுவரியத்திலும், பாவ ஜீவியத்திலும் மூழ்கியிருக்கிறவர்கள் சத்திய வசனத்தை புரிந்து கொள்ள விரும்பமாட்டார்கள். ஏனெனில் சத்திய வசனம் இவர்களுடைய சுபாவங்களைக் கடிந்து கூறுகிறது.
7. நிலையில்லாத ஆத்துமாக்களை உடையவர்கள். தங்களுக்கு அழிவு வரும் என்று தெரிந்தும், சத்தியத்தோடு போராடுகிறவர்கள். (2பேதுரு 3:16)
8. ஏமாற்றுக்காரர்கள். தங்களுடைய சொந்த லாபத்திற்காக வேதவசனத்தைப் பயன் படுத்துகிறவர்கள். (2கொரி 4:1-4)
9. தங்களுடைய ஆவிக்குரிய கண்களைக் குருடாக்குவதற்குச் சாத்தானை அனுமதித்தவர்கள். சாத்தான் இவர்களிடமிருந்து சத்தியத்தைத் திருடிச்சென்று விடுகிறான். (மத் 13:19-23; 2கொரி 4:1-4)
10. தங்களைத் தாழ்த்தி மனந்திரும்புவதற்கு மன மில்லாதவர்கள். (மத் 18:3; ஏசா 6:9-10)

ஒருவர் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, தங்களுடைய உள்ளத்தில் அதை ஏற்றுக் கொண்டு, அதற்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கும் போது அவர் ஆவிக்குரிய கனியைக் கொடுப்பார். (ஏசா 55:11)

"ஒன்று முப்பதும் ஒன்று அறுபதும் ஒன்று நூறுமாகப் பலன்கொடுக்கிறார்கள்" - இந்த வாக்கியம் விசுவாசிகளுக்குள் வித்தியாசம் உண்டு என்று கூறவில்லை. விசுவாசிகள் கனி தரும் அளவில் வித்தியாசம் உண்டு என்றே கூறுகிறது.

29. விளக்கைப் பற்றிய உவமை - (மத் 5:13; லூக் 8:16; 11:33)

மாற்கு 4:22 வெளியரங்கமாகாத அந்தரங்கமுமில்லை, வெளிக்கு வராத மறைபொருளுமில்லை.

மாற்கு 4:23 கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனாயிருந்தால் கேட்கக்கடவன் என்றார்.

மாற்கு 4:24 பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள். எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்; கேட்கிற உங்களுக்கு அதிகம் கொடுக்கப்படும்.

மாற்கு 4:25 உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவனெவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும் என்றார்.

4 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 3

"வெளியரங்கமாகாத அந்தரங்கமுமில்லை, வெளிக்கு வராத மறைபொருளுமில்லை......." (மாற்கு 4:22-25) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"வெளியரங்கமாகாத அந்தரங்கமுமில்லை, வெளிக்கு வராத மறைபொருளுமில்லை" - இதற்கு முன்பு வெளிப்படுத்தப்படாத சத்தியங்கள் இனிமேல் பூரணமாக வெளிப்படுத்தப்படும் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். பழைய ஏற்பாட்டில் மறைந்திருக்கும் சத்தியங்களைப் புதிய ஏற்பாடு வெளிப்படுத்துகிறது.

"பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள். எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்; கேட்கிற உங்களுக்கு அதிகம் கொடுக்கப்படும்" - இந்த வசனத்தில் நமக்கு ஒரு எச்சரிப்பு கூறப்பட்டிருக்கிறது. நாம் எதைக் கேட்கிறோம் என்பதில் எச்சரிப்புடன் இருக்க வேண்டும். நாம் சரியானதைச் சரியானபடி கேட்டால், நமக்கு அதிக ஆசீர்வாதம் உண்டு. நாம் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் நம்மிடம் உள்ள ஆசீர்வாதங்கள் எடுத்துக்கொள்ளப்படும். (லூக்கா 8:16-18) இதைக்குறித்து இயேசு கிறிஸ்து கூறும்போது "உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவனெவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும்" என்றார்.

30. விதையைப் பற்றிய உவமை - (4:26-29)

மாற்கு 4:26 பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யமானது, ஒரு மனுஷன் நிலத்தில் விதையை விதைத்து;

மாற்கு 4:27 இரவில் தூங்கி, பகலில் விழித்திருக்க, அவனுக்குத் தெரியாத விதமாய், விதை முளைத்துப் பயிராகிறதற்கு ஒப்பாயிருக்கிறது.

மாற்கு 4:28 எப்படியென்றால், நிலமானது முன்பு முளையையும், பின்பு கதிரையும், கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாகத் தானாய்க் கொடுக்கும்.

மாற்கு 4:29 பயிர் விளைந்து அறுப்புக்காலம் வந்தவுடனே, அறுக்கிறதற்கு ஆட்களை அனுப்புகிறான் என்றார்.

உவமை எண் - 5

"பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யமானது, ஒரு மனுஷன் நிலத்தில் விதையை விதைத்து;............" (மாற்கு 4:26-29) தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய வசனம் மனுஷருடைய இருதயங்களில் விதைக்கப்படும்போது, அது இயற்கையாகவே வளரக்கூடிய ஆற்றல் உடையது. (மாற்கு 4:33; ஏசா 55:10-11)

தானாய் (herself) - αὐτόματος - automatos - 844

பெயரடை - தானாய் (automatically) இந்தக் கிரேக்கச்சொல் இந்த வசனத்திலும், அப் 12:10 ஆவது வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"அறுப்புக்காலம் வந்தவுடனே" - மத் 13:36-43, 49-50 ஆகிய வசனங்களில் அறுப்புக்காலம் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

31. கடுகு விதையைப் பற்றிய உவமை - (மத் 13:31; லூக் 13:18)

மாற்கு 4:30 பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யத்தை எதற்கு ஒப்பிடுவோம்? அல்லது எந்த உவமையினாலே அதைத் திருஷ்டாந்தப் படுத்துவோம்?

மாற்கு 4:31 அது ஒரு கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது; அது பூமியில் விதைக்கப்படும்போது பூமியிலுள்ள சகல விதைகளிலும் சிறிதாயிருக்கிறது;

4 அதிகாரம்

மாற்கு 4:32 விதைக்கப்பட்டபின்போ, அது வளர்ந்து, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதினுடைய நிழலின்கீழ் வந்தடையத்தக்க பெரிய கிளைகளை விடும் என்றார்.

மாற்கு 4:33 அவர்கள் கேட்டறியும் திராணிக்குத் தக்கதாக, அவர் இப்படிப்பட்ட அநேக உவமைகளினாலே அவர்களுக்கு வசனத்தைச் சொன்னார்.

மாற்கு 4:34 உவமைகளினாலேயன்றி அவர்களுக்கு ஒன்றும் சொல்லவில்லை; அவர் தம்முடைய சீஷரோடே தனித்திருக்கும் போது, அவர்களுக்கு எல்லாவற்றையும் விவரித்துச் சொன்னார்.

உவமை எண் - 6

"அது ஒரு கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது........" (மாற்கு 4:31-32) மனுஷர் மத்தியிலே தேவனுடைய ராஜ்யம் அதிக வளர்ச்சி பெறும் என்பதை விளக்கும் உவமை. தேவனுடைய ராஜ்யம் எல்லோரையும் ஏற்றுக் கொள்ளும் அடைக்கல ஸ்தலமாக இருக்கும்.

"ஆகாயத்துப் பறவைகள் அதினுடைய நிழலின்கீழ் வந்தடையத்தக்க பெரிய கிளைகளை விடும்" - ஆகாயத்துப் பறவைகள் என்பது மத் 13:19; லூக்கா 8:12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் சாத்தானுடைய வல்லமைகளைக் குறிக்கும். தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும், சாத்தான் வஞ்சிப்பான். தன்னுடைய உபதேசமே உண்மையான உபதேசம் என்று கூறி, துர்உபதேசத்தை ஜனங்கள் மத்தியிலே தூவுவான். (2கொரி 4:4; 2கொரி 11:14-15; 1தீமோ 4:1-8; 2தீமோ 3:5; 2தீமோ 4:1-4; மத் 24:24; வெளி 12:9) சத்தியத்திற்குப் புறம்பாக உபதேசிக்கிறவர்கள்கூட தாங்களே உண்மையான விசுவாசிகள் எனவும், தங்களுடைய சபைகளே உண்மையான சபைகள் எனவும் சாதிக்கிறார்கள். அவர்களுடைய கனியினால் நாம் அவர்களை அறிய வேண்டும். (மத் 7:15)

விவரித்து (expounded) - ἐπιλύω - epilyoo - 1956

வினைச்சொல் - விவரி, தீர்க்கப்படு (to solve further; explain more fully) இந்தக் கிரேக்கச்சொல் இந்த வசனத்திலும், அப் 19:39 ஆவது வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. கர்த்தரைப் பின் பற்றுகிறவர்கள் அவருடைய சித்தத்தையும், வார்த்தையையும் புரிந்து கொள்வதற்காக அவரைப் பின்பற்ற வேண்டும். (1யோவான் 1:7).

32. இயேசு புயல்காற்றை அமைதிப் படுத்துகிறார் - (மத் 8:23; லூக் 8:22)

மாற்கு 4:35 அன்று சாயங்காலத்தில், அவர் அவர்களை நோக்கி: அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார்.

மாற்கு 4:36 அவர்கள் ஜனங்களை அனுப்பிவிட்டு, அவர் படவிலிருந்தபடியே அவரைக் கொண்டுபோனார்கள். வேறே படவுகளும் அவரோடேகூட இருந்தது.

மாற்கு 4:37 அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று.

மாற்கு 4:38 கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி: போதகரே, நாங்கள் மடிந்து போகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள்.

மாற்கு 4:39 அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று.

மாற்கு 4:40 அவர் அவர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற் போயிற்று என்றார்.

மாற்கு – தொகுப்புரை

4 அதிகாரம்

மாற்கு 4:41 அவர்கள் மிகவும் பயந்து: இவர் யாரோ? காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று, ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்.

"அன்று சாயங்காலத்தில்" - இயேசு கிறிஸ்து கடலோரத்தில் உபதேசம் பண்ணிய அந்த நாளின் சாயங்காலத்திலே. (மாற்கு 4:1)

"அவர்கள் ஜனங்களை அனுப்பிவிட்டு, அவர் படவிலிருந்தபடியே அவரைக் கொண்டு போனார்கள்" - இயேசு கிறிஸ்து மாற்கு 4:1 ஆவது வசனத்தில் உபதேசம் பண்ணிய அதே படவில் அக்கரைக்குப் போனார்கள். வேறே படவுகளும் அவரோடேகூட இருந்தது. (மாற்கு 4:36)

"அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று" - மத் 8:24-இல் பூமி அதிர்ச்சியைக் குறித்து வாசிக்கிறோம். பன்னிரெண்டு சீஷர்களைத் தெரிந்தெடுப்பதற்கு முன்பாக இந்தக் காரியம் நடைபெற்றது. (மத் 10:1) இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிற பலத்தசுழல்காற்று என்பது புயல்காற்றைக் குறிக்கும்.

"அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார்" - காற்றை உண்டாக்கியவர் தேவன். ஆகையினால் இயேசு தேவனை அதட்டினார் என்று இந்த வசனத்திற்குப் பொருள்கூறக் கூடாது. இந்தச் சுழல்காற்றை உண்டாக்கியவன் சாத்தான். தேவனுடைய அனுமதியின்பேரில் சாத்தானுக்குப் புயல்காற்றின்மீது அதிகாரம் கிடைத்திருக்கிறது. ஜனங்களை அழிப்பதற்காக சாத்தான் இந்த சுழல்காற்றைப் பயன் படுத்துகிறான். ஆகையினால் இயேசு கிறிஸ்து சாத்தானை அதட்டும் வண்ணமாக காற்றை அதட்டுகிறார். (யோபு 1:12-19, எபே 2:1-3)

"அவர் அவர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று" - நம்மிடத்தில் பயம் இருக்கிறது என்றால் நம்மிடத்தில் விசுவாசம் இல்லை என்றுதான் பொருள். இயேசு கிறிஸ்து தமது சீஷர்களைப் பார்த்து, "ஏன் இப்படி பயப்பட்டீர்கள்" என்பதற்கு "ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று" என்பதே பொருள். ஆகையினால் நாம் எல்லா சூழ்நிலையிலும் தேவனையே விசுவாசத்தோடு சார்ந்து ஜீவிக்க பழகிக்கொள்ளவேண்டும். அவருடைய பராமரிப்பை நம்பி வாழவேண்டும். (மத் 6:25-34; மத் 8:26)

"அவர்கள் மிகவும் பயந்தார்கள்" - சீஷர்கள் சுழல்காற்றிற்குப் பயப்பட்டதைவிட காற்றை அதட்டிய இயேசு கிறிஸ்துவிற்கு மிகவும் பயந்தார்கள்.

"இவர் யாரோ?" - இயேசு கிறிஸ்து தேவகுமாரன். மனுஷகுமாரனாக உலகத்திற்கு வந்தார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பரிபூரணமாக பெற்றவர். (யோவான் 3:34) ஆவியானவரின் வரங்களைப் பெற்றிருக்கிறவர். தேவனைப் பரிபூரணமாக விசுவாசிக்கிறவர். (1கொரி 12:4-11) (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24).

இயற்கையான சக்திகள்மீது அதிகாரம் செலுத்தியதற்கு எடுத்துக்காட்டுக்கள்

1. மோசே (யாத் 7:14-25; யாத் 9:13-35; யாத் 10:21-27; யாத் 14:16)
2. யோசுவா (யோசு 10:12)
3. சாமுவேல் (1சாமு 7:9-12)
4. எலியா (1இராஜா 18:42-46; 2இராஜா 1:10-15; 2இராஜா 2:8; யாக் 5:17)
5. எலிசா (2இராஜா 2:14; 2இராஜா 3:16-20; 2இராஜா 4:1-7,42-44; 2இராஜா 6:1-7; 2இராஜா 8:1-2)
6. வருங்கால உபத்திரவத்தின் இரண்டு சாட்சிகள் (வெளி 11:3-11)
7. வருங்கால அந்திக்கிறிஸ்து (வெளி 13:2,13; 2தெச 2:8-12)

மாற்கு – தொகுப்புரை

5 அதிகாரம்

33. கதரேனருடைய நாட்டில் இருந்த அசுத்த ஆவியுள்ள மனுஷன் -
(மத் 8:28; லூக் 8:26)

மாற்கு 5:1 பின்பு அவர்கள் கடலுக்கு அக்கரையிலுள்ள கதரேனருடைய நாட்டில் வந்தார்கள்.

மாற்கு 5:2 அவர் படவிலிருந்து இறங்கினவுடனே, அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் பிரேதக்கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான்.

மாற்கு 5:3 அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது; அவனைச் சங்கிலிகளினாலும் கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது.

மாற்கு 5:4 அவன் அநேகந்தரம் விலங்குகளினாலும் சங்கிலிகளினாலும் கட்டப்பட்டிருந்தும், சங்கிலிகளை முறித்து, விலங்குகளைத் தகர்த்துப்போடுவான்; அவனையடக்க ஒருவனாலும் கூடாதிருந்தது.

மாற்கு 5:5 அவன் எப்பொழுதும் இரவும் பகலும், மலைகளிலும் கல்லறைகளிலும் இருந்து, கூக்குரலிட்டு, கல்லுகளினாலே தன்னைக் காயப்படுத்திக் கொண்டிருந்தான்.

மாற்கு 5:6 அவன் இயேசுவைத் தூரத்திலே கண்டபோது, ஓடிவந்து, அவரைப் பணிந்துகொண்டு:

மாற்கு 5:7 இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு தேவன்பேரில் உமக்கு ஆணையென்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்.

மாற்கு 5:8 ஏனெனில் அவர் அவனை நோக்கி: அசுத்த ஆவியே, இந்த மனுஷனை விட்டுப் புறப்பட்டுப்போ என்று சொல்லியிருந்தார்.

மாற்கு 5:9 அப்பொழுது அவர் அவனை நோக்கி: உன் பேர் என்னவென்று கேட்டார். அதற்கு அவன்: நாங்கள் அநேகராயிருக்கிறபடியால் என் பேர் லேகியோன் என்று சொல்லி,

மாற்கு 5:10 தங்களை அந்தத் திசையிலிருந்து துரத்திவிடாதபடிக்கு அவரை மிகவும் வேண்டிக்கொண்டான்.

மாற்கு 5:11 அப்பொழுது, அவ்விடத்தில் மலையருகே அநேகம் பன்றிகள் கூட்டமாக மேய்ந்துகொண்டிருந்தது.

மாற்கு 5:12 அந்தப் பிசாசுகளெல்லாம் அவரை நோக்கி: பன்றிகளுக்குள்ளே போகும்படி, அவைகளுக்குள்ளே எங்களை அனுப்பும் என்று அவரை வேண்டிக் கொண்டன.

மாற்கு 5:13 இயேசு அவைகளுக்கு உத்தரவு கொடுத்தவுடனே, அசுத்த ஆவிகள் புறப்பட்டுப் பன்றிகளுக்குள் போயின; உடனே ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகளுள்ள அந்தக் கூட்டம் உயர்ந்த மேட்டிலிருந்து ஓடி, கடலிலே பாய்ந்து, கடலில் அமிழ்ந்து மாண்டது.

மாற்கு 5:14 பன்றிகளை மேய்த்தவர்கள் ஓடி, இதைப் பட்டணத்திலும் சுற்றுப்புறங்களிலும் அறிவித்தார்கள். அப்பொழுது சம்பவித்ததைப் பார்க்கும்படி ஜனங்கள் புறப்பட்டு;

மாற்கு 5:15 இயேசுவினிடத்தில் வந்து, லேகியோனாகிய பிசாசுகள் பிடித்திருந்தவன் வஸ்திரந்தரித்து, உட்கார்ந்து, புத்தி தெளிந்திருக்கிறதைக் கண்டு, பயந்தார்கள்.

மாற்கு 5:16 பிசாசுகள் பிடித்திருந்தவனுக்கும் பன்றிகளுக்கும் சம்பவித்ததைக் கண்டவர்களும் அவர்களுக்கு விவரமாய்ச் சொன்னார்கள்.

மாற்கு 5:17 அப்பொழுது தங்கள் எல்லைகளை விட்டுப்போகும்படி அவரை வேண்டிக்கொள்ளத் தொடங்கினார்கள்.

மாற்கு – தொகுப்புரை

5 அதிகாரம்

மாற்கு 5:18 அப்படியே அவர் படவில் ஏறுகிற பொழுது, பிசாசு பிடித்திருந்தவன், அவரோடேகூட இருக்கும்படி தனக்கு உத்தவுகொடுக்க அவரை வேண்டிக் கொண்டான்.

மாற்கு 5:19 இயேசு அவனுக்கு உத்தரவு கொடாமல்: நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப்போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளை யெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார்.

மாற்கு 5:20 அந்தப்படி அவன் போய், இயேசு தனக்குச் செய்தவைகளை யெல்லாம் தெக்கப்போலி என்னும் நாட்டில் பிரசித்தம் பண்ணத்தொடங்கினான்; எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்.

"கதரேனர்" - கலிலேயாக் கடலுக்கு தெற்கிலும், யோர்தான் நதிக்குக் கிழக்கிலும் அமைந்துள்ள பட்டணம். கலிலேயாவிற்கும், சமரியாவிற்கும், கிழக்குப் பிரதேசமான தெக்கபோலியில் அமைந்திருக்கிறது. கதரேனருடைய நாடு என்பது பட்டணத்திலிருந்து கடற்கரை வரையிலுமுள்ள பகுதியைக் குறிப்பிடும்.

"அவனைச் சங்கிலிகளினாலும் கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது" - அந்த மனுஷனுக்கு அதிக வல்லமையிருந்தது. அது பிசாசினால் உண்டான வல்லமை. சிம்சோனுக்கும், சங்கிலியினால் கட்ட முடியாதபடிக்கு அதிக வலிமையிருந்தது. ஆனால் அந்த வல்லமையோ தேவனால் உண்டாயிற்று. (நியா 13-16)

"கல்லறைகள்" - கதரேனருடைய நாட்டைச் சுற்றிலும் ஏராளமான பாறைகளும், பாறை வெடிப்புகளும் இருந்தன. அவற்றில் ஏராளமான கல்லறைகளை அமைத்திருந்தார்கள். சில கல்லறைகள் 20 சதுர அடி பரப்புள்ளவை. இந்த இடங்களில் குற்றவாளிகளும், ஒழிந்து கொள்வார்கள். பைத்தியக்காரர்களும், பரமஏழைகளும் இப்படிப்பட்ட இடங்களில் வசிப்பது வழக்கம். (ஏசா 65:4)

"இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன?" - பிசாசுகளுக்கு இயேசுவை நன்றாகத் தெரியும். அவர் தேவனுடைய குமாரன் என்று நன்றாக அறிந்து வைத்திருக்கும். ஒருவேளை இந்தச் சத்தியம் மனுஷருக்கு தெரியாமற் போகலாம். தங்களுடைய முடிவும் எப்படியிருக்கும் என்பது பிசாசுகளுக்கு நன்றாகவே தெரியும்.

"அப்பொழுது அவர் அவனை நோக்கி: உன் பேர் என்னவென்று கேட்டார்" - பிசாசுகளுக்கும் பெயர்கள் உண்டு. ஒரு மனுஷனுக்குள் 6,000 பிசாசுகள் புகுந்திருக்கும்போது அவை ஒவ்வொன்றின் பெயரையும் எழுதினால், எழுத இடம் போதாது. இந்த பிசாசுகளுக்குத் தலைவன் ஒருவன் இருப்பான். அவனுக்குக் கீழ் ஏராளமான குட்டிப்பிசாசுகள் இருக்கும். மத் 12:43-45 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கும் பிசாசோடுகூட ஏழு பிசாசுகள் இருந்தன.

"தங்களை அந்தத் திசையிலிருந்து துரத்திவிடாதபடிக்கு அவரை மிகவும் வேண்டிக்கொண்டான்" - பிசாசு இயேசுவிடம் ஜெபம் பண்ணிற்று. இந்த இடத்தில் நாம் நான்கு பேரின் ஜெபங்களை வாசிக்கிறோம். அவையாவன:

1. தலைமைப் பிசாசு (மாற்கு 5:7,10)
2. எல்லா பிசாசுகளும் (மாற்கு 5:12)
3. கதரேனர் (மாற்கு 5:17)
4. சொஸ்தமானமனுஷன் (மாற்கு 5:18-19)

"அந்தத் திசை" - அந்தத் தேசத்தை விட்டு வெளியே என்று பொருள்படும். பிசாசுகளுக்கு இந்த இடத்தை விட்டு வெளியேற மனதில்லை. அவற்றிற்குக் கூட மற்ற இடங்களை விட ஒரு சில இடங்களை வெகுவாக பிடித்து விடும். (மத் 12:43-45) பிசாசுகளுக்கும், ஆசைகள் உண்டு.

"பிசாசுகள் பிடித்திருந்தவன் வஸ்திரந்தரித்து, உட்கார்ந்து, புத்தி தெளிந்திருக்கிறான்" - இயேசு கிறிஸ்து இப்பேர்ப்பட்ட ஊழியத்தைச் செய்வதற்காகவே இந்த உலகத்திற்கு வந்தார். (யோவான் 10:10) சாத்தானுடைய அந்தகார சக்திகளை அழிப்பதற்காகவும், மனுஷரைச் சாத்தானுடைய கட்டுக்களிலிருந்து விடுவிப்பதற்காகவும் இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். (மாற்கு 16:17-18; யோவான் 14:12; லூக்கா 24:49; அப் 1:8)

5 அதிகாரம்

“இயேசு அவனுக்கு உத்தரவுகொடாமல்: நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப்போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார்” - இந்த ஊர் ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவில்லை. தங்களுடைய எல்லைகளை விட்டுப் போகும்படி இயேசுவை வேண்டிக் கொண்டார்கள். இந்த ஊரில் தமது ஊழியத்தைச் செய்ய இயேசு கிறிஸ்துவிற்கு ஒரு நபர் தேவைப்பட்டான். ஆகையினால் ஆண்டவர் அந்த மனுஷனை தமக்குச் சாட்சியாகவும், தேவனுடைய நாம மகிமைக்காகவும் அவனுடைய இனத்தாரோடே இருக்குமாறு கூறுகிறார். (மாற்கு 5:19-20)

“கர்த்தர் உனக்கு இரங்கினார்” - (மத் 9:36)

“தெக்கப்போலி” - பத்து பட்டணங்கள் அடங்கிய ஒரு மாகாணம். யோர்தானுக்கு கிழக்கிலும், கலிலேயா கடலுக்கு தெற்கிலும் அமைந்துள்ள பட்டணங்கள். (மத் 4:25; மாற்கு 5:20; மாற்கு 7:31)

34. பன்னிரெண்டு வருஷமாக பெரும்பாடுள்ள ஸ்திரீ குணமடைகிறாள் - யவீருவின் மகளை இயேசு உயிருடன் எழுப்புகிறார் - (மத் 9:18; லூக் 8:40)

மாற்கு 5:21 இயேசு படவில் ஏறி மறுபடியும் இக்கரைக்கு வந்து, கடலோரத்திலிருந்த போது, திரளான ஜனங்கள் அவரிடத்தில் கூடிவந்தார்கள்.

மாற்கு 5:22 அப்பொழுது, ஜெப ஆலயத்தலைவரில் ஒருவனாகிய யவீரு என்பவன் வந்து, அவரைக் கண்டவுடனே, அவர் பாதத்திலே விழுந்து:

மாற்கு 5:23 என் குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள், அவள் ஆரோக்கியம் அடையும்படிக்கு நீர் வந்து, அவள்மேல் உமது கைகளை வையும், அப்பொழுது பிழைப்பாள் என்று அவரை மிகவும் வேண்டிக்கொண்டாள்.

மாற்கு 5:24 அவர் அவனோடேகூடப் போனார். திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்று, அவரை நெருக்கினார்கள்.

மாற்கு 5:25 அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ,

மாற்கு 5:26 அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவைகளையெல்லாம் செலவழித்தும், சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்படுகிற பொழுது,

மாற்கு 5:27 இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டு: நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று சொல்லி;

மாற்கு 5:28 ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள்.

மாற்கு 5:29 உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று; அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள்.

மாற்கு 5:30 உடனே இயேசு தம்மிலிருந்து வல்லமை புறப்பட்டதைத் தமக்குள் அறிந்து, ஜனக்கூட்டத்துக்குள்ளே திரும்பி: என் வஸ்திரங்களைத் தொட்டது யார் என்று கேட்டார்.

மாற்கு 5:31 அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: திரளான ஜனங்கள் உம்மை நெருக்கிக்கொண்டிருக்கிறதை நீர் கண்டும், என்னைத் தொட்டது யார் என்று கேட்கிறீரே என்றார்கள்.

5 அதிகாரம்

மாற்கு 5:32 இதைச் செய்தவளைக் காணும்படிக்கு அவர் சுற்றிலும் பார்த்தார்.

மாற்கு 5:33 தன்னிடத்திலே சம்பவித்ததை அறிந்த அந்த ஸ்திரீயானவள் பயந்து, நடுங்கி, அவர் முன்பாக வந்து விழுந்து, உண்மையையெல்லாம் அவருக்குச் சொன்னாள்.

மாற்கு 5:34 அவர் அவளைப் பார்த்து: மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடே போய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார்.

மாற்கு 5:35 அவர் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில், ஜெபஆலயத் தலைவனுடைய வீட்டிலிருந்து சிலர் வந்து: உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள், இனி ஏன் போதகரை வருத்தப்படுத்துகிறீர் என்றார்கள்.

மாற்கு 5:36 அவர்கள் சொன்ன வார்த்தையை இயேசு கேட்டவுடனே, ஜெபஆலயத்தலைவனை நோக்கி: பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு என்று சொல்லி;

மாற்கு 5:37 பேதுருவையும், யாக்கோபையும், யாக்கோபின் சகோதரன் யோவானையும் தவிர, வேறொருவரும் தம்மோடே வருகிறதற்கு இடங் கொடாமல்;

மாற்கு 5:38 ஜெபஆலயத் தலைவனுடைய வீட்டிலே வந்து, சந்தடியையும் மிகவும் அழுது புலம்புகிறவர்களையும் கண்டு,

மாற்கு 5:39 உள்ளே பிரவேசித்து: நீங்கள் சந்தடிபண்ணி அழுகிறதென்ன? பிள்ளை மரிக்கவில்லை, நித்திரையா யிருக்கிறாள் என்றார்.

மாற்கு 5:40 அதற்காக அவரைப் பார்த்து நகைத்தார்கள். எல்லாரையும் அவர் வெளியேபோகப்பண்ணி, பிள்ளையின் தகப்பனையும் தாயையும் தம்மோடே வந்தவர்களையும் அழைத்துக்கொண்டு, பிள்ளையிருந்த இடத்தில் பிரவேசித்து,

மாற்கு 5:41 பிள்ளையின் கையைப் பிடித்து: தலீத் தாகூமி என்றார்; அதற்கு, சிறுபெண்ணே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்று அர்த்தமாம்.

மாற்கு 5:42 உடனே சிறுபெண் எழுந்து நடந்தாள்; அவள் பன்னிரண்டு வயதுள்ளவளாயிருந்தாள். அவர்கள் மிகுந்த ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள்.

மாற்கு 5:43 அதை ஒருவருக்கும் அறிவியாதபடி அவர்களுக்கு உறுதியாகக் கட்டளையிட்டு, அவளுக்கு ஆகாரம் கொடுக்கும்படி சொன்னார்.

"இக்கரை" - கலிலேயா கடலின் மேற்கு பகுதியிலுள்ள கப்பர்நகூம் பட்டணம்.

"என் குமாரத்தி மரண அவஸ்தைப் படுகிறாள், அவள் ஆரோக்கியம் அடையும்படிக்கு நீர் வந்து, அவள்மேல் உமது கைகளை வையும், அப்பொழுது பிழைப்பாள் என்று அவரை மிகவும் வேண்டிக்கொண்டான்" - தம்மிடத்தில் ஜெபம் பண்ண வருகிறவர்கள்மீது இயேசு கிறிஸ்து தமது கைகளை வைத்து, ஜெபிக்க வேண்டும் என்ற வழக்கம் அக்காலத்தில் இருந்தது. (மத் 8:3; மாற்கு 6:5; மாற்கு 7:32; மாற்கு 8:23-26; மாற்கு 16:18; அப் 9:17; அப் 28:8; எபி 6:2)

"பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ" - இவளுக்கு பன்னிரெண்டு வருஷ காலமாக உதிரப்போக்கு தொடர்ச்சியாக இருந்தது. (லேவி 15:25-30)

5 அதிகாரம்

"அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டாள்" - குணப்படுத்த முடியாத வைத்தியர்கள் கையில் நோயாளிகள் சிக்கினால், அவர்கள் பாடு மிகவும் திண்டாட்டமாக இருக்கும். நோயாளிகளைப் படாதபாடு படுத்திவிடுவார்கள். மனுஷனால் நோயைக் குணப்படுத்த முடியாது. யூதருடைய வைத்தியர்கள் இந்த ஸ்திரீக்கு பலவிதமான வைத்தியங்களைச் செய்து பார்த்தார்கள். ஆனால் எந்த வைத்தியமும் இவளுடைய உதிரப்போக்கை நிறுத்தவில்லை. கசாயம் கொடுத்தார்கள். உணவில் பத்தியம் இருக்கச் சொன்னார்கள். வைத்தியர்கள் சொன்னபடியெல்லாம் இவள் கேட்டாள். ஆனால் இவளுடைய உதிரப்போக்கு நின்றபாடில்லை.

"நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று சொல்லி; ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள்" - (மத் 8:3) இது அவளுடைய உண்மையான விசுவாசத்தையும், எப்படியாயினும் குணமாகிவிட வேண்டுமென்னும் தீர்மானத்தையும் காண்பிக்கிறது.

அவளுடைய வியாதி குணமானதற்குச் சான்றுகள்

1. உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று.
2. அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள்.

"உடனே இயேசு தம்மிலிருந்து வல்லமை புறப்பட்டதைத் தமக்குள் அறிந்தார்" - தம்மிடமிருந்து குணமாக்கும் வல்லமை புறப்பட்டுச் சென்றதை அவர் அறிந்தார். தம்மை ஒருவர் விசுவாசத்தோடு தொட்டதை உணர்ந்தார்.

"தன்னிடத்திலே சம்பவித்ததை அறிந்த அந்த ஸ்திரீயானவள் பயந்து, நடுங்கி, அவர் முன்பாக வந்து விழுந்து, உண்மையையெல்லாம் அவருக்குச் சொன்னாள்" - பன்னிரெண்டு வருஷமாகப் பெரும்பாடுள்ள ஸ்திரீ சொஸ்தமானதில் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் காரியங்களை நாம் வரிசையாகக் காணலாம்.

1. அவளுடைய பரிதாபமான சூழ்நிலை (மாற்கு 5:25)
2. எல்லா மருத்துவ சிகிச்சைகளையும் மேற்கொண்டாள் (மாற்கு 5:26)
3. தனக்கு உண்டானவைகளை எல்லாம் செலவழித்தாள் (மாற்கு 5:26)
4. இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டாள் (மாற்கு 5:27)
5. இயேசுவின் வஸ்திரங்களைத் தொட வேண்டுமென்று தீர்மானம் பண்ணினாள். (மாற்கு 5:27)
6. தனது தீர்மானத்தின் பிரகாரமாக இயேசுவின் பின்னாக வந்தாள். (மாற்கு 5:27-28)
7. விசுவாசத்தோடு இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டாள். (மாற்கு 5:28,34)
8. உடனே அவள் ஆரோக்கியமானாள். (மாற்கு 5:29)
9. அவள் ஆரோக்கியமடைந்ததைத் தன் சரீரத்தில் உணர்ந்தாள். (மாற்கு 5:33)

"மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடே போய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு" - இயேசு கிறிஸ்துவிடம் விசுவாசத்தோடு வரும்போது, அவர் தமது பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார். இது இயேசுவின் சுபாவம். அவருடைய பிரமாணம். (மத் 8:10; மத் 9:29; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24)

5 அதிகாரம்

"அவர்கள் சொன்ன வார்த்தையை இயேசு கேட்டவுடனே, ஜெபஆலயத்தலைவனை நோக்கி: பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு என்று சொன்னார்" - ஜெபாலயத்தலைவன் இயேசு கிறிஸ்துவிடம் வந்து தன்னுடைய குமாரத்தியைச் சொஸ்தமாக்க வேண்டுமென்று கேட்டான். அப்பொழுது ஜெபஆலயத்தலைவனுடைய வீட்டிலிருந்து சிலர் வந்து: உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள், இனி ஏன் போதகரை வருத்தப்படுத்துகிறீர் என்றார்கள். அவர்கள் இவ்வாறு கூறிய இந்த வார்த்தையைக் கேட்டவுடனே இயேசுகிறிஸ்து ஜெபாலயத் தலைவனிடம் இவ்வாறு கூறுகிறார். விசுவாசமுள்ளவனாயிரு என்று கூறுகிறார். நாம் இயேசு கிறிஸ்துவிடம் விசுவாசத்தோடு வரவேண்டும். தொடர்ந்து விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும். நமது அவிசுவாசத்தின் நிமித்தமாக ஜெபத்தில் நாம் கேட்கும் பல காரியங்களுக்கு நமக்கு பதில் கிடைப்பதில்லை.

"பேதுருவையும், யாக்கோபையும், யாக்கோபின் சகோதரன் யோவானையும் தவிர, வேறொருவரும் தம்மோடே வருகிறதற்கு இடங்கொடாமல்" - இந்த மூவரும் இயேசு கிறிஸ்துவைப் பல சமயங்களில் பின்பற்றிச் சென்றவர்கள். (மத் 17:1-8; மத் 26:37)

"இயேசு ஜெபஆலையத்தலைவனுடைய வீட்டிலே வந்தார்" - மத் 8:13; மத் 15:28; யோவான் 4:50-54 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கிற பிரகாரமாக இயேசு கிறிஸ்து தூரத்தில் இருந்தபடியே இந்த ஸ்திரீயைக் குணப்படுத்தியிருக்க முடியும். ஆயினும் இந்த வீட்டிற்கு வந்து, அந்த ஸ்திரீயைச் சொஸ்தமாக்க வேண்டுமென்று சித்தம் கொண்டார். (மத் 9:19)

"சந்தடி" - மிகுந்த சத்தம் (மத் 9:23)

"நீங்கள் சந்தடிபண்ணி அழுகிறதென்ன?" - கிழக்குதேசங்களில் ஒருவர் மரித்துப்போகும் போது அவருடைய உற்றார் உறவினர்கள் எல்லாம் துக்கம் விசாரிக்க வந்துவிடுவார்கள். ஒப்பாரிப்பாடல்களைப் பாடுவார்கள். கூலிக்கு அமர்த்தப்பட்ட ஒப்பாரி பாடகர்களும் இருப்பார்கள். (எரே 9:17-21; எரே 48:36; ஆமோ 5:16). இயேசு கிறிஸ்து இவர்களைப் பார்த்துத்தான், "நீங்கள் சந்தடிபண்ணி அழுகிறதென்ன?" என்று கேட்கிறார்.

"பிள்ளை மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள்" - அவள் நிரந்தரமாக மரித்துப்போகவில்லை. இயேசு கிறிஸ்து அவளை உயிர்த்தெழ வைக்கப்போகிறார்.

"அதற்காக அவரைப் பார்த்து நகைத்தார்கள்" - ஒப்பாரி பாடுகிறவர்கள் துக்கத்தினால் பாடவில்லை. அது அவர்களுடைய வழக்கம். ஆகையினால் ஒப்பாரி பாடுகிறவர்கள் திடீரென்று நகைக்கிறார்கள். இந்தப் பிள்ளை மரித்து விட்டாள் என்பது அவர்களுக்கு தெரியும். அவர்களுடைய நகைப்பு தங்களுடைய அவிசுவாசத்தையே காண்பிக்கிறது.

"எல்லாரையும் அவர் வெளியேபோகப் பண்ணினார்" - நகைத்தவர்களையும், சந்தடிபண்ணியவர்களையும் இயேசு வெளியே அனுப்பிவிட்டார். அவர்கள் இருந்தால் இயேசு கிறிஸ்துவால் அற்புதம் செய்ய முடியாது என்பது இதன் பொருளல்ல. தேவனுடைய கிரியை நடைபெறும் இடத்தில் அமைதியும், பயபக்தியும் காணப்படவேண்டும். இதை வலியுறுத்துவதற்காகவே இயேசு கிறிஸ்து அவர்களை வெளியே போகப்பண்ணினார்.

"பிள்ளையின் தகப்பனையும் தாயையும் தம்மோடே வந்தவர்களையும் அழைத்துக் கொண்டு, பிள்ளையிருந்த இடத்தில் பிரவேசித்தார்" - மொத்தம் ஆறுபேர் அந்த பிள்ளையின் உயிர்த்தெழுதலைத் தங்கள் கண்களால் கண்டார்கள். இயேசு, பிள்ளையின் தாயும், தகப்பனும், மூன்று சீஷர்கள். (மாற்கு 5:37,40)

"பிள்ளையின் கையைப் பிடித்து: தலீத்தாகூமி என்றார்" - தலீத் தாகூமி என்பது அராமியிக் பாஷையின் வார்த்தை. இதற்கு சிறுபெண்ணே எழுந்திரு என்று பொருள்.

5 அதிகாரம்

சிறுபெண் (Damsel) - **κοράσιον** - **korasion** - 2877

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - சிறுபெண் **(little girl)** (மாற்கு 5:42; மாற்கு 6:22,28; மத் 9:24-25; மத் 14:11) இந்த வார்த்தையும் மாற்கு 5:39-41 ஆகிய வசனங்களில் காணப்படும் வார்த்தையும் வெவ்வேறானவை. இந்த வசனங்களில் "பைதியோன்" என்னும் கிரேக்கச்சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

பிள்ளை (child) - **παιδίον** - **paidion** - 3813

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பிள்ளை, பாலகன், சிறுபிள்ளை, குழந்தை

"உடனே சிறுபெண் எழுந்து நடந்தாள்" - வீட்டிற்கு வெளியே சந்தடி பண்ணுகிறவர்களும், ஒப்பாரி பாடுகிறவர்களும், நகைத்துப் பரியாசம் பண்ணுகிறவர்களும் கூடியிருக்கிறார்கள். அவர்கள் நடுவிலே மரித்துப்போன இந்தச் சிறுபெண் இப்போது மறுபடியும் உயிர்ப்பெற்று நடந்து செல்லுகிறாள். அதைக் கண்ட அனைவருக்கும் பிரமிப்பு உண்டாயிற்று.

ஆச்சரியப்படுதல், பிரமிப்பு அடைதல் **(astonishment)** - **ἔκστασις** - **ekstasis** - 1611

பெண்பால் பெயர்ச்சொல் - ஆச்சரியப்படுதல், பிரமிப்பு அடைதல் ஞானதிருஷ்டி, திகில் **(entrancement, bewilderment, trance)** (அப் 10:10; அப் 11:5; அப் 22:17; மாற்கு 16:8; லூக்கா 5:26; அப் 3:10)

"அதை ஒருவருக்கும் அறிவியாதபடி அவர்களுக்கு உறுதியாகக் கட்டளையிட்டார்" - மாற்கு 1:45; மாற்கு 3:12; மாற்கு 5:10,23,43; 1கொரி 16:12) தாம் செய்த அற்புதங்களை ஜனங்கள் பிறருக்கு அறிவிக்கக் கூடாது என்று இயேசு கிறிஸ்து கண்டிப்புடன் உத்தரவிடுகிறார். காலம் வரும்வரையிலும் இயேசு தாம் செய்த அற்புதங்களையும், அடையாளங்களையும் விளம்பரப்படுத்த வேண்டியதில்லை என்று சித்தம் கொண்டிருந்தார். திரளான ஜனங்கள் இயேசுவோடுகூட இருக்கிறார்கள். அவர்கள் மத்தியில் பிதாவின் சித்தத்தைச் செய்வது இயேசு கிறிஸ்துவின் பிரதான நோக்கம்.

"அவளுக்கு ஆகாரம் கொடுக்கும்படி சொன்னார்" - வியாதியில்இருப்பவர்களால் சரியாகச் சாப்பிடமுடியாது. இந்த சிறுமி மரித்துப்போனவள். இப்போது இயேசு கிறிஸ்து இவளுக்கு ஆகாரம் கொடுக்குமாறு கூறுகிறார். சரீரப்பிரகாரமாக அவள் ஆகாரத்தைப் புசித்து, பெலன்கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்து ஆவிக்குரிய அற்புதத்தைச் செய்யும் அதேவேளையில் இயற்கையின் பிரமாணத்திற்கும் முக்கியத்துவம் தருகிறார்.

6 அதிகாரம்

35. நாசரேத்தில் இயேசு - ஜனங்கள் இயேசுவை மறுபடியும் ஏற்றுக் கொள்ளவில்லை - (மத் 13:53; லூக் 4:16)

மாற்கு 6:1 அவர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, தாம் வளர்ந்த ஊருக்கு வந்தார்; அவருடைய சீஷரும் அவரோடே கூட வந்தார்கள்.

மாற்கு 6:2 ஓய்வுநாளானபோது, ஜெபஆலயத்தில் உபதேசம் பண்ணத் தொடங்கினார்.அநேகர் கேட்டு, ஆச்சரியப்பட்டு, இவைகள் இவனுக்கு எங்கேயிருந்து வந்தது? இவன் கைகளினால் இப்படிப்பட்ட பலத்த செய்கைகள் நடக்கும்படி இவனுக்குக் கொடுக்கப்பட்ட ஞானம் எப்படிப்பட்டது?

மாற்கு 6:3 இவன் தச்சன் அல்லவா? மரியாளுடைய குமாரன் அல்லவா? யாக்கோபு யோசே யூதா சீமோன் என்பவர்களுக்குச் சகோதரன் அல்லவா? இவன் சகோதரிகளும் இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? என்று சொல்லி, அவரைக் குறித்து இடறலடைந்தார்கள்.

மாற்கு 6:4 இயேசு அவர்களை நோக்கி: தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் இனத்திலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான் என்றார்.

மாற்கு 6:5 அங்கே அவர் சில நோயாளிகள்மேல் கைகளை வைத்து, அவர்களைக் குணமாக்கினதேயன்றி, வேறொரு அற்புதமும் செய்யக் கூடாமல்,

"அவர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, தாம் வளர்ந்த ஊருக்கு வந்தார்" - இயேசுவின் வளர்ந்த ஊர் நாசரேத். அவர் யவீருவின் வீட்டை விட்டு, நாசரேத்திற்கு வருகிறார். இரண்டாம் முறையாக இந்த ஊருக்கு அவர் வருகிறார். இந்த ஊரிலுள்ள ஜெபாலயத்தில் இரண்டாம் முறையாக ஊழியம் செய்ய வருகிறார். (லூக்கா 4:16 - மத் 13:54-58; மாற்கு 6:1-6)

"தச்சன்" - இயேசு கிறிஸ்துவிற்குத் தச்சுத்தொழில் நன்றாக தெரியும். தமது முப்பதாவது வயதில் ஊழியத்தை ஆரம்பிக்கும் வரையிலும் இயேசு கிறிஸ்து தமது உலகத் தந்தையான யோசேப்போடு சேர்ந்து, தச்சுத்தொழில் செய்து வந்தார். யூதருடைய மார்க்க வழக்கத்தின் பிரகாரம் ஒவ்வொரு தந்தையும் தன்னுடைய முதல் ஆண் மகனுக்கு நான்கு காரியங்களைச் செய்ய வேண்டும். அவையாவன:

1. அவனுக்கு விருத்தசேதனம் செய்ய வேண்டும். (ஆதி 17:10-14)
2. அவனை மீட்க வேண்டும் (யாத் 13:2,12; எண் 3:42-51)
3. நியாயப்பிரமாணத்தை அவனுக்குப் போதிக்க வேண்டும். (உபா 6:6-9; உபா 11:19-20)
4. ஒரு தொழிலைக் கற்றுத் தரவேண்டும்.

யூதர் மத்தியில் ஒரு பொதுவான பழமொழி உண்டு. "தன் மகனுக்கு எந்தத் தொழிலையும் கற்றுத்தராதவன் அவனுக்கு திருடக் கற்றுக்கொடுக்கிறான்" என்பது எபிரெயரின் பழமொழி. ஆகையினால் யூதமார்க்கத்துப் பெற்றோர் அனைவரும் தங்கள் ஆண் பிள்ளைகளுக்கு எதாவது ஒரு தொழிலைக் கற்றுத்தருவார்கள். யோசேப்பு இயேசு கிறிஸ்துவிற்கு தச்சுத்தொழிலைக் கற்றுக் கொடுத்தார்.

"மரியாளுடைய குமாரன்" - வேதவாக்கியத்தின் பிரகாரம் இயேசு கிறிஸ்து மரியாளின் குமாரன். அதேசமயத்தில் அவர் யோசேப்பின் குமாரன் அல்ல. (மத் 1:18-25; லூக்கா 1:30-35; யோவான் 1:14,18; யோவான் 3:14-20; எபி 1:1-2)

"சகோதரர்" - வேதாகமத்தில் சகோதரர் என்னும் வார்த்தைக்கு நான்கு விதமான பொருள் உண்டு. அவையாவன:

1. ஒரே பெற்றோரின் பிள்ளைகள். (மாற்கு 6:3; ஆதி 4:1-9; மத் 4:18-21; கலா 1:19) இந்த பொருளில் சகோதரர் என்னும் வார்த்தை 260 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

மாற்கு - தொகுப்புரை

6 அதிகாரம்

2. இஸ்ரவேலர்கள். (எண் 20:14; உபா 15:12; உபா 23:7; நியா 1:3,17) இந்த பொருளில் சகோதரர் என்னும் வார்த்தை 57 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

3. மனுஷர்கள். (1இராஜா 9:13; 1இராஜா 20:33) இந்த பொருளில் சகோதரர் என்னும் வார்த்தை 4 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

4. விசுவாசிகள். (மத் 5:22-24; மத் 7:4; மத் 12:50; மத் 18:15-17) இந்த பொருளில் சகோதரர் என்னும் வார்த்தை 79 தடவைகள் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

"அவருடைய சகோதரர்" என்னும் வாக்கியம் பொதுவாக இயேசுவோடு கூடப்பிறந்த சகோதரரையே குறிக்கும். இவர்கள் இயேசு கிறிஸ்து பிறந்த பின்பு, யோசேப்பிற்கும், மரியாளுக்கும் பிறந்தவர்கள். (மத் 12:46-47; மத் 13:55; மாற்கு 3:31; லூக்கா 8:19, யோவான் 2:12; யோவான் 7:3-10; அப் 1:14; 2கொரி 9:5; கலா 1:19) சகோதரர் என்னும் சொல்லுக்கு உறவினர் என்னும் பொருளும் உண்டு. (மாற்கு 6:4; லூக்கா 1:36,58; லூக்கா 2:44; லூக்கா 14:12; லூக்கா 21:16; லூக்கா 18:26; அப் 10:24; ரோமர் 9:3; ரோமர் 16:7,11,21).

இயேசுகிறிஸ்து கிறிஸ்தவ சகோதரத்துவத்தை உபதேசம் பண்ணினார். (மத் 12:48-50,மத் 23:8; மாற்கு 3:34; லூக்கா 8:21; லூக்கா 22:32) பேதுரு மற்ற அப்போஸ்தலர்களைச் சகோதரரே என்று முதல் முறையாகக் குறிப்பிட்டிருக்கிறார். (அப் 6:3; 1பேதுரு 2:17) பவுல் 108 இடங்களில் இந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறார்.

சகோதரரின் கடமைகள்

1. உங்கள் விரோதிகளை நேசிக்க வேண்டும். (மத் 5: 43-48)
2. தேவனுடைய சித்தத்தைச் செய்ய வேண்டும். (மத் 12:50)
3. சகோதரராக நேசிக்க வேண்டும். (மத் 23:8; அப் 11:29; 1பேதுரு 1:22; 1பேதுரு 3:8).
4. ஒருவரையொருவர் பெலப்படுத்த வேண்டும். (லூக்கா 22:32)
5. நியாயப்பிரமாணத்திற்கு மரிக்க வேண்டும். (ரோமர் 7:4)
6. சரீரத்தின் கிரியைகளுக்கு மரிக்க வேண்டும். (ரோமர் 8:12-13; கொலோ 3:5).
7. அறியாதவர்களாக இருக்கக்கூடாது. (ரோமர் 11:25; 1கொரி 10:1; 1கொரி 12:1; 1தெச 4:13; 1தெச 5:1,4)
8. தேவனிடம் சரீரத்தை ஒப்புக்கொடுக்க வேண்டும். (ரோமர் 12:1)
9. கள்ளத்தீர்க்கதரிசிகளை அடையாளம் காணவேண்டும். (ரோமர் 16:17).
10. ஒற்றுமையில் இருக்க வேண்டும். (1கொரி 1:10).
11. சமாதானத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். (1கொரி 6)
12. பலவீனன் விழுந்துபோவதற்குக் காரணமாக இருக்கக்கூடாது. (1கொரி 8:12; ரோமர் 14:1-15:3)
13. துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ தேறினவர்களாயும் இருக்க வேண்டும். (1கொரி 14:20)
14. பரிபூரணமாக இருக்க வேண்டும். (1கொரி 13:11)
15. பாவம் செய்வதற்குச் சாக்குப்போக்கு சொல்லக்கூடாது. (கலா 5:13)
16. பாவம் செய்யும் சகோதரரை மீட்டுக் கொள்ள வேண்டும். (கலா 6:1)

6 அதிகாரம்

17. கர்த்தருக்குள் தைரியமாக இருக்க வேண்டும். (எபே 6:10)

18. கர்த்தருக்குள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். (பிலி 3:1)

19. நல்ல காரியங்களைச் சிந்திக்க வேண்டும். (பிலி 4:8)

20. உங்கள் அழைப்பைத் தெரிந்து கொள்ள வேண்டும். (2கொரி1:26-31)

21. ஊழியக்காரர்களை மதிக்க வேண்டும். (1தெச 5:12)

22. அன்பில் பெருகவேண்டும். (1தெச 4:9-12)

23. அமைதியாக இருந்து, உங்கள் சொந்தக் கரங்களினால் வேலை செய்ய வேண்டும். (1தெச 4:10-12)

24. அவிசுவாசிகள் முன்பாக பக்தியாகவும், கண்ணியமாகவும் நடந்து கொள்ள வேண்டும். (1தெச 4:10-12)

25. துன்மார்க்கரை எச்சரிக்க வேண்டும். (1தெச 5:14)

26. ஆரோக்கியமான உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டும். (2தெச 2:15; 2தீமோ 2:15; 2தீமோ 3:16-17).

27. நன்மை செய்வதில் சோர்ந்துபோகக் கூடாது. (2தெச 3:13)

28. தேவனுடைய கிருபையை விட்டுவிலகி, பின்வாங்கிப்போய்விடக் கூடாது. (எபி 3:12-14; எபி 12:15)

29. சோதனைகள் வரும்போது அதைச் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். (யாக் 1:2)

30. பாவத்தில் மூழ்கியுள்ள சகோதரரை மீட்பதற்கு உதவி புரிய வேண்டும். (யாக் 1:16; யாக் 5:19-20; யாக் 4:19)

31. கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிப்பதற்குத் தாமதமாயும் இருக்க வேண்டும். (யாக் 1:19)

32. பட்சபாதம் இருக்கக்கூடாது. (யாக் 2).

33. விசுவாசத்தோடு கிரியை செய்ய வேண்டும். (யாக் 2:14)

34. அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து நம்மில் அநேகர் போதகராக ஆகக்கூடாது. (யாக் 3:1; 1கொரி 12:29; 2தீமோ 4:1-4).

35. மற்றவர்களைப் பற்றி விரோதமாய் பேசக்கூடாது. (யாக் 4:11)

36. பொறுமையாய் இருக்க வேண்டும். (யாக் 5:7)

37. ஒருவரையும் நியாயந்தீர்க்கக்கூடாது. (யாக் 5:9)

38. சத்தியம் பண்ணக்கூடாது. (மத் 5:33-37; யாக் 5:12)

39. இரட்சிப்பை உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். (2பேதுரு 1:4-10)

40. உலகம் உங்களைப் பகைப்பதற்காக ஆச்சரியப்படக் கூடாது. (1யோவான் 3:12; யாக் 4:4; யோவான் 15:18)

"யாக்கோபு" - (மத் 13:55)

"யோசே" - (மத் 13:55)

"யூதா" - (மத் 13:55)

"சீமோன்" - (மத் 13:55)

"சகோதரிகள்" - (மத் 13:56)

இடறலடைந்தார்கள் **(offended)** - **σκανδαλίζω** - **skandalizoo** - 4624

வினைச்சொல் - இடறலடை, இடறலுண்டாக்கு **(scandalized, stumbled)**

6 அதிகாரம்

"தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் இனத்திலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான்" - (மத் 13:57; லூக்கா 4:24; யோவான் 4:44)

"அங்கே அவர் சில நோயாளிகள்மேல் கைகளை வைத்து, அவர்களைக் குணமாக்கினதேயன்றி, வேறொரு அற்புதமும் செய்யக்கூடாமல் போனார்" - (மத் 13:58) கர்த்தருடைய அநேக அற்புதங்களை நாசரேத் ஊரார் தங்கள் கண்களால் கண்டார்கள். ஆயினும் மற்ற ஊர் ஜனங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களைவிட இவர்கள் மிகவும் குறைவாகவே பெற்றுக்கொண்டார்கள்.

36. இயேசு மறுபடியும் கலிலேயாவிற்கு பிரயாணம் பண்ணுகிறார் -(மத் 4:23;9:35; 11:1; மாற்கு 1:38)

மாற்கு 6:6 அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப் பட்டு; கிராமங்களிலே சுற்றித்திரிந்து, உபதேசம் பண்ணினார்.

"அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்" - (மத் 8:10)

"உபதேசம் பண்ணினார்" - (மத் 9:35)

37. இயேசு பன்னிரெண்டு சீஷர்களை ஊழியம் செய்வதற்கு வெளியே அனுப்புகிறார் - (மத் 10:1; மாற்கு 3:13; லூக் 6:12; 9:1)

மாற்கு 6:7 அவர் பன்னிருவரையும் அழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்த அவர்களுக்கு அதிகாரங்கொடுத்து,

மாற்கு 6:8 வழிக்குப் பையையாகிலும், அப்பத்தையாகிலும், கச்சையில் காசையாகிலும், எடுத்துக் கொண்டு போகாமல், ஒரு தடியை மாத்திரம் எடுத்துக்கொண்டு போகவும்;

மாற்கு 6:9 பாதரட்சைகளைப் போட்டுக் கொண்டு போகவும், இரண்டு அங்கிகளைத் தரியாதிருக்கவும் கட்டளையிட்டார்.

மாற்கு 6:10 பின்பு அவர்களை நோக்கி: நீங்கள் எங்கேயாகிலும் ஒரு வீட்டில் பிரவேசித்தால் அவ்விடத்தை விட்டுப் புறப்படுகிறவரைக்கும் அங்கேதானே தங்கியிருங்கள்.

மாற்கு 6:11 எவர்களாகிலும் உங்களை ஏற்றுக் கொள்ளாமலும், உங்கள் வசனங்களைக் கேளாமலும் இருந்தால், நீங்கள் அவ்விடம் விட்டுப் புறப்படும் போது, அவர்களுக்குச் சாட்சியாக உங்கள் கால்களின் கீழே படிந்த தூசியை உதறிப்போடுங்கள். நியாயத்தீர்ப்புநாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும் சோதோம் கொமோரா பட்டணத்திற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர்களை இரண்டு இரண்டுபேராக அனுப்பினார்.

மாற்கு 6:12 அவர்கள் புறப்பட்டுப்போய்: மனந்திரும்புங்கள் என்று பிரசங்கித்து;

மாற்கு 6:13 அநேகம் பிசாசுகளைத் துரத்தி, அநேகம் நோயாளிகளை எண்ணெய் பூசிச் சொஸ்தமாக்கினார்கள்.

"அவர் பன்னிருவரையும் அழைத்தார்" - (மத் 10:1)

"அசுத்த ஆவிகளைத் துரத்த அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" - (மத் 10:1)

"வழிக்குப் பையையாகிலும், அப்பத்தையாகிலும், கச்சையில் காசையாகிலும், எடுத்துக்கொண்டு போகவேண்டாம்" - (மத் 10:9, 10) அரபு நாடுகளில் ஒருவர் நம்மோடு சேர்ந்து, அப்பம் புசித்தால், அவர் நமது சிநேகிதர் என்று பொருள். சில நாடுகளில் நமக்கு ஒருவர் புசிப்பதற்கு அப்பம் தரும்போது, நாம் ஏற்றுக்கொள்ள மறுப்பது அவரை அவமதிக்கும் செயலாகும். நாம் அவருடைய விரோதி என்று அவர்கள் முடிவு செய்து விடுவார்கள். ஒரு தடியை மாத்திரம் சீஷர்கள் எடுத்துச்சென்றால் போதுமானது. நீண்ட தூரம் நடக்கும்போது தடியை ஊன்றி நடந்தால் கால் வலி குறையும்.

6 அதிகாரம்

பாதரட்சைகள் (sandals) - σανδάλιον - sandalion - 4547

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பாதரட்சைகள்

"இரண்டு அங்கிகள்" - (மத் 10:10; லூக்கா 9:3, லூக்கா 22:35-3)

"நீங்கள் எங்கேயாகிலும் ஒரு வீட்டில் பிரவேசித்தால் அவ்விடத்தை விட்டுப் புறப்படுகிறவரைக்கும் அங்கேதானே தங்கியிருங்கள்" - (மத் 10:11)

"எவர்களாகிலும் உங்களை ஏற்றுக் கொள்ளாமலும், உங்கள் வசனங்களைக் கேளாமலும் இருந்தால், நீங்கள் அவ்விடம் விட்டுப் புறப்படும்போது, அவர்களுக்குச் சாட்சியாக உங்கள் கால்களின் கீழே படிந்த தூசியை உதறிப்போடுங்கள்" - (மத் 10:14)

தீர்க்கதரிசன எண் - 4

"நியாயத்தீர்ப்புநாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப்பார்க்கிலும் சோதோம் கொமோரா பட்டணத்திற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்" ((மாற்கு 6:11) - இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"மனந்திரும்புங்கள் என்று பிரசங்கித்தார்கள்" சுவிசேஷ ஊழியத்தின் ஒரு பகுதி ஜனங்களை மனந்திரும்புமாறு அழைப்பது.

"அநேகம் நோயாளிகளை எண்ணெய் பூசிச் சொஸ்தமாக்கினார்கள்" - ஆதித்திருச்சபையில் வியாதியஸ்தருக்காக எண்ணெய் பூசி ஜெபம் பண்ணுவது வழக்கமாயிருந்தது. (யாக் 5:14-16).

38.ஏரோதுவின் கலங்கிய மனச்சாட்சி - யோவான் ஸ்நானனை சிரச்சேதம் பண்ணுகிறான் - (மத் 14:1; லூக் 9:7)

மாற்கு 6:14 அவருடைய பேர் பிரசித்தமானபடியினால், ஏரோதுராஜா அவரைக்குறித்துக் கேள்விப்பட்டு: யோவான்ஸ்நானன் மரித்தோரிலிருந்து எழுந்தான், ஆகையால் அவனிடத்தில் இந்தப் பலத்த செய்கைகள் விளங்குகிறது என்றான்.

மாற்கு 6:15 சிலர்: அவர் எலியா என்றார்கள். வேறு சிலர்: அவர், ஒரு தீர்க்கதரிசி, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவனைப்போலிருக்கிறாரென்று சொன்னார்கள்.

மாற்கு 6:16 ஏரோது அதைக் கேட்டபொழுது: அவன் நான் சிரச்சேதம் பண்ணின யோவான்தான்; அவன் மரித்தோரிலிருந்து எழுந்தான் என்றான்.

மாற்கு 6:17 ஏரோது தன் சகோதரனாகிய பிலிப்புவின் மனைவி ஏரோதியாளைத் தனக்கு மனைவியாக்கிக் கொண்டபோது,

மாற்கு 6:18 யோவான் ஏரோதை நோக்கி: நீர் உம்முடைய சகோதரன் மனைவியை வைத்துக் கொள்வது நியாயமல்லவென்று சொன்னதினிமித்தம், ஏரோது சேவகரை அனுப்பி, யோவானைப் பிடித்துக் கட்டிக் காவலில் வைத்திருந்தான்.

மாற்கு 6:19 ஏரோதியாளும் அவனுக்குச் சதி நினைத்து, அவனைக் கொன்றுபோட மனதாயிருந்தாள்; ஆகிலும் அவளால் கூடாமற்போயிற்று.

மாற்கு 6:20 அதேனென்றால் யோவான் நீதியும் பரிசுத்தமுமுள்ளவனென்று ஏரோது அறிந்து, அவனுக்குப் பயந்து, அவனைப் பாதுகாத்து, அவன் யோசனையின்படி அநேக காரியங்களைச் செய்து, விருப்பத்தோடே அவன் சொல்லைக் கேட்டு வந்தான்.

6 அதிகாரம்

மாற்கு 6:21 பின்பு சமயம் வாய்த்தது; எப்படியென்றால், ஏரோது தன் ஜென்மநாளிலே தன்னுடைய பிரபுக்களுக்கும், சேனாதிபதிகளுக்கும், கலிலேயா நாட்டின் பிரதான மனுஷருக்கும் ஒரு விருந்து பண்ணினபோது,

மாற்கு 6:22 ஏரோதியாளின் குமாரத்தி சபை நடுவே வந்து நடனம் பண்ணி, ஏரோதுவையும் அவனோடே கூடப் பந்தியிருந்தவர்களையும் சந்தோஷப்படுத்தினாள். அப்பொழுது, ராஜா சிறுபெண்ணை நோக்கி: உனக்கு வேண்டியதை என்னிடத்தில் கேள், அதை உனக்குத் தருவேன் என்று சொன்னதுமல்லாமல்;

மாற்கு 6:23 நீ என்னிடத்தில் எதைக் கேட்டாலும், அது என் ராஜ்யத்தில் பாதியானாலும், அதை உனக்குத் தருவேன் என்று அவளுக்கு ஆணையும் இட்டான்.

மாற்கு 6:24 அப்பொழுது, அவள் வெளியே போய், நான் என்ன கேட்கவேண்டும் என்று தன் தாயினிடத்தில் கேட்டாள். அதற்கு அவள்: யோவான்ஸ்நானனுடைய தலையைக் கேள் என்றாள்.

மாற்கு 6:25 உடனே அவள் ராஜாவினிடத்தில் சீக்கிரமாய் வந்து: நீர் இப்பொழுதே ஒரு தாலத்தில் யோவான்ஸ்நானனுடைய தலையை எனக்குத் தரவேண்டும் என்று கேட்டாள்.

மாற்கு 6:26. அப்பொழுது ராஜா மிகுந்த துக்கமடைந்தான்; ஆகிலும், ஆணையினிமித்தமும், கூடப் பந்தியிருந்தவர்களினிமித்தமும், அவளுக்கு அதை மறுக்க மனதில்லாமல்;

மாற்கு 6:27 உடனே அவனுடைய தலையைக் கொண்டுவரும்படி சேவகனுக்குக் கட்டளையிட்டு அனுப்பினான்.

மாற்கு 6:28 அந்தப்படி அவன் போய், காவற் கூடத்திலே அவனைச் சிரச்சேதம் பண்ணி, அவன் தலையை ஒரு தாலத்திலே கொண்டு வந்து, அதை அந்தச் சிறு பெண்ணுக்குக் கொடுத்தான்; அந்தச் சிறுபெண் அதைத் தன் தாயினிடத்தில் கொடுத்தாள்.

மாற்கு 6:29 அவனுடைய சீஷர்கள் அதைக் கேள்விப்பட்டு வந்து, அவன் உடலை எடுத்து, ஒரு கல்லறையில் வைத்தார்கள்.

"அவருடைய பேர் பிரசித்தமானபடியினால், ஏரோதுராஜா அவரைக்குறித்துக் கேள்விப் பட்டான்" - (மத் 2:3)

"யோவான்ஸ்நானன் மரித்தோரிலிருந்து எழுந்தான்" - (மத் 3, லூக்கா 3)

"எலியா" - (மத் 17:3)

"ஏரோது சேவகரை அனுப்பி, யோவானைப் பிடித்துக் கட்டிக் காவலில் வைத்திருந்தான்" - (மத் 14:1-12, மாற்கு 6:17-29)

"ஏரோதியாளும் அவனுக்குச் சதி நினைத்தாள்" - யோவான் ஸ்நானனுடைய பிரசங்கம் ஏரோதியாளுக்குப் பிடிக்கவில்லை. ஆகையினால் அவனுக்கு எதிராக சதி பண்ண நினைத்தாள். ஆகிலும் அவளால் கூடாமற் போயிற்று. (மாற்கு 6:18)

"பிரபுக்கள்" - (lords, Great men) (வெளி 6:15; வெளி 18:23)

சேனாபதிகள் (captains) - χιλίαρχος - chiliarchos - 5506

ஆண்பால் பெயர்ச்சொல் - பிரதான மனுஷர், தலைவன், சேனாபதி, சேனைத்தலைவர், ஆயிரம் போர்வீரர்களுக்குத் தலைவன்.

"கலிலேயா நாட்டின் பிரதான மனுஷர்" - கலிலேயாவிலுள்ள முக்கியமான மனுஷர்கள்.

சேவகன் (executioner) - σπεκουλάτωρ - spekoulatoor – 4688

6 அதிகாரம்

ஆண்பால் பெயர்ச்சொல் - சிரச்சேதம் பண்ணுகிற, சேவகன் - ராஜாவினுடைய மெய்க்காப்பாளன், வேவுகாரன், ஆயுததாரி.

39. பன்னிரெண்டு சீஷர்களும் திரும்பி வருகிறார்கள் - (லூக் 9:10)

மாற்கு 6:30 அப்பொழுது அப்போஸ்தலர் இயேசுவினிடத்தில் கூடிவந்து, தாங்கள் செய்தவைகள் உபதேசித்தவைகள் யாவையும் அவருக்கு அறிவித்தார்கள்.

மாற்கு 6:31 அவர் அவர்களை நோக்கி: வனாந்தரமான ஓரிடத்தில் தனித்து சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள் என்றார்; ஏனெனில், வருகிறவர்களும் போகிறவர்களும் அநேகராயிருந்தபடியினால் போஜனம் பண்ணுகிறதற்கும் அவர்களுக்குச் சமயமில்லாதிருந்தது.

"அப்போஸ்தலர் இயேசுவினிடத்தில் கூடிவந்து, தாங்கள் செய்தவைகள் உபதேசித்தவைகள் யாவையும் அவருக்கு அறிவித்தார்கள்" - மாற்கு எழுதின சுவிசேஷத்தில் மட்டுமே இந்தக் குறிப்பு காணப்படுகிறது. சுவிசேஷ ஊழியத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவதும், சுவிசேஷ செய்தியை உறுதிபண்ணுவதும் அடங்கியுள்ளது.

"அவர் அவர்களை நோக்கி: வனாந்தரமான ஓரிடத்தில் தனித்து சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள் என்றார்; ஏனெனில், வருகிறவர்களும் போகிறவர்களும் அநேகராயிருந்தபடியினால் போஜனம் பண்ணுகிறதற்கும் அவர்களுக்குச் சமயமில்லாதிருந்தது" - சுவிசேஷ ஊழியர்கள் தேவனுடைய ஊழியத்தை எப்போதும் செய்து கொண்டிருக்கிறபடியினால் தங்களுடைய சொந்த வேலைகளைக்கவனிப்பதற்கு அவர்களுக்குப் போதுமான அளவு சமயம் இருக்காது. (அப் 6:4; 2கொரி 4:9-14; 2கொரி 4:8-18; 2கொரி 6:1-10; 2கொரி 10:4-7; 2கொரி 11:26-28; எபே 6:10-18; யாக் 5:14-16) ஒரு சில ஊழியக்காரர்கள் தங்களைச் சரியாகக் கவனித்துக் கொள்ளாததினால் சரீரப் பிரகாரமாக அவதிப்பட்டிருக்கிறார்கள். (பிலி 2:25-30; 2தீமோ 4:20)

40. இயேசு ஐயாயிரம் பேருக்கு அற்புதமாக போஜனம் கொடுக்கிறார் - (மத் 14:15; லூக் 9:11; யோவான் 6:1)

மாற்கு 6:32 அப்படியே அவர்கள் தனிமையாய் ஒரு படவில் ஏறி வனாந்தரமான ஓர் இடத்துக்குப் போனார்கள்.

மாற்கு 6:33 அவர்கள் புறப்பட்டுப் போகிறதை ஜனங்கள் கண்டார்கள். அவரை அறிந்த அநேகர் சகல பட்டணங்களிலுமிருந்து கால்நடையாய் அவ்விடத்திற்கு ஓடி, அவர்களுக்கு முன்னே அங்கே சேர்ந்து, அவரிடத்தில் கூடிவந்தார்கள்.

மாற்கு 6:34 இயேசு கரையில் வந்து, அநேக ஜனங்களைக் கண்டு, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலிருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி, அநேக காரியங்களை அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார்.

மாற்கு 6:35 வெகுநேரம் சென்றபின்பு, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: இது வனாந்தரமான இடம், வெகுநேரமுமாயிற்று;

மாற்கு 6:36 புசிக்கிறதற்கும் இவர்களிடத்தில் ஒன்றுமில்லை; ஆகையால் இவர்கள் சுற்றியிருக்கிற கிராமங்களுக்கும் ஊர்களுக்கும் போய், தங்களுக்காக அப்பங்களை வாங்கிக் கொள்ளும்படி இவர்களை அனுப்பிவிட வேண்டும் என்றார்கள்.

மாற்கு 6:37 அவர் அவர்களை நோக்கி: நீங்களே அவர்களுக்குப் போஜனங் கொடுங்கள் என்றார். அதற்கு அவர்கள்: நாங்கள் போய், இருநூறு பணத்துக்கு அப்பங்களை வாங்கி இவர்களுக்குப் புசிக்கும்படி கொடுக்கக்கூடுமோ என்றார்கள்.

6 அதிகாரம்

மாற்கு 6:38 அதற்கு அவர்: உங்களிடத்தில் எத்தனை அப்பங்களுண்டு, போய்ப்பாருங்கள் என்றார். அவர்கள் பார்த்துவந்து: ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு என்றார்கள்.

மாற்கு 6:39 அப்பொழுது எல்லாரையும் பசும்புல்லின்மேல் பந்திபந்தியாக உட்காரவைக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

மாற்கு 6:40 அப்படியே வரிசை வரிசையாய் நூறுநூறுபேராகவும், ஐம்பதம்பது பேராகவும், உட்கார்ந்தார்கள்.

மாற்கு 6:41 அவர்கள் அந்த ஐந்து அப்பங்களையும், அந்த இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்துபார்த்து, ஆசீர்வதித்து, அப்பங்களைப்பிட்டு, அவர்களுக்குப் பரிமாறும்படி தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்தார். அப்படியே இரண்டு மீன்களையும் எல்லாருக்கும் பங்கிட்டார்.

மாற்கு 6:42 எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்.

மாற்கு 6:43 மேலும் அப்பங்களிலும் மீன்களிலும் மீதியான துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடைநிறைய எடுத்தார்கள்.

மாற்கு 6:44 அப்பம் சாப்பிட்ட புருஷர் ஏறக்குறை ஐயாயிரம் பேராயிருந்தார்கள்.

"வனாந்தரமான ஓர் இடம்" - இயேசு கிறிஸ்து இந்த இடத்திற்கு ஏற்கெனவே போயிருக்கலாம். அல்லது அந்த ஊர் ஜனங்களுக்கு இந்த இடம் பழக்கமில்லாத இடமாக இருக்கலாம். (மாற்கு 6:32-33) ஆனால் அந்த ஊர் ஜனங்களோ அதை எப்படியோ அறிந்து, இயேசு அங்கே சேருவதற்கு முன்பாக அவர்கள் அங்கே போய்விட்டார்கள். அவர்களைப் பார்த்து, இயேசு கிறிஸ்து மனதுருகினார். (மத் 9:36)

"புசிக்கிறதற்கும் இவர்களிடத்தில் ஒன்றுமில்லை; ஆகையால் இவர்கள் சுற்றியிருக்கிற கிராமங்களுக்கும் ஊர்களுக்கும் போய், தங்களுக்காக அப்பங்களை வாங்கிக்கொள்ளும்படி இவர்களை அனுப்பிவிட வேண்டும் என்றார்கள்" - சீஷர்கள் சாதாரண மனுஷரைப்போலப் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட வனாந்தரமான இடத்தில் ஏராளமான ஜனங்களுக்குப் போஜனம் கொடுக்க வாய்ப்பில்லை. ஆகையினால் அவர்களைச் சுற்றியிருக்கிற கிராமங்களுக்கும், ஊர்களுக்கும் அனுப்பிவிடுவது நியாயமாய்த் தோன்றுகிறது. ஆயினும் அவர்கள் மத்தியிலே இயேசு கிறிஸ்து இருக்கிறார். எல்லாருடைய தேவையையும் சந்திப்பதற்கு வல்லமையுள்ளவர். எல்லாப் பிரச்சனைகளையும் தீர்க்கக்கூடியவர்.

பணம் (pennyworth) - δηνάριον - **deenarion** - 1220

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பணம், காசு (மாற்கு 6:38)

"அப்பங்கள்" - கிழக்குத் தேசங்களில் பெரிய அப்பம் 5 அல்லது 6 அங்குல விட்டமும், ஒரு அங்குல கனமும் உடையதாக இருக்கும். ஒருவர் சாதாரணமாக ஒரு அப்பத்தைப் புசிக்கலாம். இயேசு கிறிஸ்து சுமார் 5000 முதல் 20,000 அப்பங்கள் வரையிலும் அற்புதமாக அதிகரிக்கச் செய்தார். 5000 புருஷர்கள் புசிக்கும் விதமாக, மீன்களையும் அதிகரிக்கச் செய்தார். திருப்தியாக எல்லோரும் சாப்பிட்டபின்பு, மீதியான துணிக்கைகளைப் பன்னிரெண்டு கூடைகள் நிறைய எடுத்தார்கள். (மாற்கு 6:43)

இந்தக் காரியம் இயேசு கிறிஸ்துவின் இரட்சிக்கும் கிரியையை வெளிப்படுத்துகிறது. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினால் ஏற்படக்கூடிய இரட்சிப்பின் கிரியையை வெளிப்படுத்துகிறது. அற்புதங்களைச் செய்யும் வரத்தினால் எலிசா 20 அப்பங்களை 100 பேருக்குப் புசிக்கும் அளவிற்கு அதிகரிக்கச் செய்தான். (2இராஜா 4: 42-44). ஒரு சாதாரண மனுஷன் இந்த வல்லமையை வெளிப்படுத்தினான்.

6 அதிகாரம்

இயேசு கிறிஸ்து தேவனாக இருப்பதினாலும், அவருடைய தெய்வீக வல்லமையினாலும், இந்த அற்புதம் நடைபெற்றது என்று ஒரு சிலர் கூறுகிறார்கள். வேறு சிலரோ இயேசு இந்த அற்புதத்தை அவருடைய தெய்வீக சுபாவத்தினால் செய்யாமல், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினால் செய்ததாக கூறுகிறார்கள். (ஏசா 11:2; ஏசா 42:1-7; ஏசா 61:1-2; மத் 3:16-17; யோவான் 3:34; அப் 10:38)

ஒவ்வொருவரும் மறுபடியும் பிறக்கும்போது தேவனுடைய தெய்வீக சுபாவத்தை அனுபவிக்கிறார்கள். (2பேதுரு 1:4) இதனால் யாருக்கும் எந்த வல்லமையும் கிடைப்பதில்லை. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை ஒருவர் பெற்றுக் கொள்ளும்போது மட்டுமே அவர் ஆவியானவரின் வரங்களைப் பெற்றுக் கொள்கிறார். பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அந்த நபர் மூலமாக கிரியை நடப்பிக்கிறது. (1கொரி 12:4-11; லூக்கா 24:49; அப் 1:4-8)

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அனைவருக்கும் உரியது என்பதற்குக் காரணங்கள்

1. இயேசுகிறிஸ்து எல்லா ஜனங்களையும் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணுவார் என்று யோவான் முன்னுரைத்திருக்கிறார். (மத் 3:11; யோவான் 1:33
2. தம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிற அனைவருக்கும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை இயேசு கிறிஸ்து வாக்குப் பண்ணியிருக்கிறார். (யோவான் 7:37-39)
3. தம்மிடத்தில் கேட்கும் தேவனுடைய பிள்ளைகள் அனைவருக்கும், ஆவியானவரின் அபிஷேகத்தை இயேசு கிறிஸ்து வாக்குப் பண்ணியிருக்கிறார். (லூக்கா 11:9-13)
4. உன்னதத்திலிருந்து வரும் பலனால் தரிப்பிக்கப்படும் வரையிலும் எல்லா மனுஷரும் காத்திருக்க வேண்டுமென்று இயேசு கிறிஸ்து கட்டளையிட்டிருக்கிறார். (லூக்கா 24:49; அப் 1:4-8)
5. ஒவ்வொரு விசுவாசிக்கும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையையும், அபிஷேகத்தையும் இயேசு கிறிஸ்து வாக்குப் பண்ணியிருக்கிறார். (அப் 1:4-8; யோவான் 14:12; யோவான் 16:17-18)
6. ஆவியானவரின் அபிஷேகம் எல்லாருக்கும் உரியது என்று பேதுரு வாக்குப் பண்ணியிருக்கிறார். (அப் 2:38-39; அப் 5:32)
7. கடைசி நாட்களில் எல்லோருக்கும் ஆவியானவரின் அபிஷேகம் வழங்கப் படும் என்று பேதுரு முன்னறிவித்திருக்கிறார். (அப் 2:16-21)
8. எல்லோரும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றுக் கொள்வதற்காக இயேசு கிறிஸ்து மரித்தார். (கலா 3:13-14) பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் வேதாகமத்தில் வாக்குப்பண்ணப் பட்டிருக்கிறது. (யோவான் 7:37-39; யோவான் 14:16-17,26; யோவான் 15:26; யோவான் 16:13-15; அப் 1:4-8; அப் 2:38-39)
9. எல்லா விசுவாசிகளும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று ஆதித் திருச்சபையார் எதிர்பார்த்தார்கள். (அப் 8:14-18; அப் 9:17; அப் 19:1-6)
10. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் யூதருக்கும், புறஜாதியாருக்கும் உரியது. (மத் 3:11; யோவான் 7:37-39; அப் 2:16-21, 38-39; அப் 5:32; அப் 10:44-48; அப் 11:14-18; அப் 15:7-11; கலா 3:13-14; ரோமர் 10:12)

"வானத்தை அண்ணாந்துபார்த்து, ஆசீர்வதித்து, அப்பங்களைப்பிட்டு, அவர்களுக்குப் பரிமாறும்படி தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்தார்" - (மத் 14:19)

6 அதிகாரம்

கூடைகள் (baskets) - **κόφινος** - **kophinos** - 2894

ஆண்பால் பெயர்ச்சொல் - கூடை - யூதர்கள் பிரயாணம் பண்ணும்போது தங்களோடு சிறிய கூடைகளை எடுத்துச் செல்வார்கள். அவற்றில் தங்களுக்குத் தேவையான போஜன பதார்த்தங்களை வைத்திருப்பார்கள். புறஜாதியாருடைய போஜனங்களைப் புசிக்காமல் இருப்பதற்காக இவ்வாறு முன்னேற் பாடாகச் செல்வது யூதரின் வழக்கம். (மத் 14:20; மாற்கு 6:43; லூக்கா 9:17; யோவான் 6:13)

41. இயேசு தண்ணீரின்மீது நடக்கிறார் - (மத் 14:22; யோவான் 6:16)

மாற்கு 6:45 அவர் ஜனங்களை அனுப்பிவிடுகையில், தம்முடைய சீஷர்கள் படவில் ஏறி அக்கரையில் பெத்சாயிதாவுக்கு எதிராக, தமக்கு முன்னே போகும்படி, அவர்களைத் துரிதப்படுத்தினார்.

மாற்கு 6:46 அவர் ஜனங்களை அனுப்பிவிட்ட பின்பு, ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறினார்.

மாற்கு 6:47 சாயங்காலமானபோது படவு நடுக்கடலிலிருந்தது; அவரோ கரையிலே தனிமையாயிருந்தார்.

மாற்கு 6:48 அப்பொழுது காற்று அவர்களுக்கு எதிராயிருந்தபடியினால், அவர்கள் தண்டுவலிக்கிறதில் வருத்தப் படுகிறதை அவர் கண்டு, இராத்திரியில் நாலாம் ஜாமத்தில் கடலின்மேல் நடந்து அவர்களிடத்தில் வந்து, அவர்களைக் கடந்து போகிறவர்போல் காணப்பட்டார்.

மாற்கு 6:49 அவர் கடலின்மேல் நடக்கிறதை அவர்கள் கண்டு, ஆவேசம் என்று எண்ணி, சத்தமிட்டு அலறினார்கள்.

மாற்கு 6:50 அவர்களெல்லாரும் அவரைக் கண்டு கலக்கமடைந்தார்கள். உடனே அவர் அவர்களோடே பேசி: திடன் கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள் என்று சொல்லி,

மாற்கு 6:51 அவர்கள் இருந்த படவில் ஏறினார். அப்பொழுது காற்று அமர்ந்தது; அதினால் அவர்கள் தங்களுக்குள்ளே மிகவும் பிரமித்து ஆச்சரியப்பட்டார்கள்.

மாற்கு 6:52 அவர்களுடைய இருதயம் கடினமுள்ளதாயிருந்த படியினால் அப்பங்களைக் குறித்து அவர்கள் உணராமற்போனார்கள்.

"பெத்சாயிதா" - (லூக்கா 9:10)

"ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறினார்" - திரளான ஜனங்களை விட்டு, தனிமையாக இருக்கும்போது இயேசு கிறிஸ்து தனித்து ஜெபம் பண்ணுவது வழக்கம். (மத் 14:23; மாற்கு 1:35; மாற்கு 6:46; லூக்கா 6:12; லூக்கா 9:28; லூக்கா 11:1)

காண் (saw) - **εἴδω** - **eidoo** - 1492

வினைச்சொல் - காண், அறி, பார், தெரிந்திரு, நோக்கு, உணர், அறிந்திரு, விளங்கு - ஒரு பொருளை சாதாரணமாக பார்ப்பதுபோன்று அல்லாமல் தனிப்பட்ட முறையில் கூர்ந்து கவனிப்பதை இந்தச் சொல் குறிக்கும். சீஷர்கள் தண்டு வலிக்கிறதில் வருத்தப்படுகிறதை இயேசு உணர்ந்தார்.

வருத்தப்படு (**toiling**) - **βασανίζω** - **basanizoo** - 928

வினைச்சொல் - வேதனைப்படு, அலைவுபடு, வருத்தப்படு, வாதிக்கப்படு, வேதனையடை (**torment**) (மத் 8:6,28; மாற்கு 5:7; லூக்கா 8:28; வெளி 9:5; வெளி 11:10; வெளி 14:10; வெளி 20:10)

6 அதிகாரம்

"நாலாம் ஜாமம்" - அதிகாலை 3.00 மணியிலிருந்து 6.00 மணிவரையிலும் - (மத் 14:25)

"கடலின்மேல் நடந்தார்" - பரிசுத்த ஆவியானவரின் பூரண அபிஷேகத்தினால் இயேசு கிறிஸ்து இயற்கையின்மீதுள்ள தமது வல்லமையை மறுபடியுமாக நிரூபிக்கிறார். (யோவான் 3:34; ஏசா 11:2; ஏசா 61:1; அப் 10:38) தம்மிடத்தில் எந்த வல்லமையும் இல்லையென்றும், தம்மிடத்திலுள்ள பரிசுத்த ஆவியானவரே அற்புதங்களைச் செய்வதாகவும் இயேசு கிறிஸ்து வலியுறுத்துகிறார். (யோவான் 8:28) இதே வல்லமையினால் பேதுருவும் தண்ணீரின்மீது நடந்தான். (மத் 14:29) பேதுரு தண்ணீர்மீது நடந்ததினால் அவன் தேவனாகி விடவில்லை. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேக வல்லமையினாலேயே பேதுருவால் தண்ணீரின்மீது நடக்கமுடிந்தது. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும், அவருடைய வல்லமையையும், இயேசு கிறிஸ்து எல்லா விசுவாசிகளுக்கும் வாக்குப் பண்ணியிருக்கிறார். இதே வல்லமை நமக்கும் கொடுக்கப்படும். (யோவான் 14:12; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24)

"அவர்களைக் கடந்து போகிறவர்போல் காணப்பட்டார்" - படகு செல்லும் வேகத்தைவிட இயேசு கிறிஸ்து தண்ணீரின்மீது வேகமாக நடந்துசென்றார்.

"அவர்களெல்லாரும் அவரைக் கண்டு கலக்கமடைந்தார்கள்" - பன்னிரெண்டு சீஷர்களும் ஒருவேளை அதற்கு மேற்பட்டவர்களும் இந்த அற்புதத்தைக் கண்டு பயந்தார்கள். முதன்முறையாக தண்ணீரின்மீது ஒருவர் நடப்பதை அப்போதுதான் தங்கள் கண்களால் காண்கிறார்கள்.

கடினமாயிரு (hardened) - πωρόω - poorooo - 4456

வினைச்சொல் - கடினமாயிரு, கடினமாக்கு (petrify, to grow hard, callous, blind, become dull or lose the power of understanding) (மாற்கு 6:52; மாற்கு 8:17; யோவான் 12:40; ரோமர் 11:7; 2கொரி 3:14) இயேசு கிறிஸ்து தண்ணீரின்மீது நடந்த காட்சியைக் கண்டதினால் அவர்கள் பிரமித்து இருந்தார்கள். அவர்களால் எதையும் உணரமுடியவில்லை.

42. கெனேசரேத்து நாட்டில் வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்குகிறார் - (மத் 14:34)

மாற்கு 6:53 அவர்கள் கடலைக் கடந்து கெனேசரேத்தென்னும் நாட்டிற்கு வந்து, கரை பிடித்தார்கள்.

மாற்கு 6:54 அவர்கள் படவிலிருந்து இறங்கினவுடனே, ஜனங்கள் அவரை அறிந்து,

மாற்கு 6:55 அந்தச் சுற்றுப்புறமெங்கும் ஓடித்திரிந்து, பிணியாளிகளைப் படுக்கைகளில் கிடத்தி, அவர் வந்திருக்கிறாரென்று கேள்விப்பட்ட இடங்களிலெல்லாம் சுமந்து கொண்டு வந்தார்கள்.

மாற்கு 6:56 அல்லாமலும் அவர் பிரவேசித்த கிராமங்கள் பட்டணங்கள் நாடுகள் எவைகளோ, அவைகளின் சந்தைவெளிகளிலே வியாதிக்காரரை வைத்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாகவேண்டும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள்; அவரைத் தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள்.

"கெனேசரேத்" - (மத் 14:34)

"அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாகவேண்டும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள்; அவரைத் தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள்" - (மத் 8:3, மத் 9:20, மத் 13:58)

மாற்கு - தொகுப்புரை

7 அதிகாரம்

43. வேதபாரகரையும் பரிசேயரையும் இயேசு கடிந்து கொள்கிறார் - (மத் 15:1)

மாற்கு 7:1 எருசலேமிலிருந்து வந்த பரிசேயரும், வேதபாரகரில் சிலரும் அவரிடத்தில் கூடிவந்தார்கள்.

மாற்கு 7:2 அப்பொழுது அவருடைய சீஷரில் சிலர் கழுவாத அசுத்த கைகளாலே போஜனம் பண்ணுகிறதை அவர்கள் கண்டு குற்றம்பிடித்தார்கள்.

மாற்கு 7:3 ஏனெனில் பரிசேயர் முதலிய யூதர் அனைவரும் முன்னோர்களின் பாரம்பரியத்தைக் கைக்கொண்டு, அடிக்கடி கைகழுவினாலொழியச் சாப்பிட மாட்டார்கள்.

மாற்கு 7:4 கடையிலிருந்து வரும்போதும் ஸ்நானம்பண்ணாமல் சாப்பிடமாட்டார்கள். அப்படியே செம்புகளையும் கிண்ணங்களையும் செப்புக்குடங்களையும் மணைகளையும் கழுவுகிறதுமல்லாமல், வேறு அநேக ஆசாரங்களையும் கைக்கொண்டு வருவார்கள்.

மாற்கு 7:5 அப்பொழுது, அந்தப் பரிசேயரும் வேதபாரகரும் அவரை நோக்கி: உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை மீறி, ஏன் கை கழுவாமல் சாப்பிடுகிறார்கள் என்று கேட்டார்கள்.

மாற்கு 7:6 அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது என்றும்,

மாற்கு 7:7 மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றும், எழுதியிருக்கிற பிரகாரம், மாயக்காரராகிய உங்களைக்குறித்து, ஏசாயா நன்றாய்த் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறான்.

மாற்கு 7:8 நீங்கள் தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தைக் கைக்கொண்டு வருகிறவர்களாய், கிண்ணங்களையும் செம்புகளையும் கழுவுகிறீர்கள்; மற்றும் இப்படிப்பட்ட அநேக சடங்குகளையும் அனுசரித்து வருகிறீர்கள் என்றார்.

மாற்கு 7:9 பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உங்கள் பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும் படிக்கு தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்கினது நன்றாயிருக்கிறது.

மாற்கு 7:10 எப்படியெனில், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்றும், தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்படவேண்டும் என்றும், மோசே சொல்லியிருக்கிறாரே.

மாற்கு 7:11 நீங்களோ, ஒருவன் தன் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் கொர்பான் என்னும் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி விட்டால் அவனுடைய கடமை தீர்ந்தது என்று சொல்லி,

மாற்கு 7:12 அவனை இனி தன் தகப்பனுக்காவது தன் தாய்க்காவது யாதொரு உதவியும் செய்ய ஒட்டாமல்;

மாற்கு 7:13 நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத்தினாலே வேத வசனத்தை அவமாக்குகிறீர்கள். இதுபோலவே நீங்கள் மற்றும் அநேக காரியங்களையும் செய்கிறீர்கள் என்று சொன்னார்.

"சீஷரில் சிலர் கழுவாத அசுத்த கைகளாலே போஜனம் பண்ணுகிறார்கள்" - இது மனுஷனைத் தீட்டுப்படுத்தும் பாவமல்ல. ஆனால் இவர்களைக் குற்றப்படுத்தும் மாயக்காரரின் பாவங்கள் மனுஷனைத் தீட்டுப்படுத்தும். (மாற்கு 7:15-23; ரோமர் 1:29-32; கலா 5:19-21)

மாற்கு - தொகுப்புரை

7 அதிகாரம்

"அவர்கள் கண்டு குற்றம்பிடித்தார்கள்" - மாய்மாலக்காரர்கள் எதையாவது குற்றம் சொல்ல வேண்டுமென்பதற்காக வெளிப்புறமான காரியங்களை ஆராய்ந்து பார்ப்பார்கள். உள்ளான பரிசுத்தத்தை அவர்களால் காணமுடியாது. (2கொரி 5:17-18; எபி 12:14)

கழுவு **(wash) - νίπτω - niptoo** - 3538

விணைச்சொல் - கழுவு

தண்ணீரினால் யூதர்கள் அடிக்கடி தங்கள் கைகளைக் கழுவுவார்கள். இது அவர்களுடைய பாரம்பரியம். தேவனுடைய கற்பனை அல்ல. கைகளைக் கழுவுவதற்குப் போதுமான அளவு தண்ணீர் வேண்டும். தண்ணீருக்குள் கைகளை முக்கிக் கழுவுவார்கள். சிப்தா **(Shibta)** என்னும் மாயபிசாசு தங்களுடைய கரங்களில் இரவு வேளையில் தங்கும் என்பது யூதருடைய நம்பிக்கை. அதற்காகத் தங்கள் கைகளை அடிக்கடி கழுவி, பிசாசின் கிரியைகளிலிருந்து தங்களைச் சுத்தப்படுத்திக் கொள்வார்கள். அடிக்கடி கை கழுவாத யூதரை அவர்கள் இரட்சிக்கப்பட்டவராகவோ, நீதிமானாகவோ மதிப்பதில்லை.

ஸ்நானம்பண்ணுதல் **(wash) - βαπτίζω - baptizoo** - 907

விணைச்சொல் - முழுக்கு, கழுவு, ஞானஸ்நானம் பெறு, ஞானஸ்நானம் கொடு, ஸ்நானம் பண்ணு, கைகழுவு - தண்ணீரில் மார்க்கச்சடங்குகளின் பிரகாரமாகச் சுத்தம்பண்ணுதல் (எபி 9:10)

"வேறு அநேக ஆசாரங்களையும் கைக்கொண்டுவருவார்கள்" - நாம் எந்த ஆசாரத்தையும் கடைப்பிடிக்க வேண்டுமென்று இயேசு கிறிஸ்து உபதேசம் பண்ணவில்லை. கர்த்தரிடத்தில் நொருங்கிய இருதயத்தோடு வருகிறவர்களை அவர் அன்போடு ஏற்றுக் கொள்கிறார். பரிசேயர்கள் பலவிதமான பாரம்பரியங்களையும், ஆசாரங்களையும் கைக்கொண்டு வந்தார்கள். (மாற்கு 7:2-9; மத் 15:1-3; மத் 16:12; மத் 23:1-33)

வேதாகமத்தில் சில காரியங்கள் பாவம் என்று தெளிவாக அறிவுறுத்தப்பட்டிருக்கும். வேறு சில காரியங்களைக் குறித்து, வேதவசனம் அதைப் பாவம் என்று வலியுறுத்தாது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் தேவனுக்கு நமது மனச்சாட்சியின் பிரகாரம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். (ரோமர் 14:1-23; ரோமர் 15:1-3; 1கொரி 8) நமது ஆத்துமாவை அழிக்கும் பாவங்கள் வேத வசனங்களில் அட்டவணையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (மாற்கு 7:19-21; ரோமர் 1: 29-32; 1கொரி 6:9-11; கலா 5:19-21; கொலோ 3:5-10)

நமது சரீரம் தேவனுடைய ஆலயம். இதை அசுத்தப்படுத்தக்கூடாது. இயேசுகிறிஸ்துவின் மூலமாக நமது ஆத்துமாவை அழிக்கும் பாவங்களிலிருந்து விலகி, ஜெயஜீவியம் ஜீவிக்க வேண்டும். (2கொரி 3:16-17).

மணை **(tables) - κλινάριον - klinarion** - 2825

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல்- படுக்கை, கட்டில், மணை - யூதர்கள் சாய்ந்து அமரும் இருக்கைகள் அல்லது படுக்கைகள். (மத் 9:2,6; மாற்கு 4:2; மாற்கு 7:4,30; லூக்கா 5:18; லூக்கா 8:16; லூக்கா 17:34; அப் 5:15; வெளி 2:22) யூத மார்க்கத்தின் பழக்கவழக்கங்களை மாற்கு புற ஜாதியாருக்குத் தெளிவாகக் கூறுகிறார். (மாற்கு 7:2-9) ஆனால் மத்தேயுவோ யூதருக்கு சுவிசேஷம் எழுதியதினால் யூதருடைய பழக்கங்கள் அவர்களுக்கு ஏற்கெனவே தெரியும் என்பதினால் அவற்றைத் தெளிவாக விவரிக்கவில்லை. (மத் 15:10-20)

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 4

"இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது" (மாற்கு 7:6; ஏசா 29:13)

7 அதிகாரம்

"கொர்பான்" **(Corban)** - வாயினால் அறிக்கையிடும் காணிக்கை. என்னிடத்திலுள்ள பொருட்களை எல்லாம் தேவனுக்கு அர்ப்பணித்து விட்டேன். ஆகையினால் என்னுடைய பெற்றோரைப் பராமரிப்பதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை. அவர்களுக்கு என்னால் ஒரு உதவியும் செய்ய முடியாது என்று கூறுதல். (மத் 15:5)

"மோசே சொல்லியிருக்கிறாரே" இயேசு கிறிஸ்து மோசேயின் வார்த்தைகளைத் தேவனுடைய வார்த்தை என்று அங்கீகரித்திருக்கிறார். ((மாற்கு 7:10-13).

பரிசேயர் செய்யும் அநேக காரியங்கள் (மத் 23)

1. பலமுறை கைகளைக் கழுவுதல் (மாற்கு7:2-5)
2. குற்றம் கண்டுபிடித்தல் (மாற்கு 7:2)
3. தேவனுடைய வார்த்தைக்குப் பதிலாக மனுஷருடைய பழக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தல் (மாற்கு 7:3)
4. மார்க்கச்சடங்குகளின் பிரகாரம் சரீரத்தைக் கழுவுதல் (மாற்கு 7:4)
5. கிண்ணங்களையும், செம்புகளையும் செப்புக் குடங்களையும், மணைகளையும் கழுவுதல். (மாற்கு 7:4,8)
6. தங்களுடைய மார்க்கச்சடங்குகளை மற்றவர்களும் கடைப்பிடிக்க வேண்டுமென்று வலியுறுத்துதல் (மாற்கு 7:5)
7. வெளிப்புறமான சுத்தத்தை வலியுறுத்தி, உள்ளான சுத்தத்தைக் கவனிக்காமல் இருத்தல். (மாற்கு 7:5,14-20)
8. தேவனை உதடுகளால் கனப்படுத்தி, இருதயத்தால் கனப்படுத்தாமல் இருத்தல். (மாற்கு 7:6)
9. மாயையான ஆராதனையைச் செய்தல் (மாற்கு 7:7)
10. தேவனுடைய பிரமாணங்களை அங்கீகரிக்காமல் தள்ளிவைத்தல் (மாற்கு 7:8-9)
11. தேவனுடைய உபதேசங்களுக்குப் பதிலாக மனுஷருடைய மார்க்கத்தைக் கடைப்பிடித்தல். (மாற்கு 7:9)
12. மோசேயைப் பின்பற்றுவதாகக் கூறிவிட்டு, அவருடைய உபதேசங்களுக்குக் கீழ்ப்படியாமல் இருத்தல். (மாற்கு 7:10-13)
13. பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமையை ஒருவன் செய்ய வேண்டியதில்லையென்று தங்களுடைய மார்க்கத்தின் பிரகாரமாக அவனை விடுவித்தல். (மாற்கு 7:11-12)
14. சொந்த ஆதாயத்திற்காக மார்க்கத்தைப் பயன்படுத்துதல். (மாற்கு 7:11-12)

44. மனுஷனை தீட்டுப்படுத்தும் காரியம் - பாவங்கள் ஆத்துமாவை அழிக்கும் - (மத் 15:10; கலா 5:19)

மாற்கு 7:14 பின்பு அவர் ஜனங்களெல்லாரையும் வரவழைத்து அவர்களை நோக்கி: நீங்கள் எல்லாரும் எனக்குச் செவிகொடுத்து உணருங்கள்.

மாற்கு 7:15 மனுஷனுக்குப் புறம்பே இருந்து அவனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தமாட்டாது; அவன் உள்ளத்திலிருந்து புறப்படுகிறவைகளே அவனைத் தீட்டுப்படுத்தும்.

மாற்கு 7:16 கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனாயிருந்தால் கேட்கக் கடவன் என்றார்.

7 அதிகாரம்

மாற்கு 7:17 அவர் ஜனங்களைவிட்டு வீட்டுக்குள் பிரவேசித்தபோது, அவருடைய சீஷர்கள் அவர் சொன்ன உவமையைக்குறித்து அவரிடத்தில் விசாரித்தார்கள்.

மாற்கு 7:18 அதற்கு அவர்: நீங்களும் இவ்வளவு உணர்வில்லாதவர்களா? புறம்பேயிருந்து மனுஷனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தமாட்டாதென்று நீங்கள் அறிந்துகொள்ளவில்லையா?

மாற்கு 7:19 அது அவன் இருதயத்தில் போகாமல் வயிற்றிலே போகிறது; அதிலிருந்து எல்லாப் போஜனங்களின் அசுத்தங்களையும் கழிக்கிற ஆசனவழியாய் நீங்கிப்போகும்.

மாற்கு 7:20 மனுஷனுக்குள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்.

மாற்கு 7:21 எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலை பாதகங்களும்,

மாற்கு 7:22 களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும்.

மாற்கு 7:23 பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்.

உவமை எண் - 7

"மனுஷனுக்குப் புறம்பே இருந்து அவனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தமாட்டாது; அவன் உள்ளத்திலிருந்து புறப்படுகிறவைகளே அவனைத் தீட்டுப்படுத்தும்" - மாற்கு கூறியிருக்கிற ஏழாவது உவமை. (மாற்கு 7:15) போஜனபதார்த்தம் மனுஷனைத் தீட்டுப்படுத்தாது. இயேசு கிறிஸ்து மனுஷனுடைய சரீரத்தை அழிக்கும் போதைப் பொருட்களையோ, மதுபானங்களையோ, விஷப்பொருட்களையோ இங்கு குறிப்பிடவில்லை. சாதாரணமாக சரீரத்திற்கு போஜனமாக புசிக்கப்படும் போஜன பதார்த்தங்களைப் பற்றி இயேசு கிறிஸ்து இங்கு குறிப்பிடுகிறார். (மாற்கு 7:19; 2கொரி 7:1).

"கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனாயிருந்தால் கேட்கக்கடவன்" - (மத் 11:15)

"புறம்பேயிருந்து மனுஷனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்த மாட்டாது" - மனுஷனுடைய வயிற்றுக்குள் போகும் போஜனபதார்த்தம் அவனைத் தீட்டுப்படுத்தாது. (மாற்கு 7:19) இங்கு போஜனமும், இருதயத்தின் பாவங்களும் ஒப்பிடப்பட்டிருக்கிறது. (மாற்கு 7: 14-21).

ஆசனவழி **(draught)** - **ἀφεδρών** - **aphedroon** - 856

ஆண்பால் பெயர்ச்சொல் - ஆசனவழி **(place for bodily waste, sewer)** (மத் 15:17).

"மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலை பாதகங்களும்............" - இருதயமே பாவத்திற்கும், நீதிக்கும் ஆதாரம். இருதயம் பொல்லாததாய் இருந்தால், அவனுடைய சிந்தனையும் பொல்லாததாய் இருக்கும். இருதயம் சுத்தமானதாக இருந்தால் அவனுடைய ஜீவியமும் சுத்தமானதாக இருக்கும். அவன் நல்ல கனிகளைக் கொடுப்பான். (மத் 7:15-20)

7 அதிகாரம்

ஆத்துமாவை அழிக்கும் பாவங்கள்

1. பொல்லாத சிந்தனைகள் (2கொரி 10:4, மத் 15:18)
2. விபசாரங்கள் (மத் 5:32)
3. வேசித்தனங்கள் (மத் 5:32)
4. கொலைபாதகங்கள்
5. களவுகள் (யாத் 20:15)
6. பொருளாசைகள் (லூக்கா 12:15)
7. துஷ்டத்தனங்கள் (சங் 1:4; சங் 35:26, சங் 36:1; சங் 50:16)
8. கபடு (சங் 119:118)
9. காமவிகாரம் (கலா 5:19)
10. வன்கண் ((நீதி 23:6-7; நீதி 27:20; பிர 1:8; மத் 6:22-23, 1யோவான் 2:16)
11. தூஷணம் (யாத் 20:7)
12. பெருமை (சங் 101:5)
13. மதிகேடு (சங் 14:1, மாற்கு 7:21, 2கொரி 11:1, 2கொரி 11:17,21)

மதிகேடு **(Foolishness)** - ἀφροσύνη - **aphrosynee** - 877

பெண்பால் பெயர்ச்சொல் - மதிகேடு, புத்தியீனம் **(folly, senselessness, foolishly, foolishness, recklessness and thoughtlessness)**

பொல்லாத சிந்தனைகளுக்கு எடுத்துக்காட்டுக்கள்

1. பொதுவான துன்மார்க்கம் (ஆதி 6:5; சங் 64:5-6; ஏசா 59:7; ஏசா 65:2)
2. பொறாமை (ஆதி 50:20)
3. பொறுப்பைத் தட்டிக்கழித்தல் (உபா 15:9)
4. பொய்ச்சாட்சி (உபா 19:15-21)
5. உண்மையில்லாத தீர்மானம் (நியா 15:2)
6. கொலை (நியா 20:5)
7. நியாயந்தீர்த்தல் (1சாமு 1:13)
8. கொலைபண்ண சதியாலோசனை (1சாமு 18:25; நெகே 6:2; எஸ் 3:6)
9. பேராசை (2நாளா 32:1; எசே 38:10-12; லூக்கா 12:15-21)
10. பெருமை (எஸ் 6:6; சங் 10:4)
11. பொல்லாத சிந்தனை (யோபு 21:27; 2கொரி 10:4-7)
12. தவறான பாதுகாப்பு (சங் 49:11)
13. மாயை (சங் 94:11; சங் 119:113; எரே 4:14)
14. மதிகேடு (நீதி 24:9)
15. ஆட்சியாளர்களைச் சபித்தல் (பிர 10:20)
16. கவலைப்படுதல் (மத் 6:25-34; லூக்கா 12:11-26)
17. தவறாகக் குற்றம் சுமத்துதல் (மத் 9:3-4; மத் 12:24-25; லூக்கா 5:21-23; லூக்கா 11:17)
18. வெளிப்படையான மார்க்கச் சடங்குகளில் பெருமை (மத் 15:1-20; மாற்கு 7:1-22; லூக்கா 6:7-8)
19. தன்னைத்தானே உயர்த்துதல் (லூக்கா 9:46-48)

7 அதிகாரம்

20. சொந்த ஆதாயத்திற்காக தேவனுடைய வல்லமையைப் பெறவிரும்புதல் (அப் 8:18-24)

21. ஞானமில்லாத மார்க்க வைராக்கியம் (அப் 26:9-18)

22. மனுஷ ஞானத்திற்காகப் பெருமைப்படுதல் (1கொரி 3:18-21)

23. பட்சபாதம் (யாக் 2:1-4)

24. அவிசுவாசம் (லூக்கா 24:38)

வல்கண்ணுக்குக் காரணங்கள்

1. இருதயத்தின் கடினம் (உபா 15:9)
2. விரக்தி (உபா 28:54-57)
3. துன்மார்க்கம் (யோபு 24:15; 2பேதுரு 2:14; ஏசா 3:16; எசே 6:9)
4. பேராசை (நீதி 28:22)
5. இருள் (மத் 6:22-23; லூக்கா 11:34; யோவான் 12:40; அப் 26:18)
6. திருப்தியின்மையும், முறுமுறுப்பும் (மத் 20:15)
7. இச்சைகள் (1யோவான் 2:16)
8. கலக குணம் (மத் 13:15)

45. சீரோபேனிக்கேய ஸ்திரீயின் மகளை இயேசு குணப்படுத்துகிறார் - (மத் 8:17; 15:21; மாற்கு 16:17-18; 1பேதுரு 2:24; யாக் 5:14)

மாற்கு 7:24 பின்பு, அவர் எழுந்து அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, தீரு சீதோன் பட்டணங்களின் எல்லைகளில் போய், ஒரு வீட்டுக்குள் பிரவேசித்து, ஒருவரும் அதை அறியாதிருக்க விரும்பியும், அவர் மறைவாயிருக்கக் கூடாமற்போயிற்று.

மாற்கு 7:25 அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு சிறு பெண்ணின் தாயாகிய ஒரு ஸ்திரீ அவரைக்குறித்துக் கேள்விப்பட்டு, வந்து அவர் பாதத்தில் விழுந்தாள்.

மாற்கு 7:26 அந்த ஸ்திரீ சீரோபேனிக்கியா தேசத்தாளாகிய கிரேக்க ஸ்திரீயாயிருந்தாள்; அவள் தன் மகளைப் பிடித்திருந்த பிசாசைத் துரத்திவிடவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டாள்.

மாற்கு 7:27 இயேசு அவளை நோக்கி: முந்திப் பிள்ளைகள் திருப்தியடையட்டும்; பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார்.

மாற்கு 7:28 அதற்கு அவள்: மெய்தான், ஆண்டவரே, ஆகிலும், மேஜையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் பிள்ளைகள் சிந்துகிற துணிக்கைகளைத் தின்னுமே என்றாள்.

மாற்கு 7:29 அப்பொழுது, அவர்: நீ சொன்ன அந்த வார்த்தையினிமித்தம் போகலாம். பிசாசு உன் மகளை விட்டு நீங்கிப்போயிற்று என்றார்.

மாற்கு 7:30 அவள் தன் வீட்டுக்கு வந்தபொழுது, பிசாசு போய்விட்டதையும், தன் மகள் கட்டிலில் படுத்திருக்கிறதையும் கண்டாள்.

"ஒரு வீட்டுக்குள் பிரவேசித்து, ஒருவரும் அதை அறியாதிருக்க விரும்பியும், அவர் மறைவாயிருக்கக் கூடாமற்போயிற்று" - இயேசு கிறிஸ்து விளம்பரப்பிரியர் அல்ல. தம்மை விளம்பரப்படுத்த அவர் ஒருபோதும் முயற்சி செய்யவில்லை. தேவனுடைய ஊழியக் காரர்களாகிய நமக்கு அவருடைய சுபாவம் ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

"சிறுபெண்" - (மாற்கு 5:23)

கிரேக்கம் (Greek) - Ἑλληνίς - **Helleenis** – 1674

7 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - கிரேக்க ஸ்திரீ - யூதமார்க்கத்தார் அல்லாதவர்கள் அனைவரையுமே இந்தப் பெயரைச் சொல்லி அழைத்தார்கள். (ரோமர் 1:16; ரோமர் 10:12; கலா 3:28; கொலோ 3:11)

"சீரோபேனிக்கியா" - சீரியாவிலுள்ள பேனிக்கியா தேசம். ஆப்பிரிக்காவில் ஒரு பேனிக்கியா தேசம் உள்ளது. இதை வித்தியாசப்படுத்திக் காண்பிப்பதற்காக மாற்கு சீரோபேனிக்கியா தேசத்தாள் என்று எழுதுகிறார்.

"முந்திப் பிள்ளைகள் திருப்தியடையட்டும்; பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல" - மத் 15:23-24 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற கருத்து. புறஜாதியாரை இரட்சிப்பது தேவனுடைய திட்டம். என்றாலும் தமது இரட்சிப்பை முதன்முதலாக யூதருக்கே அறிமுகப்படுத்தினார். புறஜாதியாருக்கு ஊழியக்காரராக ஆகுமாறு யூதருக்கே முதலாவது வாய்ப்பைக் கொடுத்தார். (மத் 21:32; யோவான் 1:11; யோவான் 10:16; ரோமர் 1:16; ரோமர் 9: 23-33; எபே 3) இயேசு கிறிஸ்து அந்த ஸ்திரீயின் விசுவாசத்தையும், தீர்மானத்தையும் சோதிக்கிறார். அந்த ஸ்திரீ இந்தப் பரீட்சையில் வெற்றி பெறுகிறாள். (மத் 15:25-27)

"மேஜையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் பிள்ளைகள் சிந்துகிற துணிக்கைகளைத் தின்னுமே" - (மத் 15:27)

"நீ சொன்ன அந்த வார்த்தையினிமித்தம் போகலாம். பிசாசு உன் மகளை விட்டு நீங்கிப்போயிற்று" - (மத் 15:28)

46. கொன்னை வாயுடைய செவிடனை சொஸ்தமாக்குகிறார் - (மத் 15:29)

மாற்கு 7:31 மறுபடியும், அவர் தீரு சீதோன் பட்டணங்களின் எல்லைகளை விட்டுப் புறப்பட்டு, தெக்கப்போலியின் எல்லைகளின் வழியாய்க் கலிலேயாக் கடலருகே வந்தார்.

மாற்கு 7:32 அங்கே கொன்னை வாயுடைய ஒரு செவிடனை அவரிடத்தில் கொண்டுவந்து, அவர் தமது கையை அவன்மேல் வைக்கும்படி வேண்டிக் கொண்டார்கள்.

மாற்கு 7:33 அப்பொழுது, அவர் அவனை ஜனக்கூட்டத்தை விட்டுத்தனியே அழைத்துக் கொண்டுபோய், தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, அவனுடைய நாவைத் தொட்டு;

மாற்கு 7:34 வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சுவிட்டு: எப்பத்தா என்றார்; அதற்குத் திறக்கப்படுவாயாக என்று அர்த்தமாம்.

மாற்கு 7:35 உடனே அவனுடைய செவிகள் திறக்கப்பட்டு, அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்து, அவன் செவ்வையாய்ப் பேசினான்.

மாற்கு 7:36 அதை ஒருவருக்கும் சொல்ல வேண்டாமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்; ஆகிலும் எவ்வளவு அதிகமாய் அவர்களுக்குக் கட்டளையிட்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்கள் அதைப் பிரசித்தம் பண்ணி,

மாற்கு 7:37 எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்; செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும் பண்ணுகிறார் என்று சொல்லி, மேன்மேலும் ஆச்சரியப்பட்டார்கள்.

"தீரு சீதோன் பட்டணங்களின் எல்லைகள்" - மத்தியதரைக்கடலின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் தீரு, சீதோன் பட்டணங்கள் அமைந்துள்ளன. தெக்கப்போலியின் எல்லைகள் (மாற்கு 5:20)

"கொன்னைவாயுடைய ஒரு செவிடன்" - பிசாசின் கிரியையினால் இவன் செவிடனாக இருக்கிறான். (மாற்கு 9:25) தெளிவாகப் பேசமுடியவில்லை. கொன்னிப்பேசுகிறான். (மாற்கு 7:35)

"அவர் தமது கையை அவன்மேல் வைக்கும்படி வேண்டிக்கொண்டார்கள்" - (மத் 8:3)

மாற்கு - தொகுப்புரை

7 அதிகாரம்

கொன்னைவாயுடைய செவிடனுக்கு இயேசு கிறிஸ்து செய்த காரியங்கள்

1. அவர் அவனை ஜனக்கூட்டத்தை விட்டுத் தனியே அழைத்துக்கொண்டுபோனார்.
2. தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்தார்.
3. தரையில் உமிழ்ந்தார்.
4. அவனுடைய நாவைத் தொட்டார்.
5. வானத்தை அண்ணாந்துபார்த்தார்.
6. பெருமூச்சுவிட்டார். (ரோமர் 8:23; 2கொரி 5:2,4)
7. காதுகள் திறக்கப்படுவாயாக என்றார்

"எப்பத்தா" - அராமாயிக் மொழிச்சொல். திறக்கப்படுவாயாக என்பது இதன் பொருள்.

கட்டு (string) - δεσμός - **desmos** - 1199

ஆண்பால் பெயர்ச்சொல் - கட்டு, விலங்கு **(a band or chain)** (லூக்கா 8:29; அப் 16:26; அப் 22:30). சாத்தானுடைய வல்லமையினால் கட்டப்படுதல் (லூக்கா 13:16)

"அதை ஒருவருக்கும் செல்லவேண்டாமென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்;......அவர்கள் அதைப் பிரசித்தம் பண்ணினார்கள்" (மத் 8:4)

"எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்; செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும் பண்ணுகிறார் என்று சொன்னார்கள்" - இயேசு கிறிஸ்துவைக் குறித்து ஜனங்கள் கூறிய உண்மையான சாட்சி. அவர் செய்யும் எல்லாக் காரியங்களையும் நன்றாக செய்தார். பூரணமாகச் செய்தார். வியாதியஸ்தரை அவர் அரை குறையாகக் குணப்படுத்துவதில்லை. இயேசு கிறிஸ்து பரிபூரண சுகம் கொடுக்கிறவர். (மத் 13:58)

8 அதிகாரம்

47. நான்காயிரம் பேருக்கு இயேசு அற்புதமாக போஜனம் கொடுக்கிறார் - (மத் 15:32; 14:15)

மாற்கு 8:1 அந்த நாட்களிலே திரளான ஜனங்கள் கூடி வந்திருக்கையில், அவர்கள் சாப்பிடுகிறதற்கு ஒன்றுமில்லாதபோது, இயேசு தம்முடைய சீஷரை அழைத்து:

மாற்கு 8:2 ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன், இவர்கள் இப்பொழுது என்னிடத்தில் தங்கியிருந்த மூன்றுநாளாய்ச் சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள்.

மாற்கு 8:3 இவர்களில் சிலர் தூரத்திலிருந்து வந்தவர்களாகையால், நான் இவர்களைப் பட்டினியாய் வீட்டிற்கு அனுப்பிவிட்டால் வழியில் சோர்ந்து போவார்களே என்றார்.

மாற்கு 8:4 அதற்கு அவருடைய சீஷர்கள்: இந்த வனாந்தரத்திலே ஒருவன் எங்கேயிருந்து அப்பங்களைக் கொண்டுவந்து இத்தனை பேர்களைத் திருப்தியாக்கக்கூடும் என்றார்கள்.

மாற்கு 8:5 அதற்கு அவர்: உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள் உண்டு என்று கேட்டார். அவர்கள்: ஏழு அப்பங்கள் உண்டு என்றார்கள்.

மாற்கு 8:6 அப்பொழுது அவர் ஜனங்களைத் தரையிலே பந்தியிருக்க கட்டளையிட்டு, அந்த ஏழு அப்பங்களையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, பிட்டு, அவர்களுக்குப் பரிமாறும்படி சீஷர்களிடத்தில் கொடுத்தார்; அவர்கள் ஜனங்களுக்குப் பரிமாறினார்கள்.

மாற்கு 8:7 சில சிறுமீன்களும் அவர்களிடத்தில் இருந்தது; அவர் அவைகளையும் ஆசீர்வதித்து அவர்களுக்குப் பரிமாறும்படி சொன்னார்.

மாற்கு 8:8 அவர்கள் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகளை ஏழுகூடைநிறைய எடுத்தார்கள்.

மாற்கு 8:9 சாப்பிட்டவர்கள் ஏறக்குறைய நாலாயிரம் பேராயிருந்தார்கள். பின்பு அவர் அவர்களை அனுப்பிவிட்டார்.

"ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன்" - (மத் 9:36) திரளான ஜனங்கள் புசிப்பதற்கு போஜனம் இல்லாமல் அங்கு கூடியிருக்கிறார்கள். அவ்வளவு பேருக்கும் போஜனம் கொடுக்க அங்கு அப்பங்கள்இல்லை. ஒருசில அப்பங்கள் மட்டுமே இருந்தது. ஒருசில அப்பங்களை மட்டும் வைத்துக் கொண்டு எல்லோருக்கும் திருப்தியாகப் பரிமாறுவது இயலாத காரியம். மனுஷரால் இது கூடாதது. ஆனால் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமேயில்லை. இயேசு கிறிஸ்து எல்லோருக்கும் திருப்தியாக போஜனம் கொடுத்தார். (மத் 17:20; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12)

"அந்த ஏழு அப்பங்களையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணினார்" - ஒவ்வொரு முறை போஜனம் பண்ணும்போதும் தேவனுக்கு ஸ்தோத்திரம் பண்ணுவது யூதருடைய வழக்கம். (மத் 15:36; மாற்கு 6:41; யோவான் 6:11; 1கொரி 10:16)

"அப்பங்களைப் பிட்டார்" - அப்பங்கள் ஒரு அங்குல கனமுள்ளதாக இருக்கும். இதைப் பங்குவைப்பதற்காக பிட்டுக் கொடுக்க வேண்டும். யூதருடைய அப்பங்கள் கடினமாக இருக்கும். யூதருடைய வழக்கத்தில் "அப்பம் பிட்குதல்" என்னும் வார்த்தைக்கு "போஜனம் பண்ணுதல்" என்று பொருள். (லூக்கா 24:35; அப் 2:42,46; அப் 26:26; அப் 27:35; 1கொரி 10:16)

கூடைகள் (baskets) - σπυρίς - spyris - 4711

பெண்பால் பெயர்ச்சொல் - கூடை

8 அதிகாரம்

இந்தக் கூடைகள் அளவில் பெரியவை. ஒரு மனுஷனைக் கூட ஒரு கூடையில் அடக்கி விடலாம். (அப் 9:25) இந்தக் கூடைகளைப் பற்றிய குறிப்பு இந்த வசனத்திலும், அத்துடன் மாற்கு 8:20; மத் 15:37; மத் 16:10; அப் 9:25 ஆகிய வசனங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. 4,000 புருஷர்களும், ஏராளமான ஸ்திரீகளும், குழந்தைகளும் திருப்தியாகப் புசித்தார்கள். (மாற்கு 8:9, 20; மத் 15:38) மீதியான அப்பங்களை ஏழு கூடை நிறைய எடுத்தார்கள் என்று வாசிக்கிறோம். கூடையின் அளவும் பெரியது. ஆகையினால் ஒவ்வொரு கூடையிலும் ஏராளமான துணிக்கைகளைச் சேகரித்திருப்பார்கள். மாற்கு 8:19 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிற கூடையும், இந்தக் கூடையும் வெவ்வேறானவை. அந்தக் கூடை அளவில் சிறியது. இது அளவில் பெரியது.

48. பரிசேயரை இயேசு மறுபடியும் கடிந்து கொள்கிறார் - (மத் 16:1; லூக் 12:54)

மாற்கு 8:10 உடனே அவர் தம்முடைய சீஷரோடே கூடப் படவில் ஏறி, தல்மனூத்தாவின் எல்லைகளில் வந்தார்.

மாற்கு 8:11 அப்பொழுது பரிசேயர் வந்து அவரோடே தர்க்கிக்கத் தொடங்கி, அவரைச் சோதிக்கும்படி, வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டார்கள்.

மாற்கு 8:12 அவர் தம்முடைய ஆவியில் பெருமூச்சுவிட்டு: இந்தச் சந்ததியார் அடையாளம் தேடுகிறதென்ன? இந்தச் சந்ததியாருக்கு ஒரு அடையாளமும் கொடுக்கப்படுவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி,

மாற்கு 8:13 அவர்களை விட்டு மறுபடியும் படவில் ஏறி, அக்கரைக்குப் போனார்.

"தல்மனூத்தா" **(Dalmanutha)** - கலிலேயாக் கடலின் மேற்குக் கரையிலுள்ள பட்டணம். மத்தேயு இதை மகதலா **Magdala,** என்று குறிப்பிடுகிறார். ஆகையினால், இவ்விரண்டு பெயர்களும் ஒரே இடத்தைக் குறிக்கலாம். அல்லது இவ்விரண்டு இடங்களும் மிகவும் அருகாமையிலுள்ள இடங்களாக இருக்கலாம்.

"பரிசேயர் வந்து அவரோடே தர்க்கிக்கத் தொடங்கினார்கள்" - மாற்கு ஒரு நிகழ்ச்சியை எழுதும்போது அதற்கு அழகாக ஒரு முன்னுரையைக் கொடுப்பது வழக்கம். அதுபோன்ற முன்னுரையே இங்கு கூறப்பட்டிருக்கிறது. மாற்கு சுவிசேஷத்தில் காணப்படும் மற்ற நிகழ்ச்சிகளும், முன்னுரைகளும். (மாற்கு 1:1,45; மாற்கு 4:1; மாற்கு 5:17,20; மாற்கு 6:2,7,34,55; மாற்கு 8:11,31,32; மாற்கு 10:41,47; மாற்கு 11:15; மாற்கு 12:1; மாற்கு 13:5; மாற்கு 14:19,33, 65,69,71; மாற்கு 15:8,18)

"வானத்திலிருந்து ஒரு அடையாளம்" - (மத் 12: 38-39; மத் 16:1-4; லூக்கா 11:16, 29-30; யோவான் 2:18; யோவான் 6:30)

சோதனை மூன்று இடங்களிலிருந்து வரும். அவையாவன:

1. சாத்தான் (மத் 4:3)

2. மனுஷர் (மாற்கு 8:11)

3. ஒருவனுடைய சொந்த ஆசைகள் (யாக் 1:13-15)

"இயேசு தம்முடைய ஆவியில் பெருமூச்சு விட்டார்" - மாற்கு 7:34; ரோமர் 8:23; 2கொரி 5:2,4 ஆகிய வசனங்களில் கூறப் பட்டிருக்கிற பிரகாரமாக ஆவியானவருக்குள் "தவிப்பது", "பெருமூச்சுவிடுவது" என்று பொருள்படும். இயேசு கிறிஸ்து பல அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்தார். ஆனாலும், ஏராளமான ஜனங்கள் அவரை நம்பி, அவரை ஏற்றுக்கொண்டு, அவரிடத்தில் வரவில்லை. ஆகையினால், அவர்கள்மீது ஏற்பட்ட துக்கத்தினாலும், பரிதாபத்தினாலும் இயேசு கிறிஸ்து தமது ஆவியில் தவித்து, பெருமூச்சு விடுகிறார்.

8 அதிகாரம்

"இந்தச் சந்ததியார் அடையாளம் தேடுகிறதென்ன?" - மனுஷரோடு தொடர்புடைய தெய்வீகப் பிரச்சனையை இந்தக் கேள்வி எழுப்புகிறது. மனுஷர் தேவனிடத்தில் விசுவாசத்தோடு வரவேண்டும். தெய்வீகச் சித்தத்திற்கும், திட்டத்திற்கும் ஒப்புக்கொடுக்க வேண்டும். நமது திட்டத்தை ஏற்றுக் கொள்ளுமாறு ஆண்டவரிடம் வலியுறுத்தக்கூடாது.

"இந்தச் சந்ததியாருக்கு ஒரு அடையாளமும் கொடுக்கப்படுவதில்லை" - அவிசுவாசிகளுடைய ஆசைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்னும் அவசியம் இயேசு கிறிஸ்துவிற்கு இல்லை. ஏற்கெனவே அநேக அற்புதங்களை இயேசு கிறிஸ்து அவர்களுக்காகச் செய்திருக்கிறார். அப்போதெல்லாம் அவர்கள் இயேசுவை நம்பவில்லை. இனிமேல் அவர் அற்புதங்களைச் செய்தாலும், அவர்கள் நம்பப்போவதுமில்லை. தங்களுடைய சொந்த அழிவை அவர்களே தேடிக்கொண்டார்கள்.

49. பரிசேயர், சதுசேயர் ஆகியோரின் புளித்தமாவைப் பற்றிய விளக்கம் - (மத் 16:6)

மாற்கு 8:14 சீஷர்கள் அப்பங்களைக் கொண்டுவர மறந்துபோனார்கள்; படவிலே அவர்களிடத்தில் ஒரு அப்பமாத்திரம் இருந்தது.

மாற்கு 8:15 அவர் அவர்களை நோக்கி: நீங்கள் பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்தும் ஏரோதின் புளித்தமாவைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் என்று கற்பித்தார்.

மாற்கு 8:16 அதற்கு அவர்கள்: நம்மிடத்தில் அப்பங்கள் இல்லாதபடியால் இப்படிச் சொல்லுகிறார் என்று தங்களுக்குள்ளே யோசனை பண்ணிக் கொண்டார்கள்.

மாற்கு 8:17 இயேசு அதை அறிந்து, அவர்களை நோக்கி: உங்களிடத்தில் அப்பங்கள் இல்லாதபடியினால் நீங்கள் யோசனை பண்ணுகிறதென்ன? இன்னும் சிந்தியாமலும் உணராமலும் இருக்கிறீர்களா? இன்னும் உங்கள் இருதயம் கடினமாயிருக்கிறதா?

மாற்கு 8:18 உங்களுக்குக் கண்களிருந்தும் காணாது இருக்கிறீர்களா? காதுகளிருந்தும் கேளாதிருக்கிறீர்களா? நினைவு கூராமலுமிருக்கிறீர்களா?

மாற்கு 8:19 நான் ஐந்து அப்பங்களை ஐயாயிரம் பேருக்குப் பங்கிட்டபோது, மீதியான துணிக்கைகளை எத்தனை கூடைநிறைய எடுத்தீர்கள் என்று கேட்டார். பன்னிரண்டு என்றார்கள்.

மாற்கு 8:20 நான் ஏழு அப்பங்களை நாலாயிரம் பேருக்குப் பங்கிட்டபோது, மீதியான துணிக்கைகளை எத்தனை கூடைநிறைய எடுத்தீர்கள் என்று கேட்டார். ஏழு என்றார்கள்.

மாற்கு 8:21 அப்படியானால், நீங்கள் உணராதிருக்கிறது எப்படி என்றார்.

எச்சரிக்கையாயிரு (beware) - βλέπω - blepoo - 991

வினைச்சொல் - பார், பார்வையளி, காண், தரிசி, அறிந்திரு, எச்சரிக்கையாயிரு, நோக்கு, தரிசனங்காண் (hold the mind towards, pay attention to; be cautious about) (மத் 11:29)

நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டிய காரியங்கள்

1. தேவனை மறப்பது (உபா 6:12; உபா 8:11)
2. தேவனுக்கு கோபம் மூட்டுவது (யாத் 23:21)
3. ஏழைகளை மறப்பது (உபா 15:9)
4. கள்ள உபதேசங்கள் (மத் 16:6-12; மாற்கு 8:15; லூக்கா 12:1)
5. கள்ளத்தீர்க்கதரிசிகள் (மத் 7:15; பிலி 3:2; 2கொரி 11:14-15)

8 அதிகாரம்

6. பேராசை (லூக்கா 12:15)
7. துன்மார்க்கர் (மத் 10:17)
8. வேதபாரகர் (மாற்கு 12:38; லூக்கா 20:46)
9. அடையாளங்கள் (அப் 13:40-41)
10. பின்மாற்றம் (2பேதுரு 3:17; கொலோ 2:8)

"பரிசேயருடைய புளித்தமாவைக்குறித்தும் ஏரோதின் புளித்தமாவைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்" - பரிசேயருடைய கள்ள உபதேசங்களைக் குறித்தும், ஏரோதின் கள்ள உபதேசங்களைக் குறித்தும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். (மத் 16:12).

"உங்களிடத்தில் அப்பங்கள் இல்லாத படியினால் நீங்கள் யோசனை பண்ணுகிறதென்ன?" - இயேசு கிறிஸ்து ஒரு காரியத்தைப் பற்றிக்கூறும்போது சீஷர்கள் வேறொரு காரியத்தைப் பற்றி யோசனை பண்ணுகிறார்கள். இயேசு கிறிஸ்து கூறுவதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இன்றைக்கும் அநேகர் சத்திய வசனங்களைப் புரிந்து கொள்வதில்லை.

சத்திய வசனங்களைப் புரிந்து கொள்ளாமல் இருப்பதற்குக் காரணங்கள்

1. சந்தேகம், அவிசுவாசம், சுயஞானம் (மாற்கு 8:17)
2. சோம்பேறித்தனம், ஆர்வமின்மை (மாற்கு 8:17)
3. அறியாமை, வேதவாக்கியத்தை வாசிக்க வேண்டும் என்னும் அக்கறையின்மை (மாற்கு 8:17)
4. இருதயக்கடினம், (மாற்கு 8:17)
5. சத்தியத்தைக் காணக்கூடாதவாறு தங்கள் கண்களை வேண்டுமென்றே ஆவிக்குரிய காரியங்களுக்குக் குருடாக்குதல் (மாற்கு 8:18; மத் 13:14-15)
6. சத்தியத்தைக் கேட்கக்கூடாதவாறு தங்கள் காதுகளை வேண்டுமென்றே ஆவிக்குரிய காரியங்களுக்குச் செவிடாக்குதல் (மாற்கு 8:18)
7. சத்தியத்தை நினைவில் வைத்திருக்காதபடி வேண்டுமென்றே மறத்தல். (மாற்கு 8:18; மாற்கு 4:12)

இவையனைத்தும், மனுஷன் வேண்டுமென்றே தெரிந்து கொள்ளும் காரியங்கள். சீஷர்கள் இவர்களைப் போன்றவர்கள் அல்ல. சற்று நேரத்திற்கு முன்புதான் இயேசுவின் அற்புதத்தைக் கண்டார்கள். திரளான ஜனங்களுக்குப் போஜனம் கொடுக்கும்போது இவர்கள்தான் அதைப் பரிமாறினார்கள். இயேசு கிறிஸ்து பிசாசுகளைத் துரத்தும்போதும், வியாதிகளைச் சொஸ்தமாக்கும்போதும் சீஷர்கள் அவரோடுகூடவே இருந்தார்கள். ஆகையினால் இவர்களுக்கு மற்றவர்களைவிட விசேஷித்த விசுவாசமும் தெய்வீக ஞானமும் இருக்க வேண்டும். ஆனால் இவர்கள் சாதாரண மனுஷரைப்போன்றே இருக்கிறார்கள். ஆகையினால் இயேசு கிறிஸ்து இவர்களைப் பார்த்து, "உங்களுக்குக் கண்களிருந்தும் காணாதிருக்கிறீர்களா? காதுகளிருந்தும் கேளாதிருக்கிறீர்களா? நினைவு கூராமலுமிருக்கிறீர்களா?" என்று கூறுகிறார்.

50. இயேசு குருடனை சொஸ்தப் படுத்துகிறார்

மாற்கு 8:22 பின்பு அவர் பெத்சாயிதா ஊருக்கு வந்தார்; அப்பொழுது ஒரு குருடனை அவரிடத்தில் கொண்டுவந்து, அவனைத் தொடும்படி அவரை வேண்டிக்கொண்டார்கள்.

மாற்கு 8:23 அவர் குருடனுடைய கையைப் பிடித்து, அவனைக் கிராமத்துக்கு வெளியே அழைத்துக் கொண்டுபோய், அவன் கண்களில் உமிழ்ந்து, அவன்மேல் கைகளை வைத்து; எதையாகிலும் காண்கிறாயா என்று கேட்டார்.

மாற்கு 8:24 அவன் ஏறிட்டுப் பார்த்து; நடக்கிறமனுஷரை மரங்களைப்போலக் காண்கிறேன் என்றான்.

8 அதிகாரம்

மாற்கு 8:25 பின்பு அவர் மறுபடியும் அவன் கண்களின்மேல் கைகளை வைத்து, அவனை ஏறிட்டுப் பார்க்கும்படி செய்தார்; அப்பொழுது அவன் சொஸ்தமடைந்து, யாவரையும் தெளிவாய்க் கண்டான்.

மாற்கு 8:26 பின்பு அவர் அவனை நோக்கி: நீ கிராமத்தில் பிரவேசியாமலும், கிராமத்தில் இதை ஒருவருக்கும் சொல்லாமலும் இரு என்று சொல்லி, அவனை வீட்டிற்கு அனுப்பிவிட்டார்.

"பெத்சாயிதா" **(Bethsaida)** - இயேசு கிறிஸ்து ஏற்கெனவே இந்தப் பட்டணத்தைச் சபித்திருந்தார். ஆகையினால் இங்கு இன்னொரு அற்புதத்தைச் செய்ய அவருக்கு விருப்பம் இல்லை. ஆகையினால் அவர் குருடனுடைய கையைப் பிடித்து, அவனைக் கிராமத்துக்கு வெளியே அழைத்துக் கொண்டுபோனார். ஊருக்கு வெளியே அவனைச் சொஸ்தமாக்கினார். (மாற்கு 8:23; மத் 11:21)

"அவர் மறுபடியும் அவன் கண்களின்மேல் கைகளை வைத்தார்" - இந்த வாக்கியத்தைப் பலவிதமாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள். இயேசு கிறிஸ்துவிற்கு வல்லமையில்லை. ஆகையினால் முதல் தடவை அவன்மீது கைகளை வைத்தபோது, அந்தக் குருடன் பார்வை அடையவில்லை என்று கூறுகிறார்கள். இப்படிப்பட்ட வியாக்கியானங்கள் தவறானவை. இயேசு கிறிஸ்து யாரையும் தவணைமுறையில் குணப்படுத்துவதில்லை. அவர் ஒரு வார்த்தை சொன்னாலே போதுமானது. வியாதி சொஸ்தமாகும். பிசாசுகள் ஓடிப்போகும்.

"நீ கிராமத்தில் பிரவேசியாமலும், கிராமத்தில் இதை ஒருவருக்கும் சொல்லாமலும் இரு என்று சொல்லி, அவனை வீட்டிற்கு அனுப்பிவிட்டார்" - தேவனுடைய அற்புதம் பெத்சாயிதா கிராமத்திற்கு மறுபடியும் அறிவிக்கப்பட வேண்டியதில்லை என்பதில் இயேசு உறுதியாக இருந்தார். ஆகையினால் அந்தக் கிராமத்தில் இந்த அற்புதத்தைக் குறித்து ஒருவருக்கும் சொல்லவேண்டாமென்று இயேசு கட்டளையிட்டார். (மத் 11:21)

51. பேதுருவின் அறிக்கை - (மத் 16:13; லூக் 9:18; யோவான் 6:67)

மாற்கு 8:27 பின்பு, இயேசுவும் அவருடைய சீஷர்களும் புறப்பட்டு, பிலிப்புச் செசரியா பட்டணத்தைச் சேர்ந்த கிராமங்களுக்குப் போனார்கள். வழியிலே அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார்.

மாற்கு 8:28 அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், வேறு சிலர் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்.

மாற்கு 8:29 அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்; பேதுரு பிரதியுத்தரமாக: நீர் கிறிஸ்து என்றான்.

மாற்கு 8:30 அப்பொழுது தம்மைக் குறித்து ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு அவர்களுக்கு உறுதியாய்க் கட்டளையிட்டார்.

"பிலிப்புச் செசரியா" **(Caesarea Philippi)** (மத் 16:13)

"ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள்" - இந்தக் கேள்வியோடு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் பகுதி ஊழியம் நிறைவேறு பெறுகிறது. இதுவரையிலும் இயேசுகிறிஸ்து தமது தெய்வத்துவத்தை ஜனங்களுக்கு வெளிப்படுத்தி, அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் உறுதிப்படுத்தி வந்தார். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் இதற்கு அடுத்து வரும் பகுதி அவருடைய பாடுகளின் பகுதியாகும். (மாற்கு 8:31).

"நீர் கிறிஸ்து" **(Thou art the Christ)** - (மத் 16:16) நாமும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக்கூறும்போது, இயேசுவைக் கிறிஸ்து என்று அறிக்கையிட வேண்டும்.

"தம்மைக் குறித்து ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு அவர்களுக்கு உறுதியாய்க் கட்டளையிட்டார்" - (மத் 8:4)

8 அதிகாரம்

52. தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 16:21; லூக் 9:22)

மாற்கு 8:31 அல்லாமலும், மனுஷகுமாரன் பல பாடுகள் பட்டு, மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்பட்டு, கொல்லப்பட்டு, மூன்று நாளைக்குப் பின்பு உயிர்த்தெழுந்திருக்க வேண்டியதென்று அவர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார்.

"அவர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார்" - இயேசு கிறிஸ்துவின் மூன்றாம் பகுதி ஊழியம் ஆரம்பமாகிறது. இந்த ஊழியப்பகுதியில் அவரை ஜனங்கள் ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணிக்கிறார்கள். இயேசு கிறிஸ்து பல பாடுகளை அனுபவிக்கிறார்.

தீர்க்கதரிசன எண் - 5

"மனுஷகுமாரன் பல பாடுகள் பட்டு, மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்பட்டு, கொல்லப்பட்டு, மூன்று நாளைக்குப்பின்பு உயிர்த்தெழுந்திருக்க வேண்டியது" (மாற்கு 8:31) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (மத் 12:40)

53. இயேசுவும் பேதுருவும் ஒருவரையொருவர் கடிந்து கொள்கிறார்கள் - (மத் 16:22)

மாற்கு 8:32 இந்த வார்த்தையை அவர் தாராளமாகச் சொன்னார். அப்பொழுது, பேதுரு அவரைத் தனியே அழைத்துக் கொண்டுபோய், அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான்.

மாற்கு 8:33 அவர் திரும்பித் தம்முடைய சீஷரைப் பார்த்து, பேதுருவை நோக்கி: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்று சொல்லி, அவனைக் கடிந்து கொண்டார்.

"எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே" - (மத் 16:23)

54. சீஷத்துவத்திற்குச் சோதனை - ஆத்துமாவின் மதிப்பு - (மத் 8:18; 10:37; 16:24; லூக் 9:23)

மாற்கு 8:34 பின்பு அவர் ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் தம்மிடத்தில் அழைத்து: ஒருவன் என் பின்னே வரவிரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.

மாற்கு 8:35 தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான், என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான்.

மாற்கு 8:36 மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?

மாற்கு 8:37 மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?

மாற்கு 8:38 ஆதலால் விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததியில் என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுவானோ, அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமைபொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும்போது வெட்கப்படுவார் என்றார்.

8 அதிகாரம்

"ஒருவன் என் பின்னே வரவிரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" - நாம் இயேசு கிறிஸ்துவை உண்மையாகவும், உத்தமமாகவும், மனத்தாழ்மையோடும் பின்பற்ற வேண்டும். நம்மை நாமே வெறுத்து, நமது சிலுவையை எடுத்துக்கொண்டு, இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும். இதைத் தீர்மானம் பண்ண வேண்டியது நாம்தான். இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களுக்கு நாம் கீழ்ப்படிந்து அவருக்குப் பின்செல்ல வேண்டும். (யோவான் 3:16; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17)

"பின்பற்றக்கடவன்" - இந்த வாக்கியம் எத்தனை துன்பங்கள் வந்தாலும் இயேசுவைப் பின்பற்ற வேண்டும் என்னும் கட்டளையைக் குறிக்கிறது. மரணமே வந்தாலும் இயேசுவைப் பின்பற்ற வேண்டும். (மாற்கு 8:35) வசதிப்பட்டால் வசதியான நேரத்தில் இயேசுவைப் பின்பற்றிக்கொள்ளலாம் என்னும் பொருளை இந்த வாக்கியம் வெளிப்படுத்தவில்லை. (லூக்கா 9:62; எபி 10:38-39)

ஒருவர் மறுபடியும் பிறந்த பின்பு, செய்ய வேண்டிய காரியங்கள்

1. இயேசு கிறிஸ்துவைத் தொடர்ந்து பின்பற்றுவதற்கு மனம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். (மாற்கு 8:34; யோவான் 7:17; யோவான் 12:26)
2. அனுதினமும் தன்னைத்தானே வெறுக்க வேண்டும். தன் சுயத்தைச் சார்ந்திருக்கக் கூடாது. தேவனுக்கு விரோதமான ஆசைகளைப் பற்றிக் கொண்டிருக்கக் கூடாது. (மாற்கு 8:34; ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; கலா 5:19-24; கொலோ 3:1-10)
3. அனுதினமும் தன் சிலுவையை எடுத்துக் கொள்ள வேண்டும். (மாற்கு 8:34; லூக்கா 9:23; ரோமர் 6:11-13; ரோமர் 8:12-13; கொலோ 1:23; கொலோ 2:6-7; கொலோ 3:5-10)
4. எப்போதாவது இயேசுவைப் பின்பற்றலாம் என்றிருக்காமல் அனுதினமும் எப்போதும் இயேசுவைப் பின்பற்ற வேண்டும். (யோவான் 10:26-28)

"தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்" - தன்னுடைய ஜீவனை இரட்சிப்பதற்குத் தனது சொந்த முயற்சியையோ அல்லது சொந்த பலத்தையோ, சொந்த ஞானத்தையோ சார்ந்திருக்கக்கூடாது. மேலே கூறப்பட்டிருக்கிற நான்கு காரியங்களையும் கடைப்பிடிக்க வேண்டும். இல்லையெனில், அவன் தன் ஆத்துமாவை இழந்துவிடுவான்.

"என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தின் நிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான்" - இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்காக ஒரு மனுஷன் எதையும் இழந்துபோகலாம். அவன் எதை இழந்தாலும், இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதினால், அவன் தன் ஆத்துமாவை இரட்சித்துக் கொள்கிறான். ஒருவன் இந்த உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், அவன் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு ஒரு இலாபமும் இல்லை. அனுதினமும் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசு கிறிஸ்துவைப் பின்செல்லுகிறவர்களுக்கு இம்மையிலும், மறுமையிலும் ஏராளமான ஆசீர்வாதங்கள் வரும். அவன் நித்தியத்தைச் சுதந்தரித்துக் கொள்வான். (மத் 19:29; ரோமர் 8: 16-18; 1பேதுரு 1:4-5).

"என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தின் நிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவன்" - விசுவாசிகள் இரண்டு காரியங்களுக்காகப் பாடுகளை அனுபவிப்பதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். இதற்காக மரணமே வந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளத் தயங்கக்கூடாது. அவையாவன:

1. கிறிஸ்துவின் நிமித்தம்
2. கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் நிமித்தம்

ஜீவன் (soul) - ψυχή - psychee - 5590

8 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - ஆத்துமா, பிராணன், ஜீவன், ஆத்துமா, மனம், உயிர் the (life, emotions, passions, feelings, desires, and appetites)

இந்தச் சொல் 105 இடங்களில் மனுஷருடைய ஜீவனையும், மிருகங்களுடைய ஜீவனையும் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மிருகங்களின் ஆத்துமாவையும், ஜீவனையும் வெளி 8:9; வெளி 16:3 ஆகிய வசனங்களில் இந்தச் சொல் குறிக்கிறது.

தனி மனுஷனுடைய ஜீவனை இந்தச் சொல் குறிக்கும் வசனங்கள். (அப் 2:41,43;அப் 3:23; அப் 7:14; அப் 27:37; ரோமர் 2:9; ரோமர் 13:1; 1கொரி 15:45; யாக் 5:20; 1பேதுரு 3:20; 2பேதுரு 2:14; வெளி 6:9; வெளி 18:13; வெளி 20:4)

மனுஷனுடைய ஜீவன் அழிந்துபோகும் அல்லது இரட்சிக்கப்படும் என்று கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் இந்தச் சொல் விளக்குகிறது. (மத் 2:20; மத் 6:25; மத் 10:39; மத் 16:25; மத் 20:28; மாற்கு 3:4; மாற்கு 8:35; மாற்கு 10:45; லூக்கா 6:9; லூக்கா 9:24,56; லூக்கா 12:22-23; லூக்கா 14:26; லூக்கா 17:33; யோவான் 10:11,15,17; யோவான் 12:25; யோவான் 13:37-38; யோவான் 15:13; அப் 15:26; அப் 20:10,24; அப் 27:10,22; ரோமர் 11:3; ரோமர் 16:4; பிலி 2:30; 1யோவான் 3:16; வெளி 12:11)

மனுஷனுடைய ஆத்துமா அழிந்துபோகும் அல்லது இரட்சிக்கப்படும் என்று கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் இந்தச் சொல் விளக்குகிறது. (மத் 10:28; மத் 16:26; மாற்கு 8:36,37; லூக்கா 12:20; லூக்கா 21:19; 1தெச 2:8; 1தெச 5:23; எபி 4:12; எபி 6:19; எபி 10:39; எபி 13:17; யாக் 1:21; 1பேதுரு 1:9; 1பேதுரு 2:11,25; 1பேதுரு 4:19)

இந்தச் சொல் ஆத்துமா எனவும், சுயம் எனவும் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. (மத் 11:29; மத் 12:18; மத் 26:38; மாற்கு 14:34; லூக்கா 1:46; லூக்கா 12:19; யோவான் 12:27; அப் 2:27,31; அப் 14:22; அப் 15:24; 2கொரி 1:23; எபி 10:38; 1பேதுரு 1:22; 2பேதுரு 2:8; வெளி 18:14)

இந்தச் சொல் "மனது" என்று அப் 14:2; எபி 13:3 ஆகிய வசனங்களில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

இந்தச்சொல் ஒருவனுடைய முழு வல்லமையைக் குறிக்கும் ஆத்துமா எனவும் (மத் 22:37; மாற்கு 12:30,33; லூக்கா 2:35; லூக்கா 10:27; அப் 4:32; 3யோவான் 1:2) இருதயம் எனவும் (எபே 6:6) மனது எனவும் (பிலி 1:27) சுதந்தரமாகிய பலன் (கொலோ 3:23) எனவும் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

இந்தக் கிரேக்கச்சொல்லிற்கு இணையான எபிரெயச் சொல் "நெ-பெஷ்" neh'-fesh

ஜீவன் (soul) - נֶפֶשׁ - neh'-fesh - 5315

பெண்பால் பெயர்ச்சொல் - ஐந்து, ஜீவன், ஆத்துமா, உயிர், ஜனம், பிராணன், சம்மதி, மனது, மனம், பேர், பிறப்பு, ஆசை, இருதயம், பிராணி, செத்தவன், இறந்து போன பிணம், மனிதன், மிருகத்துக்கு மிருகம், சவம், பிரேதம், யாதொருவர், உள்ளம், இஷ்டம், ஆவல், பசி, உட்கருத்து, ஜீவனுக்கு ஜீவன், சுவாசம், சித்தம், இச்சை, போஜனம், நெஞ்சு, மனுஷர்

நாம் வெட்கப்படக்கூடாத இரண்டு காரியங்கள்

1. இயேசு கிறிஸ்து (மாற்கு 8:38; லூக்கா 9:26; யோவான் 1:1-2)
2. கிறிஸ்துவின் வார்த்தைகள்

காரணங்கள்

1. அவை தேவனுடைய வார்த்தைகள் (யோவான் 3:34).
2. அவை ஆவியானது (யோவான் 6:63).

மாற்கு - தொகுப்புரை

8 அதிகாரம்

3. அவை ஜீவனானது (யோவான் 6:63,69).

4. அவை நம்மை நியாயந்தீர்க்கும் (யோவான் 12:48).

5. அவை அற்புதமானது (யோவான் 14:10).

6. அவை தேவனோடு நம்மை ஒப்புரவாக்கும். (யோவான் 14:23).

7. நமது ஜெபத்திற்கு அவை பதில் கொடுக்கும். (யோவான் 15:7; 2கொரி 1:20).

"விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததி" - இயேசு கிறிஸ்துவின் காலத்தில் இஸ்ரவேல் ஜனத்தாருடைய சுபாவம் இவ்வாறுதான் இருந்தது. (மத் 11:16)

"மனுஷகுமாரன் தமது பிதாவின் மகிமை பொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங் கூட வருவார்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை இந்த வசனம் குறிப்பிடுகிறது. (மத் 13:39-43,49-50; மத் 24:29-31; 2தெச 1:7-10) வரப்போகிற மகிமையைப் பற்றி ஓரளவு புரிந்து கொள்ள இந்த வசனம் உதவி புரிகிறது. (மத் 16:27-17:1-9; மாற்கு 9:1-7; 2பேதுரு 1:16) இந்த வேளையில் பிதாவும் இயேசு கிறிஸ்துவோடு பூமிக்கு வருவார். (தானி 7:7-13,22; சக 14:5; தீத்து 2:13)

9 அதிகாரம்

55. மறுரூபமாதல் - வரப்போகும் இராஜ்ஜியத்திற்கு ஒரு முன்னோட்டம் - (மத் 16:28 - 17:9; லூக் 9:27; 2பேதுரு 1:16)

மாற்கு 9:1 அன்றியும், அவர் அவர்களை நோக்கி: இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசி பார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மாற்கு 9:2 ஆறுநாளைக்குப்பின்பு, இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் அழைத்து, உயர்ந்த மலையின்மேல் அவர்களைத் தனியே கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்.

மாற்கு 9:3 அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல் பூமியிலே எந்த வண்ணானும் வெளுக்கக்கூடாத வெண்மையாய்ப் பிரகாசித்தது.

மாற்கு 9:4 அப்பொழுது மோசேயும் எலியாவும் இயேசுவுடனே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள்.

மாற்கு 9:5 அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி: ரபீ, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றான்.

மாற்கு 9:6 அவர்கள் மிகவும் பயந்திருந்தபடியால், தான் பேசுகிறது இன்னதென்று அறியாமல் இப்படிச் சொன்னான்.

மாற்கு 9:7 அப்பொழுது, ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது: இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.

மாற்கு 9:8 உடனே அவர்கள் சுற்றிலும் பார்த்தபோது, இயேசு ஒருவரைத்தவிர வேறொருவரையும் காணவில்லை.

மாற்கு 9:9 அவர்கள் மலையிலிருந்து இறங்குகிறபோது, அவர் அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும், நீங்கள் கண்டவைகளை ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்று கட்டளையிட்டார்.

மாற்கு 9:10 மரித்தோரிலிருந்து எழுந்திருப்பது என்னவென்று அவர்கள் ஒருவரிடத்தில் ஒருவர் விசாரித்து, அந்த வார்த்தையைத் தங்களுக்குள்ளே அடக்கிக்கொண்டு:

மாற்கு 8:34-38 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்து பேசிய ஜனங்களிடம் இப்போதும் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்.

தீர்க்கதரிசன எண் - 6

“இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லை” (மாற்கு 9:1) - இந்தத் தீர்க்கதரிசனம் இயேசு கிறிஸ்து மறுரூபமானபோது நிறைவேறிற்று. (மத் 16:28; மத் 17:1)

“தேவனுடைய ராஜ்யம்” - மாற்குவும், லூக்காவும் தேவனுடைய ராஜ்யம் என்று கூறுகிறார்கள். மத்தேயு பரலோக ராஜ்யம் என்று கூறுகிறார். ஒவ்வொரு சுவிசேஷமும் ஒரு குறிப்பிட்ட ஜனங்களுக்காக விசேஷமாக எழுதப்பட்டது. ஆகையினால் வார்த்தையில் இப்படிப்பட்ட வேறுபாடு காணப்படுகிறது. (மத் 4:17; மத் 19:24)

“ஆறுநாளைக்குப்பின்பு” - (லூக்கா 9:28)

9 அதிகாரம்

"இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் அழைத்தார்" - யவீருவின் மகளை இயேசு உயிரோடு எழுப்பியபோதும் (மாற்கு 5:37) கெத்செமனே தோட்டத்திலும் இந்த மூவருமே இயேசுவோடு கூட இருந்தார்கள். (மத் 26:37)

"உயர்ந்த மலை" - இந்த மலையின் பெயர் தெரியவில்லை.

மறுரூபமானார் **(transfigured)** - **μεταμορφόω** - **metamorphooo** - 3339

வினைச்சொல் - மறுரூபமாகு, மறுரூபப்படு (மத் 17:2)

"உறைந்த மழையைப்போல்........... வெண்மையாய்ப் பிரகாசித்தது" - இயற்கையின் வெண்மை நிறம் பரிசுத்தத்திற்கு அடையாளம். (சங் 51:7; ஏசா 1:18; புல 4:7; தானி 7:9; மத் 28:3; வெளி 1:14)

"பூமியிலே எந்த வண்ணானும் வெளுக்கக் கூடாத வெண்மையாய்ப் பிரகாசித்தது" - புதிய ஏற்பாட்டில் இந்த வசனத்தில் மட்டுமே இந்த உவமானம் கூறப்பட்டிருக்கிறது. எகிப்திலும், பாலஸ்தீனத்திலும் வஸ்திரங்களை வெண்மையாக்கும் கலை சிறப்பாக விளங்கிற்று. அதற்குரிய ரசாயன கலவைகளைச் சேர்த்து, வஸ்திரங்களை கசக்கி, கல்லில் அடித்து, சூரிய ஒளியில் உலர வைப்பார்கள். வஸ்திரங்களை உலர வைப்பதற்காகவே அதற்குரிய நிலம் இருந்தது. (ஏசா 7:3)

"மோசேயும் எலியாவும்" - (மத் 17:3)

ரபீ - **ῥαββί** - **rhabbi** - 4461

ஆண்பால் பெயர்ச்சொல் - ரபீ **(teacher)** (லூக்கா 9:38)

"உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம்" - (மத் 17:4)

"எலியா" - எலியா **(Elijah)** என்பதன் கிரேக்க பெயர் எலியாஸ் **(Elias)** என்பதாகும். (1இராஜா 17:1; 2இராஜா 2:11; மல் 4:5-6)

"ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது" - (மத் 17:5)

"இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று" - பலவேளைகளில் தேவனுடைய சத்தம் ஜனங்கள் கேட்கக்கூடிய விதமாக உண்டாயிற்று. (ஆதி 3:8; உபா 5:22-25; மத் 3:17; யோவான் 12:28; வெளி 10:3) தேவன் மனுஷரோடு பேசியதாக வேதாகமத்தில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட குறிப்புக்கள் உள்ளன. (எபி 1:1-2)

"இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்" - நாசரேத் ஊராராகிய இயேசு கிறிஸ்து தமது நேசகுமாரன் என்று தேவன் இரண்டு முறை அறிவித்திருக்கிறார். (மத் 3:17) தமது ஒரேபேறான குமாரன். (யோவான் 1:14,18; யோவான் 3:16-18; 1யோவான் 4:9) இயேசு கிறிஸ்துவானவர் மட்டுமே பரிசுத்த ஆவியானவரால் உற்பத்தியாக்கப்பட்டு, ஸ்திரீயின் வயிற்றிலிருந்து பிறந்தவர். (ஏசா 7:14; ஏசா 9:6-7; மத் 1:18-25; லூக்கா 1:34-35; கலா 4:4) மனுஷர்கள் மறுபடியும் பிறந்த தேவனுடைய பிள்ளைகள், புத்திரசுவீகார பிள்ளைகள். (ரோமர் 8:14-16,23; ரோமர் 9:4; கலா 4:5; எபே 1:5)

தீர்க்கதரிசன எண் - 7

"மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும்" ((மாற்கு 9:9) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"மரித்தோரிலிருந்து எழுந்திருப்பது என்னவென்று அவர்கள் ஒருவரிடத்தில் ஒருவர் விசாரித்தார்கள்" - இயேசு கிறிஸ்து கூறிய வார்த்தைகளைச் சீஷர்கள் புரிந்து கொள்ளவில்லை. வேதவாக்கியங்களைப் புரிந்து கொள்வதற்கு தெய்வீக ஞானம் தேவை. நாமும் வேதத்தை வாசிக்கும்போது தேவன் தமது சத்தியத்தை நமக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று ஜெபிக்க வேண்டும். இயேசு கிறிஸ்து தாம் பாடுபட்டு மரிக்கப்போவதைப் பற்றியும் மூன்றாவது நாளில் உயிர்த்தெழப் போவதைப் பற்றியும் ஏற்கெனவே தமது சீஷர்களிடம் மிகவும் தெளிவாகக் கூறியிருக்கிறார். (மாற்கு 2:20; மாற்கு 8:31)

9 அதிகாரம்

56. யோவான் ஸ்நானனும், எலியாவும் - (மத் 17:10)

மாற்கு 9:11 எலியா முந்தி வரவேண்டுமென்று வேதபாரகர் சொல்லுகிறார்களே, அதெப்படியென்று அவரிடத்தில் கேட்டார்கள்.

மாற்கு 9:12 அவர் பிரதியுத்தரமாக: எலியா முந்திவந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான்; அல்லாமலும், மனுஷகுமாரன் பல பாடுகள் பட்டு, அவமதிக்கப்படுவாரென்று, அவரைக் குறித்து எழுதியிருக்கிறதே அது எப்படி என்றார்.

மாற்கு 9:13 ஆனாலும் எலியா வந்தாயிற்று, அவனைக்குறித்து எழுதியிருக்கிறபிரகாரம் தங்களுக்கு இஷ்டமானபடி அவனுக்குச் செய்தார்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 8

"எலியா முந்திவந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான்; அல்லாமலும், மனுஷகுமாரன் பல பாடுகள் பட்டு, அவமதிக்கப்படுவார்" (மாற்கு 9:12) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

இந்தத் தீர்க்கதரிசனத்தில் இரண்டு காரியங்கள் அடங்கியிருக்கிறது. அவையாவன:

1. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு, எல்லாவற்றையும் சீர்ப் படுத்துவதற்காக வருவார். (மல் 4:5-6) இரண்டு சாட்சிகள் பூமியில் தோன்றும்போது இந்தக் காரியம் நிறைவேறும். (வெளி 11:3-12)

2. மனுஷகுமாரன் பலபாடுகள்படுவார். இந்தக் காரியமும் நிறைவேறிற்று. (மத் 27; மாற்கு 15)

"ஆனாலும் எலியா வந்தாயிற்று" - இது யோவான் ஸ்நானனைக் குறிக்கிறது. அவன் எலியாவின் வல்லமையோடும், ஆவியோடும் வந்தான். (லூக்கா 1:17) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக எலியா செய்யப்போவதை அவருடைய முதலாம் வருகைக்கு முன்பாக யோவான் ஸ்நானன் செய்தான். (மல் 3:1; ஏசா 40:3; மத் 17:12-13)

"தங்களுக்கு இஷ்டமானபடி அவனுக்குச் செய்தார்கள்" - (மத் 14:1-12)

57. வல்லமையில்லாத சீஷர்களும் சர்வ வல்ல கிறிஸ்துவும் - (மத் 17:14; லூக் 9:37)

மாற்கு 9:14 பின்பு அவர் சீஷரிடத்தில் வந்தபோது, அவர்களைச் சுற்றித் திரளான ஜனங்கள் நிற்கிறதையும், அவர்களோடே வேதபாரகர் தர்க்கிக்கிறதையும் கண்டார்.

மாற்கு 9:15 ஜனங்களெல்லாரும் அவரைக் கண்டவுடனே மிகவும் ஆச்சரியப்பட்டு, ஓடிவந்து, அவருக்கு வந்தனஞ்செய்தார்கள்.

மாற்கு 9:16 அவர் வேதபாரகரை நோக்கி: நீங்கள் இவர்களோடே என்னத்தைக் குறித்துத் தர்க்கம் பண்ணுகிறீர்கள் என்று கேட்டார்.

மாற்கு 9:17 அப்பொழுது ஜனக் கூட்டத்தில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே, ஊமையான ஒரு ஆவி பிடித்த என் மகனை உம்மிடத்தில் கொண்டு வந்தேன்.

மாற்கு 9:18 அது அவனை எங்கே பிடித்தாலும் அங்கே அவனை அலைக் கழிக்கிறது; அப்பொழுது அவன் நுரைதள்ளி, பல்லைக்கடித்து, சோர்ந்து போகிறான். அதைத் துரத்திவிடும்படி உம்முடைய சீஷரிடத்தில் கேட்டேன்; அவர்களால் கூடாமற் போயிற்று என்றான்.

மாற்கு 9:19 அவர் பிரதியுத்தரமாக: விசுவாசமில்லாத சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்? எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாய் இருப்பேன்? அவனை என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்றார்.

9 அதிகாரம்

மாற்கு 9:20 அவனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவரைக் கண்டவுடனே, அந்த ஆவி அவனை அலைக்கழித்தது, அவன் தரையிலே விழுந்து, நுரைதள்ளிப் புரண்டான்.

மாற்கு 9:21 அவன் அவனுடைய தகப்பனை நோக்கி: இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாயிற்று என்று கேட்டார். அதற்கு அவன்: சிறுவயது முதற்கொண்டே உண்டாயிருக்கிறது;

மாற்கு 9:22 இவனைக் கொல்லும்படிக்கு அது அநேகந்தரம் தீயிலும் தண்ணீரிலும் தள்ளிற்று. நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால், எங்கள்மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என்றான்.

மாற்கு 9:23 இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்.

மாற்கு 9:24 உடனே பிள்ளையின் தகப்பன்: விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான்.

மாற்கு 9:25 அப்பொழுது ஜனங்கள் கூட்டமாய் ஓடிவருகிறதை இயேசு கண்டு, அந்த அசுத்த ஆவியை நோக்கி: ஊமையும் செவிடுமான ஆவியே, இவனை விட்டுப் புறப்பட்டுப்போ, இனி இவனுக்குள் போகாதே என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அதை அதட்டினார்.

மாற்கு 9:26 அப்பொழுது அது சத்தமிட்டு, அவனை மிகவும் அலைக்கழித்துப் புறப்பட்டுப்போயிற்று. அவன் செத்துப்போனான் என்று அநேகர் சொல்லத்தக்கதாகச் செத்தவன்போல் கிடந்தான்.

மாற்கு 9:27 இயேசு அவன் கையைப் பிடித்து, அவனைத் தூக்கினார்; உடனே அவன் எழுந்திருந்தான்.

போதகர் (Master) - διδάσκαλος - didaskalos - 1320

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு **(teacher)** (லூக்கா 9:38)

"ஊமையான ஒரு ஆவி" - அவனை ஊமையான ஆவி மட்டும் பிடிக்கவில்லை. அலைக்கழிக்கும் ஆவியும் அவனைப் பிடித்திருந்தது. (மத் 17:15)

பிசாசின் கிரியைகளினால் ஏற்படும் விளைவுகள்

1. ஊமை (மாற்கு 9:17,25)
2. செவிடு (மாற்கு 9:25)
3. வாயில் நுரை தள்ளுதல் (மாற்கு 9:25)
4. இழுப்பு (மாற்கு 9:18,20,26)
5. பற்களைக் கடித்தல் (மாற்கு 9:18)
6. செத்தவன்போல மயங்கி விழுதல் (மாற்கு 9:18,26)
7. தரையில் விழுதல் (மாற்கு 9:20)
8. தற்கொலை முயற்சிகள் (மாற்கு 9:22)
9. கத்தி ஒலமிடுதல் (மாற்கு 9:26)
10. சந்திரரோகி (மத் 17:15)

விசுவாசமில்லாத மனுஷரை இயேசு கிறிஸ்து கடிந்து கூறியிருக்கும் சம்பவங்கள்

1. தெய்வீக பராமரிப்பில் (மத் 6:30)
2. தெய்வீக பாதுகாப்பில் (மத் 14:31)
3. தெய்வீக வல்லமையில் (மத் 16:6-12)
4. கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதற்கு அபிஷேகம் பண்ணுகையில் (மத் 17:17-21; மாற்கு 9:19-23; மாற்கு 16:17-18; யோவான் 14:12)

9 அதிகாரம்

5. அற்புதங்களை நடப்பிக்கும் வல்லமையில் (மாற்கு 11:21-24)

6. உயிர்த்தெழுதலில் (மாற்கு 16:14)

"அவனைக் கண்டவுடனே, அந்த ஆவி அவனை அலைக்கழித்தது, அவன் தரையிலே விழுந்து, நுரைதள்ளிப் புரண்டான்" - வாயில் நுரைத்தள்ளி, கீழே விழுந்து, உருண்டு, புரண்டான். செத்தவன் போல விழுந்தான். (மாற்கு 9:25-27)

"இவனைக் கொல்லும்படிக்கு அது அநேகந்தரம் தீயிலும் தண்ணீரிலும் தள்ளிற்று" - சாத்தானின் நோக்கம் இதுதான். அவன் கொல்லவும், அழிக்கவுமே வருகிறான். (யோவான் 10:10)

"நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால்" - சிறுவனின் தகப்பன் "கூடுமானால்" என்று கூறுகிறான். இயேசு கிறிஸ்துவும் "கூடுமானால்" என்று பதில் கூறுகிறார். மனுஷன் தன்னுடைய அவிசுவாசத்தை அகற்றிவிட்டு, இயேசுவிடம் வரவேண்டும். தேவனுடைய சித்தத்தையும், அவருடைய வல்லமையையும் விசுவாசிக்க வேண்டும். அப்போது விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். (மாற்கு 9:23; மாற்கு 11:22-24; மத் 17:20; மத் 21:22; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26) தேவனால் கூடுமானால் என்னும் கேள்விக்கே இடமில்லை. ஏனெனில் தேவனால் எல்லாம் கூடும். மனுஷன்தான் அதை விசுவாசிக்க வேண்டும். மனுஷனால் விசுவாசிக்கக்கூடுமானால் அது அவனுக்கு ஆகும். தேவன் நமக்கு ஏற்கெனவே பல காரியங்களை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். அவற்றை நாம் விசுவாசத்தோடு பெற்றுக்கொள்ள வேண்டும். நமது அவிசுவாசத்தினால் ஒன்றையும் பெற்றுக் கொள்ளாமல் அதற்குத் தேவனைக் குறைக்கூறக்கூடாது. (மாற்கு 9:24; எபி 11:6; யாக் 1:5-8)

"எங்கள்மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவி செய்யவேண்டும்" - தேவன் வல்லமையுள்ளவர். அதேசமயத்தில் அவர் இரக்கம் உள்ளவர். அவர் மனதிரங்கி, நம்மீது தமது வல்லமையை வெளிப்படுத்துவார் என்று விசுவாசிக்க வேண்டும். அவர் தமது கிருபையினாலும், மனதுருக்கத்தினாலும் மனுஷருடைய தேவைகளையெல்லாம் சந்திப்பார். இங்கே இந்த மனுஷன் தனக்காகவும், தன் மகனுக்காகவும் மனதிரங்க வேண்டுமாறு இயேசு கிறிஸ்துவிடம் விண்ணப்பம் பண்ணுகிறான். (மத் 9:36)

"நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்" - இயேசு கிறிஸ்து தெளிவாகக் கூறுகிறார். (மாற்கு 11:22-24; மத் 17:20; மத் 21:21-22; எபி 11:6; யாக் 1:5-8). எல்லாம் கூடும் என்று அவர் கூறும்போது அதில் எல்லாமே அடங்கியிருக்கிறது. எல்லாம் என்பது ஜீவனுக்குரியவையையும், நன்மையானவையையும் குறிக்கும். (2பேதுரு 1:3-4; சங் 84:11; 2கொரி 1:20)

"இயேசு அந்த அசுத்த ஆவியை நோக்கி: ஊமையும் செவிடுமான ஆவியே, இவனை விட்டுப் புறப்பட்டுப்போ, இனி இவனுக்குள் போகாதே என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அதை அதட்டினார்" - இயேசுவின் சீஷர்களும் இப்படித்தான் சொன்னார்கள். ஆனால் அசுத்த ஆவி அவனை விட்டுப்போகவில்லை. இயேசு கிறிஸ்துவின் வார்த்தைக்கு வல்லமையுண்டு. அவர் விசுவாசத்தோடும், அதிகாரத்தோடும் பிசாசையும், அவனுடைய கிரியைகளையும் கடிந்து கொள்கிறார். வனாந்தரத்திலே இயேசு சாத்தானை ஜெயித்தார். சீஷர்கள் தங்களுடைய விசுவாச ஜீவியத்திலே அந்த அளவிற்கு வளர்ந்து வரவில்லை. (மாற்கு 9:29; மத் 17:17-21; அப் 19:13-16)

58. ஜெபமும் உபவாசமும் - (மத் 17:19)

மாற்கு 9:28 வீட்டில் அவர் பிரவேசித்தபொழுது, அவருடைய சீஷர்கள்: அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று என்று அவரிடத்தில் தனித்துக் கேட்டார்கள்.

9 அதிகாரம்

மாற்கு 9:29 அதற்கு அவர்: இவ்வகைப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது என்றார்.

"அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று" - என்று சீஷர்கள் இயேசுவிடம் கேட்டார்கள். "உங்கள் அவிசுவாசத்தினாலேதான்" என்பதே இயேசுவின் பதில். (மத் 17:20-21) பிசாசைத் துரத்திவிடுவது தேவனுடைய சித்தமே. ஆகையினால் நாமும் பிசாசுகளைத் துரத்த வேண்டும். உபவாசம்பண்ணி, ஜெபித்து, பிசாசுகளைத் துரத்த வேண்டும்.

"இவ்வகைப் பிசாசு" - பிசாசுகளில் பலவகை உண்டு என்பதை இயேசு கிறிஸ்து வெளிப் படுத்தியிருக்கிறார்.

59. தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலைக் குறித்து இயேசு மறுபடியும் முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 16:21)

மாற்கு 9:30 பின்பு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கலிலேயாவைக் கடந்து போனார்கள்; அதை ஒருவரும் அறியாதிருக்க வேண்டுமென்று விரும்பினார்.

மாற்கு 9:31 ஏனெனில், மனுஷகுமாரன் மனுஷர்கைகளில் ஒப்புக்கொடுக்கப் படுவார் என்றும், அவர்கள் அவரைக் கொன்றுபோடுவார்கள் என்றும்; கொல்லப்பட்டு, மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார் என்றும் அவர் தம்முடைய சீஷர்களுக்குப் போதகம் பண்ணிச் சொல்லியிருந்தார்.

"பின்பு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கலிலேயாவைக் கடந்துபோனார்கள்; அதை ஒருவரும் அறியாதிருக்க வேண்டுமென்று விரும்பினார்" - இயேசு கிறிஸ்து பட்டணங்கள் வழியாகப் போகாமல் கப்பர்நகூமிற்கு கலிலேயா வழியாகப் போனார். மறுரூபமலையில் இயேசுவின் பிரயாணம் ஆரம்பமாயிற்று. இயேசு தமது பிரயாணத்தை ஒருவரும் அறியாதிருக்க வேண்டுமென்று விரும்பி இரகசியமாகச் செல்கிறார்.

தீர்க்கதரிசன எண் - 9

"மனுஷகுமாரன் மனுஷர்கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார், அவர்கள் அவரைக் கொன்றுபோடுவார்கள்; கொல்லப்பட்டு, மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார்" (மாற்கு 9:31) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்து தமது பாடுகளைப் பற்றி கூறிய மூன்றாவது அறிவிப்பு. (மாற்கு 8:31; மாற்கு 9:12)

60. தாழ்மையைப் பற்றிய உபதேசம் - (மத் 18:1; 20:24; லூக் 9:46)

மாற்கு 9:32 அவர்களோ அந்த வார்த்தையை அறிந்துகொள்ளவில்லை, அதைக்குறித்து அவரிடத்தில் கேட்கவும் பயந்தார்கள்.

மாற்கு 9:33 அவர் கப்பர்நகூமுக்கு வந்து, வீட்டிலே இருக்கும்போது, அவர்களை நோக்கி: நீங்கள் வழியிலே எதைக்குறித்து உங்களுக்குள்ளே தர்க்கம் பண்ணினீர்கள் என்று கேட்டார்.

மாற்கு 9:34 அதற்கு அவர்கள் பேசாமல் இருந்தார்கள்; ஏனெனில் அவர்கள் தங்களுக்குள்ளே எவன் பெரியவன் என்று வழியில் தர்க்கம் பண்ணினார்கள்.

மாற்கு 9:35 அப்பொழுது அவர் உட்கார்ந்து, பன்னிருவரையும் அழைத்து: எவனாகிலும் முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் கடையானவனும், எல்லாருக்கும் ஊழியக்காரனுமாயிருக்கக் கடவன் என்று சொல்லி;

9 அதிகாரம்

மாற்கு 9:36 ஒரு சிறுபிள்ளையை எடுத்து, அதை அவர்கள் நடுவிலே நிறுத்தி, அதை அணைத்துக் கொண்டு:

மாற்கு 9:37 இப்படிப்பட்ட சிறு பிள்ளைகளில் ஒன்றை என் நாமத்தினாலே ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அல்ல,என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான் என்றார்.

ஊழியக்காரன் (servant) - διάκονος - diakonos - 1249

ஆண்பால் அல்லது பெண்பால் பெயர்ச்சொல் - பணிவிடைக்காரன், ஊழியக்காரன், வேலைக்காரன், ஊழியஞ்செய்கிறவர், உதவிக்காரர் (மத் 20:26)

"ஒரு சிறுபிள்ளையை எடுத்து, அதை அவர்கள் நடுவிலே நிறுத்தினார்" - தாழ்மைக்கு எடுத்துக்காட்டு சிறுபிள்ளை. பலவேளைகளில் இயேசு கிறிஸ்து தம்மையே முன்மாதிரியாகக் காண்பித்திருக்கிறார். (மாற்கு 10:35-45; லூக்கா 22:24-27; யோவான் 13:2-20)

"இப்படிப்பட்ட சிறு பிள்ளைகளில் ஒன்றை என் நாமத்தினாலே ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்" - (மத் 18:1-10; லூக்கா 18:15-17)

61. இயேசு பிரிவினையைக் கடிந்து கொள்கிறார் - (லூக் 9:49; அப் 10:15,35; 20:30)

மாற்கு 9:38 அப்பொழுது யோவான் அவரை நோக்கி: போதகரே, நம்மைப் பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக் கண்டோம்; அவன் நம்மைப் பின்பற்றாதவனானதால், அவனைத் தடுத்தோம் என்றான்.

மாற்கு 9:39 அதற்கு இயேசு: அவனைத் தடுக்க வேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ்செய்கிறவன் எளிதாய் என்னைக்குறித்துத் தீங்குசொல்ல மாட்டான்.

மாற்கு 9:40 நமக்கு விரோதமாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான்.

மாற்கு 9:41 நீங்கள் கிறிஸ்துவினுடையவர் களாயிருக்கிற படியினாலே, என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற்போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"அப்பொழுது யோவான் அவரை நோக்கி: போதகரே, நம்மைப் பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக் கண்டோம்; அவன் நம்மைப் பின்பற்றாதவனானதால், அவனைத் தடுத்தோம் என்றான்" - இயேசு கிறிஸ்து மாற்கு 9:37-இல் கூறிய காரியம் யோவானின் மனதைத் தொட்டது. இயேசுவைப் பின்பற்றாத ஒருவன் அவருடைய நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினான். அதை யோவான் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகையினால் அவனைத் தடுத்தான். ஆனால் இயேசு கிறிஸ்துவோ "இப்படிப்பட்ட சிறு பிள்ளைகளில் ஒன்றை என் நாமத்தினாலே ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அல்ல, என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்ளுகிறான்" என்றார். (மத் 10:40)

"அவனைத் தடுக்க வேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ்செய்கிறவன் எளிதாய் என்னைக் குறித்துத் தீங்குசொல்லமாட்டான்" - மோசே இந்தப் பாடத்தைத் தனது அனுபவத்தில் ஏற்கெனவே கற்றிருக்கிறார். (எண் 11:26-29) இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகள் சக விசுவாசிகளை நேசிப்பார்கள். தங்களைப் போலவே அவர்களையும் இயேசுவின் விசுவாசிகள் என்று அங்கீகரிப்பார்கள். தாங்கள் செய்யும் ஊழியங்களைப் போலவே அவர்களுடைய ஊழியங்களும் முக்கியமானவை என்று நினைப்பார்கள்.

9 அதிகாரம்

(பிலி 2:1-3; ரோமர் 12:10) இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அற்புதங்களைச் செய்கிறவன் அவருடைய நாமத்திற்கு அவகீர்த்தி உண்டு பண்ணமாட்டான். ஒருவன் இயேசு கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றுகிறானா என்பதை அவனுடைய ஆவிக்குரிய ஜீவியத்திலிருந்து வெளிப்படும் கனிகளினாலே அறியலாம். வேதாகமத்தின் அடிப்படை உபதேசங்களுக்கு முரணாக உபதேசிப்பவர்களோடு நாம் பங்காளிகளாக இருக்கவேண்டாம். மற்றபடி இயேசுவின் பிள்ளைகள் எல்லோருமே நமக்கு கிறிஸ்துவிற்குள் சகோதரர்களாகவும், சகோதரிகளாகவும் இருக்க வேண்டும். (மத் 7:15-20; மத் 23:1-33; அப் 8:9; அப் 13:8; ரோமர் 1:18:32; ரோமர் 16:17; 2கொரி 1:18-31; 2கொரி 6:9-11; 2கொரி 11:13-15; கலா 5:19-21; கொலோ 2:8,18; பிலி 3:17-19; 1தீமோ 4:1-8; 1தீமோ 3:1-13; 1தீமோ 4:3-4; 2பேதுரு 2; 3யோவான் 1:9-10; யூதா 1:4-19; வெளி 2:14,20).

62. விசுவாசிகளுக்கு இடறல் உண்டாக்குகிறவன் - (மத் 18:5)

மாற்கு 9:42 என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக்கட்டி, சமுத்திரத்தில் அவனைத் தள்ளிப்போடுகிறது அவனுக்கு நலமாயிருக்கும்.

"அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக்கட்டி, சமுத்திரத்தில் அவனைத் தள்ளிப்போடுகிறது அவனுக்கு நலமாயிருக்கும்" - இது யூதருடைய தண்டனை அல்ல. கிரேக்கரும், ரோமரும் குற்றவாளிகளுக்கு இப்படிப்பட்ட தண்டனைகளைக் கொடுத்தார்கள். (மத் 18:6; லூக்கா 17:2)

63. இடறல் உண்டாக்கும் சரீரத்தின் அவயவங்கள் - (மத் 5:22)

மாற்கு 9:43 உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்துப்போடு; நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதைப் பார்க்கிலும், ஊனனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.

மாற்கு 9:44 அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்.

மாற்கு 9:45 உன் கால் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைத்தறித்துப் போடு; நீ இரண்டு காலுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், சப்பாணியாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.

மாற்கு 9:46 அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்.

மாற்கு 9:47 உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கிப்போடு; நீ இரண்டு கண்ணுடையவனாய் நரக அக்கினியிலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், ஒற்றைக் கண்ணனாய், தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.

மாற்கு 9:48 அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்.

மாற்கு 9:49 எந்தப் பலியும் உப்பினால் உப்பிடப்படுவதுபோல, எந்த மனுஷனும் அக்கினியினால் உப்பிடப்படுவான்.

மாற்கு 9:50 உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப்போனால், அதற்கு எதினாலே சாரம் உண்டாக்குவீர்கள்? உங்களுக்குள்ளே உப்பு உடையவர்களாயிருங்கள், ஒருவரோடொருவர் சமாதனம் உள்ளவர்களாயும் இருங்கள் என்றார்.

9 அதிகாரம்

(பிலி 2:1-3; ரோமர் 12:10) இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அற்புதங்களைச் செய்கிறவன் அவருடைய நாமத்திற்கு அவகீர்த்தி உண்டு பண்ணமாட்டான். ஒருவன் இயேசு கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றுகிறானா என்பதை அவனுடைய ஆவிக்குரிய ஜீவியத்திலிருந்து வெளிப்படும் கனிகளினாலே அறியலாம். வேதாகமத்தின் அடிப்படை உபதேசங்களுக்கு முரணாக உபதேசிப்பவர்களோடு நாம் பங்காளிகளாக இருக்கவேண்டாம். மற்றபடி இயேசுவின் பிள்ளைகள் எல்லோருமே நமக்கு கிறிஸ்துவிற்குள் சகோதரர்களாகவும், சகோதரிகளாகவும் இருக்க வேண்டும். (மத் 7:15-20; மத் 23:1-33; அப் 8:9; அப் 13:8; ரோமர் 1:18:32; ரோமர் 16:17; 2கொரி 1:18-31; 2கொரி 6:9-11; 2கொரி 11:13-15; கலா 5:19-21; கொலோ 2:8,18; பிலி 3:17-19; 1தீமோ 4:1-8; 1தீமோ 3:1-13; 1தீமோ 4:3-4; 2பேதுரு 2; 3யோவான் 1:9-10; யூதா 1:4-19; வெளி 2:14,20).

62. விசுவாசிகளுக்கு இடறல் உண்டாக்குகிறவன் - (மத் 18:5)

மாற்கு 9:42 என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக்கட்டி, சமுத்திரத்தில் அவனைத் தள்ளிப்போடுகிறது அவனுக்கு நலமாயிருக்கும்.

"அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக்கட்டி, சமுத்திரத்தில் அவனைத் தள்ளிப்போடுகிறது அவனுக்கு நலமாயிருக்கும்" - இது யூதருடைய தண்டனை அல்ல. கிரேக்கரும், ரோமரும் குற்றவாளிகளுக்கு இப்படிப்பட்ட தண்டனைகளைக் கொடுத்தார்கள். (மத் 18:6; லூக்கா 17:2)

63. இடறல் உண்டாக்கும் சரீரத்தின் அவயவங்கள் - (மத் 5:22)

மாற்கு 9:43 உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்துப்போடு; நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதைப் பார்க்கிலும், ஊனனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.

மாற்கு 9:44 அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்.

மாற்கு 9:45 உன் கால் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைத்தறித்துப் போடு; நீ இரண்டு காலுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், சப்பாணியாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.

மாற்கு 9:46 அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்.

மாற்கு 9:47 உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கிப்போடு; நீ இரண்டு கண்ணுடையவனாய் நரக அக்கினியிலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், ஒற்றைக் கண்ணனாய், தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.

மாற்கு 9:48 அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்.

மாற்கு 9:49 எந்தப் பலியும் உப்பினால் உப்பிடப்படுவதுபோல, எந்த மனுஷனும் அக்கினியினால் உப்பிடப்படுவான்.

மாற்கு 9:50 உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப்போனால், அதற்கு எதினாலே சாரம் உண்டாக்குவீர்கள்? உங்களுக்குள்ளே உப்பு உடையவர்களாயிருங்கள், ஒருவரோடொருவர் சமாதானம் உள்ளவர்களாயும் இருங்கள் என்றார்.

9 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 10

"உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தறித்துப்போடு; நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதைப் பார்க்கிலும், ஊனனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்............" (மாற்கு 9:43-49) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"உனக்கு இடறல் உண்டாக்கினால்" - உன்னுடைய ஆத்துமா அழிந்து போகும் பிரகாரம் உனக்கு இடறல் உண்டாக்கினால். (மாற்கு 9:42,43,45,47)

"அதைத் தறித்துப்போடு" - நரகத்தில் நித்திய ஆக்கினை அடைவதைப் பார்க்கிலும் நமக்கு இடறல் உண்டாக்கும் உறுப்புகள் இல்லாமல் தேவனோடு இருப்பது நலம்.

"ஜீவன்" - நித்திய ஜீவன்.

நரகம் (hell) - γέεννα - geenna - 1067

பெண்பால் பெயர்சொல் - நரகம் (மத் 5:22; லூக்கா 12:5) - நரகத்திலுள்ள அக்கினி ஒருபோதும் அவியாது. (ஏசா 66:22-24)

"நரகத்திலே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்" - நரகத்திற்குப் போகிறவர்கள் அனுபவிக்கும் வேதனையை இந்த வசனம் விளக்குகிறது. புழு என்னும் சொல் மனுஷனைக் குறிக்கும். (யோபு 25:6; சங் 22:6; ஏசா 41:14; ஏசா 66:24) நரகத்தில் அதிக ஆக்கினை இருக்கும். ஆகையினால் மனுஷர் ஒவ்வொருவரும் அங்கு போகாமல் தப்பித்துக் கொள்வது நல்லது. அங்கு போகும் ஜீவன்கள் அக்கினியால் சாகாமலும், அவியாமலும் தொடர்ந்து வேதனைகளை அனுபவித்துக் கொண்டேயிருப்பார்கள்.

அந்த வேதனைக்கு ஒரு முடிவேயிராது. (மத் 8:12; மத் 13:42,50; மத் 22:13; மத் 24:51; மத் 25:30,46; வெளி 14:9-11; வெளி 20:10-15; வெளி 21:8; ஏசா 66:24) நியாயத்தீர்ப்பின்போது துன்மார்க்கனுடைய சரீரமும், ஆத்துமாவும் நரகத்திற்குத் தள்ளப்படும். (வெளி 20:11-15; மத் 10:28)

"எந்த மனுஷனும் அக்கினியினால் உப்பிடப்படுவான்" - மாற்கு 9:43-48 ஆகிய வசனங்களில் மனுஷருடைய பாவங்கள் விளக்கப்பட்டிருக்கிறது. இந்த ஜீவனில் நமக்குத் தடையாக இருக்கும் காரியங்களிலிருந்து விடுதலை பெற்று நித்திய ஆக்கினையிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும்.

"எந்தப் பலியும் உப்பினால் உப்பிடப்படும்" - ஒவ்வொரு பலியும் பலியிடப்படும்போது பாதுகாப்பின் அடையாளமாக அது உப்பிடப்படும். (லேவி 2:13) இந்த வசனத்தில் நித்திய அக்கினி என்பது ஓயாது எரிந்து கொண்டிருக்கும் அக்கினியைக் குறிக்கிறது. ஒவ்வொரு பாவியும் நரகத்தின் அக்கினியினால் உப்பிடப்படுவான். (ஏசா 66:24) சோதோமின்மீது உப்பு மழைபோல பொழியப்பட்டது. (உபா 29:23) இந்த வசனத்தில் உப்பைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியம் நரகத்தின் பயங்கரத்தையே குறிக்கிறது.

"ஒருவரோடொருவர் சமாதானம் உள்ளவர்களாயும் இருங்கள்" - மாற்கு 9:34-50 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பாவங்கள் சகோதரரிடையே ஒற்றுமையையும், சமாதானத்தையும் அகற்றிப்போடும். ஆகையினால் அந்தப் பாவங்களை விட்டு விலகி, சகோதரருக்குள்ளே சமாதானமாக ஜீவிக்க வேண்டும். இங்கு கூறப்பட்டிருக்கும் பாவங்கள்.

1. சுயமேன்மை (மாற்கு 9:34)
2. இருமனம் (மாற்கு 9:38-39)
3. இடறல்கள் (மாற்கு 9:42)
4. சரீரத்தின் இச்சைகள் (மாற்கு 9:43-48; ரோமர் 1:29-32; கலா 5:19-21; மாற்கு 7:19-21; கொலோ 3:5-10)

10 அதிகாரம்

64. மனைவியைத் தள்ளிவிடுதல் சம்பந்தமான பிரமாணம் - (மத் 5:31-32; 19:1-8; லூக் 16:18; 1கொரி 7:10-15)

மாற்கு 10:1 அவர் அவ்விடம் விட்டெழுந்து, யோர்தானுக்கு அக்கரையிலுள்ள தேசத்தின் வழியாய் யூதேயாவின் எல்லைகளில் வந்தார். ஜனங்கள் மறுபடியும் அவரிடத்தில் கூடிவந்தார்கள். அவர் தம்முடைய வழக்கத்தின்படியே மறுபடியும் அவர்களுக்குப் போதகம்பண்ணினார்.

மாற்கு 10:2 அப்பொழுது பரிசேயர், அவரைச் சோதிக்கவேண்டுமென்று, அவரிடத்தில் வந்து: புருஷனானவன் தன் மனைவியைத் தள்ளிவிடுவது நியாயமா என்று கேட்டார்கள்.

மாற்கு 10:3 அவர் பிரதியுத்தரமாக: மோசே உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறது என்ன என்று கேட்டார்.

மாற்கு 10:4 அதற்கு அவர்கள்: தள்ளுதற்சீட்டை எழுதிக்கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே உத்தரவுகொடுத்திருக்கிறார் என்றார்கள்.

மாற்கு 10:5 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: உங்கள் இருதயக் கடினத்தினிமித்தம் இந்தக் கட்டளையை உங்களுக்கு எழுதிக்கொடுத்தான்.

மாற்கு 10:6 ஆகிலும், ஆதியிலே மனுஷரைச் சிருஷ்டித்த தேவன் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார்.

மாற்கு 10:7 இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்;

மாற்கு 10:8 அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்; இவ்விதமாய் அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்.

மாற்கு 10:9 ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன் என்றார்.

“பரிசேயர் அவரைச் சோதிக்க வேண்டுமென்று, அவரிடத்தில் வந்தார்கள்” - (மத் 3:7)

“புருஷனானவன் தன் மனைவியைத் தள்ளிவிடுவது நியாயமா” - (மத் 5:31)

“தள்ளிவிடுவது” - விடுதலை பண்ணுவது, ஒப்பந்தத்திலிருந்து விடுவிப்பது (மத் 5:31)

“அவரைச் சோதித்தார்கள்” - கிறிஸ்துவின் காலத்தில் தள்ளிவிடுவதையும், மறுபடியும் திருமணம் செய்வதையும் குறித்துப் பலவிதமான கருத்து வேறுபாடுகள் இருந்தது. ஒருசிலர் புருஷன் தன் மனைவியை எந்தக் காரணத்தைக் காண்பித்து வேண்டுமானாலும் தள்ளிவிடலாம் என்று கூறினார்கள். ஆனால் வேறுசிலரோ எந்தக் காரணமானாலும் காரணம் காண்பித்துத், தள்ளிவிடுவது தவறு. வேசித்தனத்தின் நிமித்தமாக மட்டுமே தள்ளிவிடலாம் என்று கூறினார்கள். யூதரைப் பொறுத்த வரையிலும் தன் மனைவியைத் தள்ளிவிடுவதும், வேறொருத்தியை மறுபடியும் திருமணம் செய்து கொள்வதும் தங்களுடைய உரிமை என்று நினைத்தார்கள். இஸ்ரவேல் முழுவதிலும் இந்தப் பழக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

இந்த இடத்தில் மறுபடியும் திருமணம் பண்ணும் உரிமையைப் பற்றி கேள்வி எழவில்லை. தள்ளிவிடும் உரிமையைப் பற்றியே பரிசேயர் கேள்வி கேட்கிறார்கள். இயேசு கிறிஸ்து எந்தப் பிரிவிற்குச் சாதகமாகப் பேசுகிறார் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள விரும்பினார்கள். அக்காலத்து வழக்கத்தின் பிரகாரம் ஒரு புருஷன் தன் மனைவியைத் தள்ளிவிடலாம், எத்தனை மனைவிகளை வேண்டுமானாலும் தள்ளிவிடலாம், எத்தனை முறை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளலாம். பரிசேயர் இப்படிப்பட்டகேள்வியைக் கேட்டு இயேசு கிறிஸ்துவை அவமதிக்க விரும்பினார்கள்.

10 அதிகாரம்

அதுமட்டுமல்லாமல், கிறிஸ்துவிற்கும், ஏரோதுவிற்கும் கருத்து வேறுபாட்டை உண்டுபண்ணி, யோவான் ஸ்நானனைச் சிரச்சேதம் பண்ணியதுபோன்று, இயேசுவையும் கொன்று போடலாம் என்று சதியாலோசனை செய்தார்கள்.

இயேசு கிறிஸ்துவோ வேசித்தன முகாந்தரத்தினால் மட்டுமே தள்ளுதற்சீட்டை கொடுக்க வேண்டும் என்னும் பிரிவினருக்கு ஆதாரவாகப் பேசினார். (மத் 5:32; மத் 19:3-12) யூதருடைய பழக்க வழக்கத்தையும், அவர் மாற்ற முயற்சி பண்ணவில்லை. தள்ளுதற்சீட்டு கொடுக்கும் உரிமை மறுபடியும் திருமணம் புரிவதற்கு அனுமதி அளிக்கிறது.

உபா 24:1-4 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் காரியங்களை இயேசு கிறிஸ்து அப்படியே ஏற்றுக் கொள்கிறார். மோசே கட்டளையிட்ட பிரகாரம் நடந்து கொள்ளுமாறு கூறுகிறார். (மாற்கு 10:3)

இந்தக் கட்டளையை எழுதிக் கொடுத்ததினால் மோசே தேவஆவியினால் ஏவப்படவில்லை என்று கூறாமல், அவர்களுடைய இருதயக்கடினத்தினிமித்தம் இந்தக் கட்டளையை எழுதிக்கொடுத்ததாக கூறுகிறார். ஆதியிலே மனுஷரைச் சிருஷ்டித்த தேவன் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்று கூறி தேவனுடைய சித்தத்தையும் தெளிவுபடுத்துகிறார். (மாற்கு 10:6-9)

65. மனைவியைத் தள்ளிவிடுவதினால் ஏற்படும் விளைவுகள் - (மத் 5:31; 19:10; லூக் 16:18)

மாற்கு 10:10 பின்பு வீட்டிலே அவருடைய சீஷர்கள் அந்தக் காரியத்தைக்குறித்து மறுபடியும் அவரிடத்தில் விசாரித்தார்கள்.

மாற்கு 10:11 அப்பொழுது அவர்: எவனாகிலும் தன் மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் அவளுக்கு விரோதமாய் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்.

மாற்கு 10:12 மனைவியும் தன் புருஷனைத் தள்ளிவிட்டு, வேறொருவனை விவாகம் பண்ணினால், விபசாரஞ் செய்கிறவளாயிருப்பாள் என்றார்.

"எவனாகிலும் தன் மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் அவளுக்கு விரோதமாய் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்" - இயேசு கிறிஸ்து இந்தக் காரியத்தைத் சீஷர்களிடம் கூறுகிறார். (மாற்கு 10:10-12, லூக்கா 16:1,18) புறஜாதியாருக்குத் தள்ளுதற்சீட்டைப் பற்றி இயேசு கிறிஸ்து கூறிய காரியங்களைமத் 5:31-32; மத் 19:1-8 ஆகிய வசனங்களில் நாம் வாசித்தறியலாம்.

விசுவாசிகளுக்குத் தள்ளுதற்சீட்டைக் கொடுக்க வேண்டிய தேவை ஏற்படாது. ஏனெனில் அவர்கள் வேசித்தனம் பண்ணுவதில்லை. (மத் 5:31-32; மத் 19:1-8; 1கொரி 7:10-17)

இங்கு விசுவாசி என்று அழைக்கப் படுகிறவர்கள் கிறிஸ்துவில் புதுசிருஷ்டி அடைந்தவர்கள். தங்கள் ஜீவியத்தில் ஆவியின் கனியை வெளிப்படுத்துகிறவர்கள். (2கொரி 5:17-18; கலா 5:24; 1பேதுரு 1:21-22; 1பேதுரு 3:18; 1பேதுரு 4:1)

"வேறொருத்தியை விவாகம்பண்ணுதல்" - ஒரு புருஷனோ அல்லது மனைவியோ தள்ளுதற்சீட்டைக் கொடாமல் விவாகம் பண்ணுதல் தவறு. இது வேதத்திற்குப் புறம்பான காரியம். (மத் 5:31-32; மத் 19:1-8; 1கொரி 7:10-17).

66. இயேசு சிறுபிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார் - (மத் 19:13; லூக் 18:15)

மாற்கு 10:13 அப்பொழுது, சிறு பிள்ளைகளை அவர் தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; கொண்டுவந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள்.

10 அதிகாரம்

மாற்கு 10:14 இயேசு அதைக் கண்டு, விசனமடைந்து: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங் கொடுங்கள்; அவர்களைத் தடை பண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது.

மாற்கு 10:15 எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லை என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி,

மாற்கு 10:16 அவர்களை அணைத்துக் கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார்.

"இயேசு அதைக் கண்டு, விசனமடைந்தார்" - தமது சீஷர்கள் மத்தியிலே அன்பு குறைந்து காணப்படுவதைக் கண்ட இயேசு விசனமடைகிறார்.

67. மிகுந்த ஆஸ்தியுள்ள வாலிபன் - (மத் 19:16; லூக் 18:18)

மாற்கு 10:17 பின்பு அவர் புறப்பட்டு வழியிலே போகையில், ஒருவன் ஓடிவந்து, அவருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு: நல்ல போதகரே, நித்தியஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்னசெய்ய வேண்டும் என்று கேட்டான்.

மாற்கு 10:18 அதற்கு இயேசு: நீ என்னை நல்லவன் என்று சொல்லுவானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே.

மாற்கு 10:19 விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்றார்.

மாற்கு 10:20 அதற்கு அவன்: போதகரே, இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான்.

மாற்கு 10:21 இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து: உன்னிடத்தில் ஒருகுறைவு உண்டு; நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு; அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றிவா என்றார்.

மாற்கு 10:22 அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான்.

"நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்னசெய்ய வேண்டும்" - ஒவ்வொருவருடைய ஜீவியத்திலும் கேட்கப்பட வேண்டிய பிரதான கேள்வி இதுதான். இந்தக்கேள்விக்கு இந்த வசனத்திலும், யோவான் 3:16; ரோமர் 10:9-10; 1யோவான் 1:9; எபே 2:8-9 ஆகிய வசனங்களிலும் நாம் முழுமையான பதிலை வாசிக்கலாம்.

"நீ என்னை நல்லவன் என்று சொல்லுவானேன்?" - (மத் 19:16)

"உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" - இயேசு கிறிஸ்து அந்த மனுஷனிடம் ஆறு காரியங்களைக் கைக்கொள்ளுமாறு கூறுகிறார். இவை வரிசைப்பிரகாரமாகக் கூறப்படவில்லை. அவனை விரைவில் உணர்த்துவதற்காக இயேசு இவ்வாறு கூறியிருக்கலாம். (ரோமர் 13:7-10)

10 அதிகாரம்

"போதகரே" - இப்போது "நல்ல போதகரே" என்று அழைப்பதற்குப் பதிலாக "போதகரே" என்று அழைக்கிறான். தமது சிறு வயது முதல் கற்பனைகளைக் கைக்கொள்வதாகக் கூறுகிறான். இயேசு கிறிஸ்து அவன்மீது அன்புகூர்ந்து, இன்னும் ஒரு கற்பனையையும் அவனுக்குக் கூறுகிறார். அவன் பத்தாவது கற்பனையைக் கைக்கொள்ளவில்லை. அவன் தன்னைப்போல் பிறரை நேசிக்கவில்லை. (உபா 5:21; மத் 19:19)

"நீ போய், உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று..........." இயேசு கிறிஸ்து கூறிய கட்டளையில் ஆறு காரியங்கள் அடங்கியிருக்கிறது. அவையாவன:

1. நீ போ
2. உனக்கு உண்டானவைகளையெல்லாம் வில்
3. தரித்திரருக்குக் கொடு
4. என்னிடத்தில் வா.
5. சிலுவையை எடுத்துக்கொள்
6. என்னைப் பின்பற்றிவா.

68. ஐசுவரியவான்களுக்கு எச்சரிப்பு - (மத் 6:19; 19:23; லூக் 18:24)

மாற்கு 10:23 அப்பொழுது இயேசு சுற்றிப்பார்த்து, தம்முடைய சீஷரை நோக்கி: ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது என்றார்.

மாற்கு 10:24 சீஷர்கள் அவருடைய வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப் பட்டார்கள்; இயேசு பின்னும் அவர்களை நோக்கி: பிள்ளைகளே, ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறது எவ்வளவு அரிதாயிருக்கிறது!

மாற்கு 10:25 ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார்.

மாற்கு 10:26 அவர்கள் பின்னும் அதிகமாய் ஆச்சரியப்பட்டு: அப்படியானால் யார் இரட்சிக்கப்படக் கூடும் என்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்.

மாற்கு 10:27 இயேசு அவர்களைப் பார்த்து: மனுஷரால் இது கூடாததுதான், தேவனால் இது கூடாததல்ல; தேவனாலே எல்லாம் கூடும் என்றார்.

"ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது" - தேவன் ஐசுவரியவான் மீதும் கிருபையாகவே இருக்கிறார். அவருடைய இரக்கத்திற்குக் குறைவில்லை. ஆனால் ஐசுவரியவான்கள் தங்களுடைய ஐசுவரியத்தைத் தேவநாம மகிமைக்காகவும், பிறருடைய நன்மைக்காகவும் பயன் படுத்துவதில்லை. அவர்கள் தங்கள் ஐசுவரியத்தில் நம்பிக்கை வைக்கிறார்கள். அவ்வாறு நம்பிக்கை வைப்பதற்குப் பதிலாக அவர்கள் கர்த்தரிடத்திலே நம்பிக்கை வைக்க வேண்டும். (மாற்கு 10:24; 1தீமோ 6:9-12,17-19)

"ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறது எவ்வளவு அரிதாயிருக்கிறது" - ஐசுவரியவான்களில் ஒரு சிலர் மட்டுமே இரட்சிக்கப்படுகிறார்கள். இதற்கான காரணத்தை இயேசு கிறிஸ்து இங்கு தெளிவுபடுத்துகிறார். (மாற்கு 10:23)

10 அதிகாரம்

"ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்" - (மத் 19:24)

"அவர்கள் பின்னும் அதிகமாய் ஆச்சரியப் பட்டார்கள்" - மாற்கு 10:24-இல் "சீஷர்கள் அவருடைய வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்" என்று வாசிக்கிறோம். இங்கு அவர்கள் இன்னும் அதிகமாய் ஆச்சரியப்படுகிறார்கள். இதற்கான காரணம் என்ன? செல்வந்தர்கள் தாங்கள் விரும்பும் எதையும் பணத்தால் வாங்கிவிடலாம் என்று நினைக்கிறார்கள். ஆனால் அவர்களால் தங்களுடைய இரட்சிப்பைப் பணத்தால் வாங்கமுடியாது. இயேசுகிறிஸ்து கூறுவதை அவருடைய சீஷர்களால் எளிதாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்களும் மற்றவர்களைப் போலவே "ஐசுவரியவான்களால் எல்லாம் முடியும்" என்று நம்பினார்கள்.

"அப்படியானால் யார் இரட்சிக்கப்படக்கூடும்" - செல்வந்தனோ, ஏழையோ. இயேசு கிறிஸ்துவின் கிருபையினால் விசுவாசத்தால் யாரும் இரட்சிக்கப்பட முடியும். நமது கிரியையினால் அல்ல, தேவனுடைய கிருபையினாலேயே நாம் இரட்சிக்கப்படுகிறோம். இரட்சிப்பு இலவசமானது. ஐசுவரியவான்கள் தங்களைத் தாழ்த்த வேண்டும். ஏழைகளைப் போலவே ஐசுவரியவான்களும் தங்களைத் தாழ்த்தி, கிறிஸ்துவண்டை வரவேண்டும். இயேசு கிறிஸ்துவைப் பொருத்தவரையிலும், ஐசுவரியவான், ஏழை என்று பட்சபாதம் இல்லை. (யோவான் 3:16-18; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17).

செல்வந்தனாக இருப்பதினால் அவன் இரட்சிக்கப்படுவதற்குத் தடை ஏதும் இல்லை. தன்னுடைய பாவங்களை அறிக்கையிட்டு, மனந்திருந்தி வருகிற யாவரையும் இயேசு கிறிஸ்து புறம்பே தள்ளாமல், அவர்களை இரட்சித்து, தம்மிடத்தில் ஏற்றுக் கொள்கிறார். (ரோமர் 3:24-31; ரோமர் 5:1-11; ரோமர் 10:9-10; எபே 2:8-9; 1யோவான்1:9)

ஐசுவரியவான்களுக்குப் பல பிரச்சனைகளும், போராட்டங்களும் உண்டு. இரட்சிப்பை விட பல காரியங்களுக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுப்பார்கள். இரட்சிக்கப்படுவதற்கு தன்னுடைய ஐசுவரியத்தையெல்லாம் ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டுத்தான் வரவேண்டும் என்னும் கட்டாயமில்லை. விசுவாசத்தோடு வந்தாலே போதுமானது. ஆனாலும், கர்த்தர் ஐசுவரியவானிடம் அந்தக் காரியத்தைச் செய்யுமாறு எதிர்பார்த்தால், அவன் நிச்சயமாகவே தன் ஐசுவரியத்தை விட்டுவிட்டுத் தான் வரவேண்டும். இங்கு வலியுறுத்தப்படுவது என்னவென்றால், ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தின்மீது நம்பிக்கை வையாமல், இயேசுகிறிஸ்துவிடத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதுதான்.

69. முழுமையான அர்ப்பணிப்பிற்கு வெகுமதிகள் - (மத் 19:29; லூக் 18:28)

மாற்கு 10:28 அப்பொழுது பேதுரு அவரை நோக்கி: இதோ, நாங்கள் எல்லாவற்றையும்விட்டு, உம்மைப் பின்பற்றினோமே, என்று சொல்லத் தொடங்கினான்.

மாற்கு 10:29 அதற்கு இயேசு பிரதியுத்தரமாக: என்னிமித்தமாகவும், சுவிசேஷத் தினிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரி களையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளை களையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும்,

மாற்கு 10:30 இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடேகூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மாற்கு 10:31 ஆகிலும் முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள் என்றார்.

10 அதிகாரம்

"இதோ, நாங்கள் எல்லாவற்றையும்விட்டு, உம்மைப் பின்பற்றினோமே" - (மத் 19:27-30)

தீர்க்கதரிசனஎண் - 11

"என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தின் நிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடே கூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான்" (மாற்கு 10:29-31) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக்கொண்டிருக்கிறது. வரப்போகிற நாட்களில் இன்னும் நிறைவேறும்.

"நித்திய ஜீவன்" - (யோவான் 6:27)

70. இயேசு தமது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் மறுபடியும் முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 16:21)

மாற்கு 10:32 பின்பு அவர்கள் எருசலேமுக்குப் பிரயாணமாய்ப் போகையில், இயேசு அவர்களுக்கு முன்னே நடந்துபோனார்; அவர்கள் திகைத்து, அவருக்குப் பின்னே, பயத்தோடே போனார்கள். அப்பொழுது அவர் பன்னிருவரையும் அழைத்து, தமக்குச் சம்பவிக்கப்போகிறவைகளை அவர்களுக்கு மறுபடியும் சொல்லத் தொடங்கினார்:

மாற்கு 10:33 இதோ, எருசலேமுக்குப் போகிறோம்; அங்கே மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப் படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, புறத்தேசத்தாரிடத்தில் ஒப்புக் கொடுப்பார்கள்.

மாற்கு 10:34 அவர்கள் அவரைப் பரியாசம் பண்ணி, அவரை வாரினால் அடித்து, அவர்மேல் துப்பி, அவரைக் கொலை செய்வார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார்.

"அவர்கள் எருசலேமுக்குப் பிரயாணமாய்ப் போகையில், இயேசு அவர்களுக்கு முன்னே நடந்துபோனார்; அவர்கள் திகைத்து, அவருக்குப் பின்னே, பயத்தோடே போனார்கள்" - இயேசு கிறிஸ்து எருசலேமிலே மரிப்பதற்காகப் போகிறார். ஆகையினால் சீஷர்கள் திகைத்து, அவருக்குப் பின்னே பயத்தோடே போகிறார்கள். (மாற்கு 10:32-33)

தீர்க்கதரிசன எண் - 12

"இதோ, எருசலேமுக்குப் போகிறோம்; அங்கே மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, புறத்தேசத்தாரிடத்தில் ஒப்புக்கொடுப்பார்கள். அவர்கள் அவரைப் பரியாசம் பண்ணி, அவரை வாரினால் அடித்து, அவர்மேல் துப்பி, அவரைக் கொலைசெய்வார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார்" (மாற்கு 10:33-34) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்து தமது பாடுகளைப் பற்றி அறிவித்த நான்காவது அறிவிப்பு. (மாற்கு 8:31; மாற்கு 9:12,31) இந்தத் தீர்க்கதரிசனத்தில் பத்து காரியங்கள் அடங்கியிருக்கிறது. அவையாவன:

1. இடம் - எருசலேம்
2. பிரதான ஆசாரியரிடத்திலும் வேத பாரகரிடத்திலும் ஒப்புக் கொடுக்கப்படுவார்
3. அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பார்கள்.

10 அதிகாரம்

4. புறத்தேசத்தாரிடத்தில் ஒப்புக் கொடுப்பார்கள்

5. புறத்தேசத்தார் அவரைப் பரியாசம் பண்ணுவார்கள்.

6. புறதேசத்தார் அவரை வாரினால் அடிப்பார்கள்.

7. புறதேசத்தார் அவர்மேல் துப்புவார்கள்.

8. புறதேசத்தார் அவரைக் கொலை செய்வார்கள்

9. மூன்றுநாட்கள் அடக்கம் பண்ணப் பட்டிருப்பார்.

10. மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார்

71. யாக்கோபு, யோவான் ஆகியோரின் மாம்ச சுபாவம் - (மத் 20:20; 18:1)

மாற்கு 10:35 அப்பொழுது செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அவரிடத்தில் வந்து: போதகரே, நாங்கள் கேட்டுக்கொள்ளப் போகிறதை நீர் எங்களுக்குச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம் என்றார்கள்.

மாற்கு 10:36 அவர் அவர்களை நோக்கி: நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்கள் என்று கேட்டார்.

மாற்கு 10:37 அதற்கு அவர்கள்: உமது மகிமையிலே, எங்களில் ஒருவன் உமது வலதுபாரிசத்திலும், ஒருவன் உமது இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி எங்களுக்கு அருள்செய்யவேண்டும் என்றார்கள்.

மாற்கு 10:38 இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குதே தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும், உங்களால் கூடுமா என்றார்.

மாற்கு 10:39 அதற்கு அவர்கள்: கூடும் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்.

மாற்கு 10:40 ஆனாலும் என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கே அல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார்.

"செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அவரிடத்தில் வந்தார்கள்" - மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் இவருடைய தாயார் இயேசுவிடத்தில் வந்து இந்தக் காரியங்களைக் கூறியதாக எழுதப்பட்டிருக்கிறது. (மத் 20:21)

"உமது மகிமையிலே" - அவர்கள் வரப்போகிற மகிமையையும், மேசியாவின் ராஜ்யத்தையும் புரிந்து கொண்டார்கள் என்பதை இது விளக்குகிறது. (மத் 16:27-28)

"நான் குடிக்கும் பாத்திரம்" - (மத் 20:22)

"நான் பெறும் ஸ்நானம்" - பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம். இந்த வேளையில் இயேசு கிறிஸ்து மட்டுமே பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றிருந்தார். (மத் 3:16)

தீர்க்கதரிசன எண் - 13

"நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்" (மாற்கு 10:39) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. யாக்கோபும், யோவானும் இயேசு கிறிஸ்துவின் பாடுகளின் பாத்திரத்தில் பங்குபெறுவார்கள். (மத் 20:22) பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெறுவார்கள். (மத் 3:16, அப் 1:4-8; அப் 2:1-11)

10 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 14

"எவர்களுக்கு ஆயத்தம்பண்ணப் பட்டிருக்கிறதோ அவர்களுக்கு அருளப்படும்" (மாற்கு 10:4) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. ஏனெனில் தேவனுடைய ராஜ்யம் இன்னும் வரவில்லை. (மத் 4:17)

"ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிறது" - இது பிதாவின் கரத்தில் இருக்கிறது. (மத் 20:23)

72. மற்ற பத்து பேரின் மாம்ச சுபாவம் - (மத் 20:24; 18:1)

மாற்கு 10:41 மற்றப் பத்துப்பேரும் அதைக் கேட்டு, யாக்கோபின்மேலும் யோவானின் மேலும் எரிச்சலானார்கள்.

மாற்கு 10:42 அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

மாற்கு 10:43 உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக் காரனாயிருக்கக்கடவன்.

மாற்கு 10:44 உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.

மாற்கு 10:45 அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.

"மற்றப் பத்துப்பேரும் அதைக் கேட்டு, யாக்கோபின்மேலும் யோவானின் மேலும் எரிச்சலானார்கள்" - (மத் 20:24-28)

பணிவிடைக்காரன் (minister) - διάκονος - diakonos - 1249

ஆண்பால் அல்லது பெண்பால் பெயர்ச்சொல் - பணிவிடைக்காரன், ஊழியக்காரன், வேலைக்காரன், ஊழியஞ்செய்கிறவர், உதவிக்காரர் (மத் 20:26)

தீர்க்கதரிசன எண் - 15

"மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மாற்கு 10:45) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"அநேகரை மீட்கும்பொருள்" - (மத் 20:28)

73. இயேசு குருடனைக் குணப் படுத்துகிறார் - (மத் 9:27; 20:29; லூக் 18:35)

மாற்கு 10:46 பின்பு அவர்கள் எரிகோவுக்கு வந்தார்கள். அவரும் அவருடைய சீஷர்களும் திரளான ஜனங்களும் எரிகோவை விட்டுப் புறப்படுகிறபோது, திமேயுவின் மகனாகிய பர்திமேயு என்கிற ஒரு குருடன், வழியருகே உட்கார்ந்து, பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான்.

மாற்கு 10:47 அவன் நசரேயனாகிய இயேசு வருகிறாரென்று கேள்விப்பட்டு: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிடத் தொடங்கினான்.

மாற்கு 10:48 அவன் பேசாதிருக்கும்படி அநேகர் அவனை அதட்டினார்கள். அவனோ: தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான்.

மாற்கு 10:49 இயேசு நின்று, அவனை அழைத்து வரச்சொன்னார். அவர்கள் அந்தக் குருடனை அழைத்து: திடன்கொள், எழுந்திரு, உன்னை அழைக்கிறார் என்றார்கள்.

10 அதிகாரம்

மாற்கு 10:50 உடனே அவன் தன் மேல்வஸ்திரத்தை எறிந்துவிட்டு, எழுந்து, இயேசுவினிடத்தில் வந்தான்.

மாற்கு 10:51 இயேசு அவனை நோக்கி: நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறாய் என்றார். அதற்கு அந்தக் குருடன்: ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும் என்றான்.

மாற்கு 10:52 இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். உடனே அவன் பார்வையடைந்து, வழியிலே இயேசுவுக்குப் பின்சென்றான்.

"எரிகோ" - (யோசு 2:1)

"அவன் பேசாதிருக்கும்படி அநேகர் அவனை அதட்டினார்கள். அவனோ: தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான்" - எல்லோரும் குருடனை அமைதியாக இருக்குமாறு அதட்டினார்கள். ஆனால் அவன் தன் ஜெபத்தை நிறுத்தவில்லை. தன்னுடைய தேவை சந்திக்கப்படவேண்டும், தான் பார்வையடைய வேண்டும் என்று இயேசுவிடம் தொடர்ந்து விண்ணப்பம் பண்ணுகிறான். முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான். நாமும் நாம் ஏறெடுக்கும் ஜெபத்தில் இடைவிடாமல் ஜெபம் பண்ண வேண்டும் என்பதற்கு இவன் ஒரு முன்மாதிரியாக இருக்கிறான்.

"இயேசு நின்று, அவனை அழைத்து வரச்சொன்னார்" - இயேசுகிறிஸ்து எரிகோவிற்கு வரும்போது அவர் நான்கு குருடர்களைப் பார்வையடையச்செய்கிறார். மூன்று இடங்களில் சொஸ்தமாக்குகிறார்.

1. அவர் எரிகோவுக்குச் சமீபமாய் வரும்போது (லூக்கா 18:35-43)
2. அவர் எரிகோவை விட்டுப் புறப்படுகிற போது (மாற்கு 10:46-52)
3. அவர் எரிகோவிலிருந்து புறப்பட்டுப் போகையில் (மத் 20:29-34) இந்த இடத்தில் இரண்டு குருடர்கள் வருகிறார்கள். மற்ற இடத்தில் ஒரு குருடன் மட்டுமே வருகிறான்.

"உடனே அவன் தன் மேல்வஸ்திரத்தை எறிந்துவிட்டு, எழுந்து, இயேசுவினிடத்தில் வந்தான்" - தன்னால் முடிந்தவரையிலும் இயேசுவிடம் விரைவாக வந்து சேர வேண்டுமென்று விரும்பினான். இயேசுவை ஆர்வத்தோடு தேடினால் நிச்சயமாக அவரைக் கண்டடைவோம். தனக்குத் தடையாக இருக்கும் மேல்வஸ்திரத்தை எறிந்துவிட்டு, இயேசுவிடம் விரைவாக வந்தான். நாமும்கூட ஜெபம் பண்ணுவதற்குத் தடையாக இருக்கும் காரியங்களை உதறி எறிந்துவிட்டு, இயேசுவிடம் ஆர்வத்தோடு ஜெபிக்க வேண்டும். இவன் அதிக சத்தமாகக் கூப்பிட்டபோது, இவனுடைய விசுவாசம் வளர்ந்தது. மற்றவர்கள் இவனைப் பேசாதிருக்குமாறு அதட்டியபோதும், இவனுடைய விசுவாசம் வளர்ந்தது. தனது விண்ணப்பத்தை இயேசு கிறிஸ்து அங்கீகரித்து, தனக்குப் பார்வை கொடுப்பார் என்று நம்பினான். நம்பியதைப் பெற்றுக்கொண்டான்.

"நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறாய்" - அவனுடைய தேவை என்ன என்பது இயேசுவிற்குத் தெரியும். ஆயினும், அவனுடைய உண்மையான விசுவாசத்தை வெளிப்படுத்துவதற்காக அவனுடைய தேவை என்ன என்று கேட்கிறார். கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் இவையெல்லாம் நாம் ஜெபத்தில் செய்ய வேண்டியவை. கர்த்தர் நமது ஜெபத்திற்குப் பதில்கொடுப்பார். (மத் 7:7-11; மத் 21:21-22).

"நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" - நமது விசுவாசித்திற்குக் கர்த்தர் எப்போதுமே பலன் அளிக்க விரும்புகிறார். பலவேளைகளில் சில காரியம் மனுஷனால் கூடாதகாரியம் போன்று தெரியலாம். ஆனாலும் கர்த்தரால் எல்லாம்கூடும். (மத் 17:20; மத் 21:21-22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24) மனுஷர் தங்களுடைய விசுவாசத்தின் பிரகாரமாகவே பெற்றுக் கொள்வார்கள். (மத் 9:29) தம்மிடத்தில் விசுவாசத்தோடு வருகிற யாரையும் கர்த்தர் புறம்பே தள்ளுவதில்லை.

11 அதிகாரம்

74. வெற்றிப்பவனி - (சக 9:9; மத் 21:1; லூக் 19:28; யோவான் 12:12)

மாற்கு 11:1 அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய்ச் சேர்ந்து, ஒலிவமலைக்கு அருகானபெத்பகே பெத்தானியா என்னும் ஊர்களுக்கு வந்தபோது, அவர் தம்முடைய சீஷரில் இரண்டுபேரை நோக்கி:

மாற்கு 11:2 உங்களுக்கு எதிரேயிருக்கிற கிராமத்துக்குப் போங்கள்; அதில் பிரவேசித்தவுடனே, மனுஷர் ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத ஒரு கழுதைக்குட்டி கட்டியிருக்கக் காண்பீர்கள், அதை அவிழ்த்துக் கொண்டு வாருங்கள்.

மாற்கு 11:3 ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று ஒருவன் உங்களிடத்தில் கேட்டால்: இது ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள்; உடனே அதை இவ்விடத்திற்கு அனுப்பிவிடுவான் என்று சொல்லி, அவர்களை அனுப்பினார்.

மாற்கு 11:4 அவர்கள் போய், வெளியே இருவழிச் சந்தியில் ஒரு வாசலருகே கட்டியிருந்த அந்தக் குட்டியைக் கண்டு, அதை அவிழ்த்தார்கள்.

மாற்கு 11:5 அப்பொழுது அங்கே நின்றவர்களில் சிலர்: நீங்கள் குட்டியை அவிழ்க்கிறது என்னவென்றார்கள்.

மாற்கு 11:6 இயேசு கற்பித்தபடியே அவர்களுக்கு உத்தரவு சொன்னார்கள். அப்பொழுது, அவர்களைப் போகவிட்டார்கள்.

மாற்கு 11:7 அவர்கள் அந்தக் குட்டியை இயேசுவினிடத்தில் கொண்டுவந்து, அதின்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டார்கள்; அவர் அதின்மேல் ஏறிப்போனார்.

மாற்கு 11:8 அநேகர் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்; வேறு சிலர் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பினார்கள்.

மாற்கு 11:9 முன்நடப்பாரும் பின்நடப்பாரும்: ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்;

மாற்கு 11:10 கர்த்தரின் நாமத்தினாலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதின் ராஜ்யம் ஆசீர்வதிக்கப்படுவதாக; உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்.

மாற்கு 11:11 அப்பொழுது, இயேசு எருசலேமுக்கு வந்து, தேவாலயத்தில் பிரவேசித்து, எல்லாவற்றையும் சுற்றிப்பார்த்து, சாயங்காலமானபோது, பன்னிருவரோடுங் கூடப் பெத்தானியாவுக்குப் போனார்.

"பெத்பகே பெத்தானியா" - பெத்பகே என்பதற்கு அத்திப்பழங்களின் வீடு என்பது பொருள். பெத்தானியா என்பதற்கு பேரீச்சம்பழங்களின் வீடு என்று பொருள். இவ்விரண்டு ஊர்களுக்கும் இடையே ஒருமைல் தூரம் இடைவெளி இருந்தது. (மத் 21:1)

தீர்க்கதரிசன எண் - 16

"உங்களுக்கு எதிரேயிருக்கிற கிராமத்துக்குப் போங்கள்................" (மாற்கு 11:2-3) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"மனுஷர் ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத ஒரு கழுதைக்குட்டி கட்டியிருக்கக் காண்பீர்கள்" - தேவனுக்குச் சொந்தமான அவருடைய பிள்ளைகள் அவருக்குக் கீழ்ப்படிவதை விட இந்தக் கழுதைக்குட்டியானது அவருக்குக் கீழ்ப்படிகிறது. (யோவான்1:11)

"அவர்கள் போய், வெளியே இருவழிச் சந்தியில் ஒரு வாசலருகே கட்டியிருந்த அந்தக் குட்டியைக் கண்டு, அதை அவிழ்த்தார்கள்" - மாற்கு 11:2-3 ஆகிய வசனங்களின் நிறைவேற்றம்.

11 அதிகாரம்

"அதின்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டார்கள்; அவர் அதின்மேல் ஏறிப்போனார்" - (மத் 21:8)

"ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" - சங் 118:25-26 ஆகிய வசனங்களிலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியத்திற்கு "இப்போது எங்களை இரட்சியும் அல்லது எங்களுக்கு உதவி புரியும்" என்று பொருள். இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வெற்றி பவனி. (மத் 21:1,9)

தேவாலயம் **(temple)** - **ἱερόν** - **hieron** - 2411

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல்- தேவாலயம், ஆலயம், கோவில் **(temple courts, sanctuary itself)**

"எல்லாவற்றையும் சுற்றிப்பார்த்தார்" - தேவாலயத்துப் பிரகாரங்களில் என்ன காரியங்கள் நடைபெறுகிறது என்பதை இயேசு கிறிஸ்து சுற்றிப்பார்க்கிறார். இரண்டு நாட்களுக்கு முன்பு தேவாலயத்தில் காசுக்காரர்களையும், விற்கிறவர்களையும் துரத்தினார். (மத் 21:12-16) அதுபோன்ற காரியத்தை இப்போது அவர் செய்யவில்லை. அவருடைய ஊழியத்தின் ஆரம்பத்தில், இதுபோன்ற காரியம் நடைபெற்றது. (யோவான் 2:13) இப்போது இயேசு தேவாலயத்திற்கு வரும்போது, எல்லாம் சரியாக இருக்கிறது. அடுத்த நாளில் இயேசு கிறிஸ்து தேவாலயத்திற்கு வந்து, இரண்டாம் முறையாக அதைச் சுத்திகரிக்கிறார். (மாற்கு 11:15-17)

75. கனிதராத அத்தி மரத்தை சபிக்கிறார் - (மத் 21:17; லூக் 13:6)

மாற்கு 11:12 மறுநாளிலே அவர்கள் பெத்தானியாவிலிருந்து புறப்பட்டு வருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று.

மாற்கு 11:13 அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்திமரத்தைத் தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்கவந்தார். அத்திப்பழக் காலமாயிராதபடியால், அவர் அதினிடத்தில் வந்தபோது அதில் இலைகளையல்லாமல், வேறொன்றையும் காணவில்லை.

மாற்கு 11:14 அப்பொழுது இயேசு அதைப் பார்த்து: இதுமுதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக் கடவன் என்றார்; அதை அவருடைய சீஷர்கள் கேட்டார்கள்.

"மறுநாளிலே" - (மத் 12:40)

"இலைகளுள்ள ஒரு அத்திமரத்தைத் தூரத்திலே கண்டார்" - இரண்டு வகையான அத்திமரங்கள் உண்டு. முதலாவது வகை சீக்கிரமாகவே பழுக்கக்கூடியவை (ஏசா 28:4; எரே 24:2) இரண்டாம் வகை காலம்தாழ்த்திப் பழுக்கக்கூடியவை (எரே 8:13; எரே 29:17). அத்திமரத்தில் இலைகள் இருந்தால் அதில் கனிகள் இருக்கும். பழக்காலம் வராவிட்டாலும், மரத்தில் இலை காணப்படுமானால் அதில் பழங்கள் இருக்கும் என்பதற்கு அடையாளம்.

தீர்க்கதரிசன எண் - 17

"இதுமுதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக் கடவன்" - (மாற்கு 11:14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (மாற்கு 11:20)

இந்த வசனத்திற்கு பலவிதமான விளக்கவுரைகளைக் கூறுகிறார்கள். இந்த அத்திமரம் யாருக்குச் சொந்தமானது என்பதைப் பற்றியும், இயேசு கிறிஸ்து அந்த மரத்தைச் சபித்ததைப் பற்றியும் ஆராய்ச்சி செய்கிறார்கள். இந்த ஆராய்ச்சிகளை விட இயேசு கிறிஸ்துவே சிருஷ்டிகர் என்பதையும், அவருக்குச் சர்வ சிருஷ்டியின்மீதும் அதிகாரம் உள்ளது என்பதையும் நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. (யோவான் 1:3; எபே 3:9; கொலோ 1:16-18) பிதாவாகிய தேவன் தமது குமாரன் மூலமாகக் கிரியை செய்கிறார். (யோவான் 5:30,36; யோவான் 7:16; யோவான் 8:28; யோவான் 14:10) தேவனுடைய கிரியையைத் தர்க்கம் பண்ணுவதற்கு நமக்கு உரிமையில்லை. (ரோமர் 9:14-24)

மாற்கு - தொகுப்புரை

11 அதிகாரம்

76. தேவாலயத்தின் இரண்டாம் சுத்திகரிப்பு - (மத் 21:12; லூக் 19:45)

மாற்கு 11:15 அவர்கள் எருசலேமுக்கு வந்தார்கள். இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்தில் விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர் களையும் துரத்திவிட்டு, காசுக்காரருடைய பலகைகளையும், புறா விற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்து,

மாற்கு 11:16 ஒருவனும் தேவாலயத்தின் வழியாக யாதொரு பண்டத்தையும் கொண்டு போகவிடாமல்;

மாற்கு 11:17 என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கவில்லையா? நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்று அவர்களுக்குச் சொல்லி உபதேசித்தார்.

மாற்கு 11:18 அதை வேதபாரகரும் பிரதான ஆசாரியரும் கேட்டு, அவரைக் கொலை செய்ய வகைதேடினார்கள்; ஆகிலும் ஜனங்களெல்லாரும் அவருடைய உபதேசத்தைக்குறித்து ஆச்சரியப் பட்டபடியினாலே அவருக்குப் பயந்திருந்தார்கள்.

மாற்கு 11:19 சாயங்காலமானபோது அவர் நகரத்திலிருந்து புறப்பட்டுப்போனார்.

"தேவாலயம்" - தேவாலயத்தின் பிரகாரங்கள், தேவாலயத்திற்கு உள்ளே இருக்கும் மகாபரிசுத்த ஸ்தலம் அல்ல.

"இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்தில் விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் துரத்திவிட்டு, காசுக்காரருடைய பலகைகளையும், புறா விற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்தார்" - இயேசு கிறிஸ்துவின் இறுதி வார ஊழியத்தில் இரண்டாம் முறையாக அவர் தேவாலயத்தைச் சுத்திகரித்தார். மொத்தம் மூன்று முறை அவர் தேவாலயத்தைச் சுத்திகரிப்பதாக வாசிக்கிறோம். (யோவான் 2:13; மத் 21:12-16) தேவாலயத்தை அவர் எவ்வாறு தனிநபராக இருந்து, சுத்திகரித்தார். அவருக்குப் பலத்த எதிர்ப்பு இருந்தபோதிலும், அதற்கு நடுவில் எவ்வாறு இந்தக் காரியத்தைச் செய்தார். இதற்கெல்லாம் தேவனுடைய வல்லமை அவர்மூலமாக வெளிப்பட்டதே காரணம். இயேசு கிறிஸ்து தேவாலயத்தில் இப்படிப்பட்ட கிரியையைச் செய்ததினால் தேவாலயத்துத் தலைவர்கள் அவரைக் கொலைசெய்வதற்காகச் சதியாலோசனை பண்ணினார்கள். (மாற்கு 11:18)

"என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்" - எழுதப்பட்ட வார்த்தைக்கு இயேசு கிறிஸ்து விளக்கம் எதுவும் தரவில்லை. அவர் கூறுவதற்கு வியாக்கியானம்கூட தேவைப்படாது. புரிந்து கொள்வதற்கு மிகவும் எளிமையானதாக இருக்கும்.வேதாகமமும் புரிந்து கொள்வதற்கு எளிமையானது. அதற்கான காரணங்கள்.

1. பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வெளிப்பாடு. (2தீமோ 3:16-17; 2பேதுரு 1:21; எபி 1:1)

2. ஏற்கெனவே கூறியுள்ள சத்தியத்தைப் பரிசுத்த வேதாகமம் மறுபடியும் வலியுறுத்துகிறது. (2கொரி 13:1) தேவன் என்ன சொல்கிறார் அதை எங்கே சொல்கிறார் என்பதை வாசித்து விட்டு, அதற்கு நாம் அப்படியே கீழ்ப்படிய வேண்டும்.

3. வேதாகமத்தின் மொழிநடை மிகவும் எளிமையானது. (லூக்கா 24:25,45).

4. பரிசுத்த வேதாகமத்திற்குக் கர்த்தரே ஆசிரியர். (2தீமோ 3:16-17; 2பேதுரு 1:21)

5. தேவனை நம்பும் ஜனங்கள் எளிதாகப் புரிந்து கொள்ளும் விதத்தில் வேத வாக்கியம் எழுதப்பட்டிருக்கிறது. (உபா 29:29; மத் 11:25; மத் 13:19-23; 2கொரி 4:1-6; 2தீமோ 3:16-17)

11 அதிகாரம்

6. வேதவசனங்களைப் புரிந்து கொள்வதற்கு அதை வாசித்து, அதற்குக் கீழ்ப்படிந்தாலே போதுமானது. (சங் 1:2-3; 2தீமோ 2:15; மத் 11:15, மாற்கு 4:22-23)

7. பரிசுத்த வேதாகமத்தில் 80 சதவீதம் வரலாற்றையும், மனுஷர் எவ்வாறு வாழவேண்டும் என்னும் அறிவுரைகளையும் வாசிக்கிறோம். மீதமுள்ள 20 சதவீதம் தீர்க்கதரிசன காரியங்களைக் கூறுகிறது. (மாற்கு 8:17)

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 5

"என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கவில்லையா? நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்" (மாற்கு 11:17; ஏசா 56:7; எரே 7:11)

77. ஜெபிக்கும்போது விசுவாசம் தேவை - (மத் 21:21)

மாற்கு 11:20 மறுநாள் காலையிலே அவர்கள் அவ்வழியாய்ப் போகும்போது, அந்த அத்திமரம் வேரோடே பட்டுப்போயிருக்கிறதைக் கண்டார்கள்.

மாற்கு 11:21 பேதுரு நினைவுகூர்ந்து, அவரை நோக்கி: ரபீ, இதோ, நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று என்றான்.

மாற்கு 11:22 இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்.

மாற்கு 11:23 எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால்,அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மாற்கு 11:24 ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.

"நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று" - மாற்கு 11:14-இன் நிறைவேற்றம்.

"தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் இருங்கள்" - தேவனிடத்தில் மனுஷரால் விசுவாசமாய் இருக்க முடியும். மனுஷரால் முடியாத காரியத்தைத் தேவன் கட்டளையிட மாட்டார். தேவனை விசுவாசிக்கும் விசுவாசத்தோடு அவர் மனுஷனைச் சிருஷ்டித்தார். மனுஷன் பாவம் செய்து வீழ்ந்தபோது, அவிசுவாசம் அவனுக்குள் வந்தது. (ஆதி 3:1-7) மனுஷன் புதுசிருஷ்டியாகும்போது அவனுக்குள் விசுவாசம் புதுப்பிக்கப்படுகிறது. அந்த விசுவாசத்தை அவன் காத்துக்கொள்ளும் போது, அது பூரண நிலைக்கு வளர்கிறது. (ரோமர் 1:5,17; ரோமர் 10:17; கலா 2:20; கொலோ 1:23; கொலோ 2:6-7; 2தெச 1:3; 2பேதுரு 1:1-5)

தீர்க்கதரிசன எண் - 18

"எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப் படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும்" (மாற்கு 11:23-24 நிபந்தனைக்கு உட்பட்டது).

ஜெபத்திற்குப் பதில் கிடைப்பதற்கு நிபந்தனைகள்

1. தேவனிடத்தில் விசுவாசம் வைத்திருக்கவேண்டும். (ரோமர் 4:17; எபி 11:3; கலா 5:22-23).

2. நமது விருப்பங்களைத் தேவனிடம் தாராளமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும். (மாற்கு 11:23-24; மத் 17:20; மத் 21:21-22; யோவான் 15:7).

11 அதிகாரம்

3. தேவன் நமது ஜெபத்திற்குப் பதில் கொடுப்பார் என்று இருதயத்தில் விசுவாசிக்க வேண்டும். (மாற்கு 11:23-24; மத் 17:20; மத் 21:21-22; மாற்கு 9:23; யோவான் 15:7,16)

4. இருதயத்தில் சந்தேகப்படக்கூடாது. (மாற்கு 11:23; மத் 17:20; யாக் 1:5-8).

5. நாம் கேட்பதைக் கர்த்தர் கொடுப்பார் என்பதை விசுவாசிக்க வேண்டும். (மாற்கு 11:23-24; மத் 7:7-11; மத் 17:20; மத் 21:21-22; எபி 11:6).

6. நாம் கேட்பதை ஆண்டவர் ஏற்கெனவே கொடுத்து விட்டார் என்று விசுவாசிக்க வேண்டும். (மாற்கு 11:24; மத் 17:20; 1யோவான் 5:14-15)

7. நாம் தேவனிடத்தில் கேட்கும்பொழுது, புத்திரசுவீகாரத்தின் உரிமையோடு கேட்க வேண்டும். (மாற்கு 11:23-24; மத் 17:20; மாற்கு 9:23).

8. நாம் கேட்பதும், தேவனுடைய சித்தமும் ஒன்றுதான் என்று விசுவாசிக்கவேண்டும். (மாற்கு 11:24; யோவான் 15:7; மத் 17:20; மத் 21:21-22; எபி 11:6; யாக் 1:5-8).

9. ஒரு காரியம் தேவனுடைய சித்தம் என்று தெரிந்தும், அதற்காக ஜெபிக்கும்போது, "உமக்கு சித்தமானால்" என்று கூறி ஜெபிக்கக்கூடாது. (மாற்கு 11:23; சங் 84:11; 2கொரி 1:20; 2பேதுரு 1:3-4).

10. தேவனுக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் சுத்த இருதயத்தோடும், சுத்த ஜீவியத்தோடும் இருக்க வேண்டும். (மாற்கு 11:25; யோவான் 15:7; 1 யோவான் 3:22-23)

78. ஜெபத்திற்கு பதில் கிடைப்பதற்கு நிபந்தனை - (மத் 6:14)

மாற்கு 11:25 நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்.

மாற்கு 11:26 நீங்கள் மன்னியாதிருப்பீர் களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார் என்றார்.

"நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது" - நின்று ஜெபம்பண்ணுவது, முழங்கால்படியிட்டு ஜெபம்பண்ணுவதைப் போன்று நமது சரீரத்தின் நிலைமை. (1இராஜா 8:22; 2நாளா 6:13; சக 3:1; லூக்கா 18:11-13)

"நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார்" - தேவன் நமது பாவங்களை மன்னிக்க வேண்டுமென்றால் அதற்காக நாம் செய்ய வேண்டிய நிபந்தனை ஒன்று உள்ளது. நமக்கு எதிராக மற்றவர்கள் பாவம் செய்திருக்கலாம். நாம் அவர்களை மன்னிக்க வேண்டும். (மாற்கு 11:25-26; மத் 18:21-35; ரோமர் 12:14).

79. இயேசுவின் அதிகாரத்தை கேள்வி கேட்கிறார்கள் - (மத் 21:23; லூக் 20:1)

மாற்கு 11:27 அவர்கள் மறுபடியும் எருசலேமுக்கு வந்தார்கள். அவர் தேவாலயத்திலே உலாவிக் கொண்டிருக்கையில், பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் அவரிடத்தில் வந்து:

11 அதிகாரம்

மாற்கு 11:28 நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இவைகளைச் செய்கிறதற்கு அதிகாரத்தை உமக்கு கொடுத்தவர் யார் என்று கேட்டார்கள்.

மாற்கு 11:29 இயேசு பிரதியுத்தரமாக: நானும் உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்கிறேன், நீங்கள் எனக்கு உத்தரவு சொல்லுங்கள், அப்பொழுது நானும் இன்ன அதிகாரத்தினாலே இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மாற்கு 11:30 யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ, மனுஷரால் உண்டாயிற்றோ, எனக்கு உத்தரவு சொல்லுங்கள் என்றார்.

மாற்கு 11:31 அதற்கு அவர்கள்: தேவனால் உண்டாயிற்றென்று சொல்வோமானால், பின்னை ஏன் அவனை விசுவாசிக்கவில்லையென்று கேட்பார்.

மாற்கு 11:32 மனுஷரால் உண்டாயிற்றென்றுசொல்வோமானால், ஜனங்களுக்குப் பயப்பட வேண்டியதாயிருக்கும்; எல்லாரும் யோவானை மெய்யாகத் தீர்க்க தரிசியென்று எண்ணுகிறார்களே என்று தங்களுக்குள்ளே ஆலோசனை பண்ணி;

மாற்கு 11:33 இயேசுவுக்குப் பிரதியுத்தரமாக: எங்களுக்குத் தெரியாது என்றார்கள். அப்பொழுது இயேசு: நானும் இன்ன அதிகாரத்தினாலே இவைகளைச் செய்கிறேன் என்று உங்களுக்குச் சொல்லேன் என்றார்.

"அவர்கள் மறுபடியும் எருசலேமுக்கு வந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவின் கடைசி வாரத்தில் மொத்தம் ஐந்து முறை எருசலேமிற்கு வந்தார். அதில் இது நான்காவது முறையாகும்.

1. வெள்ளிக்கிழமை (மத் 21:1-16)
2. ஞாயிற்றுக்கிழமை (மாற்கு 11:1-11; லூக்கா19:29-44; யோவான் 12:12-19)
3. திங்கள்கிழமை (மாற்கு 11:12-19; லூக்கா 19:45-48;யோவான் 12:20-50)
4. செவ்வாய்கிழமை (மத் 21:23-26:13; மாற்கு11:20-14:9; லூக்கா 20:1-21:38)
5. புதன்கிழமை (மத் 26:14-27:66; மாற்கு14:10-15:47;லூக்கா 22:1-23:56; யோவான் 13:1-19:42)

"அவர் தேவாலயத்திலே உலாவிக் கொண்டிருக்கையில், பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் அவரிடத்தில் வந்தார்கள்" - மத் 16:21-இல் இயேசு கிறிஸ்து முன்னறிவித்த காரியங்கள் இப்போது நிறைவேறத் துவங்குகிறது. அவர்கள் கிறிஸ்துவைக் கொலை செய்வதற்காகப் பலவித தந்திரமான காரியங்களைச் செய்கிறார்கள். (மத் 21:15,23,45-46; மத் 26:3-5,14-16, 47-27:66,மாற்கு14:1-15:31; லூக்கா 19:47-48; லூக்கா 20:19-47; லூக்கா 22:1-23:23; யோவான் 7:32,45; யோவான் 11:47-57; யோவான் 18:2-19:16).

அதிகாரம் (authority) - ἐξουσία - **exousia** - 1849

பெண்பால் பெயர்ச்சொல் - அதிகாரம், வல்லமை, ஆதீனம் **(delegated power, the liberty and right to act)** யோவான் ஸ்நானன் எந்த அதிகாரத்தினால் கிரியை செய்தானோ அதே அதிகாரத்தினாலே தாமும், கிரியை செய்வதாக இயேசு கிறிஸ்து கூறுகிறார். (லூக்கா 1:17; யோவான் 1:33-34)

11 அதிகாரம்

"தங்களுக்குள்ளே ஆலோசனை பண்ணினார்கள்" - ஒரு காரியம் செய்வது சரியா தவறா என்று ஆலோசனை பண்ணுவது ஆபத்தில் போய் முடியும். பொதுவாக இவ்வாறு ஆலோசனை பண்ணிய பின்பு, அவர்கள் செய்யும் காரியங்கள் பாவமாகவே இருக்கும். வேதத்தில் எது சரி என்பது சந்தேகத்திற்கு இடமில்லாமல் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகையினால் ஆலோசனை பண்ணுவதற்கே அவசியமில்லை. வேதபாரகருக்கும், மூப்பருக்கும், பிரதான ஆசாரியருக்கும் தாங்கள்கேட்கும் கேள்விகளுக்கு ஏற்கெனவே பதில் தெரியும். இருந்தாலும் ஆலோசனை பண்ணுகிறார்கள். தாங்கள் வைத்த கண்ணியில் தாங்களே சிக்கிக்கொள்கிறார்கள்.

"எங்களுக்குத் தெரியாது என்றார்கள்" - வேதாகமத்தில் இவர்களைப் போன்று பொய் கூறியவர்கள் அநேகம்பேர் இருக்கிறார்கள். (ஆதி 4:9; ஆதி 12:11-19; ஆதி 18:15; ஆதி 20:2; ஆதி 26:7-10; ஆதி 27:6-24,46; யாத் 32; 1சாமு 15:13; 1சாமு 21:2; 1சாமு 27:10; 2சாமு 15:34-37; 2சாமு 16:16-19; 2சாமு 17:7-14; 1இராஜா 13:11-22; 2இராஜா 5:20-24; மத் 26:69-75; மத் 28:13-15; அப் 5:1-10; அப் 6:11-14; அப் 16:20-21; அப் 17:5-7; அப் 24:5; அப் 25:7-8).

12 அதிகாரம்

80. திராட்சைத் தோட்டத்திற்கு எஜமானைப் பற்றிய உவமை - (மத் 21:33; லூக் 20:9)

மாற்கு 12:1 பின்பு அவர் உவமைகளாய் அவர்களுக்குச் சொல்லத் தொடங்கினதாவது: ஒரு மனுஷன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி, அதைச் சுற்றிலும் வேலி யடைத்து, இரசத்தொட்டியை உண்டுபண்ணி, கோபுரத்தையும் கட்டி, தோட்டக்காரருக்கு அதைக் குத்தகையாக விட்டு, புறத் தேசத்துக்குப் போயிருந்தான்.

மாற்கு 12:2 தோட்டக்காரரிடத்தில் திராட்சத் தோட்டத்துக் கனிகளில் தன் பாகத்தை வாங்கிக்கொண்டு வரும்படி, பருவகாலத்திலே அவர்களிடத்தில் ஒரு ஊழியக்காரனை அனுப்பினான்.

மாற்கு 12:3 அவர்கள் அவனைப் பிடித்து, அடித்து, வெறுமையாய் அனுப்பி விட்டார்கள்.

மாற்கு 12:4 பின்பு வேறொரு ஊழியக்காரனை அவர்களிடத்தில் அனுப்பினான்; அவர்கள் அவன்மேல் கல்லெறிந்து, தலையிலே காயப்படுத்தி, அவமானப்படுத்தி, அனுப்பிவிட்டார்கள்.

மாற்கு 12:5 மறுபடியும் வேறொருவனை அனுப்பினான்; அவனை அவர்கள் கொலைசெய்தார்கள். வேறு அநேகரையும் அனுப்பினான்; அவர்களில் சிலரை அடித்து, சிலரைக் கொன்றுபோட்டார்கள்.

மாற்கு 12:6 அவனுக்குப் பிரியமான ஒரே குமாரன் இருந்தான்; என் குமாரனுக்கு அஞ்சுவார்களென்று சொல்லி, அவனையும் கடைசியிலே அவர்களிடத்தில் அனுப்பினான்.

மாற்கு 12:7 தோட்டக்காரரோ: இவன் சுதந்தரவாளி, இவனைக் கொலை செய்வோம் வாருங்கள்; அப்பொழுது சுதந்தரம் நம்முடையதாகும் என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டு;

மாற்கு 12:8 அவனைப் பிடித்துக் கொலை செய்து திராட்சத் தோட்டத்துக்குப் புறம்பே போட்டுவிட்டார்கள்.

மாற்கு 12:9 அப்படியிருக்க, திராட்சத்தோட்டத்துக்கு எஜமான் என்ன செய்வான்? அவன் வந்து அந்தத் தோட்டக்காரரைச் சங்கரித்து, திராட்சத்தோட்டத்தை மற்றவர்களுக்கு ஒப்புக்கொடுப்பான் அல்லவா?

மாற்கு 12:10 வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று;

மாற்கு 12:11 அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று எழுதியிருக்கிற வாக்கியத்தை நீங்கள் வாசிக்கவில்லையா என்றார்.

மாற்கு 12:12 இந்த உவமையைத் தங்களைக்குறித்துச் சொன்னாரென்று அவர்கள் அறிந்து, அவரைப் பிடிக்க வகைதேடினார்கள்; ஆனாலும் ஜனத்துக்கு பயந்து, அவரை விட்டுப் போய்விட்டார்கள்.

உவமை எண் - 8

"ஒரு மனுஷன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி........" - மாற்கு கூறியிருக்கிற எட்டாவது உவமை. (மாற்கு 12:1-11) யூதர்கள் இயேசு கிறிஸ்துவை மறுதலிப்பார்கள், ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதை இந்த உவமை விளக்குகிறது. (மாற்கு 12:10-11) இந்த உவமையில் மனுஷன், தோட்டக்காரர், ஊழியக்காரன், பிரியமான ஒரே குமாரன் ஆகியோர் யார் என்று தெளிவாக கூறப்படவில்லை. இந்த உவமையின் பிரகாரம் பிரியமான ஒரேகுமாரன் என்பது இயேசு கிறிஸ்துவையே குறிக்கிறது.

மாற்கு - தொகுப்புரை

12 அதிகாரம்

"திராட்சத்தோட்டத்தை உண்டாக்கினான்" - மாற்கு 12:1-9-இல் இந்த மனுஷனுடைய பன்னிரெண்டு கிரியைகளும்,மாற்கு 12:1-இல் இந்த மனுஷனுடைய ஆறு கிரியைகளும் கூறப்பட்டிருக்கிறது.

"கோபுரம்" - காவல்காரர் காவல் காப்பதற்காக உயரமாகக் கட்டப்பட்டிருக்கும் காவல் கோபுரம். (ஏசா 1:8).

"பருவகாலம்" - திராட்சத்தோட்டத்தை உண்டாக்கின பின்பு, கனி தருவதற்காக நான்கு வருஷங்கள் காத்திருக்க வேண்டும். அதுவே திராட்சத்தோட்டத்தின் பருவகாலம்.

தோட்டக்காரரிடம் அனுப்பப்பட்டவர்கள்

1. ஒரு ஊழியக்காரன் - அவர்கள் அவனைப் பிடித்து, அடித்து, வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள் (மாற்கு 12:2-3)
2. வேறொரு ஊழியக்காரன் - அவர்கள் அவன்மேல் கல்லெறிந்து, தலையிலே காயப்படுத்தி, அவமானப்படுத்தி, அனுப்பிவிட்டார்கள் (மாற்கு 12:4)
3. மறுபடியும் வேறொருவன் - அவனை அவர்கள் கொலைசெய்தார்கள். (மாற்கு 12:5)
4. வேறு அநேகர் - அவர்களில் சிலரை அடித்து, சிலரைக் கொன்று போட்டார்கள் (மாற்கு 12:5)
5. அவனுக்குப் பிரியமான ஒரே குமாரன் (மாற்கு 12:6-7) - அவனைப் பிடித்துக் கொலைசெய்து திராட்சத் தோட்டத்துக்குப் புறம்பே போட்டு விட்டார்கள். இயேசுகிறிஸ்துவின் மரணத்தைப் பற்றிய முன்னறிவிப்பு. (மாற்கு 12:10)

ஊழியக்காரன் (servant) - δοῦλος - **doulos** - 1401

பெயரடை-வேலைக்காரனாகிய,ஊழியக் காரனாகிய, அடிமையாயிருக்கிற **(a bondservant)**

பிரியமான (wellbeloved) - ἀγαπητός - agapeetos - 27

பெயரடை - நேச, பிரியமான

(அ) கிறிஸ்துவிற்கு பயன்படுத்தப்பட்ட பெயரடை - மத். 3:17

(ஆ) சக கிறிஸ்தவர்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள பெயர்கள் - 1கொரி 4:14

(இ) 1யோவா. 4:7ல் பிரியமானவர்களே என்னும் உரிச்சொல்

தேவன் இயேசுவை பிரியமானவர் என்று அழைக்கிறார். (மத் 3:17; மத் 12:18; மத் 17:5; மாற்கு 1:11; மாற்கு 9:7; லூக்கா 3:22; லூக்கா 9:35)

"அப்படியிருக்க, திராட்சத்தோட்டத்துக்கு எஜமான் என்ன செய்வான்?..........அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது" - இந்த வசனங்களில் இயேசுகிறிஸ்து கேட்கும் கேள்விகள் "பரிசுத்த வேதாகமம் தேவ ஆவியானவரால் அருளப்பட்டதை" அவர் அங்கீகரிப்பதைக் குறிக்கிறது.

1. மத் 19:4 = ஆதி 1:27
2. மத் 22:31-32 = யாத் 3:6
3. மத் 12:3 = லேவி 24:6-9
4. மத் 12:5 = எண் 28:9-10
5. மத் 12:3 = 1சாமு 21:6
6. மத் 21:16= சங் 8:2
7. மத் 21:42 = சங் 118:22
8. மாற்கு 10:3-5= உபா 24:1-6

12 அதிகாரம்

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 6

"வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக் கல்லாயிற்று" (மாற்கு 12:10; சங் 118:22; அப் 4:10-12) இங்கு கல் **(stone)** என்று கூறப்பட்டிருப்பது இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும். (ஆதி 49:24; ஏசா 8:14; ஏசா 28:16; அப் 4:11; எபே 2:20; 1பேதுரு 2:4-8) சில வசனங்களில் இயேசு கிறிஸ்து பாறை **(Rock)** என்னும் வார்த்தையாலும் கூறப்பட்டிருக்கிறார். (மத் 16:18; ரோமர் 9:33; 1கொரி 10:4; 1பேதுரு 2:8)

"இந்த உவமையைத் தங்களைக்குறித்துச் சொன்னாரென்று அவர்கள் அறிந்தார்கள்" - இயேசுகிறிஸ்து கூறிய உவமையின் பொருளையூதர்கள் அறிந்து கொண்டார்கள். அவர்களே அதை அறிந்து கொள்ளும் போது தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அவருடைய உபதேசங்களை அறிந்து கொள்ளுவது அதிக நிச்சயமாம். இயேசுகிறிஸ்து தாமே நமக்கு ஒளியாகவும், வெளிச்சமாகவும் இருக்கிறார்.

81. வரிப்பணத்தைப் பற்றிய உவமை - (மத் 17:24; 22:15; லூக் 20:19)

மாற்கு 12:13 அவர்கள், பேச்சிலே அவரை அகப்படுத்தும்படிக்கு, பரிசேயரிலும் ஏரோதியரிலும் சிலரை அவரிடத்தில் அனுப்பினார்கள்.

மாற்கு 12:14 அவர்கள் வந்து: போதகரே,நீர் சத்தியமுள்ளவரென்றும், எவனைக் குறித்தும் உமக்குக் கவலையில்லையென்றும் அறிந்திருக் கிறோம், நீர் முகதாட்சிணியம் இல்லாதவராய் தேவனுடைய மார்க்கத்தைச்சத்தியமாய்போதிக்கிறீர், இராயனுக்கு வரி கொடுக்கிறது நியாயமோ அல்லவோ? நாம் கொடுக்கலாமோ, கொடுக்கக் கூடாதோ? என்று கேட்டார்கள்.

மாற்கு 12:15 அவர்களுடைய மாயத்தை அவர் அறிந்து: நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்? நான் பார்க்கும்படிக்கு ஒரு பணத்தை என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்றார்.

மாற்கு 12:16 அவர்கள் அதைக் கொண்டுவந்தார்கள். அப்பொழுது அவர்: இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார்; இராயனுடையது என்றார்கள்.

மாற்கு 12:17 அதற்கு இயேசு: இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார். அவர்கள் அவரைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.

"ஏரோதியர்" - இவர்களும் யூதர்களே. ஏரோதின் கொள்கைளை ஏற்றுக் கொண்டவர்கள். ஏரோதின் குடும்பத்தாருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பவர்கள். தங்களுடைய யூதேயா தேசத்திற்குச் சுய ஆட்சி நிலைத்திருப்பதற்காக இவர்கள் ஏரோதோடும் அவனுடைய குடும்பத்தாரோடும் நட்புறவுடன் இருந்தார்கள். இயேசு கிறிஸ்து ஏற்கெனவே பரிசேயரின் வாயை அடைத்துவிட்டார். ஆகையினால், இப்போது அவரை அரசியலில் சிக்க வைக்கும் சூழ்ச்சியை மேற் கொள்கிறார்கள். (மத் 22:16)

போதகர் (Master) - **διδάσκαλος** - **didaskalos** - 1320

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு **(teacher)** (லூக்கா 9:38)

இயேசு கிறிஸ்துவைப் பற்றி அவர்கள் கூறிய சாட்சி

1. நீர் சத்தியமுள்ளவர்.
2. எவனைக்குறித்தும் உமக்குக் கவலையில்லை
3. நீர் முகதாட்சிணியம் இல்லாதவர்
4. தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய் போதிக்கிறவர்

12 அதிகாரம்

"இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ அல்லவோ? நாம் கொடுக்கலாமோ, கொடுக்கக் கூடாதோ?" - இந்தக்கேள்விகள் அரசியல் சம்மந்தப்பட்டவை. யூதர்களை அந்நியராகிய ரோமர்கள் ஆட்சி புரிகிறார்கள். நாம் அந்நியருக்கு வரிகொடுக்க வேண்டுமா அல்லது அவர்களுக்கு எதிராக கலகம் பண்ண வேண்டுமா. இப்படிப்பட்ட அர்த்தத்தில்தான் அவர்கள் இயேசுவிடம் கேள்விகேட்கிறார்கள்.

"அவர்களுடைய மாயத்தை அவர் அறிந்தார்" - இயேசு கிறிஸ்து சர்வஞானி. அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. யூதர்கள் அந்நியருக்கு வரி கொடுக்க விரும்பவில்லை. இயேசு கிறிஸ்து ராயனுக்கு வரி கொடுக்க வேண்டும் என்று கூறினால் யூதர்கள் இயேசுவை வெறுப்பார்கள். ராயனுக்கு வரிகொடுக்க வேண்டாம் என்று கூறினால் ராயன் இயேசுவைக் கைது செய்வான். ஆகையினால் இயேசு என்ன பதிலைக் கூறினாலும், அவரை ஒரு பிரச்சனையில் சிக்க வைக்கலாம் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவரோ தமது தெய்வீக ஞானத்தினால் அவர்களுடைய வாயை அடைத்தார்.

பணம் (penny) - δηνάριον - deenarion - 1220

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பணம், காசு

82. உயிர்த்தெழுதலைப் பற்றிய கேள்வி - (மத் 22:23; லூக் 20:27)

மாற்கு 12:18 உயிர்த்தெழுதல் இல்லையென்று சாதிக்கிற சதுசேயர் அவரிடத்தில் வந்து:

மாற்கு 12:19 போதகரே, ஒருவனுடைய சகோதரன் சந்தானமில்லாமல் தன் மனைவியை விட்டு இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம் பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானம் உண்டாக்க வேண்டுமென்று மோசே எங்களுக்கு எழுதி வைத்திருக்கிறாரே.

மாற்கு 12:20 இப்படியிருக்க, ஏழுபேர் சகோதரர் இருந்தார்கள்; மூத்தவன் ஒரு பெண்ணை விவாகம்பண்ணி, சந்தானமில்லாமல் இறந்துபோனான்.

மாற்கு 12:21 இரண்டாம் சகோதரன் அவளை விவாகம்பண்ணி, அவனும் சந்தானமில்லாமல் இறந்துபோனான். மூன்றாம் சகோதரனும் அப்படியேயானான்.

மாற்கு 12:22 ஏழுபேரும் அவளை விவாகம்பண்ணி, சந்தானமில்லாமல் இறந்துபோனார்கள். எல்லாருக்கும் பின்பு அந்த ஸ்திரீயும் இறந்துபோனாள்.

மாற்கு 12:23 ஆகையால், உயிர்த்தெழுதலில், அவர்கள் எழுந்திருக்கும்போது, அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள்? ஏழுபேரும் அவளை மனைவியாகக் கொண்டிருந்தார்களே என்று கேட்டார்கள்.

மாற்கு 12:24 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் வேத வாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாததினாலல்லவா தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்?

மாற்கு 12:25 மரித்தோர் உயிரோடெழுந்திருக்கும் போது கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை. அவர்கள் பரலோகத்தில் இருக்கிற தேவதூதரைப் போலிருப்பார்கள்.

மாற்கு 12:26 மரித்தோர் எழுந்திருப்பதைப் பற்றி: நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாய் இருக்கிறேன் என்று, தேவன் முட்செடியைக் குறித்துச் சொல்லிய இடத்தில், மோசேயின் ஆகமத்தில் அவனுக்குச் சொன்னதை, நீங்கள் வாசிக்கவில்லையா?

மாற்கு 12:27 அவர் மரித்தோருக்கு தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்கு தேவனாயிருக்கிறார்; ஆகையால் நீங்கள் மிகவும் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள் என்றார்.

12 அதிகாரம்

"உயிர்த்தெழுதல் இல்லையென்று சாதிக்கிற சதுசேயர்" - சதுசேயர் யூத மார்க்கத்தின் ஒரு பிரிவினர். இவர்கள் மரித்தோரின் உயிர்த்தெழுதலையும், தூதர்களையும் ஆவிகளையும் நம்புவதில்லை. (அப் 23:8) வரலாற்றில் மோசே என்று ஒருவர் இருந்தார் என்பதை நம்பும் இவர்கள் மோசேயின் உபதேசங்களை நம்புவதில்லை. (மாற்கு 12:19)

"ஒருவனுடைய சகோதரன் சந்தானமில்லாமல் தன் மனைவியை விட்டு இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம் பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானம் உண்டாக்க வேண்டும்" - உபா 25:5-6 ஆகிய வசனங்களிலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"ஆகையால், உயிர்த்தெழுதலில், அவர்கள் எழுந்திருக்கும்போது, அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள்?" - இந்தக் கேள்விக்கு இயேசுவால் பதில் கூறமுடியாது என்று நினைத்தார்கள். ஆனால் அவரோ மறுபடியுமாகத் தமது தெய்வீக ஞானத்தைப் பயன்படுத்தி, அவர்களுக்குப் பதில் கூறுகிறார். (மாற்கு 12:25-27) அத்துடன் தம்மிடம் கேள்வி கேட்ட அவர்களிடமே "நீங்கள் வேத வாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாததினாலல்லவா தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்?" என்று எதிர்க்கேள்வியும் கேட்கிறார்.

தீர்க்கதரிசன எண் - 19

"மரித்தோர் உயிரோடெழுந்திருக்கும்போது கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை. அவர்கள் பரலோகத்தில் இருக்கிற தேவதூதரைப் போலிருப்பார்கள்" - (மாற்கு 12:25) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

"தேவதூதரைப் போலிருப்பார்கள்" - உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்த பின்பு திருமணம் செய்து கொள்வதில்லை. தங்களுடைய வம்ச விருத்திக்காக அவர்கள் திருமணம் செய்து கொள்ளவேண்டிய அவசியமில்லை. தேவன் தேவதூதர்களைச் சிருஷ்டிக்கும்போது எண்ணிலடங்காத திரளான தேவ தூதர்களைச் சிருஷ்டித்தார். அவை மரிப்பதுமில்லை. இனவிருத்தி செய்வதுமில்லை. ஆகையினால், திருமணம் செய்து தங்களுடைய வம்சத்தை விருத்தி பண்ண வேண்டிய அவசியம் அவற்றிற்கு இல்லை. அதுபோலவே உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும் இருப்பார்கள்.

"மரித்தோர்" - மரித்த சரீரங்கள். சரீர மரணம் என்பது சரீரத்தின் மரணத்தை மட்டுமே குறிக்கும். ஆத்துமாவும், ஆவியும் சரீர மரணத்தில் மரிப்பதில்லை. இரட்சிக்கப்படாத மனுஷர்களுடைய ஆத்துமாக்கள் அவர்கள் உயிரோடு இருக்கும்போதே மரித்தநிலைமையில் இருக்கின்றன. ஆவிக்குரிய மரணம் என்பது பாவத்தினால் தேவனிடமிருந்து பிரிந்திருப்பது ஆகும். (ஏசா 59:2; எபே 2:1-9; 1தீமோ 5:6) சரீரத்திலிருந்து உள்ளான மனுஷன் பிரிக்கப்படுவது சரீர மரணம். (யாக் 2:26) சரீர மரணத்தில் சரீரம் மரிக்கிறது. அதைக் கல்லறையில் அடக்கம் பண்ணுகிறார்கள். அதேசமயத்தில், அவர்களுடைய சரீரங்கள், மறுரூபமாகும்வரையிலும் அவர்களுடைய ஆத்துமாக்கள் வேறு இடங்களுக்குச் செல்லும். நீதிமான் பரலோகத்திற்குச் செல்லுவான். (பிலி 1:21-24; 2கொரி 5:8; எபி 12:22-23; வெளி 6:9-11) துன்மார்க்கன் நரகத்திற்குச் செல்வான். (லூக்கா 16:19-31; ஏசா 14:9; வெளி 20:11-15). உயிர்த் தெழுதலின்போது, சரீரங்கள் மட்டுமே உயிர்த்தெழும். அவர்களுடைய ஆத்துமாவும், ஆவியும் ஏற்கெனவே மரிக்காமலேயே இருக்கின்றன. உயிர்த்தெழுந்த சரீரமும், அதற்குரிய ஆவியும், ஆத்துமாவும் ஒன்றுசேரும். இவ்வாறு ஒன்று சேர்ந்த பின்பு ஆவி,ஆத்துமா, சரீரம் ஆகிய மூன்றும் தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நின்று அவருடைய நியாயத்தீர்ப்பைப் பெறும். அப்போது வெகுமதியோ அல்லது தண்டனையோ கொடுக்கப்படும். (மத் 10:28; மத் 25:41,46; மாற்கு 9:43-49; வெளி 20:11-15; ஏசா 66:22-24)

12 அதிகாரம்

"நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாய் இருக்கிறேன்" - யாத் 3:2-6 ஆகிய வசனங்களிலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோர் இன்னும் ஜீவிக்கிறார்கள். (மாற்கு 12:27) ஆனால் அவர்களுடைய சரீரங்களோ மரித்துவிட்டது. அவர்களுடைய ஆவிகளும், ஆத்துமாக்களும் ஜீவிக்கின்றன.

"அவர் மரித்தோருக்கு தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்குத் தேவனாயிருக்கிறார்; ஆகையால் நீங்கள் மிகவும் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்" - நமது சரீரம் மரித்த பின்பு, நமது ஆவியும், ஆத்துமாவும் மரிக்காமல் ஜீவிக்கும் என்பதை விளக்கும் வேதவசனம். "எல்லாரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்களே" என்று லூக்கா 20:38-இல் வாசிக்கிறோம். மரித்தவர்களாகிய நாம் இயேசு கிறிஸ்துவிற்காக நமது ஆவியிலும், ஆத்துமாவிலும் பிழைத்திருக்கிறவர்களாக இருப்போம். பேதுருவும், மற்றவர்களும் உள்ளான மனுஷன் மரிப்பதில்லை என்று கூறியிருக்கிறார்கள். (1பேதுரு 3:4; 1பேதுரு 4:6; சங் 22:26; 1தெச 5:10; 2கொரி 4:16-18; யோவான் 3:16,36; யோவான் 5:24; யோவான் 11:25-26; 1யோவான் 2:17; எபி 12:23) சரீரங்கள் மரித்தபின்பு கர்த்தருக்காக நாம் பிழைத்திருப்போம். அதுபோலவே, தேவனிடமிருந்து நமது கிரியைகளுக்குத் தக்கதாக வெகுமதியையோ, அல்லது தண்டனையையோ பெற்றுக் கொள்வதற்காக நமது மரித்த சரீரங்கள் உயிர்த்தெழும். (மத் 10:40-42; மத் 16:27; அப் 17:31; ரோமர் 2:12-16; ரோமர் 14:10; 2கொரி 5:10; வெளி 20:11-15)

83. பிரதான கற்பனை - (மத் 22:34; லூக் 10:27)

மாற்கு 12:28 வேதபாரகரில் ஒருவன் அவர்கள் தர்க்கம்பண்ணுகிறதைக் கேட்டு, அவர்களுக்கு நன்றாய் உத்தரவு சொன்னாரென்று அறிந்து, அவரிடத்தில் வந்து: கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்று கேட்டான்.

மாற்கு 12:29 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால்: இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.

மாற்கு 12:30 உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை.

மாற்கு 12:31 இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே; இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார்.

மாற்கு 12:32 அதற்கு வேதபாரகன்: சரிதான், போதகரே, நீர் சொன்னது சத்தியம்; ஒரே தேவன் உண்டு, அவரைத்தவிர வேறொரு தேவன் இல்லை.

மாற்கு 12:33 முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழுப்பலத்தோடும் அவரிடத்தில் அன்புகூருகிறதும், தன்னிடத்தில் அன்புகூருகிறதுபோல பிறனிடத்தில் அன்புகூருகிறதுமே சர்வாங்க தகனம் முதலிய பலிகளைப் பார்க்கிலும் முக்கியமாயிருக்கிறது என்றான்.

மாற்கு 12:34 அவன் விவேகமாய் உத்தரவுசொன்னதை இயேசு கண்டு: நீ தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல என்றார். அதன் பின்பு ஒருவரும் அவரிடத்தில் யாதொரு கேள்வியுங் கேட்கத் துணியவில்லை.

"கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எது" - (மத் 22:36)

12 அதிகாரம்

"இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" - உபா 6:2-4 ஆகிய வசனங்களிலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. ஒரே என்பதன் எபிரெய சொல் "ஏகாத்" (echad) மற்றொரு சொல் "ஆகாத்" (achad) இதன் கிரேக்கச்சொல் "ஹெஸ்" (heis) எண்ணிக்கையில் ஒன்று. அல்லது ஒற்றுமை என்னும் பொருளை இந்தச் சொற்கள் தருகின்றன. வேதவசனத்தில் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிற இடம், பயன்படுத்தப்பட்டிருக்கிற வேளை, ஆகியவற்றைப் பொருத்து, இதன்பொருள் மாறுபடலாம். பொதுவாக இதற்கு ஒருமை அல்லது ஒரே என்னும் பொருளே சிறப்பாக அமைகிறது. (ஆதி 2:24; ஆதி 11:6; யோவான் 10:30; யோவான் 11:52; யோவான் 17:11,21-23) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் மூன்று நபராக இருக்கின்ற போதிலும் அவர்கள் மூவருமே ஒருவராகவும் இருக்கிறார்கள். திரித்துவத்தின் தலைமைத்துவமாக இருக்கும் பிதாவையும், இந்தச் சொல் குறிக்கிறது. பிதா கிறிஸ்துவின் தலையாகவும், பரிசுத்த ஆவியானவரின் தலையாகவும் இருக்கிறார். (1கொரி 8:4-6; 1கொரி 11:3; யோவான் 14:16-17,26,28; யோவான் 15:26; யோவான் 16:7-15; எபே 4:4-6; 1யோவான் 5:7)

ஒரே (one) - אֶחָד - ekh-awd' - 259

பெ.அ.-முதலாம், ஒரே, ஒன்றாகிய

אֶחָד - aw-khad' - 258

வி.சொ. - முகம் திரும்புகிற திக்கெல்லாம், கூர்மையான (to unite, be united as one, one in number)

ஒன்று (one) - εἷς - heis - 1520

எண்குறி - ஒரு, ஒன்று, ஒருமைப்பாடு

"இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே" - வேதபாரகன் இயேசுகிறிஸ்துவிடம் ஒரு கற்பனையைத்தான் கேட்டான். ஆனால் அவன் இரண்டு கற்பனைகளைப் பெற்றுக் கொண்டான். இவ்விரண்டுமே முக்கியமானது. இந்தக் கற்பனைலேவி19:18 ஆவது வசனத்திலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"சரிதான்"(Well)-நல்லதுமாற்கு 12:32-34 ஆகியவை மத் 22:40; லூக்கா 20:39 ஆகிய வசனங்களுக்கு ஒத்துள்ளது.

புத்தி (understanding) - σύνεσις - synesis - 4907

பெண்பால் பெயர்ச்சொல் - புத்தி, அறிவு, விவேகம், மனது, உணர்வு. இந்தச் சொல்லுக்கு முழுமை, ஒரே, அறைகுறையாகஇல்லாமல்முழுமையாக என்னும் பொருளும் உண்டு. **(a putting together, meaning the whole of the intelligence, not only one part of it)**

இந்த வசனத்தில் "சுனேசிஸ்" (sunesis) என்னும் கிரேக்கச் சொல்லே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. "டையோனாய்" (dianoia) என்னும் கிரேக்கச் சொல் பயன்படுத்தப்பட வில்லை. மாற்கு 12:30-ஆவது வசனத்தில் மனது, சிந்தனை ஆகிய பொருளில் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

மனம் (mind) - διάνοια - dianoia - 1271

பெண்பால் பெயர்ச்சொல் - மனம், சிந்தை, புத்தி

முதலாவது கற்பனையில் நமது சரீரம், ஆத்துமா, ஆவி ஆகிய மூன்றுமே தேவனிடத்தில் கீழ்ப்படிந்து பயபக்தியோடு அன்புகூரவேண்டும். ஒருசிலர் இதைத் தவறாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள். கர்த்தரிடத்தில் சிந்தனையில் ஊழியம் செய்தால் மட்டும் போதுமானது. ஒருவரும் சரீரத்திலோ அல்லது ஆத்துமாவிலோ பரிசுத்தமாய் இருக்க முடியாது. ஆவியில் மட்டுமே பரிசுத்தமாய் இருக்க முடியும் என்பது இவர்களுடைய விவாதம்.

12 அதிகாரம்

“சர்வாங்க தகனம் முதலிய பலிகளைப் பார்க்கிலும் முக்கியமாயிருக்கிறது” - இயேசு கிறிஸ்துவின் இந்தப் பிரதான கற்பனையை ஒருவர் சரியாகப் புரிந்து கொள்ளும்போது அவர் மற்ற சடங்காச்சாரங்களுக்கு அதிக முக்கியத்துவம் தரமாட்டார்.

84. இயேசு பரிசேயரிடம் கேட்ட கேள்விகள் - (மத் 22:41; லூக் 20:39)

மாற்கு 12:35 இயேசு தேவாலயத்திலே உபதேசம் பண்ணுகையில், அவர்: கிறிஸ்து தாவீதின் குமாரனென்று வேதபாரகர் எப்படிச் சொல்லுகிறார்கள்?

மாற்கு 12:36 நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று தாவீது பரிசுத்த ஆவியினாலே சொல்லியிருக்கிறானே.

மாற்கு 12:37 தாவீதுதானே அவரை ஆண்டவரென்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார். அநேக ஜனங்கள் அவருடைய உபதேசத்தை விருப்பத்தோடே கேட்டார்கள்.

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 7

“நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார்” (மாற்கு 12:36; சங் 110:1)

சங்கீதம் 110-ஐ இயற்றியவர் பரிசுத்த ஆவியானவரே. கர்த்தத்துவத்தில் இரண்டு நபர்களைப் பற்றி இந்த வசனம் கூறுகிறது. திரித்துவத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவருமே இடம் பெற்றிருக்கிறார்கள். மூவரும் சமநிலையில் இருப்பவர்கள். (1யோவான் 5:7; 2கொரி 13:14; மத் 3:16-17; மத் 28:19; யோவான் 14:16,26; யோவான் 15:26; யோவான் 16:7-15; அப் 2:33; அப் 7:55; எபே 4:4-6; வெளி 1:4; வெளி 4:2-5; வெளி 5:7)

“குமாரன்” - (மத் 22:45)

85. வேதபாரகரின் ஆறு பாவங்கள் - (மத் 23; லூக் 18:9; 20:45)

மாற்கு 12:38 பின்னும் அவர் உபதேசம் பண்ணுகையில் அவர்களை நோக்கி:நீண்ட அங்கிகளைத் தரித்துக் கொண்டு திரியவும், சந்தை வெளிகளில்வந்தனங்களை அடையவும்,

மாற்கு 12:39 ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களில் உட்காரவும், விருந்துகளில் முதன்மையான இடங்களில் இருக்கவும் விரும்பி,

மாற்கு 12:40 விதவைகளின் வீடுகளைப் பட்சித்து, பார்வைக்கு நீண்ட ஜெபம்பண்ணுகிற வேதபாரகரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் அதிக ஆக்கினையை அடைவார்கள் என்றார்.

“வேதபாரகரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்” - பரிசேயர், வேதபாரகர் ஆகியோரைப் பற்றிய குறிப்புக்களை நாம் இந்த வசனங்களில் வாசித்தறியலாம்.(மத் 23:1-33; மாற்கு 7:1-20; மாற்கு 8:15., மாற்கு 12:38-40; லூக்கா 11:39-52)

மாயக்காரரின் அடையாளங்கள் (மாற்கு 12:38-40)

1. நீண்ட அங்கிகளைத் தரித்துக் கொள்வார்கள். (மாற்கு 12:38; மத் 23:5)
2. சந்தைவெளிகளில் வந்தனங்களை அடைய விரும்புவார்கள்.(மாற்கு 12:38)

மாற்கு - தொகுப்புரை

12 அதிகாரம்

3. ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களில் இருக்க விரும்புவார்கள். (மாற்கு 12:39; மத் 23:2,6)

4. விருந்துகளில் முதன்மையான இடங்களில் இருக்கவிரும்புவார்கள். (மாற்கு 12:39; மத் 23:6; லூக்கா 14:7-11; லூக்கா 20:46)

5. விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுவார்கள். (மாற்கு 12:40; மத் 23:14)

6. பார்வைக்கு நீண்ட ஜெபம் பண்ணுவார்கள்.(மாற்கு12:40,மத்23:14)

தீர்க்கதரிசன எண் - 20

"அவர்கள் அதிக ஆக்கினையை அடைவார்கள்" (மாற்கு 12:40) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. (மத் 10:15)

86. விதவை காணிக்கையாக போட்ட ஒரு துட்டு - (லூக் 21:1)

மாற்கு 12:41 இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப் பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார்; ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய் போட்டார்கள்.

மாற்கு 12:42 ஏழையான ஒரு விதவையும் வந்து, ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள்.

மாற்கு 12:43 அப்பொழுது அவர் தம்முடைய சீஷரை அழைத்து, காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மாற்கு 12:44 அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துப் போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்த தெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்.

காசு (mite) - λεπτός - leptos - 3016

பெயரடை - காசு - கிரேக்கருடைய மிகக்குறைந்த மதிப்புடைய தாமிரக்காசு.

துட்டு (coin) - κοδράντης - kodrantees - 2835

ஆண்பால் பெயர்ச்சொல் - காசு, துட்டு - ரோமருடைய மிகக்குறைந்த மதிப்புடைய வெண்கலக்காசு

13 அதிகாரம்

87. ஒலிவமலையின்மேல் இயேசு கூறிய தீர்க்கதரிசனம் - (மத் 24-25; மாற்கு 13; லூக் 21)

(1) எருசலேமின் அழிவை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 24:1; 23:37)

மாற்கு 13:1 அவர் தேவாலயத்தை விட்டுப் புறப்படும்போது, அவருடைய சீஷர்களில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே, இதோ, இந்தக் கல்லுகள் எப்படிப்பட்டது! இந்தக் கட்டடங்கள் எப்படிப்பட்டது! பாரும் என்றான்.

மாற்கு 13:2 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இந்தப் பெரிய கட்டடங்களைக் காண்கிறாயே, ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப் போகும் என்றான்.

"அவர் தேவாலயத்தை விட்டுப் புறப்படும்போது" - மத் 24-25, மாற்கு 13 ஆகியவை லூக்கா 21க்கு பின்பு நடைபெற்றவையாகும். லூக்கா 21:1-5 = லூக்கா 21:37-38 ஆகிய வசனங்களை இயேசு தேவாலயத்தில் பேசினார். ஒலிவமலையில் இயேசு மற்றொரு சம்பாஷணையைக் கூறினார். (மத் 24:3; மாற்கு 13:3) இவ்விரண்டு தீர்க்கதரிசனங்களுமே லூக்கா 21:12 ஆவது வசனத்தோடு ஒத்திருக்கிறது. ஆகையினால் இவ்விரண்டையும் சேர்த்துத் தியானிப்பது சிறப்பாக இருக்கும்.

போதகர் (Master) - διδάσκαλος - **didaskalos** - 1320

ஆண்பால் பெயர்ச்சொல் - வேதபாரகன், வேதகர், போதகர், குரு **(doctor)** (லூக்கா 9:38)

"இந்தக் கல்லுகள் எப்படிப்பட்டது! இந்தக் கட்டடங்கள் எப்படிப்பட்டது" - (மத் 24:2)

தீர்க்கதரிசன எண் - 21

"ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப் போகும்" (மாற்கு 13:2) இந்தத் தீர்க்கதரிசனம் கிபி. 70-இல் எருசலேம் அழிக்கப்பட்டபோது நிறைவேறிற்று. (லூக்கா 21:13-24; தானி 9:24)

(2) இரண்டு பெரிய கேள்விகள் - (மத் 24:3; லூக் 21:7)

மாற்கு 13:3 பின்பு, அவர் தேவாலயத்துக்கு எதிராக ஒலிவ மலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், பேதுருவும் யாக்கோபும் யோவானும் அந்திரேயாவும் அவரிடத்தில் தனித்து வந்து:

மாற்கு 13:4 இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? இவைகளெல்லாம் நிறைவேறுங்காலத்துக்கு அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்.

"பேதுருவும் யாக்கோபும் யோவானும் அந்திரேயாவும் அவரிடத்தில் தனித்து வந்தார்கள்" - மத் 24:3 ஆவது வசனத்திற்கு கூடுதலான விளக்கம்.

இயேசுவிடம் சீஷர்கள் கேட்ட கேள்விகள்

1. இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்?, எருசலேம் எப்பொழுது அழிக்கப்படும். இதற்குரிய பதில் மத் 24-25, மாற்கு 13, ஆகிய அதிகாரங்களில் கூறப்படவில்லை. லூக்கா 21:12-24 ஆகிய வசனங்களில் மட்டுமே இதற்கான பதிலை வாசிக்கிறோம்.

2. இவைகளெல்லாம் நிறைவேறுங் காலத்துக்கு அடையாளம் என்ன? - இந்தக் கேள்விக்கு மத் 24:4-27; மாற்கு 13:5-23; லூக்கா 21:8-11, 25-26 ஆகிய வசனங்களில் பதில் உள்ளது.

3. உலகத்தின் முடிவுக்கு அடையாளம் என்ன? (மத் 24:27-25:46; மத் 13:24-37; லூக்கா 21:27-38)

13 அதிகாரம்

(3) அடையாளங்கள் - இயேசுவின் இரண்டாம் வருகை

(அ) யூதர்களுடைய வருத்தங்களின் ஆரம்பத்தில் எட்டு அடையாளங்கள் - (மத் 24:4; லூக் 21:8; வெளி 8-9)

மாற்கு 13:5 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

மாற்கு 13:6 ஏனெனில் அநேகர் வந்து, என் நாமத்தைக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்.

மாற்கு 13:7 யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப் படும்போது கலங்காதேயுங்கள்; இவைகள் சம்பவிக்க வேண்டியதே. ஆனாலும், முடிவு உடனே வராது.

மாற்கு 13:8 ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும், எழும்பும்; பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும், பஞ்சங்களும் கலகங்களும் உண்டாகும்; இவைகள் வேதனைகளுக்கு ஆரம்பம்.

தீர்க்கதரிசன எண் - 22

"ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" (மாற்கு 13:5-37) - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது பூரணமாக நிறைவேறும். (மத் 6:1; மத் 11:29, மத் 24:4-24)

"உங்களை வஞ்சியாதபடிக்கு" - வஞ்சிப்பதற்கு எதிரான எச்சரிப்புக்கள். (மத் 24:4-5,11,24; லூக்கா 21:8; 1கொரி 6:9; 1கொரி 15:33; கலா 6:7; எபே 5:6; 2தெச 2:3-12; 2தீமோ 3:13; 1யோவான் 3:7).

முடிவு **(end)** - **τέλος** - **telos** - 5056

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் - முடிவு, அழிவு, அந்தம், தொந்தரவு, விலகிப்போதல் **(final end or limit at which a thing ceases to be; the end of some act, state, or life)** இந்த வசனத்தில் இது ஜீவியத்தின் முடிவையோ, அல்லது உபத்திரவக் காலத்தின் முடிவையோ குறிக்கும். இவ்விரண்டில் ஒருவருடைய ஜீவியத்தில் எது முந்தி வருகிறதோ அதுவே அவருடைய முடிவாகும். (மத் 10:22)

வேதனை **(sorrows)** - **ὠδίν** - **oodin** - 5604

பெண்பால் பெயர்ச்சொல் - வேதனை, உபாதி **(pang, throe)** - மகா உபத்திரவக்காலத்தில் இஸ்ரவேலருக்கு வரும் வேதனை. (மத் 24:15-21; ஏசா 66:7-8; எரே 30:4-7; தானி 7:21; தானி 8:9-14, 24; தானி 9:27; தானி 11:40-45; தானி 12:1,7; வெளி 12)

(ஆ) இஸ்ரவேலின் வருத்தங்களின் போது எட்டு அடையாளங்கள் - (மத் 24:9)

மாற்கு 13:9 நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுப்பார்கள், நீங்கள் ஜெபஆலயங்களில் அடிக்கப்படுவீர்கள்; என்னிமித்தம் தேசாதிபதிகளுக்கும் ராஜாக்களுக்கும் சாட்சியாக அவர்களுக்கு முன்பாக நிறுத்தப்படுவீர்கள்.

மாற்கு 13:10 சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷம் முந்திப் பிரசங்கிக்கப்பட வேண்டும்.

மாற்கு 13:11 அவர்கள் உங்களைக் கொண்டுபோய் ஒப்புக்கொடுக்கும் போது, நீங்கள் என்ன பேசுவோமென்று முன்னதாகக் கவலைப்படாமலும் சிந்தியாமலு மிருங்கள்; அந்நாழிகையிலே உங்களுக்கு எது அருள் செய்யப்படுமோ அதையே பேசுங்கள்; ஏனெனில் பேசுகிறவர்கள் நீங்களல்ல, பரிசுத்த ஆவியே பேசுகிறவர்.

13 அதிகாரம்

மாற்கு 13:12 அன்றியும் சகோதரன் சகோதரனையும், தகப்பன் பிள்ளையையும் மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பார்கள்; பெற்றாருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி, அவர்களைக் கொலைசெய்வார்கள்.

மாற்கு 13:13 என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.

ஆலோசனைச்சங்கங்கள் **(councils)** - **συνέδριον** - **synedrion** - 4892

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஆலோசனைச்சங்கம், சங்கம் **(sanhedrin)** - இஸ்ரவேலின் மூப்பர்களுடைய சங்கம். (மத் 5:22; மத் 10:17; மத் 26:59; மாற்கு 13:9; மாற்கு 14:55; மாற்கு 15:1; லூக்கா 22:66; யோவான் 11:47; அப் 4:15; அப் 5:21,27,34,41; அப் 6:12,15; அப் 22:30; அப் 23:1,6,15,20,28; அப் 24:20)

“ஜெபஆலயங்களில் அடிக்கப்படுவீர்கள்” - மத் 4:23 எல்லா ஜெபாலயங்களும் நியாயத்தீர்ப்பு வழங்கும் நீதிமன்றங்களாகச் செயல்படும். குற்றவாளிகளை அங்கு வாரினால் அடிப்பார்கள்.

“என்னிமித்தம் தேசாதிபதிகளுக்கும் ராஜாக்களுக்கும் சாட்சியாக அவர்களுக்கு முன்பாக நிறுத்தப்படுவீர்கள்” - சபை எடுத்துக் கொள்ளப்பட்டபின்பு, யூதர்களில் அநேகர் இரத்தச்சாட்சிகளாக மரிப்பார்கள். (வெளி 6:9-11; வெளி 7:9-17; வெளி 12:17; வெளி 13:16-18; வெளி 14:9-11; வெளி 15:2-4; வெளி 17:6; வெளி 20:4-6)

“அவர்கள் உங்களைக் கொண்டுபோய் ஒப்புக்கொடுக்கும்போது, நீங்கள் என்ன பேசுவோமென்று முன்னதாகக் கவலைப் படாமலும் சிந்தியாமலுமிருங்கள்” - நீங்கள் விசாரிக்கப்படும்போது, ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். எதைப் பேசுவோம் என்று சிந்திக்க வேண்டாம். அந்நாழிகையிலே உங்களுக்கு எது அருள் செய்யப்படுமோ அதையே பேசுங்கள். உங்கள் மூலமாகப் பரிசுத்த ஆவியானவரே பேசுவார். (மத் 10:17-20; மத் 6:25)

“அன்றியும் சகோதரன் சகோதரனையும், தகப்பன் பிள்ளையையும் மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பார்கள்; பெற்றாருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி, அவர்களைக் கொலைசெய்வார்கள்” - கிறிஸ்துவின் நிமித்தமாகக் குடும்பங்கள் பிரிக்கப்படும். (மத் 10:35-36; மீகா 7:6) குடும்பத்தில் உள்ளவர்களே ஒருவருக்கு விரோதமாக ஒருவர் எழும்புவார்கள். மனுஷர் வஞ்சிக்கிறவர்களாக இருப்பார்கள்.

“என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்” - உபத்திரவக்காலத்தில் தேவனைப் பின்பற்றுவோருக்குப் பலவிதமான இன்னல்கள் உண்டாகும். இயேசு கிறிஸ்துவின் நிமித்தமாக அவரைப் பின்பற்றுபவர்களை ஜனங்கள் பகைப்பார்கள். தானியேலின் எழுபதாவது வாரத்தில் இந்தக் காரியம் நடைபெறும். (தானி 9:27; வெளி 6:1-19:21)

(இ) பாழாக்குகிற அருவருப்பு - (மத் 24:15; தானி 9:27)

மாற்கு 13:14 மேலும் பாழாக்குகிற அருவருப்பைக்குறித்து தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே; வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்; அது நிற்கத்தகாத இடத்திலே நீங்கள் அதை நிற்கக் காணும்போது, யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப் போகக்கடவர்கள்.

“அது நிற்கத்தகாத இடத்திலே நீங்கள் அதை நிற்கக் காணும்போது” - இந்த வாக்கியத்தில் “அப்போது” என்னும் சொல் மாற்கு 13:14-37 ஆகிய வசனங்கள் நிறைவேறும் காலத்தைக் குறிக்கிறது. தானியேலின் எழுபதாவது வாரத்தின் நடுவில் இக்காரியம் நடைபெறும். (மாற்கு 13:14,17,19, 20,21,24,26,27)

13 அதிகாரம்

"பாழாக்குகிற அருவருப்பு" - அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலோடு ஓர் உடன்படிக்கை பண்ணுவான். ஏழு வருஷத்திற்கு உடன்படிக்கை செய்வான். ஆனால் இந்த உடன்படிக்கையை நடுவில் முறித்துப் போடுவான். இதுவே மகா உபத்திரவக்காலத்தின் ஆரம்பம். அவன் இஸ்ரவேலை வெற்றி பெற்று, தேவாலயத்தில் ஆராதனையை அகற்றிப்போடுவான். பரிசுத்த ஸ்தலத்தில் தன்னுடைய சொரூபத்தை நிறுத்தி, தன்னை ஆராதிக்குமாறு வற்புறுத்துவான். இதுவே பாழாக்குகிற அருவருப்பு ஆகும்.(தானி 9:27; 2தெச 2:4; வெளி 13; வெளி 14:9-11; வெளி 15:2-4; வெளி 16:10; வெளி 20:4-6; மத் 24:15)

"அது நிற்கத்தகாத இடத்திலே நீங்கள் அதை நிற்கக் காணும்போது" - யூதருடைய தேவாலயத்தில் அந்திக் கிறிஸ்து மகா பரிசுத்த ஸ்தலத்தில் நிற்பான். இது அவனுக்குரிய ஸ்தலம் அல்ல. அவன் அங்கே நிற்கக்கூடாது. மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவனுடைய பிரசன்னம் மட்டுமே இருக்க வேண்டும். (2தெச 2:3-4; தானி 9:27; மத் 24:15)

"அப்போது யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்" - அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலோடு தான் செய்து கொண்ட, ஏழு வருஷ உடன்படிக்கையை முறிக்கும் காலத்தை இது குறிப்பிடும். இதன் பின்பு, மூன்றரை வருஷங்களுக்கு மகா உபத்திரவக்காலம் உண்டாகும். இக்காலத்தில் அந்திக்கிறிஸ்து பாலஸ்தீன தேசத்திற்குள் நுழைந்து, இஸ்ரவேலை ஜெயிப்பான். எருசலேமைக் கைப்பற்றுவான். தேவாலயத்தில் யூதருடைய ஆராதனை முறைமையை அகற்றுவான். தன்னுடைய சொரூபத்தைத் தேவாலயத்தில் எல்லோரும் ஆராதனை செய்வதற்காக நிறுவுவான். இவனுடைய உபத்திரவம் மூன்றரை வருஷங்களுக்கு நீடிக்கும். இயேசு கிறிஸ்து அவனை அழித்துத், தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது மகா உபத்திரவக்காலம் முடிவுபெறும். (தானி 8:9-25; தானி 9:27; தானி 11:40-45; தானி 12:7; மத் 24:15-31; மாற்கு 13:14-27; 2தெச 2:1-12; வெளி 13:1-18; வெளி 14:9-11; வெளி 19:11-21) இந்த உபத்திரவக்காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் யூதேயாவிலிருந்து ஏதோமிற்கும், மோவாபிற்கும் மூன்றரை வருஷ காலங்களுக்கு ஓடிப்போய் தப்பித்துக் கொள்வார்கள். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவர்கள் இரட்சிக்கப்பட்டு, மறுபடியும் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள். (மத் 24:15-31; மத் 25:31-46; ரோமர் 11:25-29; சக 12:10-13:1; சக 14:1-21; வெளி 12:6,13-17)

(ஈ) இஸ்ரவேல் அந்திக்கிறிஸ்துவிடம் தோற்றுபோகிறார்கள் -(மத் 24:16)

மாற்கு 13:15 வீட்டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டிற்குள் இறங்காமலும், தன் வீட்டில் எதையாகிலும் எடுத்துக்கொள்ள உள்ளே போகாமலும் இருக்கக்கடவன்.

மாற்கு 13:16 வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரத்தை எடுப்பதற்குப் பின்னிட்டுத் திரும்பாதிருக்கக் கடவன்.

மாற்கு 13:17 அந்நாட்களிலே கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ!

மாற்கு 13:18 நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலே சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள்.

"அந்நாட்களிலே கர்ப்பவதிகளுக்கும் பால்கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ" - உபத்திரவக்காலத்தில் ஏற்படும் பயங்கரங்களை இது விளக்குகிறது. (மத் 24:15-22)

(உ) மகா உபத்திரவம் - (மத் 24:15; தானி 12:1; வெளி 12-19)

மாற்கு 13:19 ஏனெனில் தேவன் உலகத்தைச் சிருஷ்டித்தது முதல் இது வரைக்கும் சம்பவித்திராததும், இனி மேலும் சம்பவியாததுமான உபத்திரவம் அந்நாட்களில் உண்டாயிருக்கும்.

13 அதிகாரம்

மாற்கு 13:20 கர்த்தர் அந்நாட்களைக் குறைத்திராவிட்டால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தாம் தெரிந்து கொண்டவர்களினிமித்தமோ, அவர் அந்த நாட்களைக் குறைத்திருக்கிறார்.

"தேவன் உலகத்தைச் சிருஷ்டித்தது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான உபத்திரவம் அந்நாட்களில் உண்டாயிருக்கும்" - இது மகா உபத்திரவக் காலத்தின் விளக்கமாகும். (மத் 24:15-22)

"கர்த்தர் அந்நாட்களைக் குறைத்திரா விட்டால்" - (மத் 24:22)

"தாம் தெரிந்து கொண்டவர்களினிமித்தமோ" - யூதர்களில் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் (மத் 24:22, 31)

(ஊ) மகா உபத்திரவத்தின் ஆறு அடையாளங்கள் - (மத் 24:23)

மாற்கு 13:21 அப்பொழுது: இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கேயிருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால், நம்பாதேயுங்கள்.

மாற்கு 13:22 ஏனெனில் கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கத் தரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர் களையும் வஞ்சிக்கத் தக்கதாக அடையாளங் களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.

மாற்கு 13:23 நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள்; இதோ, எல்லாவற்றையும் முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்.

"அப்பொழுது: இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கேயிருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால், நம்பாதேயுங்கள்" - மாற்கு 13:14-20 ஆகிய வசனங்கள் மகா உபத்திரவக்காலத்தைக் குறிக்கும். அப்போது மாற்கு 13:21-23 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற காரியங்கள் நடைபெறும்.

"கூடுமானால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்" - (மத் 24:24; 2தெச 2:8-12; வெளி 13; வெளி 16:13-16; வெளி 19:20; மாற்கு 13:22)

"நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள்" - இந்த அதிகாரத்தில் நான்கு முறை இயேசு கிறிஸ்து இவ்வாறு எச்சரிக்கிறார். (மாற்கு 13:5,9,23,33) - (மத் 11:29)

(4) இரண்டாம் வருகையின் விதமும் காலமும் - (மத் 24:27)

மாற்கு 13:24 அந்நாட்களிலே, அந்த உபத்திரவத்திற்குப் பின்பு, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும்;

மாற்கு 13:25 வானத்தின் நட்சத்திரங்கள் விழும், வானங்களிலுள்ள சத்துவங்களும் அசைக்கப்படும்.

மாற்கு 13:26 அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களின்மேல் வருகிறதைக் காண்பார்கள்.

மாற்கு 13:27 அப்பொழுது அவர் தம்முடைய தூதரை அனுப்பி, தாம் தெரிந்துகொண்டவர்களை பூமியின் கடைமுனை முதற்கொண்டு, வானத்தின் கடைமுனைமட்டுமுள்ள நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார்.

13 அதிகாரம்

"அந்நாட்களிலே" - இயேசு கிறிஸ்து மறுபடியும் வந்தவுடன், உபத்திரவக்காலம் முடிவடைகிறது. இந்த வசனத்தில் "அந்நாட்களிலே" என்பது உபத்திரவக்காலம் முடிவடைந்தவுடன் துவங்கும் காலத்தைக் குறிக்கும். (மாற்கு 13:24-27; மத் 24:29-31; வெளி 19:11-21; சக 1)

"உபத்திரவம்" - மாற்கு 13:14-20; மத் 24:15-22; வெளி 6:1-19:21; எரே 30 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் உபத்திரவம்.

"சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும்" - தானியேலின் எழுபதாவது வார காலத்தில் ஐந்தாம் முறையாகக் கிரகங்களில் மாற்றம் ஏற்படுகிறது. (மத் 24:29)

"வானத்தின் நட்சத்திரங்கள் விழும்" - நட்சத்திரங்கள் விழுவதாக இரண்டு முறை மட்டுமே நாம் வேதத்தில் வாசிக்கிறோம்.

1. ஆறாம் முத்திரையில் (வெளி 6:12-17)
2. கிறிஸ்துவின் வருகையின்போது (மாற்கு 13:25; மத் 24:29)

"வானங்களிலுள்ள சத்துவங்களும் அசைக்கப்படும்" - வானத்தை ஆளுகை செய்யும் சாத்தானுடைய சேனைகளை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (எபே 2:1-3; எபே 6:12) இவை இப்போது வானத்தின் அந்தகார சக்திகளாக கிரியை செய்கின்றன. இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது இவைகளுக்குப் பெலன் இராது. மூன்றரை வருஷங்களுக்கு இவை பூமியின் பாதாளத்திலேதள்ளப்படும். (வெளி 12:7-12) இந்தக் காலத்தின் முடிவில் வானத்தின் அந்தகார சக்திகள் தோற்கடிக்கப் படும் என்று ஏசாயா கூறுகிறார். (ஏசா 24:21-22; ஏசா 34:4) வானங்களில் சாத்தானுடைய சேனைகள் அந்தகார சக்திகளாக இருக்கும் போதே ஏசாயாவும், இயேசு கிறிஸ்துவும் அந்த அந்தகாரச் சக்திகளைப் பற்றி முன்னறிவிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவின் வருகையின்போது அவை அசைக்கப்பட்டு, தோல்வி அடைவது மட்டுமல்ல. ஆயிரம் வருஷங்களுக்கு சாத்தானின் சேனைகள் சிறையிலடைக்கப்படும். (ஏசா 24:21-22; வெளி20:1-10) வானத்தின் நட்சத்திரங்களும், வானத்தின் சேனைகளும் 2இராஜா 23:4-5 ஆகிய வசனங்களில் வேறு பிரித்துக் கூறப்பட்டிருக்கின்றன. வானத்தின் சேனைகள் தந்திரமானவை. கடந்த காலங்களில் மனுஷர்கள் அவற்றை ஆராதித்து, சேவித்து வந்தார்கள். (2இராஜா 17:16; 2இராஜா 21:3,5; 2நாளா 33:3-5; எரே 8:2; எரே 19:13; செப் 1:5; அப் 7:42).

"அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களின் மேல் வருகிறதைக் காண்பார்கள்" - "அப்பொழுது" என்பது மகா உபத்திரவக் காலத்தின் முடிவு ஆகும். அப்பொழுது இயேசு கிறிஸ்து தமது மகிமையோடும், வல்லமையோடும் மேகங்களின்மேல் வருவார். (தானி 7:13-14; சக 14:5; மத் 16:27; மத் 24:29-31; மத் 25:31-46; யூதா 1:14; 2தெச 1:7-10; வெளி 1:7; வெளி 19:11-21)

"அப்பொழுது அவர் தம்முடைய தூதரை அனுப்பி, தாம் தெரிந்துகொண்டவர்களை பூமியின் கடைமுனை முதற்கொண்டு, வானத்தின் கடைமுனைமட்டுமுள்ள நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார்" - இயேசு கிறிஸ்துவினுடைய தூதர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரை நித்திய தேசமாக இருக்குமாறு கூட்டிச்சேர்ப்பார்கள்.(மத் 24:31; ஏசா 11:11-12; ஏசா 60:8-9; ஏசா 65:9,22; ஏசா 66:19-21; எரே 31:36-40; எரே 33:17-26; எசே 36:8-24; எசே 37:21-28; எசே 39:25-29; ஆமோ 9:11-15; அப் 15:13-18; லூக்கா 1:31-32)

(5) அத்தி மரத்தைப் பற்றிய உவமை - (மத் 24:32; லூக் 21:29)

மாற்கு 13:28 அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளைதோன்றி, துளிர் விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்.

13 அதிகாரம்

மாற்கு 13:29 அப்படியே இவைகள் சம்பவிக்கிறதைநீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்.

உவமை எண் - 9

"அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்.........." மாற்கு கூறியுள்ள ஒன்பதாவது உவமை. (மத் 24:32-33, மாற்கு 13:28-29)

(6) இந்த தீர்க்கதரிசனத்தின் எல்லா அடையாளங்களும் ஒரே சந்ததியில் நடைபெறும் - (மத் 24:34; லூக் 17:26; 21:32)

மாற்கு 13:30 இவைகளெல்லாம் சம்பவிக்குமுன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மாற்கு 13:31 வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை.

"இவைகளெல்லாம் சம்பவிக்குமுன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாது" - (மத் 24:34; மத் 11:16)

"வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை" - (மத் 24:35)

(7) இயேசு கிறிஸ்து மறுபடியும் வரும் நேரம் யாருக்கும் அறிவிக்கப்பட வில்லை - (மத் 24:36; அப் 1:7)

மாற்கு 13:32 அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்.

மாற்கு 13:33 அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்.

மாற்கு 13:34 ஒரு மனுஷன் தன் வீட்டைவிட்டு, புறத்தேசத்துக்குப் பிரயாணம்போக எத்தனிக்கும் போது, தன் ஊழியக்காரருக்கு அதிகாரங் கொடுத்து, அவனவனுக்குத் தன் தன் வேலையையும் நியமித்து, விழித்திருக்கும் படிக்குக் காவல் காக்கிறவனுக்குக் கற்பிப்பான்.

மாற்கு 13:35 அப்படியே நீங்களும் விழித்திருங்கள்; ஏனெனில், வீட்டெஜமான் சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல்கூவும் நேரத்திலோ,காலையிலோ, எப்பொழுது வருவான் என்று நீங்கள் அறியீர்கள்.

மாற்கு 13:36 நீங்கள் நினையாத வேளையில் அவன் வந்து, உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டு பிடியாதபடிக்கு விழித்திருங்கள்.

மாற்கு 13:37 நான் உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன்,விழித்திருங்கள்என்றார்

"அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்" - இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் மனுஷகுமாரனாக அவதரித்தபோது, அவரிடம் சர்வஞானம் இல்லை. அவருடைய ஞானமும் அந்த நாட்களில் ஒரு வரையறைக்கு உட்பட்டிருந்தது என்பதை இந்த வசனம் விளக்குகிறது. (மத் 24:36; லூக்கா 2:40,52; பிலி 2:7)

"எச்சரிக்கையாயிருங்கள்"- (மாற்கு 13:23)

விழித்திரு (watch) - ἀγρυπνέω - agrypneoo - 69

வினைச்சொல் - விழித்திரு (be sleepless) இந்த வார்த்தை மாற்கு 13:33; லூக்கா 21:36; எபே 6:18; எபி 13:17 ஆகிய நான்கு வசனங்களில் மட்டுமே வருகிறது. இந்த வார்த்தையும் மாற்கு 13:34-37 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் வார்த்தையும் ஒன்றல்ல.

13 அதிகாரம்

உவமை எண் - 10

"ஒரு மனுஷன் தன் வீட்டைவிட்டு, புறத்தேசத்துக்குப் பிரயாணம்போக எத்தணிக்கும் போது.........." மாற்கு கூறியுள்ள பத்தாவது உவமை. இந்த சுவிசேஷத்தில் இதுவே கடைசி உவமை. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து நாம் விழித்திருக்க வேண்டும் என்பதை இந்த உவமை வலியுறுத்துகிறது. (மாற்கு 13:34-37)

விழித்திரு (Watch) - **γρηγορέω** - **greegoreoo** - 1127

விளைச்சொல் - விழித்திரு **(be vigilent, alert)** (1பேதுரு 5:8) இந்த வார்த்தையும் மாற்கு 13:33-இல் கூறப்பட்டிருக்கும் வார்த்தையும் வெவ்வேறானவை. இரவு வேளையில் நான்கு சாமங்கள் உள்ளன. மாலைவேளை, நடுஇரவு, சேவல்கூவும் வேளை, காலைவேளை. (மத் 14:25; மத் 24:43; மாற்கு 6:48; லூக்கா 12:38)

14 அதிகாரம்

88. இயேசுவை கொலைசெய்ய முயற்சி - (மத் 26:3; லூக் 22:1)

மாற்கு 14:1 இரண்டு நாளைக்குப்பின்பு புளிப்பில்லாத அப்பஞ்சாப்பிடுகிற பஸ்காபண்டிகை வந்தது. அப்பொழுது பிரதான ஆசாரியரும் வேதபாரகரும், அவரைத் தந்திரமாய்ப் பிடித்துக் கொலை செய்யும்படி வகைதேடினார்கள்.

மாற்கு 14:2 ஆகிலும் ஜனங்களுக்குள்ளே கலகம் உண்டாகாதபடிக்கு, பண்டிகையிலே அப்படிச் செய்யலாகாது என்றார்கள்.

“இரண்டு நாளைக்குப்பின்பு” - (மாற்கு 11:27; மத் 26:2)

“புளிப்பில்லாத அப்பஞ்சாப்பிடுகிற பஸ்காபண்டிகை” - பஸ்கா பண்டிகையும், புளிப்பில்லா அப்பப்பண்டிகையும் இரண்டு வெவ்வேறான பண்டிகைகள். இவ்விரண்டையும் ஒன்றாகவே ஆசரித்தார்கள். பஸ்காவை புசிக்கும் காலம் அந்தப் பண்டிகையின் ஏழு நாட்களின் துவக்கத்தில் வருகிறது. அப்போது புளிப்பில்லா அப்பம் மட்டுமே புசிப்பார்கள். (யாத் 12:1-28; லேவி 23:4-8)

89. இயேசுவின் அபிஷேகம் - (மத் 26:6; லூக் 7:36; யோவான் 12:1)

மாற்கு 14:3 அவர் பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டிலே போஜனபந்தியிருக்கையில், ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வந்து, அதை உடைத்து, அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்.

மாற்கு 14:4 அப்பொழுது சிலர் தங்களுக்குள்ளே விசனமடைந்து: இந்தத் தைலத்தை இப்படி வீணாய்ச் செலவழிப்பானேன்?

மாற்கு 14:5 இதை முந்நூறு பணத்துக்கு அதிகமான கிரயத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்று சொல்லி, அவளைக்குறித்து முறுமுறுத்தார்கள்.

மாற்கு 14:6 இயேசு அவர்களை நோக்கி: அவளை விட்டுவிடுங்கள்; ஏன் அவளைத் தொந்தரவு படுத்துகிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள்.

மாற்கு 14:7 தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள், உங்களுக்கு மனதுண்டாகும் போதெல்லாம் நீங்கள் அவர்களுக்கு நன்மை செய்யலாம், நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன்.

மாற்கு 14:8 இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்; நான் அடக்கம் பண்ணப்படுவதற்கு எத்தனமாக, என் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்டாள்.

மாற்கு 14:9 இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப் படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன் என்றார்.

“இயேசு பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டிலே போஜனபந்தியிருந்தார்” - (மத் 26:6-13)

கடைசி வாரத்தில் மூன்றுபோஜனங்கள்

1. லாசருவின் வீட்டில் - பஸ்காவிற்கு ஆறு நாட்களுக்கு முன்பு. (யோவான் 12:1-9) இவ்வேளையில் மரியாள் இயேசுவைத் தைலத்தினால் அபிஷேகம் பண்ணினாள்.
2. குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டிலே - பஸ்காவிற்கு இரண்டு நாளைக்கு முன்பு - பெத்தானியாவில் (மாற்கு 14:1-9) இந்த நிகழ்ச்சியில் இயேசுவினுடைய சிரசின்மேல் தைலத்தை ஊற்றிய ஸ்திரீ யாரென்று தெரியவில்லை. (மத் 26:6-13)
3. கடைசி இராப்போஜனம் (யோவான் 13:1-20; மத் 26:20; மாற்கு 14:17; லூக்கா 22:14)

14 அதிகாரம்

"குஷ்டரோகி" - சீமோன் ஒருகாலத்தில் குஷ்டரோகியாக இருந்தான். இயேசு கிறிஸ்து அவனைச் சுத்தமாக்கினார் என்று இந்த வசனத்தின் மூலமாகத் தெரிந்து கொள்கிறோம்.

"வெள்ளைக்கல் பரணி" - தைலங்களைச் சேர்த்து வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் குடுவை.

"உத்தமதைலம்" (spikenard) - இதில் இரண்டு கிரேக்கச் சொற்கள் உள்ளன. கிழக்கு தேசத்தில் இரண்டு விதமான தைலங்கள் இருந்தன. ஒன்று மிகவும் பரிசுத்தமானது. மற்றொன்று கலப்படம் செய்யப்பட்ட தைலம். (உன் 1:12; மாற்கு 14:3; யோவான் 12:2).

இந்த வசனத்தில் இயேசுவின் சிரசின்மீது ஸ்திரீ ஊற்றிய தைலம் சுத்தமானது, கலப்படமற்றது.

தைலம் (spikenard) - νάρδος - nardos - 3487

பெண்பால் பெயர்ச்சொல் - தைலம்

உத்தம (faith) πιστικός - pistikos -4101

பெயரடை - உத்தம, களங்கமில்லாத

நிச்சயம் (faithful) - πίστις - pistis - 4102

பெண்பால் பெயர்ச்சொல் - விசுவாசம், நிச்சயம், உண்மை

"அதை உடைத்தாள்" - பரணியை உடைப்பது என்பது சுத்த தைலத்தைப் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் முத்திரையிடப்பட்ட குடுவையை உடைப்பது என்பது பொருள். இதனால் இந்தப் பரணியை உடைப்பதற்கு முன்பாகத் தைலத்தின் நறுமணம் வெளியேறாது.

"அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்" - கடைசி வாரத்தில் இரண்டு அபிஷேகங்கள். (மத் 26:7)

"முந்நூறு பணம்" - முந்நூறு நாள் வேலை செய்தால் கிடைக்கக்கூடிய சம்பளம் முந்நூறு பணமாகும்.

"அவளைக்குறித்து முறுமுறுத்தார்கள்" - முறுமுறுப்பதை இயேசுகிறிஸ்து எப்போதுமே அனுமதிப்பதில்லை. வேதவாக்கியத்தின் பிரகாரம் முறுமுறுப்பது சாபமான கிரியை. (யாத் 15:24; யாத் 16:2-12; யாத் 17:3-5; எண் 14:2-36; எண் 17:5-10; உபா 1:27; யோசு 9:18; சங் 106:25; மத் 20:11; மாற்கு 14:5; லூக்கா 5:30; லூக்கா 15:2; லூக்கா 19:7; யோவான் 6:41,61; யோவான் 7:12,32; அப் 6:1; 1கொரி 10:10; பிலி 2:14; யூதா 1:16).

"தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்" - மாற்கு 14:6; யோவான் 12:7 ஆகிய வசனங்களில் தமக்காகச் செய்யும் நற்கிரியைகளைப் பற்றிய விளக்கம்.

"நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன்" - சபையில் திருவிருந்து நடைபெறும்பொழுது, இயேசு கிறிஸ்துவின் சரீரத்திற்கு அடையாளமாக இருக்கும் அப்பமும், அவருடைய இரத்தத்திற்கு அடையாளமாக இருக்கும் இரசமும் பரிமாறப்படுகிறது. இதன் மூலமாக அவர் எப்போதும் நம்மிடத்தில் இருக்கிறார். ஆனாலும் இயேசு கிறிஸ்து தமது சரீரப்பிரகாரமாக நம்மிடத்தில் இல்லை.

தீர்க்கதரிசன எண் - 23

"இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்........" (மாற்கு 14:8-9) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்துவின் சீஷர்களைவிட அறிமுகமில்லாத இந்த ஸ்திரீ மறுநாளில் அவர் அனுபவிக்கப் போகும் பாடுகளை நன்றாக புரிந்து வைத்திருந்தாள். (லூக்கா22:24-27;லூக்கா 24:1-12,25-26,45; யோவான் 13:36; யோவான் 20:9)

90. இயேசுவைக் காட்டிக்கொடுக்க யூதாஸ் ஒப்புக்கொள்கிறான் - (மத் 26:14; லூக் 22:3)

மாற்கு 14:10 அப்பொழுது, பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் காரியோத்து என்பவன் அவரைப் பிரதான ஆசாரியருக்குக் காட்டிக் கொடுக்கும்படி அவர்களிடத்திற்குப் போனான்.

14 அதிகாரம்

மாற்கு 14:11 அவர்கள் அதைக் கேட்டு, சந்தோஷப்பட்டு, அவனுக்குப் பணங்கொடுப்போம் என்று வாக்குத்தத்தம் பண்ணினார்கள்; அவன் அவரைக் காட்டிக் கொடுப்பதற்குத் தகுந்த சமயம் பார்த்துக்கொண்டிருந்தான்.

"பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து என்பவன் அவரைப் பிரதான ஆசாரியருக்குக் காட்டிக் கொடுக்கும்படி அவர்களிடத்திற்குப் போனான்"-மாற்கு 14:6-9; யோவான் 12:4-8 ஆகிய வசனங்களின் நிமித்தமாக யூதாஸ் காரியோத்து அவ்விடத்தை விட்டு போயிருக்கலாம். இயேசு கிறிஸ்து கைது பண்ணப்படுவதற்கு முந்திய நாளில் யூதாஸ் இயேசு கிறிஸ்துவை முப்பது வெள்ளிக் காசிற்கு காட்டிக்கொடுப்பதாக பிரதான ஆசாரியரோடு ஒப்பந்தம் செய்து கொண்டான். (மாற்கு 14:12).

91. பஸ்காவின் ஆயத்தம் - (மத் 26:17; லூக் 22:7)

மாற்கு 14:12 பஸ்காவைப் பலியிடும் நாளாகிய புளிப்பில்லாத அப்பஞ் சாப்பிடுகிற முதலாம் நாளிலே, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: நீர் பஸ்காவைப் புசிப்பதற்கு நாங்கள் எங்கே போய் ஆயத்தம் பண்ணச் சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள்.

மாற்கு 14:13 அவர் தம்முடைய சீஷரில் இரண்டுபேரை நோக்கி: நீங்கள் நகரத்திற்குள்ளே போங்கள், அங்கே தண்ணீர்க்குடம் சுன்ந்து வருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான், அவன் பின்னே போங்கள்;

மாற்கு 14:14 அவன் எந்த வீட்டிற்குள் பிரவேசிக்கிறானோ அந்த வீட்டு எஜமானை நீங்கள் நோக்கி: நான் என் சீஷரோடுங்கூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கேயென்று போதகர் கேட்கிறார் என்று சொல்லுங்கள்.

மாற்கு 14:15 அவன் கம்பளம் முதலானவைகள் விரித்து ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற விஸ்தாரமான மேல்வீட்டறையை உங்களுக்குக் காண்பிப்பான்; அங்கே நமக்காக ஆயத்தம்பண்ணுங்கள் என்று சொல்லி அனுப்பினார்.

மாற்கு 14:16 அப்படியே, அவருடைய சீஷர் புறப்பட்டு நகரத்தில் போய், தங்களுக்கு அவர் சொன்னபடியே கண்டு, பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்.

"பஸ்காவைப் பலியிடும் நாளாகிய புளிப்பில்லாத அப்பஞ்சாப்பிடுகிற முதலாம் நாளிலே" - நிசான் மாதம் 14-ஆம் நாள். பஸ்கா ஆட்டுக்குட்டி ஆயத்த நாளிலே கொல்லப்படவேண்டும். மறுநாள் பிரதான நாளாகும். அது விசேஷித்த ஓய்வுநாளாக ஆசரிக்கப்படும். வாரத்தின் ஓய்வுநாளுக்கும், இதற்கும் வித்தியாசம் உண்டு. (யோவான் 19:30-31; லேவி 23:6-7)

தீர்க்கதரிசன எண் - 24

"நீங்கள் நகரத்திற்குள்ளே போங்கள், அங்கே தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான்" (மாற்கு 14:13-15) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"அங்கே தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான்" - இது ஒரு அரிதான காரியம். பாலஸ்தீன தேசத்தில் ஸ்திரீகளே தண்ணீர்க் குடங்களைச் சுமந்து வருவார்கள். (ஆதி 24:14-46; யோவான் 4:7) மனுஷர் பெரிய துருத்திகளில் தண்ணீரை நிரப்பி, அவற்றைக் கழுதைகளின்மீது ஏற்றி வருவார்கள்.

"மேல்வீட்டறை" - கிழக்கு தேசங்களில் பல வீடுகளில் மாடி அறை இருக்கும். அதற்குப் போகும் படிக்கட்டு வீட்டிற்கு வெளியே இருக்கும். (2இராஜா 1:2; 2இராஜா 23:12; 2நாளா 3:9; எசே 42:5; மாற்கு 14:15; லூக்கா 22:12; அப் 1:13; அப் 9:37-39; அப் 20:8).

14 அதிகாரம்

இயேசு கிறிஸ்து இங்கு கூறியிருக்கும் மேலறை ஒரு ஐசுவரியவானுக்கு உரியதாக இருக்க வேண்டும். ஏனெனில் அது விஸ்தாரமானது. கம்பளம் முதலானவைகள் விரித்து வைக்கப்பட்டிருந்தது. ஒரு சிலர் இந்த மேலறையை மாற்கு என்னும் யோவானின் வீடு என்று கூறுகிறார்கள். ஆதிக் கிறிஸ்தவர்கள் அந்த மேலறையில் கூடி ஜெபிப்பது வழக்கம். பரிசுத்த ஆவியானவர் அங்கு இறங்கினார். (லூக்கா 24:8-12; அப் 1:13; அப் 12:12)

பஸ்கா பண்டிகையின்போது எருசலேமிலுள்ள யூதர்கள் தங்களுடைய வீட்டின் அறைகளை வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு பஸ்காவை ஆசரிப்பதற்கு ஆயத்தப்படுத்திக் கொடுப்பது வழக்கம். இது யூதமார்க்கத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் பழக்கம்.

மேல் வீடு (upper) - ἀνάγαιον - **anagaion** - 508

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - தனக்கு மேலே உள்ள இடம், மேல் வீடு, மேல் வீட்டு அறை

மேல்வீடு (upper room) - עֲלִיָּה - **al-ee-yaw' - 5944**

பெ.பெ.சொ. - அறைவீடு, மேல்வீடு, நடை மண்டபம்

"அப்படியே, அவருடைய சீஷர் புறப்பட்டு நகரத்தில் போய், தங்களுக்கு அவர் சொன்னபடியே கண்டார்கள்" - மாற்கு 14:13-15 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்து கூறிய தீர்க்கதரிசனம் உண்மையாயிற்று. இயேசு கிறிஸ்துவின் வார்த்தை எப்போதுமே சத்தியமானவைதான். முன்னறிவித்த காரியம் எதுவும் நடைபெறாமல் போவதில்லை. ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பாகக் கூறப்பட்ட தீர்க்கதரிசனங்களும் அதற்குரிய காலம் வரும்பொழுது நிறைவேறி உள்ளன, நிறைவேறிக்கொண்டிருக்கின்றன, நிச்சயமாகவே நிறைவேறும்.

"பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்" - சூரியன் அஸ்தமனமாகும் வேளையிலே பஸ்கா ஆயத்தமாக இருந்தது. குறித்த காலத்திற்கு முன்பாகவே சீஷர்கள் பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள். மறுநாள் மாலையில்தான் பொதுவாக பஸ்காவைப் புசிப்பது வழக்கம். ஆனால் இயேசு கிறிஸ்துவோ ஒரு நாளுக்கு முன்பாகவே பஸ்காவைப் புசிக்கிறார். ஏனெனில் அன்று இரவு முழுவதும் அவர் விசாரிக்கப்பட வேண்டியிருந்தது. மறுநாள் எல்லோரும் பஸ்காவை ஆசரிக்கும்போது, இயேசு கிறிஸ்து நமது பஸ்காவாக பலியிடப்பட்டார். (1கொரி 5:7) இந்த வசனத்தின் பிரகாரம் குறித்த வேளைக்கு முன்பாகவே அவர் பஸ்காவைப் புசித்து, மறுநாளிலே பஸ்காவிற்காக நியமிக்கப்பட்ட குறித்த காலத்தில் அவர் நமக்காகப் பஸ்கா ஆட்டுக்குட்டியாகப் பலியிடப்பட்டார். "பஸ்கா பண்டிகைக்கு முன்னே"என்று யோவான் 13:1 ஆவது வசனத்தில் வாசிக்கிறோம். அதாவது கிறிஸ்துவும், அவருடைய சீஷர்களும்பஸ்கா பண்டிகைக்கு முன்பாகவே பஸ்கா போஜனம் பண்ணுகிறார்கள்.

92. கடைசி பஸ்கா - (மத் 26:20; லூக் 22:14; யோவான் 13)

(1) தாம் காட்டிக்கொடுக்கப்படப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார்

மாற்கு 14:17 சாயங்காலமான போது, அவர் பன்னிருவரோடுங்கூட அவ்விடத்திற்கு வந்தார்.

மாற்கு 14:18 அவர்கள் பந்தியமர்ந்து போஜனம் பண்ணுகையில், இயேசு அவர்களை நோக்கி: என்னுடனே புசிக்கிற உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மாற்கு 14:19 அப்பொழுது அவர்கள் துக்கமடைந்து: நானோ? நானோ? என்று ஒவ்வொருவரும், அவரிடத்தில் கேட்கத்தொடங்கினார்கள்.

மாற்கு 14:20 அவர் பிரதியுத்தரமாக: என்னுடனே கூடத் தாலத்தில் கையிடுகிறவனாகிய பன்னிருவரிலொருவனே அவன் என்று சொல்லி;

14 அதிகாரம்

மாற்கு 14:21 மனுஷகுமாரன் தம்மைக் குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்; ஆகிலும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக் கொடுக்கப் படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ! அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார்.

"சாயங்காலமான போது, அவர் பன்னிருவரோடுங்கூட அவ்விடத்திற்கு வந்தார்" - சாயங்காலத்திற்கு முன்பாகவே பஸ்கா ஆயத்தமாக இருக்கிறது. பஸ்காவின் ஆயத்தநாள் ஆரம்பமாகும்போது, பஸ்கா ஆயத்தமாக இருக்கிறது. யூதர்கள் பொதுவாக மறுநாள் சாயங்காலத்தில் பஸ்காவை புசிப்பது வழக்கம்.

தீர்க்கதரிசன எண் - 25

"என்னுடனே புசிக்கிற உங்களில் ஒருவன் என்னைக்காட்டிக்கொடுப்பான்"(மாற்கு 14:18) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

தீர்க்கதரிசன எண் - 26

"என்னுடனேகூடத் தாலத்தில் கையிடுகிறவனாகிய பன்னிருவரிலொருவனே அவன்" (மாற்கு 14:20-21) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"என்னுடனேகூடத் தாலத்தில் கையிடுகிறவன்" - விருந்து கொடுக்கிறவர் தன்னுடைய விருந்தினர்களைக் கனப் படுத்துவதற்காகத் தன்னுடைய போஜனத்தில் அவர்களுக்கு ஒரு பகுதியைக் கொடுப்பார். அதன் பிரகாரமாக இயேசு கிறிஸ்து யூதாசைக் கனப்படுத்துகிறார். (யோவான் 13:23-33)

"எழுதியிருக்கிறபடியே" - வேதத்தில் எழுதியிருக்கிறபடியே நாம் ஜீவிப்போமானால் நமக்கு பிரச்சனை ஒன்றுமில்லை. எழுதியிருக்கிறபடியே நாம் பிரசங்கிக்கும் போது சத்தியத்தையே பிரசங்கிப்போம். கள்ள உபதேசத்திற்கு வழியில்லை.

"எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக் கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ!" - வேதத்திலே நாம் வாசிக்கும் பயங்கரமான காரியம். இயேசு கிறிஸ்துவின் வாயில் பொதுவாக ஆசீர்வாதமான வார்த்தைகளே வரும். ஆனால் இப்போதோ தம்மைக் காட்டிக்கொடுக்கிற மனுஷனுக்கு ஐயோ என்று கூறுகிறார். யூதாஸ் இயேசுவின் பன்னிரு சீஷர்களில் ஒருவன்.

யூதாசைப் பற்றிய காரியங்கள்

1. அப்போஸ்தலன் (மத் 10; மாற்கு 3:13-19)
2. பரிசுத்த ஆவியினால் நிறைக்கப்பட்டவன் (மத் 10:20)
3. கண்டுபிடிக்கப்பட்ட ஆடு (மத் 10:16)
4. பிரசங்கம் பண்ணுவதற்கு அபிஷேகிக்கப் பட்டவன் (மாற்கு 3:13)
5. சுகமாக்குவதற்கு அபிஷேகிக்கப் பட்டவன் (மாற்கு 3:13-14)
6. வல்லமையால் நிரப்பப்பட்டவன் (மத் 10:1-8)
7. நன்றாகப் பிரசங்கிக்கக்கூடியவன், குணமாக்கும் வரம் உடையவன் (மாற்கு 6:7-13; லூக்கா 9:6,10)
8. தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுத்தவன் (யோவான் 4:1-2)
9. நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டவன் (யோவான் 17:2 = யோவான் 17:12)
10. இரட்சிக்கப்பட்டவன், ஜீவபுஸ்தகத்திலே பெயர் எழுதப்பட்டவன் (அப் 1:20 = சங் 69:25-28; லூக்கா 10:20 = மாற்கு 6:13)
11. நித்திய காலமாக இயேசுவோடு ஆளுகை செய்வதற்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவன் (மத் 19:28)
12. சபையின் முதலாவது பொக்கிஷத்தாரன். (யோவான் 12:4-6; யோவான் 13:29)

14 அதிகாரம்

13. கிறிஸ்துவின் சிநேகிதன். (சங் 41:9)

14. கிறிஸ்துவின் நம்பிக்கைக்குரியவன். (சங் 41:9, யோவான் 2:25)

15. கிறிஸ்துவின் விரோதியல்ல, கிறிஸ்துவின் கிருபையையும், ஆலோசனையையும் பெற்றவன், கிறிஸ்துவோடுஐக்கியமாகஇருந்தவன். (சங் 55:12-14, யோவான் 13:18-19; அப் 1:16-17; சங் 41:9)

16. சுவிசேஷத்திற்குத் தெய்வீக ஊழியக்காரன். (சங் 109:8; அப் 1:20; மத் 10:1-8)

17. அப்போஸ்தல ஊழியத்தில் பங்கு பெற்றவன். (அப் 1:16-17,25; மத் 10:1-20)

18. திருடன் - அதாவது திருடனானான், பின்மாறிப்போனவன்.(யோவான்12:4-6, யோவான் 6:70, யோவான் 13:10-11, அப் 1:25; மாற்கு 14:21)

சுகமாயிருத்தல் **(familiar) - שָׁלוֹם - shaw-lome', shaw-lome' - 7965**

ஆ.பெ.சொ. - சமாதானம், சுகமாயிருத்தல், ஷேமம், மங்களம், சுகசெய்தி, சுகம், ஷாலோம், சரி, வினவுதல், பத்திரப்பட்டிருத்தல், சவுக்கியம், செல்வம், வாழ்வு, கடாட்சம், ஒப்புரவு, அனைத்தும், சுகித்திருத்தல், இஷ்டம் (சங் 41:9; சங் 69:25-28; சங் 109:3-20; யோவான் 7:70; யோவான் 17:12)

(2) கர்த்தருடைய பந்தி - (மத் 26:26; லூக் 22:19; 1கொரி 11)

மாற்கு 14:22 அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்.

மாற்கு 14:23 பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களெல்லாரும் அதிலே பானம் பண்ணினார்கள்.

மாற்கு 14:24 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.

மாற்கு 14:25 நான் தேவனுடைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம்பண்ணும் நாள் வரைக்கும் திராட்சப்பழரசத்தை இனி நான் பானம்பண்ணுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மாற்கு 14:26 அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

"அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார்" - (மத் 26:20-29; லூக்கா 22:14-38; யோவான் 13:1-14:31)

தீர்க்கதரிசன எண் - 27

"இது என்னுடைய சரீரமாயிருக்கிறது......." (மாற்கு 14:22-25) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று, நிறைவேறிக் கொண்டிருக்கிறது. மாற்கு 14:25 ஆயிரம் வருஷ அரசாட்சியில் நிறைவேறும். (மத் 26:26, லூக்கா 22:15-18,30)

"அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" - (மத் 26:28)

"நான் தேவனுடைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம்பண்ணும் நாள் வரைக்கும் திராட்சப்பழரசத்தை இனி நான் பானம்பண்ணுவதில்லை" - நித்திய ஜீவனில் மனுஷர் புசிப்பதற்கு வாய்ப்பு இருப்பதை இந்த வசனம் கூறுகிறது. (லூக்கா 22:15-18,30; வெளி 2:7,17; வெளி 19:9-10; வெளி 22:2)

14 அதிகாரம்

"அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்" - மத் 26:30; லூக்கா 22:39; யோவான் 14:31)

(3) பேதுரு தம்மை மறுதலிக்கப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 26:31; லூக் 22:31; யோவான் 13:36)

மாற்கு 14:27 அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி: மேய்ப்பனை வெட்டுவேன்,ஆடுகள்சிதறடிக்கப்படும், என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்களெல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்.

மாற்கு 14:28 ஆகிலும் நான் உயிர்த்தெழுந்த பின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன் என்றார்.

மாற்கு 14:29 அதற்குப் பேதுரு: உமது நிமித்தம்எல்லாரும் இடறலடைந்தாலும், நான் இடறலடையேன் என்றான்.

மாற்கு 14:30 இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு, இந்த இராத்திரியிலே, சேவல் இரண்டு தரம் கூவுகிறதற்கு முன்னே, நீ மூன்றுதரம் என்னை மறுதலிப்பாய் என்று மெய்யாகவேஉனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

மாற்கு 14:31 அதற்கு அவன்: நான் உம்மோடே மரிக்க வேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்க மாட்டேன் என்று உறுதியாய்ச் சொன்னான்; எல்லாரும் அப்படியே சொன்னார்கள்.

தீர்க்கதரிசன எண் - 28

"இந்த இராத்திரியிலே நீங்களெல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்" (மாற்கு 14:27) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 8

"மேய்ப்பனை வெட்டுவேன், ஆடுகள் சிதறடிக்கப்படும்" (மாற்கு 14:27; சக 13:7)

தீர்க்கதரிசன எண் - 29

"நான் உயிர்த்தெழுந்த பின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன்........." (மாற்கு 14:28-31) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் இடறலடையேன்" - (மத் 26:58)

"உறுதியாய்ச் சொன்னான்" - திரும்பத்திரும்பக்கூறுதல்

IV. கிறிஸ்துவின் பாடுகள்

1. கெத்செமனே தோட்டத்தில் இயேசுவின் துக்கமும் வியாகுலமும் - (மத் 26:36; லூக் 22:39; யோவான் 18:1)

மாற்கு 14:32 பின்பு கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: நான் ஜெபம்பண்ணுமளவும் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி;

மாற்கு 14:33 பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் தம்மோடே கூட்டிக்கொண்டு போய், திகிலடையவும், மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார்.

மாற்கு 14:34 அப்பொழுது அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங் கொண்டிருக்கிறது. நீங்கள் இங்கே தங்கி, விழித்திருங்கள் என்று சொல்லி,

மாற்கு 14:35 சற்று அப்புறம்போய், தரையிலே விழுந்து, அந்த வேளை தம்மைவிட்டு நீங்கிப்போகக் கூடுமானால் அது நீங்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டு:

14 அதிகாரம்

மாற்கு 14:36 அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும்; இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும், ஆகிலும் என்சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்றார்.

மாற்கு 14:37 பின்பு அவர் வந்து, அவர்கள் நித்திரை பண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: சீமோனே, நித்திரைபண்ணுகிறாயா? ஒரு மணிநேரம் நீ விழித்திருக்கக்கூடாதா?

மாற்கு 14:38 நீங்கள் சோதனைக்குட் படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளது தான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்.

மாற்கு 14:39 அவர் மறுபடியும் போய் அந்த வார்த்தைகளையே சொல்லி ஜெபம்பண்ணினார்.

மாற்கு 14:40 அவர் திரும்ப வந்தபோது, அவர்கள் மறுபடியும் நித்திரை பண்ணுகிறதைக் கண்டார்; அவர்களுடைய கண்கள் மிகுந்த நித்திரை மயக்கம் அடைந்திருந்தபடியால், தாங்கள் மறுமொழியாக அவருக்குச் சொல்வது இன்னதென்று அறியாதிருந்தார்கள்.

மாற்கு 14:41 அவர் மூன்றாந்தரம் வந்து; இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்; போதும், வேளை வந்தது, இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப் படுகிறார்.

மாற்கு 14:42 என்னைக் காட்டிக் கொடுக்கிறவன், இதோ, வந்துவிட்டான், எழுந்திருங்கள், போவோம் என்றார்.

"கெத்செமனே" - (மத் 26:36)

"பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் தம்மோடே கூட்டிக்கொண்டு போனார்"- மூன்று விசேஷித்த நிகழ்ச்சிகளில் இம்மூவரும் இயேசுவோடு கூட இருந்தார்கள். (மாற்கு 14:33; மாற்கு 5:37; மத் 17:1; லூக்கா 9:28)

திகிலடை (soreamazed) - ἐκθαμβέω - ekthambeoo - 1568

வினைச்சொல் - பயப்படு, ஆச்சரியப்படு, திகிலடை (to throw into terror, alarm, distress) இந்த வார்த்தை இந்த வசனத்திலும் மாற்கு 9:15; மாற்கு 16:5-6 ஆகிய வசனங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இயேசுவை திகிலடையச் செய்த காரியம் எது? இயேசு கிறிஸ்து கல்வாரிச் சிலுவையில்மரிக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தம். சாத்தானின் அந்தகாரச் சக்திகள் கல்வாரியில் அவர் மரிப்பதற்கு முன்பாகவே அவரைக் கொன்றுபோட முயற்சி பண்ணிற்று. கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்து சாத்தானை ஜெயிக்க வேண்டும். அது நடைபெறாமல் தடுப்பதற்காக சாத்தானுடைய சக்திகள் அனைத்தும் இயேசுவிற்கு எதிராகக் கிரியை செய்தன. (மத் 20:22-23, கொலோ 2:14-17; எபி 5:7, 1பேதுரு 2:24)

"தரையிலே விழுந்தார்" - சாத்தானின் அந்தகாரச் சக்திகள் இயேசுவை மிகுந்த பாரமாக அழுத்தியதினால் அவர் சரீரத்தில் களைப்படைந்தவராக தரையிலே விழுந்திருக்கலாம். (லூக்கா 22:43-44)

"அந்த வேளை தம்மைவிட்டு நீங்கிப்போகக் கூடுமானால் அது நீங்க வேண்டும்" - "அந்த வேளை" என்பது "இந்தப்பாத்திரம்" என்னும் வாக்கியத்தைக் குறிக்கும். (மாற்கு 14:35 = மத் 26:39)

14 அதிகாரம்

"அப்பா பிதாவே" - அப்பா என்பது அராமாயிக் சொல். தந்தை என்பது இதன் பொருள். யூதர்கள் தங்களுடைய சரீரப்பிரகாரமான பெற்றோரையும் உடன்படிக்கையின் பிரகாரமாக மார்க்கம் மாறிய பெற்றோரையும் குறிப்பதற்கு "அப்பா" **(Abba)** என்னும் சொல்லைப் பயன்படுத்தினார்கள். அவர்களுடைய தாயார் அடிமையாக இருக்கும்போது இந்தச் சொல்லைப் பயன்படுத்துவதில்லை. (கலா 4:24) குமாரனாகிய இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனை "அப்பா" என்றழைக்கிறார். இது அவர்களுக்கு இடையே இருக்கக்கூடிய உறவை வலியுறுத்துகிறது. அப்பா என்னும் இந்த வார்த்தை இந்த வசனத்திலும் ரோமர் 8:15; கலா 4:6 ஆகிய வசனங்களிலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆவி **(spirit)** - **πνεῦμα** - **pneuma** - 4151

பால் வேறுபாடற்ற பெயர் - ஆவி **(the mind, will)** (1கொரி 2:11) புதிய ஏற்பாட்டில் "நியூமா" **pneuma** என்னும் கிரேக்கச் சொல் 385 தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"நியூமா" **(pneuma)** என்னும் கிரேக்கச் சொல்லின் மொழிபெயர்ப்பு விவரம்

1. ஆவி **(Spirit)** - 133 தடவைகள்
2. ஆவி **(spirit)** - 153 தடவைகள்
3. பரிசுத்த ஆவி **(HolyGhost)** - 83 தடவைகள்
4. பரிசுத்த ஆவி **(Holy Spirit)** - 4 தடவைகள்
5. ஆவி **(ghost)** - 2 தடவைகள்
6. ஜீவன் **(life)** - 1 தடவை
7. காற்று **(wind)** - 1 தடவை
8. ஆவிக்குரிய **(spiritual)** - 1 தடவை
9. ஆவிக்குரிய **(spiritually)** - 1 தடவை

"நியூமா" **pneuma** என்னும் கிரேக்கச் சொல் யாரைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

1. தேவன் **(God)** (யோவான் 4:24)
2. கிறிஸ்து **(Christ)** (1கொரி 6:17; 1கொரி 15:45)
3. பரிசுத்த ஆவியானவர் **(Holy Spirit)** (மத் 1:20)
4. தூதர்கள் **(angels)** (அப் 8:29; எபி 1:14)
5. பிசாசுகள் **(demons)** (மாற்கு 7:25-26; லூக்கா 10:17,20)
6. உயிர்த்தெழுந்த சரீரம் **(resurrection body)** (1கொரி 15:44-45)

தீர்க்கதரிசன் எண் - 30

"இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்; போதும், வேளை வந்தது, இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிறார்............" (மாற்கு 14:41-42) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. சாதாரண விசுவாசிக்கு ஆவிக்குரிய போராட்டம் வரும்போது, விழித்திருந்து ஜெபிக்காமல், தூங்கி விடுகிறான். ஆனால் அவனுக்கு சரீரப்பிரகாரமான ஆபத்து வரும்போது தூங்காமல் விழித்திருப்பான். ஆவிக்குரிய ஆபத்துக்களையும், ஆவிக்குரிய போராட்டங்களையும் நாம் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இருப்பதினாலேயே ஜெபம் பண்ண வேண்டிய பல சமயங்களில் ஜெபம் பண்ணாமல் தூங்கிக் கொண்டிருக்கிறோம்.

14 அதிகாரம்

போதும் (enough) - ἀπέχω - apechoo - 568

வினைச்சொல் - போதும் - யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுப்பதற்காக பிரதான ஆசாரியரிடம் ஏற்கெனவே பணம் பெற்று விட்டான். இது இயேசுவிற்குத் தெரியும். அவன் வாங்கியதற்கு ரசீது கொடுப்பதுபோன்று, இயேசு கிறிஸ்து “போதும்” என்று கூறுகிறார். (மாற்கு 14:11) இப்போது யூதாஸ் இயேசுவை நெருங்கிவிட்டான். (மாற்கு 14:42-45)

2. **இயேசுவை கொல்வதற்கு முயற்சி - காட்டிக் கொடுக்கப்படுவதும் கைதி பண்ணப்படுவதும்** - (மத் 36:47; லூக் 22:47; யோவான் 18:3)

மாற்கு 14:43 உடனே, அவர் இப்படிப் பேசுகையில், பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் வந்தான்; அவனோடேகூடப் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் அனுப்பின திரளான ஜனங்கள், பட்டயங்களையும் தடிகளையும் பிடித்துக்கொண்டு வந்தார்கள்.

மாற்கு 14:44 அவரைக் காட்டிக் கொடுக்கிறவன்: நான் எவனை முத்தஞ்செய்வேனோ அவன்தான், அவனைப் பிடித்துப் பத்திரமாய்க் கொண்டுபோங்கள் என்று அவர்களுக்குக் குறிப்புச் சொல்லியிருந்தான்.

மாற்கு 14:45 அவன் வந்தவுடனே, அவரண்டையில் சேர்ந்து: ரபீ, ரபீ, என்று சொல்லி, அவரை முத்தஞ்செய்தான்.

மாற்கு 14:46 அப்பொழுது அவர்கள் அவர்மேல் கைபோட்டு, அவரைப் பிடித்தார்கள்.

மாற்கு 14:47 அப்பொழுது கூடநின்றவர்களில் ஒருவன் கத்தியை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதற வெட்டினான்.

மாற்கு 14:48 இயேசு அவர்களை நோக்கி: கள்ளனைப் பிடிக்கப் புறப்படுகிறதுபோல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துக் கொண்டு என்னைப் பிடிக்கவந்தீர்கள்;

மாற்கு 14:49 நான் தினந்தோறும் உங்கள் நடுவிலே தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தேன்; அப்பொழுது நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே; ஆனாலும் வேதவாக்கியங்கள் நிறைவேற வேண்டியதாயிருக்கிறது என்றார்.

மாற்கு 14:50 அப்பொழுது எல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்.

மாற்கு 14:51 ஒரு வாலிபன் ஒரு துப்பட்டியை மாத்திரம் தன்மேல் போர்த்துக்கொண்டு அவர் பின்னே போனான்; அவனைப் பிடித்தார்கள்.

மாற்கு 14:52 அவன் தன் துப்பட்டியைப் போட்டுவிட்டு, நிர்வாணமாய் அவர்களை விட்டு ஓடிப்போனான்.

“அப்பொழுது கூடநின்றவர்களில் ஒருவன் கத்தியை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதற வெட்டினான்” - பேதுரு காதை வெட்டினான். (யோவான் 18:10) பட்டயங்கள் வைத்திருந்த இரண்டு சீஷர்களில் பேதுரு ஒருவன். (லூக்கா 22:38)

“அப்பொழுது எல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்” - மாற்கு 14:27 ஆவது வசனத்தின் நிறைவேற்றம்.

“ஒரு வாலிபன்” - இந்த வாலிபன் யாரென்று தெளிவாகத் தெரியவில்லை. ஒரு சிலர் இவனை லாசரு என்கிறார்கள். வேறு சிலர் இவனை மாற்கு என்னும் யோவான் என்கிறார்கள்.

14 அதிகாரம்

துப்பட்டி (linen cloth) - σινδών - **sindoon** - 4616

பெண்பால் பெயர்ச்சொல் - துப்பட்டி. இந்தத் துணியினால் இறந்தவர்களை அடக்கம் பண்ணுவார்கள். இதே துணியை ஜனங்கள் இரவு வேளையில் தரித்திருப்பார்கள்.

"அவனைப் பிடித்தார்கள்" - 2சாமு 2:14 ஆவது வசனத்தில் போர்ச்சேவகர்கள் செய்ததுபோன்று இருக்கிறது.

3. இயேசுவின் வழக்கு விசாரணையும் பரியாசமும் - (மத் 26:57;யோவான் 18:12,19; 22:63)

மாற்கு 14:53 இயேசுவை அவர்கள் பிரதான ஆசாரியனிடத்தில் கொண்டு போனார்கள்; அங்கே ஆசாரியர் மூப்பர் வேதபாரகர் எல்லாரும் கூடி வந்திருந்தார்கள்.

மாற்கு 14:54 பேதுரு தூரத்திலே அவருக்குப் பின்சென்று, பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குள் வந்து, சேவகரோடேகூட உட்கார்ந்து, நெருப்பண்டையிலே குளிர்காய்ந்து கொண்டிருந்தான்.

மாற்கு 14:55 அப்பொழுது பிரதான ஆசாரியரும் ஆலோசனைச் சங்கத்தாரனைவரும் இயேசுவைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாகச் சாட்சி தேடினார்கள்; அகப்படவில்லை.

மாற்கு 14:56 அநேகர் அவருக்கு விரோதமாகப்பொய்ச்சாட்சிசொல்லியும், அந்தச் சாட்சிகள் ஒவ்வவில்லை.

மாற்கு 14:57 அப்பொழுது சிலர் எழுந்து, கைவேலையாகிய இந்த தேவாலயத்தை நான் இடித்துப் போட்டு, கைவேலையல்லாத வேறொன்றை மூன்று நாளைக்குள்ளே கட்டுவேனென்று இவன் சொன்னதை நாங்கள் கேட்டோம் என்று,

மாற்கு 14:58 அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொன்னார்கள்.

மாற்கு 14:59 அப்படிச் சொல்லியும் அவர்கள் சாட்சி ஒவ்வாமற்போயிற்று.

மாற்கு 14:60 அப்பொழுது பிரதான ஆசாரியன் எழுந்து நடுவே நின்று, இயேசுவை நோக்கி: இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சொல்லுகிறதைக் குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்று கேட்டான்.

மாற்கு 14:61 அவரோ ஒரு உத்தரவும் சொல்லாமல் பேசாதிருந்தார். மறுபடியும் பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? என்று கேட்டான்.

மாற்கு 14:62 அதற்கு இயேசு: நான் அவர் தான்; மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள் என்றார்.

மாற்கு 14:63 பிரதான ஆசாரியன் இதைக் கேட்டவுடனே, தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு: இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன?

மாற்கு 14:64 தேவதூஷணத்தைக் கேட்டீர்களே, உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது என்றான். அதற்கு அவர்களெல்லாரும்: இவன் மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்று தீர்மானம் பண்ணினார்கள்.

மாற்கு 14:65 அப்பொழுது சிலர் அவர்மேல் துப்பவும், அவருடைய முகத்தை மூடவும், அவரைக் குட்டவும், ஞானதிருஷ்டியினாலே பார்த்துச் சொல் என்று சொல்லவும் தொடங்கினார்கள்; வேலைக்காரரும் அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள்.

14 அதிகாரம்

"அங்கே ஆசாரியர் மூப்பர் வேதபாரகர் எல்லாரும் கூடிவந்திருந்தார்கள்" - அவர்கள் இரவு வேளையில் கூடிவந்தியிருக்கிறார்கள். மிகக்கொடிய குற்றவாளியை விசாரிப்பதுபோல இங்கு எல்லோருமே வந்திருக்கிறார்கள். இயேசுவைச் சீக்கிரமாகக் கொல்ல வேண்டுமென்பது ஆசாரியர், மூப்பர், வேதபாரகர் ஆகியோரின் எண்ணமாக இருக்கலாம். ஆனால் இயேசு கிறிஸ்து வேதவாக்கியத்தின் பிரகாரம் தமது ஜீவனை ஒப்புக்கொடுக்கச் சித்தம் கொண்டிருக்கிறார். இரவு வேளையில் அவர் விசாரிக்கப்படுகிறார். மறுநாள் பஸ்கா ஆட்டுக்குட்டி பலியிடப்படும் நாள். அந்த வேளையில் இயேசு கிறிஸ்து உலகத்தின் பாவத்திற்காகப் பஸ்கா ஆட்டுக்குட்டியாக அடிக்கப்படப்போகிறார்.

"இயேசுவைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாகச் சாட்சி தேடினார்கள்; அகப்படவில்லை" - யூதருடைய நியாயப் பிரமாணத்திற்கு விரோதமாக இங்கு விசாரணை நடைபெறுகிறது. விசாரிக்கும் முன்பாகவே சாட்சிகள் இருக்கும். ஆனால் இங்கோ இயேசுவைத் தங்கள் இஷ்டப்படி குற்றப்படுத்துவதற்காக சாட்சிகளைத் தேடுகிறார்கள். இயேசுவைக் கொலைசெய்ய வேண்டுமென்று தீர்மானம் பண்ணிவிட்டார்கள். ஆகையினால், ஏதாவது ஒரு வழியில் அவருக்கு விரோதமாகச் சாட்சிக் கூறுகிறவர்களைத் தேடினார்கள். ஆனாலும், ஒருவரும் அகப்படவில்லை. ஒரு பாவமும் அறியாதவர் மனுக்குலத்தில் இயேசு கிறிஸ்து மட்டுமே. அவரை ஆலோசனைச் சங்கத்தார் பாவியாகத் தீர்மானம் பண்ணுகிறார்கள்.

"அநேகர் அவருக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொன்னார்கள்" - பத்துக் கட்டளைகளில் ஒன்பதாவது கட்டளையை மீறும் செயல்.

"கைவேலையாகிய இந்தத் தேவாலயத்தை நான் இடித்துப்போட்டு, கைவேலையல்லாத வேறொன்றை மூன்று நாளைக்குள்ளே கட்டுவேன்" - யோவான் 2:19-21 ஆகிய வசனங்களைப் பற்றிய குறிப்பு.

"பிரதான ஆசாரியன் எழுந்து நடுவே நின்றான்" - பொதுவான விசாரணையில் பிரதான ஆசாரியன் எழுந்து நடுவே நிற்கமாட்டான். இயேசுவைப் பிலாத்துவிடம் அனுப்புவதற்குப் போதுமான சாட்சிகளைத் தேடி, அவன் எழுந்து நடுவே நிற்கிறான். (மாற்கு 15:1)

"அவரோ ஒரு உத்தரவும் சொல்லாமல் பேசாதிருந்தார்" - ஏசா 53:7 ஆவது வசனத்தின் நிறைவேற்றம்.

"நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா?" - இயேசு கிறிஸ்துவைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொள்ளாதவர்கள் குழம்பிப் போயிருக்கிறார்கள். அவர் இயேசு மட்டுமா? அல்லது அவர் இயேசு கிறிஸ்துவா? அவர் தேவகுமாரனா? அல்லது மனுஷகுமாரனா? இவ்வாறு தங்களுக்குள் பலவிதமான கேள்விகளைக் கேட்டுக் கொள்கிறார்கள்.

இயேசு கிறிஸ்து தம்மைக் கிறிஸ்து என்றும், தேவனுடைய குமாரன் என்றும் வெளிப்படுத்தி இருக்கிறார். ஆனால் சாத்தானும், யூதரும் இயேசு கிறிஸ்துவின் இந்தச் சாட்சியை பொய்யாக்க முயற்சி பண்ணுகிறார்கள். (மத் 4:3,6; மத் 27:40; யோவான் 5:18; யோவான் 10:36; யோவான் 19:7)

இயேசு கிறிஸ்து தம்மைத் தேவகுமாரன் என்று கூறியதை பிதா அங்கீகரிக்கிறார். (மத் 3:17; மத் 17:5) பிசாசுகளும் இந்தச் சத்தியத்தை அங்கீகரிக்குமாறு பலவந்தம் பண்ணப்படுகிறார்கள். (மத் 8:29; மாற்கு 3:11; மாற்கு 5:7) இயேசுவின் சீஷர்கள் அவரைத் தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டார்கள். (மத் 14:33; மத் 16:16)

இயேசுவின் சத்துருக்களோ இந்தச் சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள். அவர் உயிர்த்தெழுந்த பின்பு கூட அவரைத் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க மறுக்கிறார்கள். (மத் 27:40; மத் 28:11-15; அப் 4:16-22; அப் 5:17-28,40-42) யூதர்களில் சிலர் மனந்திரும்பி, இயேசுவைக் கிறிஸ்து என்று அறிக்கையிட்டார்கள். (யோவான் 3:2; அப் 6:7).

மாற்கு - தொகுப்புரை

14 அதிகாரம்

"ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவன்" - யூதருக்கு யெகோவா என்னும் நாமம் மிகவும் பரிசுத்தமானது. அந்த நாமத்தை உச்சரிப்பதைத் தவிர்ப்பார்கள். ஆகையினால் அவர்கள் யெகோவா என்று கூறுவதற்குப் பதிலாக "ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவன்" என்று கூறுகிறார்கள்.

தீர்க்கதரிசன எண் - 31

"மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள்" (மாற்கு 14:62) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. (மத் 16:27; மத் 19:28; மத் 24:29-31; மத் 25:31-46; 2தெச 1:7-10; வெளி 19:11-21; சக 14:1-5; தானி 7:13)

"மனுஷகுமாரன்" - மாற்கு 14 இடங்களில் "மனுஷகுமாரன்" என்று எழுதியிருக்கிறார். அவற்றில் இது கடைசித் தடவையாகும். (மாற்கு 2:10,28; மாற்கு 8:31,38; மாற்கு 9:9,12,31; மாற்கு 10:33,45; மாற்கு 13:26; மாற்கு 14:21,41,62) (யோவான் 1:51)

"சர்வவல்லவரின் வலது பாரிசம்" - இயேசு கிறிஸ்து மறுபடியும் பூமிக்கு வரும்போது பிதா அவரோடுகூட வருவார் என்பதை இந்த வசனம் தெளிவுபடுத்துகிறது. (சக 14:5; தீத்து 2:13; தானி 7:9-14,22)

"இவன் மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்று தீர்மானம் பண்ணினார்கள்" - சரியாக விசாரணை செய்யாமலேயே ஒரு நிரபராதியைக் குற்றவாளி என்று தீர்மானம் பண்ணினார்கள். மாற்கு 14:64-65 ஆகிய வசனங்களில் அவர்கள் இயேசுவிற்குச் செய்த ஆறு காரியங்களைக் குறித்து நாம் வாசிக்கலாம்.

"சிலர் அவர்மேல் துப்பவும், அவருடைய முகத்தை மூடவும், அவரைக் குட்டவும், ஞானதிருஷ்டியினாலே பார்த்துச் சொல் என்று சொல்லவும் தொடங்கினார்கள்" - இவ்வாறு செய்தவர்கள் மார்க்கத்தலைவர்கள். தங்களைப் பக்திமான்கள் என்று கூறிக்கொள்பவர்கள்.

4. பேதுரு மறுதலிக்கிறான் - (மத் 26:69; லூக் 22:54; யோவான் 18:15,25)

மாற்கு 14:66 அத்தருணத்திலே பேதுரு கீழே அரமனை முற்றத்திலிருக்கையில், பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரிகளில் ஒருத்தி வந்து,

மாற்கு 14:67 குளிர்காய்ந்து கொண்டிருக்கிற பேதுருவைக் கண்டு, அவனை உற்றுப் பார்த்து: நீயும் நசரேயனாகிய இயேசுவோடே இருந்தாய் என்றாள்.

மாற்கு 14:68 அதற்கு அவன்: நான் அறியேன்; நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது என்று மறுதலித்து, வெளியே வாசல்மண்டபத்துக்குப் போனான்; அப்பொழுது சேவல் கூவிற்று.

மாற்கு 14:69 வேலைக்காரி அவனை மறுபடியும் கண்டு: இவன் அவர்களில் ஒருவன் என்று அருகே நின்றவர்களுக்குச் சொன்னாள்.

மாற்கு 14:70 அவன் மறுபடியும் மறுதலித்தான். சற்று நேரத்துக்குப் பின்பு மறுபடியும் அருகே நிற்கிறவர்கள் பேதுருவைப் பார்த்து: மெய்யாகவே நீ அவர்களில் ஒருவன், நீ கலிலேயன், உன் பேச்சு அதற்கு ஒத்திருக்கிறது என்றார்கள்.

மாற்கு 14:71 அதற்கு அவன்: நீங்கள் சொல்லுகிற மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான்.

மாற்கு 14:72 உடனே சேவல் இரண்டாந்தரம் கூவிற்று. சேவல் இரண்டுதரங் கூவுகிறதற்குமுன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று இயேசு தனக்குச் சொன்ன வார்த்தையைப் பேதுரு நினைவுகூர்ந்து, மிகவும் அழுதான்.

14 அதிகாரம்

"நான் அறியேன்; நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது" - இயேசு கிறிஸ்து மாற்கு 14:30 ஆவது வசனத்தில் முன்னறிவித்த காரியம் நிறைவேறுகிறது. மூன்று வெவ்வேறு வேளைகளில் பலர் பேதுருவிடம் விசாரணை செய்கிறார்கள். (மாற்கு 14:67-72; மத் 26:69-75; லூக்கா 22:54-62;யோவான் 18:15-18,25-27) இரண்டு ஸ்திரீகள், ஒரு மனுஷன், அருகில் இருந்தவர்கள் ஆகியோர் பேதுருவிடம் கேள்வி கேட்கிறார்கள். மேலே கூறப்பட்டிருக்கிற வசனங்களில் அவன் நான்கு பொய்கள் கூறியதாக வாசிக்கிறோம்.

சபி (curse) - ἀναθεματίζω - anathematizoo - 332

வினைச்சொல் - சபதம் பண்ணு, சபி **(cursing and swearing)** இது புதிய ஏற்பாட்டில் புதுமையானதல்ல. பேதுரு சில மணிநேரத்திற்கு முன்பாக இயேசுவைத் துதித்தான். ஆனால் இப்போதோ அவரைச் சபிக்கிறான். இவனுடைய வாழ்விலும், பரிசுத்த ஆவியானவர் ஒரு பெரிய மாற்றத்தைக் கட்டளையிட்டார். பெந்தெகொஸ்தே நாளில் அவனுடைய ஜீவியத்தில் ஏற்பட்ட மாற்றத்தை அப் 2 ஆவது அதிகாரத்தில் நாம் வாசித்தறியலாம்.

"சேவல் இரண்டுதரங் கூவுகிறதற்குமுன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய்"

1. முதலாவது மறுதலிப்பு - மாற்கு 14:66 - ஒரு ஸ்திரீ பிரகாரத்தில் அவனிடம் கேள்வி கேட்டபோது பேதுரு மறுதலிக்கிறான்.
2. இரண்டாவது மறுதலிப்பு - மாற்கு 14:68 - அவன் குளிர்காய்ந்து கொண்டிருந்த போது
3. மூன்றாவது மறுதலிப்பு - லூக்கா 22:59-62 - இயேசு பேதுருவைப் பார்த்துக் கொண்டிருந்தபோது.

"மிகவும் அழுதான்" - தான் செய்த தவறுக்கு மனங்கசந்து அழுகிறான். (மத் 26:75; லூக்கா 22:62)

15 அதிகாரம்

5. பிலாத்துவிற்கு முன்பாக இயேசு - (மத் 27:11; லூக் 23:1; யோவான் 18:28)

மாற்கு 15:1 பொழுது விடிந்தவுடனே, பிரதான ஆசாரியரும் மூப்பரும் வேதபாரகரும் ஆலோசனைச் சங்கத்தாரனைவரும்கூடி ஆலோசனை பண்ணி, இயேசுவைக் கட்டிக் கொண்டு போய், பிலாத்துவினிடத்தில் ஒப்புக் கொடுத்தார்கள்.

மாற்கு 15:2 பிலாத்து அவரை நோக்கி: நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான். அதற்கு அவர்: நீர் சொல்லுகிறபடிதான் என்றார்.

மாற்கு 15:3 பிரதான ஆசாரியர்கள் அவர்மேல் அநேகங் குற்றங்களைச் சாட்டினார்கள். அவரோ மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை.

மாற்கு 15:4 அப்பொழுது பிலாத்து மறுபடியும் அவரை நோக்கி: இதோ, இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, அதற்கு நீ உத்தரவு ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்று கேட்டான்.

மாற்கு 15:5 இயேசுவோ அப்பொழுதும் உத்தரவு ஒன்றும் சொல்லவில்லை; அதினால்பிலாத்து ஆச்சரியப்பட்டான்.

மாற்கு 15:6 காவல்பண்ணப் பட்டவர்களில்எவனை விடுதலையாக்க வேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக் கொள்வார்களோ, அவனை அவர்களுக்காக விடுதலையாக்குவது பண்டிகைதோறும் பிலாத்துவுக்கு வழக்கமாயிருந்தது.

"பொழுது விடிந்தவுடனே" - சூரிய உதயத்திற்கு முன்பு. (மாற்கு 1:35; மாற்கு 16:2,9; யோவான் 20:1) நடு இரவிற்கு முன்பாக இயேசு கிறிஸ்துவைப் பிலாத்துவிடம் ஒப்புக்கொடுக்க வேண்டும். பிலாத்து "இதோ உங்கள் இராஜா" (யோவான் 19:14) என்று கூறும்போது ஏறக்குறைய ஆறு மணிநேரமாக இருந்தது.

"ஆலோசனைச் சங்கத்தாரனைவரும்" - பிரதான ஆலோசனைச் சங்கத்தில் எழுபத்திரண்டு மூப்பர்கள் அங்கத்தினராக இருப்பார்கள். ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஆறு பேர் நியமிக்கப்படுவார்கள். சிறிய ஆலோசனைச் சங்கங்களில் மூன்று முதல் இருபத்தி மூன்று அங்கத்தினர்கள் வரையிலும் இருப்பார்கள். இவர்கள் எல்லோரும் கூடி ஆலோசனை பண்ணியது தேவன்மீதும், அவர் அபிஷேகம் பண்ணியவர்மீதும் அவர்களுக்கு இருந்த வெறுப்பைக் காண்பிக்கிறது. (சங் 2; லூக்கா 23:51, அப் 3:17; அப் 5:21)

கொண்டுபோ (carried ... away) - ἀποφέρω - apopheroo - 667

வினைச்சொல் - கொண்டுபோ, பலவந்தமாக இழுத்துச் செல்லுதல்.

"நீ யூதருடைய ராஜாவா" - பிலாத்து இயேசு கிறிஸ்துவிடம் இவ்வாறு கேட்டதற்கு அவர் அவனுக்கு "நீர் சொல்லுகிறபடிதான்" என்று பதில் கூறுகிறார். இயேசு கிறிஸ்துவின் மீது தவறாகக் குற்றம் சாட்டப்பட்டபோது அவர் பதில் ஏதும் கூறாமல் ஏசா 53:7 ஆவது வசனத்தின் நிறைவேற்றமாக அமைதியாக இருந்தார்.

"நீஉத்தரவுஒன்றும் சொல்லுகிறதில்லையா" - பிரதான ஆசாரியர்கள் இயேசுவின்மீது அநேகம் குற்றங்களைச் சாட்டினார்கள். ஆனால் இயேசுவோ மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. பிலாத்துவிற்கு இது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. நீதிமன்றத்தில் இப்படிப்பட்டவழக்குகளைஅவன் விசாரித்ததும் இல்லை,கேள்விப்பட்டதும் இல்லை. சாதாரண குற்றவாளிகூட தன்மீது குற்றங்கள் சுமத்தப்படும்போது தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக எல்லா குற்றங்களையும் மறுப்பான். ஆனால் இயேசு கிறிஸ்துவோ மாறுத்தரம் ஒன்றும் சொல்லாமல் அமைதியாக இருக்கிறார். தம்மீது வழங்கவேண்டிய நியாயத்தீர்ப்பிற்கு வேளை வந்தாயிற்று என்பது அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. ஆகையினால் கால தாமதத்தைத் தவிர்க்க விரும்பினார். ஏற்றவேளையில் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக அவர் தேவனுடைய ஆட்டுக்குட்டியாக மரிக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் சிந்தனையில் பிரதான ஆசாரியர்களின் கேள்விகளை விட பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவேண்டும் என்னும் எண்ணமே நிறைந்திருந்தது.

15 அதிகாரம்

பிலாத்துவும், மதியீனன் அல்ல. பிரதான ஆசாரியர்கள் தவறான குற்றச்சாட்டுக்களை இயேசு கிறிஸ்துவின்மீது கூறுகிறார்கள் என்று அவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அவர்களுடைய பொறாமைக் குணமும் பிலாத்துவிற்கு மறைவாக இல்லை. (மாற்கு 15:10)

"காவல் பண்ணப்பட்டவர்களில் எவனை விடுதலையாக்க வேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக்கொள்வார்களோ, அவனை அவர்களுக்காக விடுதலையாக்குவது பண்டிகை தோறும் பிலாத்துவுக்கு வழக்கமாயிருந்தது" - எருசலேமில் இந்தப் பண்டிகைக் காலத்தில் எல்லா புருஷர்களும் கூடியிருப்பார்கள். அவர்களை மகிழ்விப்பதற்காக ஜனங்கள் கேட்டுக் கொள்ளும் சிறைக்கைதிகள் சிலரை விடுதலை பண்ணுவது அக்காலத்து வழக்கம். (யாத் 23:14-19).

6. இயேசுவிற்கு தண்டனையும் பரபாசிற்கு விடுதலையும் - (மத் 27:15; லூக் 23:13; யோவான் 18:39)

மாற்கு 15:7 கலகம்பண்ணி அந்தக் கலகத்தில் கொலைசெய்து, அதற்காகக் காவல் பண்ணப்பட்டவர்களில் பரபாஸ் என்னப்பட்ட ஒருவன் இருந்தான்.

மாற்கு 15:8 ஜனங்கள், வழக்கத்தின்படியே தங்களுக்கு ஒருவனை விடுதலையாக்க வேண்டுமென்று சத்தமிட்டுக் கேட்டுக் கொள்ளத் தொடங்கினார்கள்.

மாற்கு 15:9 பொறாமையினாலே பிரதான ஆசாரியர்கள் அவரை ஒப்புக் கொடுத்தார்களென்று பிலாத்து அறிந்து,

மாற்கு 15:10 அவர்களை நோக்கி: நான் யூதருடைய ராஜாவை உங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்றிருக்கிறீர்களா என்று கேட்டான்.

மாற்கு 15:11 பரபாசைத் தங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக்கொள்ளும்படி, பிரதான ஆசாரியர்கள் அவர்களை ஏவிவிட்டார்கள்.

மாற்கு 15:12 பிலாத்து மறுபடியும் அவர்களை நோக்கி: அப்படியானால், யூதருடைய ராஜாவென்று நீங்கள் சொல்லுகிறவனை நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான்.

மாற்கு 15:13 அவனைச் சிலுவையில் அறையும் என்று மறுபடியும் சத்தமிட்டுச் சொன்னார்கள்.

மாற்கு 15:14 அதற்குப் பிலாத்து: ஏன், என்ன பொல்லாப்புச் செய்தான் என்றான். அவர்களோ: அவனைச் சிலுவையில் அறையும் என்று பின்னும் அதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார்கள்.

மாற்கு 15:15 அப்பொழுது பிலாத்து ஜனங்களைப் பிரியப்படுத்த மனதுள்ளவனாய், பரபாசை அவர்களுக்கு விடுதலையாக்கி, இயேசுவையோ வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான்.

"பரபாஸ்" (**Barabbas**) - இவனைப் பற்றி வேதாகமம் அதிகமாக எதுவும் கூறவில்லை. மத் 27:20-21; மாற்கு 15:7,15; லூக்கா 23:18-19; யோவான் 18:40; அப் 3:14 ஆகிய வசனங்களில் மட்டுமே இவனைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அவன் ஒரு கலகக்காரன். அவன் ஒரு கொலைகாரன். ஆனாலும் கூடியிருந்த ஜனங்கள் பரபாசை விடுதலை பண்ண வேண்டுமென்று கேட்டார்கள். பரபாஸ் குற்றவாளி. ஆனால் இயேசு கிறிஸ்துவோ ஒரு பாவமும் செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. (1பேதுரு 2:22)

15 அதிகாரம்

"நான் யூதருடைய ராஜாவை உங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்றிருக்கிறீர்களா" - யூதர்கள் இயேசுவைப் பற்றிக் கூறிய முதலாவது குற்றச்சாட்டு. "அவர் தம்மை யூதருடைய ராஜா என்று கூறினார்" என்பதுதான். பிலாத்து இந்தக் குற்றச்சாட்டைக் கேள்விப்பட்ட உடன் கோபமடைந்து, இயேசுவிற்கு உடனே மரண தண்டனை கொடுப்பான் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் பிலாத்துவோ அவர்களுடைய வஞ்சனையையும், சதியையையும் பொறாமையையும் அறிந்தான். ஆகையினால், இப்போது "நான் யூதருடைய ராஜாவை உங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்றிருக்கிறீர்களா" என்று யூதமார்க்கத்தலைவர்களிடம் கேட்கிறான். பிரதான ஆசாரியர்கள் இயேசுவை எப்படியும் கொலைசெய்ய வேண்டும் என்று சதியாலோசனை பண்ணினார்கள். பிலாத்துவின் கேள்வியில் அவர்களுக்குத் திருப்தியில்லை.

ஆகையினால், பிரதான ஆசாரியர் பிலாத்துவிடம் "இவனை விடுதலை பண்ணினால்நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல. தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி என்று சத்தமிட்டார்கள்". பிலாத்து அவர்களுக்கு இணங்கி, இயேசுவைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக் கொடுத்தான். (யோவான் 19:12-15)

ஏவி விடு (moved) - ἀνασείω - anaseioo - 383

வினைச்சொல் - ஏவி விடு, கலகப்படுத்து

(up) - ἀνά - ana - 303

முன்னிடைச் சொல் - மறுபடியும் வலியுறுத்தல், ஒவ்வொன்றாக போன்ற பொருளைத் தரும். முன்னொட்டாகவோ அல்லது பின்னொட்டாகவோ பயன்படுத்தப்படும். வழியாய், எல்லாரும், இல், உள்ள, தனித்தனியே, ஒவ்வொன்று

அசைக்கப்படு (moved) - σείω - seioo - 4579

வினைச்சொல் - அதிர், திடுக்கிடு, அசையப்பண்ணு, அசைக்கப்படு **(to stir up vehemently, rock, quake)**

"அவனைச் சிலுவையில் அறையும்" - தேவதூஷணம் சொன்னதற்காக யூதர்கள் பொதுவாகக் கொடுக்கும் தண்டனை கல்லெறிவதுதான். தேசத்துரோகம் பண்ணியதற்கு ரோமர்கள் கொடுக்கும் தண்டனை சிலுவையில் அறைவது.

"ஏன், என்ன பொல்லாப்புச் செய்தான்" - பிலாத்து இயேசுவிடம் ஒரு குற்றமும் காணவில்லை. ஆகையினால் இயேசுவை எப்படியும் விடுதலை செய்யவேண்டுமென்று விரும்பினான். ஆனால் யூதர்களோ "அவனைச் சிலுவையில் அறையும் என்று பின்னும் அதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார்கள்".

பிலாத்துவின் மூன்று கோரிக்கைகள்

1. ஆலோசனைச் சங்கத்தாரிடம் (மத் 27:17-24)
2. ஜனங்களிடம் (மாற்கு 15:8-14)
3. ஆசாரியர்களிடம் (லூக்கா 23:13-23)

"பிலாத்து ஜனங்களைப் பிரியப்படுத்த மனதுள்ளவனானான்" - பலவீனமான அரசாங்கம் நீதியின்படி தீர்ப்பு செய்வதற்குப் பதிலாக ஜனங்களைப் பிரியப்படுத்தும். ஜனங்களைப் பிரியப்படுத்தும்போது நீதி மரித்துப்போகும். (யாத் 32:1 = 26-27; அப் 12:3 = 23)

"இயேசுவையோ வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக் கொடுத்தான்" - (மத் 27:26)

7. இயேசுவின் சிரசின்மீது முள்முடி - (மத் 27:27; யோவான் 19:1)

மாற்கு 15:16 அப்பொழுது போர்ச்சேவகர் அவனரத் தேசாதிபதியின் அரமனையாகிய மாளிகையில் கொண்டுபோய், அவ்விடத்தில் போர்ச்சேவகருடைய கூட்டமுழுவதையும் கூடிவரச்செய்து,

மாற்கு - தொகுப்புரை

15 அதிகாரம்

மாற்கு 15:17 சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்முடியைப் பின்னி அவருக்குச் சூட்டி:

மாற்கு 15:18 யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரை வாழ்த்தி,

மாற்கு 15:19 அவரைச் சிரசில் கோலால் அடித்து, அவர்மேல் துப்பி, முழங்கால் படியிட்டு அவரை வணங்கினார்கள்.

மாற்கு 15:20 அவரைப் பரியாசம் பண்ணினபின்பு,சிவப்பான அங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி வெளியே கொண்டுபோனார்கள்.

மாற்கு 15:21 சிரேனே ஊரானும், அலெக்சந்தருக்கும் ரூப்புக்கும் தகப்பனுமாகிய சீமோன் என்னப்பட்ட ஒருவன் நாட்டிலிருந்து அவ்வழியே வருகையில்,அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பலவந்தம் பண்ணினார்கள்.

"தேசாதிபதியின் அரமனையாகிய மாளிகை"(Praetorium) - ரோமப்பேரரசின் நீதிபதிகள் பிரேட்டர் praetor என்று அழைக்கப்பட்டார்கள். அவர்களுடைய நீதிவழங்கும் மாளிகை, தேசாதிபதியின் மாளிகை என்று அழைக்கப்பட்டது.

கூட்டம் (band) - σπεῖρα - speira - 4686

பெண்பால் பெயர்ச்சொல் - கூட்டம், பட்டாளம் - அறுநூறு பேர்கொண்ட ரோமப்பேரரசின் பட்டாளம்.

போர்ச்சேவகர்கள் இயேசுவைப் பரியாசம் பண்ணிய விதம்

1. அவர் வஸ்திரங்களைக் கழற்றினார்கள். (மத் 27:28)
2. சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தினார்கள்.யூதருடைய ராஜாவே வாழ்க என்று வாழ்த்தினார்கள். (மாற்கு 15:17)
3. முள்முடியைப் பின்னி, அவருக்குச் சூட்டினார்கள். (மாற்கு 15:17) ராஜாக்களுக்கும் ஜெயம் பெற்றவர்களுக்கும் முடிசூட்டுவது வழக்கம். இயேசு கிறிஸ்து ராஜாதிராஜா. சாத்தானை ஜெயிப்பதற்காக இந்த உலகத்திற்கு இயேசு வந்தார். இயேசு கிறிஸ்து தாம் அனுபவிக்கும் பாடுகள் மூலமாக மிகப்பெரிய வெற்றியை அடையப்போகிறார் என்பது அந்தப் போர்ச் சேவகர்களுக்குத் தெரியவில்லை. (கொலோ 1:20-23; கொலோ 2:14-17; 1பேதுரு 2:24)
4. யூதருடைய ராஜாவே வாழ்க என்று அவரை வாழ்த்தி, வணங்கினார்கள். எல்லா முழங்கால்களும் ஒரு நாளில் இயேசுவிற்கு முன்பாக முடங்கும் என்பது அவர்களுக்குத் தெரியாது. (மாற்கு 15:18-19; பிலி 2:9-11)
5. அவருடைய சிரசில் கோலால் அடித்தார்கள். அந்தக்கோல் அவர் ஒரு ராஜா என்பதை வெளிப்படுத்தும் அடையாளம். (மாற்கு 15:19)
6. அவர்மேல் துப்பினார்கள். யூதருடைய ராஜாவை இதைவிட அவமானப்படுத்த முடியாது. (மாற்கு 15:19)
7. அவருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு வணங்கினார்கள். (மாற்கு 15:19)
8. அவருக்கு அணிவித்த சிவப்பான அங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தினார்கள். (மாற்கு 15:20)
9. அவரைச் சிலுவையில் அறையும்படி வெளியே கொண்டுபோனார்கள். (மாற்கு 15:20)

"அவர்மேல் துப்பினார்கள்" - இயேசுவைச் சுற்றிலும் போர்ச்சேவகருடைய கூட்டம் முழுவதுமாக நிற்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கை அறுநூறுபேர். அறுநூறு பேரும் இயேசுவின்மீது சிறிது நேரம் துப்பிக்கொண்டே இருந்தால் இயேசுவின் நிலைமை எப்படி இருக்கும் என்பதைக் கற்பனை பண்ணுவதற்கே கடினமாக இருக்கிறது.

15 அதிகாரம்

"அவரைச் சிலுவையில் அறைந்தபோது மூன்றாம்மணி வேளையாயிருந்தது" - மூன்றாம் மணி வேளை என்பது காலை ஒன்பது மணியைக் குறிக்கும். அந்த வேளையில் இயேசுவைச் சிலுவையில் அறைந்தார்கள். ஆறு மணிநேரம் அவர் சிலுவையில் தொங்கினார். மாலை மூன்று மணிக்கு பஸ்கா ஆட்டுக்குட்டிகளை அடிப்பார்கள். அந்த வேளையில் தானே இயேசு கிறிஸ்து தமது ஜீவனை ஒப்புக் கொடுக்கிறார். (மத் 27:45-50; லூக்கா 23:44-46)

"யூதருடைய ராஜா" - இயேசுவைச் சிலுவையில் அறைந்தார்கள். அந்தச் சிலுவையின்மீது என்ன எழுதப்பட்டிருந்தது என்பதில் வேதபண்டிதர்களுக்குள்ளே கருத்து வேறுபாடு உள்ளது. நான்கு சுவிசேஷங்களிலும் வெவ்வேறு விதமான வார்த்தைகளை நாம் வாசிக்கிறோம்.

1. மத் 27:37 - இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு
2. மாற்கு 15:26 - யூதருடைய ராஜா
3. லூக்கா 23:38 - இவன் யூதருடைய ராஜா
4. யோவான் 19:19 - நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா

இந்த எழுத்துக்கள் கிரேக்கு, லத்தீன், எபிரெயு ஆகிய பாஷைகளின் எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது.

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 9

"அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப் பட்டார்" (மாற்கு 15:28; ஏசா 53:12). இந்த வாக்கியத்தைக் குறித்து வேதபண்டிதர்கள் பலவிதமாக கருத்து கூறுகிறார்கள். பழைய ஏற்பாட்டு மூலபாஷைச்சுவடிகள் சிலவற்றில் இந்த வாக்கியம் காணப்படவில்லை என்பது சிலருடைய கருத்து. ஆகையினால் வேதபாரகர் இந்த வாக்கியத்தைத் தவறுதலாகச் சேர்த்திருக்க வேண்டும் என்று இவர்கள் விவாதிக்கிறார்கள்.

"அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி: ஆ! ஆ! தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே இரட்சித்துக் கொள்; சிலுவையிலிருந்திறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள்" - இயேசுவின் சத்துருக்கள் அவரைச் சிலுவையில் அறைந்துவிட்டார்கள். ஆனாலும் இயேசுவின்மீது அவர்களுடைய கோபம் இன்னும் தணியவில்லை. சிலுவையில் மரித்துக் கொண்டிருக்கும் இயேசுவைப் பரியாசம் பண்ணுகிறார்கள். (யோவான் 2:19-21)

"மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை" - பிரதான ஆசாரியரும், வேதபாரகரும் மிகவும் முக்கியமான சத்தியத்தைப் புரிந்து கொள்ளவில்லை. இயேசு கிறிஸ்து தம்மை இரட்சித்து இருந்தால், அவரால் மற்றவர்களை இரட்சிக்க முடியாது. இயேசு கிறிஸ்து சிலுவையில் தமது திருரத்தத்தைச் சிந்தி மரித்ததினாலே நமக்கு இரட்சிப்பு உண்டாயிற்று.

"நாம் கண்டு விசுவாசிக்கத்தக்கதாக இஸ்ரவேலுக்கு ராஜாவாகிய கிறிஸ்து இப்பொழுது சிலுவையிலிருந்திறங்கட்டும்" - பரியாசக்காரர்கள் வீண்வார்த்தைகளைப் பேசுகிறார்கள். இயேசு கிறிஸ்து கல்லறையிலிருந்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். ஆனால் இவர்கள் இயேசுவை விசுவாசிக்கவில்லை. (அப் 1:3; அப் 4:1-22; அப் 5:17-39; அப் 7:51-60) மனுஷரை இரட்சிப்பதற்கு கல்வாரியும், இயேசுவின் உயிர்த்தெழுதலும் தேவை. (ரோமர் 4:25)

"இஸ்ரவேலுக்கு ராஜா" - மாற்கு 15:2 ஆவது வசனத்தில் இயேசு கிறிஸ்து தம்மைப் பற்றிக் கூறிய வாக்கியத்தை இப்போது அவருடைய சத்துருக்கள் அவரைப் பரியாசப் பண்ணுவதற்காக பயன்படுத்துகிறார்கள்.

"அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்டவர்களும் அவரை நிந்தித்தார்கள்" - இயேசு கிறிஸ்துவோடு இரண்டு கள்ளர்கள் சிலுவையில் அறையப்பட்டார்கள். ஒருசிலர் இரண்டுக்கு மேற்பட்டவர்கள்கூட சிலுவையில் அறையப்பட்டிருக்கலாம் என்று கூறுகிறார்கள். (மத் 27:38; மாற்கு 15:27)

15 அதிகாரம்

9. **இயேசுவின் மரணம்** - (மத் 27:45; லூக் 23:44; யோவான் 19:28)

மாற்கு 15:33 ஆறாம்மணி நேரமுதல் ஒன்பதாம் மணிநேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று.

மாற்கு 15:34 ஒன்பதாம்மணி நேரத்திலே, இயேசு: எலோயீ! எலோயீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு: என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.

மாற்கு 15:35 அங்கே நின்றவர்களில் சிலர் அதைக் கேட்டபொழுது: இதோ, எலியாவைக் கூப்பிடுகிறான் என்றார்கள்.

மாற்கு 15:36 ஒருவன் ஓடி, கடற்காளானைக் காடியிலே தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்கக்கொடுத்து: பொறுங்கள், எலியா இவனை இறக்க வருவானோ பார்ப்போம் என்றான்.

மாற்கு 15:37 இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஜீவனை விட்டார்.

மாற்கு 15:38 அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது.

மாற்கு 15:39 அவருக்கு எதிரே நின்ற நூற்றுக்கு அதிபதி அவர் இப்படிக் கூப்பிட்டு ஜீவனை விட்டதைக் கண்டபோது: மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன் என்றான்.

மாற்கு 15:40 சில ஸ்திரீகளும் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர் கலிலேயாவிலிருந்தபோது அவருக்குப் பின்சென்று ஊழியஞ் செய்துவந்த மகதலேனா மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும்,

மாற்கு 15:41 அவருடனேகூட எருசலேமுக்கு வந்திருந்த வேறே அநேக ஸ்திரீகளும் அவர்களோடே இருந்தார்கள்.

"ஆறாம்மணி நேரமுதல் ஒன்பதாம் மணிநேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று" -ஆறாம்மணி என்பது மதியம் பன்னிரெண்டு மணியைக் குறிக்கும். ஒன்பதாம் மணி என்பது மாலை மூன்று மணியைக் குறிக்கும்.

"ஒன்பதாம்மணி நேரத்திலே" - இது மாலை மூன்று மணியாகும். இந்த வேளையில் தேவாலயத்தில் பஸ்கா ஆடுகளும், மற்ற பலிகளும் செலுத்தப்படும். கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்து சுமார் ஆறுமணி நேரம் தொங்கிப் பாடுகளை அனுபவித்தபின்பு, மாலை மூன்றுமணி அளவில் அவர் தமது ஜீவனை ஒப்புக்கொடுக்கிறார்.

"இயேசு: எலோயீ! எலோயீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு: என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்" - இயேசு கிறிஸ்து பேசியது எந்த மொழி என்பதை விளக்குவதில் பல கருத்துக்கள் உள்ளன. அவர் எபிரெயம் பேசியதாகவும், சீரிய மொழி பேசியதாகவும், அரமாயிக் மொழி பேசியதாகவும், வெவ்வேறு விதமாகக் கூறுகிறார்கள். அவர் என்ன மொழியைப் பேசினாலும் சிலுவைக்கு அருகாமையில் இருந்த யாரும் அவர் பேசியதைப் புரிந்து கொள்ளவில்லை. இந்த மொழிகள் எல்லாவற்றையும் தெரிந்திருந்தவர்கள் அங்கு இருந்ததாகவும் கூறமுடியாது.

15 அதிகாரம்

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 10

"என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" (மாற்கு 15:34; சங் 22:1) இயேசு கிறிஸ்து அனுபவித்த பாடுகளில் இதுவே மிகவும் கடினமான பகுதி. இயேசு கிறிஸ்து பிதாவோடு நித்திய காலமாக இருக்கிறவர். ஒரு கணப்பொழுது கூட அவர் பிதாவை விட்டுப் பிரியவில்லை. அந்த வேளையில் பிதாவிடமிருந்து பிரிந்திருப்பது இயேசுவிற்கு மிகவும் கடினமாக இருந்தது. பிதா தம்மைக் கைவிட்டது அவருக்கு மிகுந்த பாரத்தைக் கொடுத்தது. இயேசு கிறிஸ்து பிதாவின் ஒரேபேறான குமாரன். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்பது தேவனுடைய பிரமாணம். இதன் பிரகாரமாக இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிக்க வேண்டியது தேவனுடைய சித்தமாகவே இருந்தது. இயேசு இவ்வாறு சத்தமிட்டுக் கூறியது பாவத்தின் பயங்கரத்தை வலியுறுத்துகிறது. ஒருவன் தேவனோடு ஐக்கியமாக இருக்க வேண்டுமென்றால் அவன் தன்னுடைய பாவங்களை விட்டு விட்டு, இயேசுவிடம் வரவேண்டும். (1யோவான் 1:7; எபி 12:14; தீத்து 2:11-14)

"எலியா" (Elias, Elijah) (1இராஜா 17; மல் 4:5-6).

மாற்கு சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 11

"கடற்காளானைக் காடியிலே தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்கக்கொடுத்தான்" (மாற்கு 15:36; சங் 69:21; மத் 27:34,48; லூக்கா 23:36; யோவான் 19:29-30)

"இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டார்" - இயேசு என்ன சொன்னார் என்று இங்கு குறிப்பிடப்படவில்லை. "முடிந்தது" என்று அவர் கூறியிருக்கலாம். (யோவான் 19:30) இயேசு கிறிஸ்து கூறியதை நூற்றுக்கதிபதி கண்டபோது அவன் இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவத்தை அங்கீகரிக்கிறான். (மாற்கு 15:39)

"ஜீவனை விட்டார்" - தமது சொந்த ஆவியை விட்டார். அவருடைய ஆத்துமாவும், ஆவியும் அவருடைய சரீரத்தை விட்டுப் பிரிகிறது. (யாக் 2:26; மாற்கு 14:38)

"தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது" - பரலோகத்தில் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குச் செல்லும் பாதை இயேசு கிறிஸ்துவின் திருரத்தத்தின் மூலமாக எல்லா மனுஷருக்கும் திறக்கப்பட்டிருக்கிறது. (எபி 9:8; எபி 10:19-20). ஆசாரியரின் துணையில்லாமல் எல்லா மனுஷரும் தேவனைக் கண்டடைந்து, அவரைக் கிட்டிச்சேர முடியும். (அப் 2:21; 1யோவான்1:9; ரோமர் 10:9-10; எபே 2:17-18)

"நூற்றுக்கு அதிபதி" - நூறு போர்ச்சேவகர்களுக்குத் தலைவன். இவன் இயேசுவைத் தேவகுமாரன் என்று அங்கீகரித்தான்.

"சில ஸ்திரீகளும் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்"- யோவான் 19:25இல் இந்த ஸ்திரீகள் சிலுவையின் அருகே நின்று கொண்டிருந்தார்கள் என்று வாசிக்கிறோம். ஆனால் இந்த வசனத்தில் இவர்கள் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்விரண்டுமே சத்தியமான வசனங்கள். இயேசு கிறிஸ்து சிலுவையில் ஆறுமணி நேரமாகத் தொங்கிக் கொண்டிருந்தார். அந்த வேளையில் இவர்கள் சிலுவைக்கு அருகிலும், தூரத்திலும்இருந்திருக்கலாம். (மாற்கு 15:47)

"மகதலேனா மரியாள்" கப்பர்நகூம் பட்டணத்திற்கு அருகில் மகதலா ஊர் உள்ளது. இவள் அந்த ஊரைச்சேர்ந்தவள். இயேசு கிறிஸ்து இவளிடமிருந்த ஏழு பிசாசுகளை ஏற்கெனவே துரத்தியிருந்தார். (மாற்கு 16:9; லூக்கா 8:2)

"சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும்" -இயேசுவின் தாயாகிய மரியாளின் சகோதரி, கிலேயோப்பாவின் (Cleopas) மனைவி. (லூக்கா 24:10)

"சின்ன யாக்கோபு" - இந்தப்பேரில் வரும் "சின்ன" என்னும் சொல் "மைக்ரோஸ்" (mikros) என்னும் கிரேக்கச்சொல்லின் தமிழாக்கமாகும்.

மாற்கு - தொகுப்புரை

15 அதிகாரம்

சின்ன (less) - μικρός - mikros - 3398

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - சின்ன, கொஞ்சம்

சின்ன யாக்கோபு உருவத்தில் சிறியவன். இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபும், சின்ன யாக்கோபும் வெவ்வேறானவர்கள். (மத் 13:55) இந்த மரியாளுக்கு இரண்டு குமாரர்களும், ஒரு குமாரத்தியும் இருந்தார்கள். ஆனால் இயேசுவின் தாயாகிய மரியாளுக்கோ நான்கு குமாரர்களும், சில குமாரத்திகளும் இருந்தார்கள். (மத் 13:55-56; மாற்கு 6:3)

10. இயேசுவின் சரீரத்தை அடக்கம் பண்ணுகிறார்கள் - (மத் 27:57; லூக் 23:50; யோவான் 19:38)

மாற்கு 15:42 ஒய்வுநாளுக்கு முந்தினநாள் ஆயத்த நாளாயிருந்த படியால், சாயங்காலமானபோது,

மாற்கு 15:43 கனம்பொருந்திய ஆலோசனைக்காரனும் அரிமத்தியா ஊரானும் தேவனுடைய ராஜ்யம் வரக் காத்திருந்தவனுமாகிய யோசேப்பு என்பவன் வந்து, பிலாத்துவினிடத்தில் துணிந்துபோய்; இயேசுவின் சரீரத்தைக் கேட்டான்.

மாற்கு 15:44 அவர் இத்தனை சீக்கிரத்தில் மரித்துப்போனாரா என்று பிலாத்து ஆச்சரியப்பட்டு, நூற்றுக்கு அதிபதியை அழைப்பித்து; அவர் இதற்குள்ளே மரித்தது நிச்சயமா என்று கேட்டான்.

மாற்கு 15:45 நூற்றுக்கு அதிபதியினாலே அதை அறிந்துகொண்டபின்பு, சரீரத்தை யோசேப்பினிடத்தில் கொடுத்தான்.

மாற்கு 15:46 அவன் போய், மெல்லிய துப்பட்டியை வாங்கிக்கொண்டுவந்து, அவரை இறக்கி, அந்தத் துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டியிருந்த கல்லறையிலே அவரை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு கல்லைப் புரட்டிவைத்தான்.

மாற்கு 15:47 அவரை வைத்த இடத்தை மகதலேனா மரியாளும் யோசேயின் தாயாகிய மரியாளும் பார்த்தார்கள்.

"ஒய்வுநாளுக்கு முந்தினநாள்" - பஸ்காவிற்காக ஆட்டுக்குட்டிகள் பலியிடப்படும் நாள். பிரதான ஒய்வுநாள் பண்டிகைக்கு முந்திய நாள். இந்த ஒய்வுநாளும், வாரத்தின் ஒய்வுநாளும் வெவ்வேறு நாட்களாகும். (லேவி 23:6-7)

"கனம்பொருந்திய ஆலோசனைக்காரனும் அரிமத்தியா ஊரானும் தேவனுடைய ராஜ்யம் வரக் காத்திருந்தவனுமாகிய யோசேப்பு என்பவன்" - பிரதான ஆலோசனைச் சங்கத்தில் ஒரு அங்கத்தினர். இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைவதற்கு இவன் சம்மதிக்கவில்லை. (மாற்கு 15:1, லூக்கா 23:51)

"பிலாத்துவினிடத்தில் துணிந்துபோனான்" - இயேசுவின் சரீரத்தைக் கேட்பதினால் ஏற்படக்கூடிய எல்லா பின்விளைவுகளையும் சிந்தித்துப்பார்த்துத் துணிச்சலோடு பிலாத்துவிடம் பேசுகிறான்.

"இயேசுவின் சரீரத்தைக் கேட்டான்" - இயேசுவின் சரீரத்தை இவன் கேட்காவிட்டால் அவரை மற்ற துன்மார்க்கரோடே அடக்கம் பண்ணி விடுவார்கள். அவ்வாறு அடக்கம் பண்ணினால் ஏசா 53:9 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிற காரியம் நிறைவேறாது. "துன்மார்க்கரோடே அவனுடைய பிரேதக் குழியை நியமித்தார்கள். ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்". இந்தத் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இந்தக் காரியமெல்லாம் நடைபெற்றது.

15 அதிகாரம்

"சரீரத்தை யோசேப்பினிடத்தில் கொடுத்தான்" இந்த வசனத்தில் "கொடு" என்னும் சொல்லின் கிரேக்கச்சொல் "துரேமை" (doreomai) என்பதாகும். இதற்கு "வெகுமதியாக கொடுத்தல்" என்பது பொருள். இந்தக் கிரேக்கச்சொல் இந்த வசனத்திலும் 2பேதுரு 1:3-4 ஆகிய வசனத்திலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

தம்முடைய தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதற்கும் தம்முடைய சித்தத்தைச் செய்வதற்கும் தேவன் அதற்குரிய நபர்களை ஏற்கெனவே தெரிந்து கொண்டு அவர்களைப் பயன்படுத்தி வருகிறார்.

கொடு (gave) - δωρέομαι - dooreomai - 1433

வினைச்சொல் - கொடு, தந்தருள்

மெல்லிய துப்பட்டி (fine linen) - σινδών - sindoon - 4616

பெண்பால் பெயர்ச்சொல் - மெல்லிய துப்பட்டி (grave clothes) (மாற்கு 14:51)

16 அதிகாரம்

V. உயிர்த்தெழுந்த பின்பு இயேசுவின் ஊழியம் - (யோவான் 19:38)

1.உயிர்த்தெழுதலுக்கு கர்த்தருடைய தூதனின் சாட்சி - (மத் 28:1; லூக் 24:4; அப் 1:11)

மாற்கு 16:1 ஓய்வுநாளானபின்பு மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும், அவருக்குச் சுகந்த வர்க்கமிடும்படி அவைகளை வாங்கிக் கொண்டு,

மாற்கு 16:2 வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே சூரியன் உதயமாகிற போது கல்லறையினிடத்தில் வந்து,

மாற்கு 16:3 கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித்தள்ளுவான் என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்.

மாற்கு 16:4 அந்தக் கல் மிகவும் பெரிதாயிருந்தது; அவர்கள் ஏறிட்டுப்பார்க்கிறபோது, அது தள்ளப்பட்டிருக்கக் கண்டார்கள்.

மாற்கு 16:5 அவர்கள் கல்லறைக்குள் பிரவேசித்து, வெள்ளையங்கி தரித்தவனாய் வலது பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு வாலிபனைக் கண்டு பயந்தார்கள்.

மாற்கு 16:6 அவன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள், சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த்தெழுந்தார்; அவர் இங்கேயில்லை; இதோ, அவரை வைத்த இடம்.

மாற்கு 16:7 நீங்கள் அவருடைய சீஷரிடத்திற்கும் பேதுருவினிடத்திற்கும் போய்: உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார், அவர் உங்களுக்குச் சொன்னபடியே அங்கே அவரைக் காண்பீர்கள் என்று, அவர்களுக்குச் சொல்லுங்கள் என்றான்.

"ஓய்வுநாள்" - வாரத்தின் ஓய்வுநாள். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட பின்பு, நான்காம் நாள். பிரதான ஓய்வுநாளுக்குப் பின்பு, மூன்றாம்நாள். புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் முதலாம் நாள். (லேவி 23:6-7) இயேசு கிறிஸ்துவை அடக்கம் பண்ணி மூன்று பகலும், மூன்று இரவும் ஆயிற்று. (மத் 12:40) சூரிய அஸ்தமனத்திலிருந்து சூரிய அஸ்தமனம் வரையிலும் நாட்கள் கணக்கிடப்பட்டன. (லேவி 23:32)

"மரியாள்" - யாக்கோபு, யோவான் ஆகியோரின் தாய். (மத் 27:56 = மாற்கு 15:40) செபெதேயுவின் மனைவி (மத் 4:21; மத் 20:20; மத் 27:56; மாற்கு 1:20).

"வாரத்தின் முதலாம்நாள்" - ஞாயிற்றுக் கிழமை. சனிக்கிழமை அல்ல. ஏனெனில் ஓய்வுநாள் ஏற்கெனவே ஆயிற்று. (மத் 28:1) ஓய்வுநாள் முடிந்து, பன்னிரெண்டு மணிநேரங்கள் அல்லது ஒரு இரவு ஆயிற்று. மூன்று நாட்களுக்குப் பின்பு இயேசு உயிர்த்தெழுந்தார். (மாற்கு 8:31; மத் 12:40)

"கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித்தள்ளுவான்" - அவர்களுக்குக் கல்லறையைக் காவல் வைத்ததும், முத்திரையிட்டதும் தெரியாதது போன்று இருக்கிறது. ஏனெனில் முத்திரையிட்ட கல்லறையைப் புரட்டித்தள்ளுவது சட்டப்படி குற்றம்.

"வெள்ளையங்கி தரித்தவனாய் வலது பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு வாலிபன்" - மூன்று தூதர்களில் ஒருவன். (யோவான் 20:12)

அங்கி (garment) - στολή - stolee - 4749

பெண்பால் பெயர்ச்சொல் - நீண்ட அங்கி, வஸ்திரம், அங்கி (வெளி 1:13)

16 அதிகாரம்

"பயந்தார்கள்" - மாற்கு 14:33-இல் "திகிலடைதல்" என்னும் பொருளுடையது. அவர்கள் இதை எதிர்பார்க்கவில்லை. இயேசுவின் மரித்துப் போன சரீரத்தையே தேடிவந்தார்கள்.

"அவர் உயிர்த்தெழுந்தார்" - முக்கியமான சுவிசேஷ செய்தி. இயேசு உயிர்த்தெழவில்லை. என்றால் ஒருவருக்கும் இரட்சிப்பு இல்லை. (1கொரி 15; ரோமர் 4:25)

"பேதுரு" - பேதுரு தன்னைச் சீஷன் என்று அழைக்கப்படுவதற்கே தயங்கியிருப்பான். தனக்குத் தகுதியில்லை என்று நினைத்திருப்பான். மற்றவர்கள் செய்யாத தவறைப் பேதுரு செய்து விட்டான். இயேசுவைத் தீர்மானமாக மறுதலித்து, அவரைச் சபித்தான். (மத் 26:70-74) அவன் தவறு செய்தபோதிலும், தன் தவறிற்காக அவன் மனம்கசந்து அழுதான். கர்த்தர் அவனை மன்னித்துவிட்டார். இதை விசேஷமாக பேதுருவிற்கு அறிவிப்பதற்காகவே தூதன் அவர்களை நோக்கி, "நீங்கள் பேதுருவினிடத்திற்குப் போய்............ சொல்லுங்கள்" என்று கூறுகிறான். கர்த்தர் அவனுக்கு "சகோதரரைத் திடப்படுத்தும்" ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார். (லூக்கா 22:31-32)

"அவர் உங்களுக்குச் சொன்னபடியே" - மாற்கு 14:28 ஆவது வசனத்தின் நிறைவேற்றம்.

2. உயிர்த்தெழுதலுக்கு ஸ்திரீகளின் சாட்சி - (மத் 28:8; லூக் 24:9; யோவான் 20:11)

மாற்கு 16:8 நடுக்கமும் திகிலும் அவர்களைப்பிடித்தபடியால், அவர்கள் சீக்கிரமாய் வெளியே வந்து, கல்லறையை விட்டு ஓடினார்கள்; அவர்கள் பயந்திருந்தபடியினால் ஒருவருக்கும் ஒன்றும் சொல்லாமற் போனார்கள்.

மாற்கு 16:9 வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்த பின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல்முதல் தரிசனமானார்.

மாற்கு 16:10 அவளிடத்திலிருந்து அவர் ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார். அவள் புறப்பட்டு, அவரோடேகூட இருந்தவர்கள் துக்கப்பட்டு அழுது கொண்டிருக்கையில், அவர்களிடத்தில் போய், அந்தச் செய்தியை அறிவித்தாள்.

மாற்கு 16:11 அவர் உயிரோடிருக்கிறாரென்றும் அவளுக்குக் காணப்பட்டார் என்றும் அவர்கள் கேட்டபொழுது நம்பவில்லை.

கல்லறைக்குப் போன ஸ்திரீகளுடைய கிரியைகள்

1. அவர்கள் சீக்கிரமாய் வெளியே வந்தார்கள்.
2. கல்லறையை விட்டு ஓடினார்கள்
3. நடுக்கமும் திகிலும் அவர்களைப் பிடித்தது.
4. அவர்கள் பயந்திருந்தார்கள்
5. ஒருவருக்கும் ஒன்றும் சொல்லாமற் போனார்கள்

"வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே" - இயேசு கிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்டபோது, அவர் பாதாளத்தில் தமது ஊழியத்தை நிறைவேற்றினார். (சங் 16:10; எபே 4:8-10; 1பேதுரு 3:19) நியமிக்கப்பட்ட காலம் வரையில் மட்டுமே பிதா இயேசு கிறிஸ்துவை மரித்தவராக இருக்க அனுமதித்தார். தீர்க்கதரிசனத்தின் பிரகாரம் மூன்று இரவுகள், மூன்று பகல்களுக்குப் பின்பு இயேசு உயிர்த்தெழுந்தார். (மத் 12:40)

"மகதலேனா மரியாளுக்கு முதல்முதல் தரிசனமானார்" - தேவதூதனுடைய செய்திக்குப் பின்பு மரியாள் திரும்பவும் கல்லறைக்குச் சென்றாள். (யோவான் 20:1-18).

16 அதிகாரம்

"சிரேனே ஊரானும், அலெக்சந்தருக்கும் ரூப்புக்கும் தகப்பனுமாகிய சீமோன் என்னப்பட்ட ஒருவன் நாட்டிலிருந்து அவ்வழியே வந்தான்" - விசுவாசிகள் மத்தியில் இவர்கள் பிரபலியமானவர்களாக இருந்திருப்பார்கள். அப் 19:33; ரோமர் 16:13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறவர்கள் அலெக்சந்தரும் ரூப்புமாக இருக்கலாம். வடக்கு ஆப்பிரிக்காவில் உள்ள லிபியா மாகாணத்தின் தலைநகரம் சிரேனே பட்டணம். மத்தியதரைக் கடலின் தென்பகுதியில் 11 மைல் தொலைவில் இந்த ஊர் உள்ளது.

8. **இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்** - (மத் 27:33; லூக் 23:32; யோவான் 19:16)

மாற்கு 15:22 கபாலஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்துக்கு அவரைக் கொண்டுபோய்,

மாற்கு 15:23 வெள்ளைப்போளம் கலந்த திராட்சரசத்தை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்; அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

மாற்கு 15:24 அப்பொழுது அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். அதன்பின்பு அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டு, ஒவ்வொருவன் ஒவ்வொரு பங்கை எடுத்துக்கொள்ளும்படி அவைகளைக் குறித்துச் சீட்டுப்போட்டார்கள்.

மாற்கு 15:25 அவரைச் சிலுவையில் அறைந்தபோது மூன்றாம்மணி வேளையாயிருந்தது.

மாற்கு 15:26 அவர் அடைந்த ஆக்கினையில் முகாந்தரத்தைக் காண்பிக்கும்பொருட்டு, யூதருடைய ராஜா என்று எழுதி, சிலுவையின்மேல் கட்டினார்கள்.

மாற்கு 15:27 அல்லாமலும், அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும்,அவருடையஇடது பக்கத்தில் ஒருவனுமாக, இரண்டு கள்ளரை அவரோடேகூடச் சிலுவைகளில் அறைந்தார்கள்.

மாற்கு 15:28 அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார் என்கிற வேதவாக்கியம் அதனாலே நிறைவேறிற்று.

மாற்கு 15:29 அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி: ஆ! ஆ! தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே,

மாற்கு 15:30 உன்னை நீயே இரட்சித்துக்கொள்; சிலுவையிலிருந் திறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள்.

மாற்கு 15:31 அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் தங்களுக்குள்ளே பரியாசம் பண்ணி: மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத் தான் இரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை.

மாற்கு 15:32 நாம் கண்டு விசுவாசிக்கத்தக்கதாக இஸ்ரவேலுக்கு ராஜாவாகிய கிறிஸ்து இப்பொழுது சிலுவையிலிருந் திறங்கட்டும் என்று சொல்லிக் கொண்டார்கள். அவரோடே கூடச் சிலுவைகளில் அறையப்பட்ட வர்களும் அவரை நிந்தித்தார்கள்.

"கொல்கொதா" - (மத் 27:33)

"வெள்ளைப்போளம் கலந்த திராட்சரசத்தை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்" - இயேசு கிறிஸ்துவிற்கு மூன்று முறை குடிக்கக் கொடுக்கிறார்கள்.

1. கொல்கொதாவிற்கு அவரைக் கொண்டவந்த போது. (மத் 27:33-34, மாற்கு 15:22-23)
2. இயேசு சிலுவையின்மீது தொங்கிய போது, குற்றவாளி தன்மீது இரக்கமாகஇருக்குமாறு விண்ணப்பம் செய்ததற்கு முன்பு. (லூக்கா 23:36)
3. தமது ஜீவியத்தின் இறுதியில். (மத் 27:48; யோவான் 19:29)

16 அதிகாரம்

"அவர்களிடத்தில் போய், அந்தச் செய்தியை அறிவித்தாள்" - கல்லறையிலிருந்து இரண்டாம் முறையாகப் புறப்பட்டுச் செல்கிறாள். தான் இயேசுவைக் கண்டதாகக் கூறுகிறாள். அவளுடைய பேச்சை அவர்கள் நம்பவில்லை. அவளுடைய வார்த்தை அவர்களுக்கு வீண்பேசாகத் தோன்றியது. (லூக்கா 24:11) இயேசு கிறிஸ்து தமது சீஷர்களிடம் ஏற்கெனவே தமது மரணத்தைப் பற்றியும், தாம் மரித்தபின்பு, மூன்றாம் நாளிலே உயிர்த்தெழப்போவது பற்றியும் கூறியிருக்கிறார். (மத் 16:21) ஆனால் இயேசுவின் வார்த்தையை அவர்கள் இன்னும் நம்பவில்லை.

"அழுதுகொண்டிருந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்காக அவர்கள் துக்கப்பட்டு அழுதார்கள். ஆனாலும், கிறிஸ்து உயிர்த்தெழுவார் என்று அவர்களால் நம்ப முடியவில்லை. (மாற்கு 16:11,13)

3. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு சீஷர்களின் சாட்சி - (மத் 28:16; லூக் 24:13-45; யோவான் 20-21)

மாற்கு 16:12 அதன்பின்பு அவர்களில் இரண்டுபேர் ஒரு கிராமத்துக்கு நடந்துபோகிறபொழுது அவர்களுக்கு மறுரூபமாய்த் தரிசனமானார்.

மாற்கு 16:13 அவர்களும் போய், அதை மற்றவர்களுக்கு அறிவித்தார்கள்; அவர்களையும் அவர்கள் நம்பவில்லை.

மாற்கு 16:14 அதன்பின்பு பதினொருவரும் போஜனபந்தியிலிருக்கையில் அவர்களுக்கு அவர் தரிசனமாகி, உயிர்த்தெழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற்போனதினிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்தும் இருதய கடினத்தைக்குறித்தும் அவர்களைக் கடிந்துகொண்டார்.

"அதன்பின்பு அவர்களில் இரண்டுபேர் ஒரு கிராமத்துக்கு நடந்துபோகிறபொழுது அவர்களுக்கு மறுரூபமாய்த் தரிசனமானார்" - இவைகளுக்குப் பின்பு, எம்மாவுக்குப் போகும் சாலையில் இயேசு தம்மை இரண்டு பேருக்கு வெளிப்படுத்தினார். (லூக்கா 23:13-35; யோவான் 21:14)

ரூபம் (form) - μορφή - **morphee** - 3444

பெண்பால் பெயர்ச்சொல் - ரூபம், உருவாதல் - காணக்கூடிய உருவம். இந்த வசனத்தில் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த சரீரத்தை இந்த வார்த்தை குறிப்பிடுகிறது. இதே வார்த்தை பிலி 2:6-இல் தெய்வத்துவத்தைக் குறிப்பிடுகிறது. வெளி 1:12-18; மத் 17:2 ஆகிய வசனங்களில் நாம் இயேசுவின் ரூபத்தை வாசிக்கிறோம். சீஷர்கள் இது வரையிலும் இயேசுவைக் கண்ட ரூபத்திற்கும், இப்போது காணும் அவருடைய மறுரூபத்திற்கும் வித்தியாசம் இருந்தது.

"அதன்பின்பு பதினொருவரும் போஜன பந்தியிலிருக்கையில் அவர்களுக்கு அவர் தரிசனமானார்" - (யோவான் 21:14)

"உயிர்த்தெழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற்போனதின் நிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்தும் இருதயக் கடினத்தைக்குறித்தும் அவர்களைக் கடிந்து கொண்டார்" - சீஷர்களுக்கு விசுவாசம் இல்லை. அவர்களும் சாதாரண மனுஷர்களைப் போலவே இருந்தார்கள். எதையுமே தங்கள் கண்களால் கண்டு, தெளிவாக உணர்ந்த பின்பு மட்டுமே விசுவாசிக்கிறார்கள்.

4. பிரதான கட்டளை - (மத் 28:18; லூக் 24:49; யோவான் 16:23; அப் 1:8)

மாற்கு 16:15 பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.

மாற்கு - தொகுப்புரை

16 அதிகாரம்

மாற்கு 16:16 விசுவாசமுள்ளவனாகி ஞானஸ் நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்கு உள்ளாகத் தீர்க்கப்படுவான்.

மாற்கு 16:17 விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;

மாற்கு 16:18 சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்.

"நீங்கள் உலகமெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" - இயேசு கிறிஸ்து எல்லா விசுவாசிகளுக்கும் கொடுத்திருக்கும் பிரதான கட்டளை.

உலகம் (world) - κόσμος - kosmos - 2889

ஆண்பால் பெயர்ச்சொல் - உலகம், அலங்கரிப்பு, லௌகிகம் (social system) (2பேதுரு 3:6).

புதிய ஏற்பாட்டின்பிரகாரம் சுவிசேஷ ஊழியம்

1. சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுங்கள்.
2. சுவிசேஷத்தை உறுதிபண்ணுங்கள்

யாருக்கு பிரசங்கம் பண்ண வேண்டும்

1. தரித்திரருக்கு (லூக்கா 4:18; லூக்கா 7:22)
2. சாத்தானிடம் சிறைப்பட்டவர்களுக்கு (லூக்கா 4:18)
3. யூதர்களுக்கு (அப் 11:19-20)
4. புறஜாதியாருக்கு (Gentiles) (கலா 2:2; எபே 3:8)
5. புறஜாதியாருக்கு (Heathen) (கலா 1:16)
6. பூமியில் வாசம் பண்ணுவோருக்கு (வெளி 14:6)
7. சர்வ சிருஷ்டிக்கும் (மாற்கு 16:15)

பிரசங்கம் பண்ண வேண்டிய இடங்கள்

1. உலகம் முழுவதும் (மத் 24:14; மாற்கு 16)
2. எல்லா இடங்களிலும் (அப் 8:4)
3. பட்டணங்களில் (மத் 11:1; அப் 8:40)
4. ஊர்களில் (மாற்கு 1:38)
5. ஜெபாலயங்களில் (மாற்கு 1:39; லூக்கா 4:44)
6. வீட்டின் மேல்கூரைகளில் (மத் 10:27)
7. அற்பமான இடங்கள் (2கொரி 10:16)

சுவிசேஷத்தை எப்படிப் பிரசங்கிக்க வேண்டும், எப்படிப் பிரசங்கிக்கக்கூடாது

1. பொறாமையினாலும்,விரோதத்தினாலும் பிரசங்கிக்கக் கூடாது. அன்பினாலும் நல்மனதினாலும் பிரசங்கிக்க வேண்டும். (பிலி 1:15-17)
2. வஞ்சகத்தினால் பிரசங்கிக்கக்கூடாது. உண்மையினால் பிரசங்கிக்க வேண்டும். (பிலி 1:18)
3. சிறந்த வசனிப்பினாலோ, மனுஷ ஞானத்தினாலோ பிரசங்கிக்கக் கூடாது. தேவனுடைய வல்லமையினால் பிரசங்கிக்க வேண்டும். (1கொரி 2:1-5)
4. மனுஷரைப் பிரியப்படுத்தும் விதமாக பிரசங்கிக்கக்கூடாது. தைரியமாகவும், சத்தியத்தின் மீதுள்ள வைராக்கியமாகவும் பிரசங்கம் பண்ண வேண்டும். (பிலி 1:14; அப் 9:27)

16 அதிகாரம்

5. சந்தேகத்தோடும், அவிசுவாசத்தோடும் பிரசங்கிக்கக்கூடாது. விசுவாசத்தோடு பிரசங்கிக்க வேண்டும். (1தீமோ 4:6-16; 1பேதுரு 5:1-10)

6. மனுஷருக்குப் பட்சபாதமாக பிரசங்கிக்கக் கூடாது. தேவனுடைய ஊழியக்காரராகப் பிரசங்கிக்க வேண்டும். (மத் 22:16; எபே 6:6; கலா 1:10)

7. சுவிசேஷத்தை அரைகுறையாகப் பிரசங்கிக்கக் கூடாது. பூரண சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும். (ரோமர் 15:19,29)

நாம் பிரசங்கிக்கக்கூடாத காரியங்கள்

1. விருத்தசேதனம் (கலா 5:11)
2. மோசேயின் பிரமாணம் (அப் 15:21)
3. சுயம் (2கொரி 4:5)
4. வேறே சுவிசேஷம் (கலா 1:8-9)
5. வேறே இயேசு (2கொரி 11:4)

நாம் பிரசங்கிக்க வேண்டிய காரியங்கள்

1. நற்செய்தி (ஏசா 61:1; லூக்கா 4:18)
2. பரலோக ராஜ்யம் (மத் 4:17; மத் 9:35; மத் 10:7; மத் 24:14; மாற்கு 1:14)
3. தேவனுடைய ராஜ்யம் (லூக்கா 4:43; லூக்கா 9:2,60; லூக்கா 16:16; அப் 8:12; அப் 20:25; அப் 28:31)
4. மனந்திரும்புதல் (மத் 3:1-2; லூக்கா 24:47)
5. தண்ணீர் ஞானஸ்நானம் (மாற்கு 1:4; லூக்கா 3:3)
6. ஆவியானவரின் அபிஷேகம் (மாற்கு 1:7-8; லூக்கா 3:16; யோவான் 1:33; யோவான் 7:37-39; அப் 1:4-8; அப் 2:33,38-39; அப் 5:32; கலா 3:13-14)
7. சுவிசேஷம் (மத் 11:5; லூக்கா 4:18; லூக்கா 20:1; அப் 8:25; அப் 14:7,21; அப் 16:10; ரோமர் 1:15-16; ரோமர் 15:20; 1கொரி 1:17; 1கொரி 15:1; 2கொரி 10:16; கலா 2:2; கலா 3:8; கலா 4:13; எபி 4:2; 1பேதுரு 1:12,25; 1பேதுரு 4:6)
8. சமாதானத்தின் சுவிசேஷம் (ரோமர் 10:15)
9. கிறிஸ்துவின் சுவிசேஷம் (ரோமர் 15:19)
10. தேவனுடைய சுவிசேஷம் (ரோமர் 1:1; 2கொரி 11:7; 1தெச 2:9)
11. நித்திய சுவிசேஷம் (வெளி 14:6)
12. வார்த்தை (மாற்கு 2:2; அப் 8:4,25; அப் 14:25; அப் 15:36; அப் 16:6; 2தீமோ 4:2; எபி 4:2)
13. விசுவாச வார்த்தை (ரோமர் 10:8-17)
14. தேவனுடைய வார்த்தை (அப் 13:5; அப் 17:13)
15. கர்த்தருடைய வார்த்தை (அப் 15:35)
16. இயேசு கிறிஸ்து (அப் 3:20; அப் 5:42; அப் 8:5,35; அப் 9:20; அப் 10:42-43; அப் 17:3,18; 2கொரி 1:19; 2கொரி 4:5; கலா 1:16)
17. சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து (1கொரி 1:23; 1கொரி 2:2)
18. சிலுவை (1கொரி 1:18,21)
19. கர்த்தருடைய அநுக்கிரக வருஷம் (லூக்கா 4:18; ஏசா 61:1-2)
20. கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியம் (எபே 3:8)

16 அதிகாரம்

21. மீட்பு (லூக்கா 4:18; ஏசா 61:1)
22. ஒப்புரவாதல் (அப் 14:15; 2கொரி 5:14-21)
23. கிறிஸ்து சரீரப்பிரகாரமாக உயிர்த்தெழுதல் (1கொரி 15:12)
24. நீதி (சங் 40:9; 2பேதுரு 2:5)
25. பாவங்களின் மன்னிப்பு (அப் 13:38)
26. மரித்தோரின் உயிர்த்தெழுதல் (அப் 4:2)
27. சமாதானம் (அப் 10:36; எபே 2:17)
28. தேவனுக்குப் புறம்பே எல்லாம் மாயை (பிர 12:8-14)
29. தேவபக்திக்குரிய இரகசியம் (1தீமோ 3:16)
30. விசுவாசத்தினால் நீதிமானாதல் (கலா 3:8)

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" - சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதினால் இரண்டு காரியங்கள் நடைபெறும்.

1. விசுவாசத்தின்மூலமாக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படும். (ரோமர் 10:9-10; எபே 2:8-9; 1யோவான் 1:7-9; 2கொரி 2:15-16; ரோமர் 1:16; 1கொரி 1:18-21; யோவான் 3:16-20)
2. அவிசுவாசத்தின்மூலமாக ஆத்துமா ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படும். (2கொரி 2:15-16; 2கொரி 4:4; யோவான் 3:18-20; யோவான் 8:24; யோவான் 16:9; வெளி 21:8)

"இரட்சிக்கப்படுவான்" - ஒருவன் தன்னுடைய மரணத்திற்கு முன்பாக இரட்சிக்கப்படவேண்டும். மரித்த பின்பு, இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை. (மத் 7:13-14; கலா 6:7-8; ரோமர் 6:23; ரோமர் 8:12-13) மரணத்திற்கு முன்பு இரட்சிக்கப்படவில்லையென்றால் அவன் நித்திய ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். ஆகையினால் அதற்குள் அவன் தேவனோடு ஒப்புரவாக வேண்டும். (1யோவான் 1:7; யோவான் 3:16; ரோமர் 10:9-10) கிருபையின் காலத்தில் நாம் இரட்சிக்கப்படுவது நமது ஆத்துமாவிற்கு உகந்தது. இரட்சிக்கப் படாதோருக்கு நரகமே முடிவு. (மத் 7:13-14, மத் 19:29, யோவான் 6:27, கலா 6:7-8)

விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள்

1. பிசாசுகளைத் துரத்துவார்கள் (மாற்கு 16:17; லூக்கா 10:19; மத் 10:7-8; மத் 17:20-21; யோவான் 14:12)
2. நவமான பாஷைகளைப் பேசுவார்கள் (மாற்கு 16:17; அப் 2:4; அப் 10:44-48; அப் 19:1-7; 1கொரி 12-14; ஏசா 28:11)
3. சர்ப்பங்களை எடுப்பார்கள் (மாற்கு 16:18, லூக்கா 10:19; சங் 91; அப் 28:1-5)
4. சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது (மாற்கு 16:18, சங் 91; லூக்கா 10:18; 2இராஜா 4:41)
5. வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் (மாற்கு 16:18; மத் 10:1-8; லூக்கா 24:49; யோவான் 14:12; அப் 1:8)

வியாதியஸ்தர்கள் சொஸ்தமாதல்

1. கிறிஸ்து சொஸ்தமாக்கினார் (மத் 13:58)

16 அதிகாரம்

2. சீஷர்கள் சொஸ்தமாக்கினார்கள். (மத் 10:1-8; மாற்கு 6:7-13; லூக்கா 10:1-20; அப் 3:6; அப் 5:16; அப் 19:11-12; எபி 2:3-4)

3. சொஸ்தமாக்க வேண்டுமென்று எல்லா சீஷர்களுக்கும் இயேசு கிறிஸ்து கட்டளை கொடுத்திருக்கிறார். (மத் 10:8; லூக்கா 10:9; மத் 28:20)

4. சொஸ்தமாக்கும் வல்லமையை எல்லா விசுவாசிகளுக்கும் கொடுப்பதாக இயேசு வாக்குப்பண்ணியிருக்கிறார். (மாற்கு 16:17-18; மத் 17:20-21; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; லூக்கா 11:9-13; லூக்கா 24:49; யோவான் 7:37-39; யோவான்14:12-15;யோவான் 15:7, 16; யோவான் 16:23-26; அப் 1:8; அப் 2:38-39; அப் 5:32)

5. ஆதித் திருச் சபையார் வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கினார்கள்.(யாக் 5:14-16; அப் 5:12)

இவையெல்லாம் விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாகும். அவிசுவாசிகளுக்கு ஒரு அடையாளமும் நடக்காது. அவிசுவாசிகள் ஏதாவது சாக்குப் போக்குகள் சொல்லி, வியாதியஸ்தர்களாக ஜெபிக்கமாட்டார்கள்.

“என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்” - விசுவாசிகளுடைய வல்லமையின் ஆதாரம் “இயேசுவின் நாமம்” ஆகும். ஒரு விசுவாசி இயேசுவின் நாமத்தினாலே தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தும்போது அவர் கிறிஸ்துவின் கிரியைகளைச் செய்வார். (யோவான் 14:12-15; யோவான் 15:16; யோவான் 16:23-26, அப் 1:8).

எடுப்பார்கள் (take up) - αἴρω - airoo - 142

வினைச்சொல் - எடு. இந்த வினைச்சொல் பலவிதமான பொருளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

1. எடு, அகற்று (Take up, remove) (மத் 14:12; யோவான் 1:29; யோவான் 11:39,41,48)

2. எடுத்துக்கொள்ளப்படுதல் (Take away) (மத் 13:12; மத் 22:13), வாரிக்கொண்டு போதல் (to destroy) (மத் 24:39; யோவான் 15:2; 1யோவான் 3:5)

3. நீங்குதல் (Put away) (எபே 4:31)

4. அகற்றுதல், கொல்லுதல் (Do away with or kill) (லூக்கா 23:18; யோவான் 19:15; அப் 21:36; அப் 22:22)

5. பெயர்ந்துபோதல் (Remove) (மத் 21:21; மாற்கு 11:23)

இயேசு கிறிஸ்து விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்களில் ஒன்றாக அவர்கள் சர்ப்பங்களை எடுப்பார்கள் என்று கூறியிருக்கிறார். பாம்புகளை வைத்து, வித்தை காட்டுவதை இயேசுவின் வாக்கியம் குறிக்காது. பாம்பு நம்மைத் தீண்டினாலும், அதன் விஷம் விசுவாசியைத் தாக்காது. (அப் 28:1-5) பிரச்சனையின்போது விசுவாசிகளுக்கு அவற்றின்மீது அதிகாரம் இருக்கும். பொது ஜனங்கள் மத்தியில் ஒருவன் பாம்பைக் கையில் பிடித்துக் காண்பிப்பதினால் அவன் விசுவாசியாகி விடுவதில்லை. ஏராளமான பாம்பாட்டிகள் மகுடி ஊதி, பாம்போடு விளையாடுகிறார்கள். அவர்கள் எல்லோரும் இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகள் என்று கூறமுடியாது. ஒருவனுக்கு தேவனுடைய வல்லமை இருக்குமென்றால் அந்த வல்லமையை இயேசு கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் பயன்படுத்திய பிரகாரம் பயன்படுத்த வேண்டும். (அப் 5:16; அப் 10:38; அப் 19:11-12) ஒருவன் ஏராளமான பாம்புகளைத் தன் கையினால் பிடித்து, ஒரு வியாதியஸ்தருக்கும் ஜெபிக்க வில்லையென்றால் அதனால் என்ன பிரயோஜனம்.

16 அதிகாரம்

"சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது" - இந்த வாக்கியத்தில் "குடித்தாலும்" என்று இருக்கிறதே தவிர, "குடிக்கவேண்டும்" என்றில்லை. சர்ப்பங்களை எடுப்பதற்குக் கூறப்பட்டிருக்கிற விளக்கமே இதற்கும் பொருந்தும். அப் 28:1-5 -இல் பவுலை ஒரு சர்ப்பம் தீண்டிற்று. ஆனால் பவுலுக்கு ஒரு சேதமும் ஏற்படவில்லை. விசுவாசிகளுக்கும் இப்படிப்பட்ட காரியம் நடக்கும் என்றால், சர்ப்பங்களின் விஷத்திலிருந்து கர்த்தர் அவர்களைப் பாதுகாப்பார். விரோதிகள் சதி பண்ணி, விஷம் கொடுத்தாலும், அது விசுவாசிகளைத் தாக்காது. (2இராஜா 4:41) கொடிய விலங்குகளிலிருந்தும் விசுவாசிகளுக்குப் பாதுகாப்பு உண்டு.

"வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்" - பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் வியாதியஸ்தர்கள்மீது கைகளை வைத்து, ஜெபிக்கும் பழக்கமும் ஒருவரை ஆசீர்வதிப்பதற்காக அவர்மீது கைகளை வைத்து ஆசீர்வதிக்கும் பழக்கமும் இருந்தது. (ஆதி 48:14; எண் 8:10; எண் 27:23; உபா 34:9; மத் 19:15; மாற்கு 5:23; மாற்கு 6:2,5; லூக்கா 4:40; லூக்கா 13:13; அப் 5:12; அப் 13:3; அப் 14:3; அப் 19:11; அப் 28:8; 1தீமோ 4:14; 2தீமோ 1:6; எபி 6:2).

5. இயேசு பரமேறுகிறார் - (லூக் 24:50; அப் 1:9-11; எபே 1:20-23; 4:7-11)

மாற்கு 16:19 இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார்.

"இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு" - இந்த வாக்கியம் மாற்கு எழுதின சுவிசேஷத்திற்கு உரியவை அல்ல என்று சிலர் கூறுகிறார்கள். மாற்கு 16:9-20 ஆகிய வசனங்கள், இந்த வாக்கியம் மாற்கு எழுதின சுவிசேஷத்திற்கே உரியது என்று உறுதிபண்ணுகிறது. ஒருசில புதிய ஏற்பாட்டுக் கிரேக்கச் சுவடுகளில் மாற்கு எழுதின சுவிசேஷத்தில் மாற்கு 16:9-20 ஆகிய வசனங்கள் இல்லை.

"பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்" - (லூக்கா 24:49-53; யோவான் 3:13; யோவான் 6:62; அப் 1:9-11; எபே 4:8-10)

"தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார்" - (அப் 2:33; அப் 7:56-57; ரோமர் 8:34; எபே 1:20; கொலோ 3:1; எபி 1:3; எபி 8:1; எபி 10:12; எபி 12:2; 1பேதுரு 3:22)

6. அப்போஸ்தலருடைய நடபடிகளும் ஆதிகால விசுவாசிகளும் - (அப் 1:12-28:31)

மாற்கு 16:20 அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்.

"அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்" - புதிய ஏற்பாட்டுச் சபையின் ஊழியம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதற்கு இந்த வசனம் நல்லதொரு எடுத்துக்காட்டாகும். விசுவாசிகள் எல்லா இடங்களுக்கும் புறப்பட்டுச் சென்று கர்த்தருடைய வார்த்தைப் பிரசங்கம் பண்ண வேண்டும். கர்த்தர் அவர்களுடனேகூட கிரியை நடப்பிப்பார். அவர்கள் மூலமாக அடையாளங்களும், அற்புதங்களும் நடைபெறும். இதன்மூலமாக வசனம் உறுதிப்படும்.